# யாழ்ப்பாணப் பொது நூலகம்

## ஒரு வரலாற்றுத் தொகுப்பு

என். செல்வராஜா



அயோத்தி நூலக சேவைகள்
குமரன் புத்தக இல்லம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பொது நூலகம்

## ஒரு வரலாற்றுத் தொகுப்பு

தொகுப்பாசிரியர்

**என். செல்வராஜா**

அயோத்தி நூலக சேவைகள் - ஐக்கிய இராச்சியம்
குமரன் புத்தக இல்லம், கொழும்பு - சென்னை

2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலின் தலைப்பு : யாழ்ப்பாணப் பொது நூலகம்:
ஒரு வரலாற்றுத் தொகுப்பு

தொகுப்பாசிரியர்: என். செல்வராஜா

முதல் பதிப்பு : 2023

வெளியீடு : அயோத்தி நூலக சேவைகள், ஐக்கிய இராச்சியம் &
குமரன் புத்தக இல்லம்
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6,

அச்சுப் பதிப்பு : குமரன் புத்தக இல்லம்
39, 36வது ஒழுங்கை, கொழும்பு-6, தொ.பே. 0112 364550
மி.அஞ்சல்: books@kumarangroup.net

Title : Yazhpaanap Pothu Noolakam

Compiler : N. Selvarajah

First Edition : 2023

Published by : Ayothy Library Services, U.K. Branch &
Kumaran Book House, 39, 36th Lane, Colombo -6,

Printed by : Kumaran Press (Pvt) Ltd. 39, 36th Lane, Colombo -6
Tel. - 0112 364550, E.mail : books@kumarangroup.net

வெளியீட்டு எண் : # 1013

ISBN 978-624-6164-49-2

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கட
புத்தகங்கள்
906/23, பருத்தித்துறை வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். 0773 788 795

# யாழ்ப்பாணப் பொது நூலகம்

ஒரு வரலாற்றுத் தொகுப்பு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு என். செல்வராஜாவின்

## 'யாழ்ப்பாணப் பொது நூலகம்: ஒரு வரலாற்றுத் தொகுப்பு'

நூலிற்கு வழங்கிய

# வாழ்த்துச் செய்தி

*- பண்டிதர் ச.வே.பஞ்சாட்சரம்*

இலங்கைத் தமிழர் இலக்கியம் ஏராளம்
கலைந்து போவன கற்பனை அளவில்!
தப்பித் தவறி எழுதப் படுவன
அப்படி யேகை யெழுத்துப் பிரதியாய்
அனல், கறை யானுக் கிரைபோய் அழிவன!
எனினும் அச்சில் ஏறிப் பிழைப்பவை
பேணாமை யாலே காணாமற் போவன!
'விடேன் இன்னும்!'' என்று மேலைநீர் கொழும்பு
நடராசா செல்வ ராசா நண்ணினார் !
'நூல்தேட்டம்'' என்றோர் நோக்கம் உயரிய
சால்பார் நிறுவனம் தாபித் துழைக்கிறார் !
வாழி அவர் தீரம்! வாழி அவர் பணி!

அச்சில் வருகின்ற அனைத்தீழ நூல்களும்
கச்சித மாய்ச்சேர்த்துக் காப்பாற்றி வைக்கிறார் !
இணையநூ லகத்திலும் அணிபெற ஏற்றுறார் !
ஒவ்வொரு நூலதும் உள்ளடக் கம்,வகை
செவ்விய குறிப்பொடு செய்கிறார் ஆவணம் !
ஒன்று முதலாய்ப் பதினேழு நூல் தேட்டம்
இன்று வரைநூலாய் ஈகிறார் அச்சிட்டு!
எக்கா லத்தும், எவரும் பயன்பெறத்
தக்க விதமித் தொகுதிகள் தருகிறார் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் நூலகர் பயிற்சி முடித்திட்டார் !
அதுபோல் வாசிப்போர் அணிபெருக் கிட்டார் !
உ.வே.சாமி நாதையர், மேலும்
சி.வை. தாமோ தரம்பிள்ளை, நல்லை
நாவலர் நம்பழந் தமிழ்நூல் தம்மை
ஆவலாய்த் திரட்டி அச்சிட்டுக் காத்தனர் !
அந்த வழியில் இந்தக் காலத்தில்
வெளிவரும் நூல்களின் அழிவைத் தடுக்க
அவையெலாம் திரட்டி அமைத்தோர் நூலகம்,
சுவைமிகு குறிப்புடன் நூல்தேட்டப் பதிவுகள்
வெளியிட்டுக் காக்கும் ஒளிப்பணி புரிகிறார் !
'நூல்தேட்டம்.கொம்'' எனும் இணையநூ லகத்திலும்
பார்க்கவும் யாரும் சேர்த்துளார் வழிவகை!

தென்கிழக் காசியச் சிறந்த நூ லகமென
நின்று நிலவிய யாழ்பொது நூலகம்
ஆயிரத் தெண்ணூற் றைம்பத்து நான்கில்
மேய கால்கோள் விழாமுத லாக,
அன்னதன் வரலாறு-அதுஎரி யுண்டது
என்ப துட்பட, இரண்டா யிரத்தொன்று
வரையான பதிவே டொன்றை அன்று
திரு செல்வ ராசா வெளியிட் டிருந்தார் !
இந்தப் பதிவேட்டை இவரே புதுப்பித்துத்
தந்திடு கின்றார் சார்ந்துள ஆண்டு
இரண்டா யிரத்து இருபத்து மூன்றில் !

தம்பல மேதமிழ்த் தாகமாய்க் கொண்டவர் !
பம்பர மாகச் சுழன்றுழை பணியர் !
வில்வம் போலும் மேன்மை கொண்ட
செல்வ ராசா பணிகள் வெல்ல
எல்லாம் வல்ல இறை இறைஞ் சுதுமே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஒரு நுழைவாயில்

இருபது ஆண்டுகளுக்கு முன்னர் நான் எழுதிய (நுழைவாயில்) முன்னுரையையும் நினைவுமீட்டும் நோக்கில் இத்துடன் இணைத்திருக்கிறேன். மேலும் இருபதாண்டுகள் கழிந்த நிலையில் மற்றுமொரு நுழைவாயிலில் மீண்டும் உங்களைச் சந்திக்கின்றேன். கயவர்களின் தீக்குச்சி உரசலால் எரியுண்டுபோன எமது கலாச்சாரப் பெட்டகத்தின் நாற்பத்தி இரண்டாவது ஆண்டின் சம்பிரதாய நினைவுகூரல்கள் இதோ எம்மைக் கடந்து போகின்றன- மீண்டும் ஒரு நினைவுகூரலுக்காக அடுத்த ஆண்டு ஊடகங்கள் விழித்தெழுந்துகொள்ளும். அதற்கிடையில் மேலும் பல அரிய ஆவணங்களை நாங்கள் தொலைத்துவிட்டிருப்போம்.

யாழ்ப்பாண பொதுசன நூலகத்தின் ஆரம்பகால வரலாறு 1970 வரைக்கும் 'யாழ்ப்பாண நூல் நிலையம் ஒரு ஆவணம்'' என்ற பெயரில் அமரர் க.சி.குலரத்தினம் அவர்களால் ஆவணமாக்கப்பட்டது. பின்னர் யாழ்ப்பாண மாநகர சபையால் ஜூன் 1984இல் 'மீள்விக்கப்பெற்ற கட்டடத்திறப்பு விழா ஞாபகார்த்த மலர்'' வெளிவந்தது. 1989இல் சார்ள்ஸ் ஐங்கரன் என்ற அன்றைய பாடசாலை மாணவனின் 'அணையாத அறிவாலயம்'' என்ற நூலக எரிப்பு தொடர்பான சிறிய கவிதைத் தொகுப்பொன்று வெளிவந்தது. அதன் பின்னர் நீண்டகால இடைவெளியில் 2001இல் 'யாழ்ப்பாணப் பொது நூலகம் ஒரு வரலாற்றுத் தொகுப்பு'' என்ற எனது ஆவண நூல் வெளிவந்து ஈழத்தமிழர்களை மாத்திரமல்லாது உலகத் தமிழர்களையும் யாழ் நூலகம் பற்றிய வரலாற்றுத் தேடல்களுக்கு உட்படுத்தியிருந்தது.

இந்த எழுச்சியை 2001இன் பின்னர் யாழ்ப்பாணப் பொது நூலகம் பற்றி வெளிவந்த பல்வேறு நூல்களின் வழியாகவும், ஆவணப் படங்களின் வழியாகவும் அறியமுடிகின்றது. Rising from the Ashes (என்.செல்வராஜா, 2003), யாழ்ப்பாண நூலகம் அதன் சாம்பலிலிருந்து எழுகின்றது (வி.எஸ். துரைராஜா, 2009), தீ தின்ற தமிழர் தேட்டம் (என். செல்வராஜா, 2013),

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உயில்: நூலகக் கவிதைகள் (க.நவநீதகிருஷ்ணன், 2015), யாழ்ப்பாண பொதுசன நூலகம் எரிக்கப்பட்டு 34 ஆண்டுகள் 01.06.2015: உண்மை நிகழ்வுகளின் தொகுப்பு (தங்க. முகுந்தன், 2015), யாழ்ப்பாணப் பொது நூலகம் அன்றும் இன்றும் (ரூபவதி நடராஜா, 2019) ஆகிய நூல்கள் நானறிந்தவை. நானறியாதுபோன இன்னும் சிலவும் ஆங்காங்கே இருக்கக்கூடும்.

யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் அழிப்பினை அதன் வழியாக நிகழ்த்தப்பெற்ற கலாச்சாரப் படுகொலையின் அரசியலை, அந்தச் சூழல் பற்றிய விழிப்புணர்வினை, எமது மக்களிடம் நீங்காத நினைவுகளாக வருடாந்த நினைவுகூரல்களின் வழியாக எடுத்துச்செல்வதில் நாமனைவரும் வெற்றிகண்டுவருகின்றோம். இந்த ஆறாவடு நீண்டகாலம் எமது மனங்களில் நிலைகொண்டிருக்கும். இத்தகைய ஆவணத் தொகுப்புகளின் மூலமும் இச்செய்தி அடுத்த சந்ததியினருக்கும் கடத்திச் செல்லப்படும்.

இருப்பினும், இந்த நினைவு கூரல்களிடையே நாம் முக்கியமானதொரு விடயத்தை, யாழ்ப்பாண நூலகத்தின் அழிப்பின் மூலம் நாம் கற்றிருக்க வேண்டிய ஒரு முக்கிய வரலாற்றுப் பாடத்தை, நாற்பதாண்டு காலமாக கற்றுக்கொள்ளத் தவறிவிட்டோமோ என்ற மனக்குறை எனக்கு இன்னமும் உண்டு. இத்தகைய நூலக எரிப்பின் வழியாக எமது இனத்தின் கலாச்சாரத்தை, முதுசொத்தை அழித்துத் துடைத்தெறிய முனைந்த கயவர்களின் விருப்பத்தை இன்று எங்களது அறியாமையாலும் அக்கறையின்மையாலும் நாங்களே எங்களது கரங்களில் ஏந்திக் கொண்டிருக்கிறோம். இன்றளவில் வெள்ளம், சுனாமி போன்ற இயற்கை அழிவுகளாலும், போரினாலும், புலப்பெயர்வுகளினாலும், முறையான பராமரிப்பின்றியும் நாம் இழந்தவை கணக்கற்றவை என்பதை கண்டறியும்போது இந்த மனக்குறை பூதாகாரமாக எழுந்து நின்று என்னை பயமுறுத்துகின்றது. நூலகம் எரிக்கப்பட்டு நாற்பதாண்டுகள் கடந்த நிலையில் இன்றுவரை நாம் இழந்தவை எவ்வளவு என்பதை, தாயகத்தின் நூலகங்களிலும் தனியார் இல்லங்களிலும் பழைய நூல்களைத் தேடி அலைந்துவரும் என்னைப் போன்றவர்கள் தான் நன்கறிவர். 'தோலிருக்கச் சுளை இல்லாது போகும்'' ஒரு நிலை அது.

ஒவ்வொரு படைப்பாளியும் தனது நூல்கள் எங்கோ ஒரு நூலகத்தில் பாதுகாப்பாக இருக்கும் என்ற நம்பிக்கையுடனேயே வாழ்ந்து மறைந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடுகிறார். நூலகம் வேறு, ஆவணக் காப்பகம் வேறு என்ற உண்மையை அந்த அப்பாவி எழுத்தாளர் மாத்திரமல்லாது எம்மில் பலரும் இன்றளவில் அறிந்திராதது கவலைக்குரியது. பட்டியலாக்கம், பகுப்பாக்கம், 'டிஜிட்டைசேஷன்'' என்று நூலகத் தொழில்நுட்பங்களில் அக்கறை செலுத்தும் அளவிற்கு எமது நூலகக் கல்வியியலாளர்கள் கூட நூலகமும் சமூகமும் பற்றிய அடிப்படை கல்வியை எதிர்கால நூலகர்களின் மனதில் விதைப்பதில் வெற்றிகண்டுள்ளார்களா என்பதை அவர்களால் உருவாக்கப்பட்டு வரும் நூலகர்களின் செயற்பாடுகளின் வழியாக நாம் அறிந்துகொள்ள வேண்டும். இலங்கையில் அரசாங்கம் சட்டபூர்வமாக ஆவணக் காப்பகத்தையோ சுவடிச்சாலையையோ மாகாண அரசின் பொறுப்பில் இயங்கவிடாமல் மத்தியமயமாக்கி வைத்திருப்பதன் அரசியல் உள்நோக்கம் என்ன என்பதையும் நாம் உணரவேண்டியவர்களாயுள்ளோம்.

இனியொரு நூலகம் அழிக்கப்பட்டால்கூட அந்நூலகத்தில் இருந்த ஆவணம் மின்வருடல் செய்து உலகின் எங்கோ ஒரு இடத்தில் பாதுகாக்கப்படுகின்றது என்பதை நாம் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற முனைப்புடன் எம்மிடையே இயங்கும் 'நூலகம் நிறுவனம்'' போன்ற நிறுவனங்களை நிதித்தட்டுப்பாடின்றி தொடர்ந்து இயங்கவைக்க எம்மிடையே உள்ள தனவந்தர்கள் சிறிய அளவிலாவது நிதியுதவி வழங்க முன்வரவேண்டும். அதனால் அவர்களது பயணத்தை விரைவுபடுத்தலாம் என்பது வெளிப்படை.

2001இல் நான் இந்த ஆவணத்தை தொகுத்திருந்த வேளை, யாழ்ப்பாண நூலகம் புனரமைக்கப்பட்டிருக்கவில்லை. இழுபறிகளுடன் அதற்கான ஆயத்தங்களே மேற்கொள்ளப்பட்டு வந்திருந்தன. இன்று அந்த நூலகம் எரிக்கப்படுவதற்கு முன்னர் இருந்த அறைகுறை நிலைமையை விடவும், 1950களில் அமரர் வி.எம்.நரசிம்மன் அவர்கள் யாழ் மாநகரசபைக்கு வழங்கிய வரைபடத்துக்கமைய முழுமையான கட்டிட வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டு, 2,50,000 இற்கும் அதிகமான நூல்களுடன் இன்று புதுப்பொலிவு பெற்றுக் காணப்படுகின்றது. இன்றைய தலைமுறையினருக்கு அந்த நூலகம் சாம்பல் மேட்டிலிருந்து பீனிக்ஸ் பறவையாக எழமுயன்ற பழைய வலிமிகுந்த வரலாறு சொல்லப்படவில்லை. அழிப்பின் அடையாளமே தெரிந்துவிடாமல் திட்டமிட்டு பூசி மெழுகப்பட்டே அவர்களுக்கு அந்த நூலகம் வழங்கப்பட்டிருப்பதும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிய நியாயமில்லை. இந்நிலையில் நூலகத்தை எரித்தவர்களாலேயே புதிய வரலாறு எழுதப்பட்டு வருகின்றது. நூலக எரிப்பில் நேரடிப் பங்காளனாக இருந்த எட்வர்ட் குணவர்த்தன என்ற முன்னாள் டீ.ஐ.ஜீ. எழுதிய சுயவரலாற்று நூலான Memorable Tidbits including The Jaffna Library Fire, என்ற நூலில் விடுதலைப் புலிகளே யாழ்ப்பாண நூலகத்தை தீயிட்டுக்கொழுத்தினார்கள் என்று புதிய வரலாற்றை எழுதுகின்றார். இனி எதிர்காலத்தில் இத்தகைய அபத்தங்களே எமது வரலாறாகும்.

இந்நிலையில் யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் வரலாற்றாவணம் இருபதாண்டுகளின் பின்னர் மீளவும் இற்றைப்படுத்தப்பட்ட பதிப்பாக உருவாக்கப்பட்டு எமது புதிய தலைமுறையினருக்கான விரிவான வரலாற்றுத் தகவல்களுடன் மீண்டும் அவர்களின் கரங்களை சென் றடைகின்றது. அதையிட்டு என்னால் ஓரளவு திருப்தியடையமுடிகின்றது. இங்கு நான் வரலாற்றை திருத்தி எழுத முனையவில்லை. வரலாறு கூறும் ஆவணங்களை, பல்வேறு கருத்தியல்களை, பலரின் அனுபவங்களை இங்கு தொகுத்துப் படையலிட்டிருக்கிறேன்.

இது ஒரு தொகுப்பு நூல். யாழ்ப்பாண நூலகம் உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து இன்று வரையிலான அதன் வரலாற்றுப் பாதையை பல்வேறு பிரமுகர்களின் பார்வையிலும், தொடர்புபட்ட பத்திரிகைச் செய்திகளின் மூலமும் அவர்கள் எளிதில் அன்றைய சூழலை உய்த்துணர்ந்து நூலகத்தின் வரலாற்றைக் கண்டறிய வகை செய்துள்ளேன். ஒரு ஆவணத்தொகுப்பு என்ற வகையில் கூறியது கூறல் என்ற குறைபாடு தவிர்க்கமுடியாதது. மேலும் கட்டுரையாளர்களின் கருத்துக்களை உள்ளது உள்ளபடியே இவ்வாவணத் தொகுப்பில் ஆவணவாக்கல் நேர்மையுடன் முன்வைத்துள்ளேன். படைப்பாளிகளின் கருத்துகளுக்காக என்னைக் கல்லாலெறிவதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். படைப்புக்களின் வழியாக அவற்றின் வரிகளுக்கிடையேயான சொல்லப்படாத செய்திகளை ஊகித்தறிவது வாசகரின் அறிவின்பாற்பட்டது.

யாழ்ப்பாண நூலகம் எரியுண்ட திகதிகள் கட்டுரை ஆசிரியர்களின் எண்ணப்படியே இடம்பெறுகின்றன. மே 31 இரவு என்பாரும், ஜுன் முதலாம் திகதி என்பாரும் உள்ளதால் கட்டுரைகளுக்கிடையே திகதிக் குழப்பம் காணப்படுகின்றது. இதனை ஊடக நேர்மை கருதி நான் மாற்றி எழுத முற்படவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகத்தின் எரிப்பு இரு பக்கங்களைக் கொண்டது. எரித்தவர்கள் ஒரு பக்கம், எரியுண்டதை உணர்ந்தறிந்த பாதிக்கப்பட்டவர்கள் மறுபக்கம். பலரும் பார்க்கத் தக்கதாக நூலகம் எரிக்கப்படவில்லை. அரச பாதுகாப்புப் படைகள் ஊரடங்குச் சட்டத்தைப் பிறப்பித்துவிட்டு கொலை வெறிகொண்டு அலைந்து திரிந்த அன்றைய இரவிலும் மறுநாளும் செய்தி சேகரிக்கவோ, பார்வையிடவோ எவரும் அனுமதிக்கப்பட்டிருக்கவில்லை. எரித்தவரின் சாட்சியங்கள் படிப்படியாக வெளிவரும் காலம் இது. அவற்றையும் இத்தொகுப்பில் புதிதாகச் சேர்த்துள்ளேன்.

'ஜூன் முதலாம் திகதி '' நூலகம் எரிந்ததெனத் தமது கட்டுரைகளில் குறிப்பிடும் பலர் அதனை மே 31 நள்ளிரவு 12 மணிக்குப் பின்னைய பொழுதாகவே குறிப்பிடுகின்றனர் என்று கருத இடமுண்டு. மேலும் சிலர் அதனை ஜூன் 1ஆம்திகதி இரவாக்கி, இன்னும் சிலர் அதனை ஜூன் 1ம் திகதி இரவு தொடங்கி ஜூன் 2ஆம் திகதி வரை என்றும் குறிப்பிடத் தயாராகின்றனர்.

திருகோணமலையிலிருந்து ஜூன் 3ம் திகதி கொழும்புக்குத் திரும்பிய தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் அ.அமிர்தலிங்கம் பாராளு மன்றத்தில் 'The most curious thing is that when the IGP and all these people were there on the night of the 1st [June] these same men got out armed with weapons, armed with torches, and set fire to the Public Library of Jaffna, which was only about 50 yards from the police station. I think 95,000 volumes of books, both in the reference and in the lending sections of the Public Library of Jaffna, were burnt down" என்று குறிப்பிடுகிறார்.

அவர் ஜூன் முதலாம் திகதி இரவே யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டதாக தான் கேட்டறிந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

யாழ்ப்பாண நூலகத்திற்கு அருகில் தீயணைப்பு இயந்திரங்களையே கொண்டு செல்ல அங்கிருந்த வெறிகொண்ட அரச படைகள் அனுமதிக்கவில்லை. பார்வையாளர்களை அனுமதித்திருப்பார்களா? அனைத்தும் இருட்டினுள்ளேயே சாட்சியமற்று மேடையேற்றப்பட்டுவிட்டது. இந்தச் செய்தியை மக்களுக்குத் தெரிவித்திடக் கூடுமென்றே அதனைத் தடுக்கும் முயற்சியாக, ஈழநாடு பத்திரிகை காரியாலயமும் மறுநாள் எரித்து அழிக்கப்பட்டது. மே மாதம் நள்ளிரவு அச்சிடப்பட்ட ஜூன் 01ம் திகதிக்குரிய ஈழநாடு இதழ் யாழ்நகர் எரியூட்டப்பட்ட செய்தியைக் கூட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேலோட்டமாகக் கடைகள் எரிக்கப்பட்டன என்பதுடன் 'இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை (31.05.1981 நள்ளிரவு) யாழ் நகரில் பல கடைகள் தீக்கிரையாகிக்கொண்டிருந்தன. தியேட்டர் ஒன்றும் தீக்கிரையாகியுள்ளது''என்றே குறிப்பிட்டுள்ளது. அதன் பின்னர் ஜூன் 6ஆம் திகதிதான் பத்திரிகையின் அடுத்த இதழ் வெளிவந்துள்ளது. அதில் யாழ்ப்பாண நூலகம் எரியூட்டப்பட்டதாக ஒரு செய்திகூட இருக்கவில்லை. செய்தித் தணிக்கை பற்றிய முதற் பக்கக் குறிப்பே எமக்கு பத்திரிகையின் பக்கங்களில் சொல்லப்படாத சேதியை சொல்லிவைத்திருந்தன.

யாழ்ப்பாண நூலகம் எரியூட்டப்பட்டதை யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி மாடியில் தன் அறையிலிருந்து கண்ட தாவீது அடிகளார் அதனை தொலைபேசியின் ஊடாக கொழும்பு நண்பரொருவருடன் உரையாடிய போது வெளிப்படுத்தியிருக்கிறார். அந்த உரையாடலே யாழ். நூலக எரிப்புச் செய்தியினை கொழும்புக்கு எடுத்துச் சொன்னது. அவரது மரணமும் யாழ்ப்பாண நூலக எரியூட்டல் வரலாற்றுடன் சம்பந்தப்பட்டது. அவரின் மறைவு தொடர்பான கண்ணீர் அஞ்சலியில் 01.06.1981 என்று குறிப்பிடப்பட்டுள்ளது. அவரது கல்லறை வாசகமொன்றில் அது 02.06.1981 என்ற குறிப்பிடப்பட்டுள்ளது. தாவீது அடிகளார் மாரடைப்பால் ஜூன் 1ஆம் திகதி மரணமானார் என்று ஒரு செய்தியும், 'ஸ்ட்ரோக்'' பாதிப்பினால் மறுநாள் தான் மரணமானார் என்று மற்றொரு செய்தியும் உலாவிவருகின்றது. இதனை இன்றும் உயிருடன் வாழும் அமரர் தாவீது அடிகளாருடன் நெருங்கிப் பழகியவர்கள் தெளிவுபடுத்தாவிட்டால் யாழ்ப்பாண நூலகத்தின் எரிப்பு போலவே இவரது மரணத் திகதியும் வரலாற்றில் தெளிவற்றதாகி விடும்.

வரலாற்றை முறையாக ஆவணப்படுத்துவதில் எமக்குள்ள அசமந்தப் போக்கு இத்தகைய குழப்பங்களுக்கு வித்திடுகின்றன. கட்டுரையாளர்கள் தெளிவான சிந்தனையுடனும் சமூகப் பொறுப்புணர்வுடனும் தமது படைப்பாக்கங்களை எதிர்காலத்தில் வெளியிட வேண்டும் என்பது வரலாற்றுக் கடமையாகும். இதனை இந்தத் தொகுப்பு மீண்டும் வலியுறுத்துகின்றது.

நன்றி

**என்.செல்வராஜா**

(தொகுப்பாசிரியர்)

01.04.2023

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நுழைவாயில்

('யாழ்ப்பாணப் பொது நூலகம்' என்ற நூலுக்கு
01.06.2001இல் எழுதிய முன்னுரை)

யாழ்ப்பாணத்துப் பொதுசன நூல்நிலையம் தீக்கிரையாக்கப்பட்டு இவ்வாண்டு ஜூன் முதலாம் திகதியுடன் இருபது வருடங்கள் பூர்த்தியாகின்றன. இந்த இருபது வருட காலத்தில் இந்த நூலக எரிப்பை பல்வேறு கோணங்களில் இடைக்கிடை பத்திரிகை வாயிலாகவும் சிறு சஞ்சிகைகளின் வாயிலாகவும் நினைவுகூர்ந்து வந்துள்ளோம். இது ஒரு தனி நூலகத்தின் இழப்பன்று. கல்வியை வாழ்வின் அடிநாதமாகக் கொண்டு உருவாகி வந்ததொரு சமூகத்தின் கலாச்சாரப் படுகொலையாகும்.

எரிந்த நூலகத்தைக் கட்டியெழுப்ப மேற்கொண்ட ஆரம்பகால முயற்சிகள் நாட்டின் போர்க்கால சூழலினால் பலன் தரவில்லை. இருபது வருடங்களுக்கு முன்னர் கம்பீரமாகக் காட்சி தந்த அந்த அறிவாலயம் இன்று தனித்து நின்று இயங்கும் நிலையில் இல்லை. கிளை நூலகங்களாக நகரில் பிரிந்து தம் இருப்புக்காகப் போராடிக்கொண்டிருக்கின்றன.

யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்தின் வரலாறு ஆவணப்படுத்தப்படும் வேளை, எமது வரலாற்றின் ஒரு அங்கம் ஆவணமாக்கப்படுவதாகக் கருதுகிறோம். வித்தூன்றி முளை கண்டு உரமிட்டு நீருற்றி விருட்சமாகிக் கனியும் வேளை எரியூட்டி அழியுண்ட போதிலும் அதை சாம்பலிலிருந்து உயிர்ப்பிக்க முடியாதா என்று ஏங்கி பீனிக்ஸ் கனவுகளை நனவாக்க முயன்ற ஒரு சமூகத்தின் ஏக்கம் இங்கே பதிவுக்குள்ளாகியுள்ளது.

யாழ்ப்பாண பொதுசன நூலகத்தின் ஆரம்பகால வரலாறு 1970 வரைக்கும் அமரர் க.சி.குலரத்தினம் அவர்களால் ஆவணமாக்கப்பட்டுள்ளது. அது 'யாழ்ப்பாண நூல் நிலையம் ஒரு ஆவணம்'' என்ற பெயரில் நூலுருவாகியுமுள்ளது. யாழ்ப்பாண மாநகர சபையால் ஜூன் 1984இல் வெளியிடப்பட்ட 'மீள்விக்கப்பெற்ற கட்டடத்திறப்பு விழா ஞாபகார்த்த மலர்'' மற்றொரு ஆவணமாகும். அதன் பின்னர் யாழ்ப்பாண நூல்நிலையம் பற்றிய எந்தவொரு ஆவணமும் இன்றுவரை தொகுக்கப்பெற்றதாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிய முடியவில்லை. காலத்துக்குக் காலம் பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளும் கட்டுரைகளும்கூட ஒழுங்காகப் பேணப்பட்டிருக்குமா என்பது சந்தேகமே. இந்நிலையில் எதிர்காலப் பயன்பாடு கருதி இத்தகைய கட்டுரைகள் செய்திகள் அனைத்தையும் சேகரித்து ஒரு நூலாக்கி எதிர்காலத் தேவைக்காக ஆவணப்படுத்தி வைக்க வேண்டும் என்று என்னுள் நீண்ட காலமாகக் கருக்கொண்டிருந்த எண்ணத்தின் வெளிப்பாடே இந்த வெளியீடாகும்.

1894ம் ஆண்டு நூலக அமைப்புத் தொடர்பாக நடந்த பொதுக்கூட்டச் செய்தியுடன் இத்தொகுப்பு ஆரம்பமாகின்றது. இந்நூலகத்தில் இடைக்காலத்தில் இணைந்து சேவையாற்றி அண்மையில் மறைந்த ஒரு நூலகருக்கான அஞ்சலிக் கட்டுரையுடன் இத்தொகுப்பு நிறைவு பெறுகின்றது. இடையில் உள்ள நாற்பத்தியாறு ஆக்கங்களில் இரண்டைத்தவிர பிற யாவும் காலத்துக்குக் காலம் பத்திரிகைகளிலும், சிறு சஞ்சிகைகளிலும், இணையத் தளங்களிலும் வெளியானவை. கட்டுரைகள் தவிர, அவ்வப்போது யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் பற்றிய செய்திகளும் இடையிடையே சேர்க்கப்பட்டுள்ளன. நூலகம் பற்றிய வேறு சில கட்டுரைகளும் கவிதாஞ்சலிகளும் ஓவியங்களும் இடைக்கிடையே பிரசுரமாகியிருந்த போதும் அவை அனைத்தையும் பெற்றுக்கொள்ள முடிந்தவரை முயற்சி எடுத்தும் பூரணமாகப் பயனளிக்கவில்லை. சில சஞ்சிகைகளின் முகவரியே இல்லாமையும், சிலர் எனது வேண்டுகோளுக்குச் செவிசாய்க்கவே துணியாமையும் இதற்கான காரணங்களாகக் கருதலாம்.

இங்கு பிரசுரமாகியுள்ள சகல பதிவுகளினதும் மூலப் பிரசுரக் குறிப்புக்கள் கட்டுரைகளின் இறுதியில் குறிப்பிடப்பட்டுள்ளன. இத்தொகுப்பில் அவை இடம்பெற வாய்ப்பளித்தமைக்கு எனது உளம் நிறைந்த நன்றியை கட்டுரையாளர்களுக்குத் தெரிவிக்கின்றேன்.

இத்தொகுப்பு முழுமைபெற எனக்குத் தோள்கொடுத்தவர்களுக்கு நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இலங்கையில் இருந்து இக்கட்டான சூழ்நிலையிலும் காலத்துக்குக் காலம் எனக்கு வேண்டிய தகவல்களைப் பல்வேறு வேலைப்பளுவின் மத்தியிலும் பெற்று அனுப்பிய யாழ்ப்பாணத்துப் பொதுசன நூலகரும் எனது நண்பருமான திரு.வி.எஸ். தனபாலசிங்கம், கொழும்பிலிருந்து கொண்டு எனது முயற்சிக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊக்கமளித்ததோடல்லாது தனது சேர்க்கைகளிலிருந்த பத்திரிகைக் குறிப்புக்களையும் முகவரிகளையும் அனுப்பி உதவிய எனது நூலகவியல்துறை ஆசிரியரும், இலங்கை இஸ்லாமிய நிலையத்தின் பணிப்பாளருமான திரு.எஸ்.எம்.கமால்தீன், கேட்டபோதெல்லாம் யாழ்ப்பாணத்து நூலகங்களை குடைந்து தகவல்களை எடுத்து அனுப்பிவைத்து என் முயற்சிகளில் மாறாத அக்கறை கொண்டவரும் யாழ். மருத்துவபீட விரிவுரையாளரும் எனது சகோதரருமான வைத்திய கலாநிதி ந.சிவராஜா, அவரது துணைவியார் மலைஅரசி சிவராஜா, 25ஆண்டுகளுக்கு முன்னால் நூலகத்துறையை நான் தொழிலாகத் தேர்ந்தெடுத்து நுழைந்த வேளை அது தொழிலல்ல உன் வாழ்வு என்று போதித்ததுடன் நில்லாது தன் இறுதிக்காலம்வரை என் ஆசானாகவே இருந்து மறைந்த கலாநிதி வே.இ.பாக்கியநாதன், லண்டனில் தொலைபேசி உரையாடலொன்றின்போது தான் அறிந்தோ அறியாமலோ ஒருநாள் இத்தகைய தொகுப்பொன்றைத் தயாரிக்க வேண்டும் என்ற எண்ணத்தை என் உள்ளத்தில் விதையாக வேரூன்ற வைத்த வைத்திய கலாநிதி ரட்ணேஸ்வரன், இவர்கள் குறிப்பிடத்தகுந்தவர்கள்.

இத்தொகுப்புக்கு ஒரு அணிந்துரை வழங்கப் பொருத்தமானவரை தேர்வதில் ஏகமனதான தீர்வானவர் யாழ்ப்பாண மாநகர சபை ஆணையாளர் திரு.வே.பொ.பாலசிங்கம் ஆவார். யாழ்ப்பாணத்தில் நிலவும் போராட்டச் சூழலிலும் விடாப்பிடியாக மட்டுப்படுத்தப்பட்ட வளங்களுடன் நூலகத்தை இயக்குவதற்கான திட்டங்களை முன்னெடுத்து உழைத்து வருபவர். அவரின் அணிந்துரையால் இத்தொகுப்பு புதுமெருகு பெறுகின்றது. அவரது பாரிய தொழிற் கடமைகளுக்கிடையே இவ்வணிந்துரையை வழங்கி உதவியமைக்கு அவருக்கு நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன். இத்தொகுப்பை நூலுருவாக்குவதில் எனக்குத் துணையாக நின்று தோள் கொடுத்து நூலை வடிவமைத்துத் தந்த மூன்றாவது கண் இ.பரதன், இதன் வெளியீட்டுப் பொறுப்பை மனமுவந்து ஏற்ற ஐ.பி.சி வானொலிப் பணிப்பாளர் சிவரஞ்சித், இதை அச்சிட்டுத் தந்த வாசன் அச்சகத்தினர், மற்றும் இவ்வாவணத் தொகுப்பை நூலுருவாக்குவதில் தோள்கொடுத்து ஆதரவளித்த அனைவருக்கும் என் இதயம் கனிந்த நன்றி.

இறுதியாக இத்தொகுப்பை வாசித்துப் பத்திரப்படுத்த எண்ணும் உங்கள் அனைவருக்கும் - குறிப்பாக புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாயக எண்ணங்களை நெஞ்சில் சுமந்து வாழும் உள்ளங்களுக்கு ஒரு வேண்டுகோள். என்றாவது ஒருநாள் நம் மண்ணில் ஒரு பெறுமதி வாய்ந்த மாபெரும் நூலகம் மலர வேண்டும். அது தமிழ் மண்ணெங்கும் தன் சேவையை வியாபிக்கும் ஒரு நவீன நூலகமாக அமைய வேண்டும். நூலகம் வெறும் கட்டிடத்தால் மட்டும் பெருமையுறலாகாது. அதன் சேவையின் வலிமையாலும், தன்னகத்தே கொண்டு மிளிரும் அறிவுத் தேட்டத்தின் கனதியாலும், தான் சார்ந்த மக்களையும் தேசத்தையும் பெருமைப்பட வைக்க வேண்டும். அந்தத் தமிழ்த் தேசிய நூலகத்தை அமைக்கும் வழிவகைகளை இன்றே திட்டமிட வேண்டும். அதற்கான மூலவளங்களை சேகரிக்க முனையவேண்டும். இழந்த நூல்களின் பிரதிகளை முடிந்தவரை தேடிப்பெற முயலவேண்டும். தாய் மண்ணில் போர்க்காலச் சூழலால் அழிந்து சிதைந்தவண்ணமிருக்கும் நூல்களையும் ஆவணங்களையும் சேகரித்து நவீன தொழில்நுட்ப வசதியுடன் பிரதியாக்கம் செய்து பாதுகாக்க வேண்டும். உலகின் பழமையும் பெருமையும் நவீனத்துவமும் மிக்க நூலகங்கள், சுவடிச்சாலைகள், மலிந்த மண்ணில் வாழும் நாம் நிறுவனரீதியாக ஒருங்கிணைந்து செயற்பட்டால் இது கைகூடும்.

புலம்பெயர்ந்த நாடுகளில் அமைந்துள்ள தமிழ் நூலகங்கள், தகவல் நிலையங்கள் அனைத்தும் தமது தாய்ச் சங்கத்தினதும் அங்கத்தினர்களதும் தேவைகளை பூர்த்தி செய்யும் அதே வேளை, தாய்மண்ணின் ஒரு தேசிய நுலகத்தின் கட்டமைப்புக்கு தம்மாலான பணியினை வழங்குவது பற்றிச் சிந்திக்க வேண்டிய தருணம் இது. இந் நிறுவனங்கள் தமக்கிடையே தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இதற்கான வளங்களை ஒருங்கு திரட்டும் நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும்.

நூலக அழிவை எண்ணிப் புலம்பியே இருபது வருடங்களைக் கழித்துவிட்டோம். சிந்தனையில் மாற்றத்தைக் கொள்வோம். காத்திரமான பங்களிப்பை நல்க எத்தனையோ செல்லப்பாக்கள், சபாபதிகள் நம்மிடையே இன்றும் மறைந்து வாழ்கின்றார்கள். அவர்களை இனம் காண்போம். தமிழ்த் தேசிய நூலகத்தை வடிவமைப்போம்.

நன்றி

**என்.செல்வராஜா**
(தொகுப்பாசிரியர்)
01.06.2001

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்


*வாழ்த்துச் செய்தி* — *v*

*மீண்டும் ஒரு நுழைவாயில்* — *vii*

*நுழைவாயில்* — *xiii*

1. யாழ்ப்பாண நூலகம் — 1

2. Jaffna Library — 3

3. யாழ்ப்பாணத்தில் நடக்கும் நூல்நிலைய இயக்கம் — 4

4. யாழ் நகரில் நேற்றிரவு தேர்தல் கூட்டத்தில் துப்பாக்கிப் பிரயோகம் - கடைகள் எரிந்தன — 8

5. வருந்துகிறோம் — 9

6. யாழ்ப்பாண பொதுசன நூலகம் - "நமது நோக்கு" — 10

7. மீண்டும் யாழ்ப்பாணம் எரிகின்றது — 12

8. யாழ். நூலக எஞ்சிய நூல்கள் சேகரிப்பு — 15

9. பொலிஸ் விசாரணைக் குழு முன் யாழ். நூலகப் பொறுப்பதிகாரி 3 மணி நேரம் சாட்சியம் — 16

10. யாழ். வன்செயல்கள் பொலிஸ் விசாரணைக்குழு முன் 15க்கு மேற்பட்டோர் சாட்சியம் - மாநகர சபைக்கு ஏற்பட்ட சேதம் 20 லட்சம் — 17

11. யாழ். பொது நூல்நிலையம் எரிக்கப்பட்டதற்கு இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் கண்டனம் — 18

12. யாழ். நூல்நிலையத்துக்கு பொலிசாரே தீவைத்தனர் என காவலாளி கூறினார் — 18


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

13. ''பொலிஸார்தான் தீ வைத்தனர்'' - இப்படித் தாம் கருதுவதாக யாழ். மாநகர ஆணையாளர் சாட்சியம் 19

14. நான் கண்ட யாழ். பொது நூலகம் 20

15. " What sort of animals are these?" 27

16. யாழ்ப்பாண பொதுசன நூல்நிலையத்தை மீள்விப்பதற்கான திட்டம் 28

17. யாழ். நூல்நிலையத்துக்கு சர்வதேச நிதி உதவிக் கோரிக்கை 31

18. ஈழத் தமிழருக்கு எப்படி உதவலாம் என்பது பற்றி முடிவு செய்ய அனைத்துக் கட்சி மகாநாடு தமிழக முதல்வர் கூட்டுகிறார் - யாழ். நூலகத்துக்கு நூல்கள் வழங்க எம்.ஜி.ஆர் ஏற்பாடு 32

19. பொது நூல்நிலைய நஷ்டஈடு - யாழ். முதல்வரிடம் உடன் 10 லட்சம் ரூபா காசோலை - ஐ.தே.க - கூட்டணி பேச்சுவார்த்தையில் முடிவு 33

20. யாழ். நூலக வாரம்: கொழும்பில் இன்று கொடி தினம் 34

21. யாழ்.நூலக புனரமைப்புக்கு பிரித்தானிய தமிழ் அகதிகள் மறுவாழ்வு நிறுவனம் உதவி 35

22. ஜனாதிபதியின் உத்தரவு - ஒரு கோடி ரூபா ஒதுக்கீடு 36

23. யாழ்.வன்செயல்களுக்கு லயனல் பெர்னாண்டோ கமிஷன் சிபாரிசுபடி நஷ்டஈடு 37

24. யாழ். நூலக புனரமைப்புக்கு வங்கிகள் உதவி 38

25. யாழ்.நூலக நிதிக்கு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி ரூ.10,000 சேகரித்தது 38

26. பர்மிய நூல்கள் 39

27. யாழ். நூலக நிதிக்கு வங்கி ரூ.50,000 நிதி உதவி 40

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

28. யாழ்ப்பாணம் பொது நூலகப் புனர்நிர்மாணம் 41

29. ஒரு மாத காலத்துள் யாழ். நூலக கட்டிட வேலைகள் ஆரம்பமாகும் 42

30. யாழ். பொதுசன நூலக நிவாரணத்துக்கு ஜனாதிபதி நிதி ஆரம்பித்தார் 42

31. பொதுசன நூல்நிலையத்துக்கான தமது வேண்டுகோளைச் செவியேற்ற அனைவருக்கும் யாழ். மாநகர முதல்வர் நன்றி நவில்கின்றார் 44

32. பொன்விழாப் பொலிவுகாணும் பொதுசன நூலகம் 48

33. யாழ்.பொது நூலகத்தின் அமைப்பும் சேவைகளும் 55

34. 1981 ஜூன் 1 பண்பாட்டுப் படுகொலை 64

35. விழிப்பினை நீடித்து வைத்திடும் எழுச்சிக் கீதங்களுக்கு ஒரு முன்னுரை 66

36. யாழ்ப்பாண நூல்நிலையத்தை தீயிட்டவர் காமினியே - ஜனாதிபதி பதில் 70

37. நூலகத்தை எரித்தவர்களுக்கு வாக்களிக்கக் கூடாது 71

38. எரிக்கப்பட்ட நூல் நிலையத்தை குழுவினர் பார்வையிட்டனர் 72

39. யாழ் நூல்நிலைய எரிப்பு விசாரிக்கப்பட வேண்டும் 72

40. யாழ். நூலகப் புனர்நிர்மாணம் - அத்தியாவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டிய மீட்புப் பணிகள் 73

41. யாழ்.நூல் நிலைய புனரமைப்பு - ஜனாதிபதி தலைமையில் கூட்டம் 76

42. யாழ். நூலக புனரமைப்புக்கு தென்பகுதி மக்களும் நிதியுதவி வழங்க வேண்டும் 76


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

43. வெண்தாமரை இயக்கம் சமாதானத்துக்கான யுத்தத்தின் புதிய சூழ்ச்சி 78

44. யாழ். பொது நூலகத்துக்கான நட்டஈட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா? 84

45. யாழ்ப்பாணத்தில் நடக்கும் நூல்நிலைய இயக்கம் 88

46. யாழ் நூலகத்துக்கு இந்திய மத்திய, தமிழக அரசு நூல்கள் அன்பளிப்பு 94

47. யாழ் நூலகத்தை புதிய முதல்வரிடம் ஒப்படைப்போம் 94

48. யாழ் நூலகம் எரிக்கப்பட்ட சம்பவத்தை இலகுவில் மறந்துவிட முடியாது 96

49. புதிய யாழ். நூலகம் தமிழரின் அறிவுக் கண்ணைத் திறக்குமா? 97

50. யாழ்ப்பாண நூலக மீள் நிர்மாணம் 101

51. 17 வருடங்களுக்கு முன்னர் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கான பரிகாரம்? 103

52. இலங்கைக்குச் சுதந்திரம் நெருங்கியபோது தமிழ் மக்கள் முற்றிலும் ஒதுக்கப்பட்டனர் 106

53. எரிந்து சாம்பலான பழைய கட்டிடத்தில் யாழ். புதிய நூலகத்தை அமைக்க வேண்டாம் - அது தமிழர் பாரம்பரியமல்ல 111

54. ரூபா 70 கோடி செலவில் யாழ். பொதுநூலகம் 113

55. 150வது ஆண்டில் யாழ்.பொதுசன நூலகம் 114

56. எரிக்கப்பட்ட நூலகத்தை புனரமைக்கப் போகிறவர் யாரோ? 117

57. மீண்டும் உயிர்பெறும் முயற்சியில் புனருத்தாரணம் பெறும் யாழ்.நூலகம் 119

58. விடிவை நோக்கிய ஒரு பயணம் 125

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

59. நூலகர் நெஞ்சை விட்டகலா நினைவலைகள் 131

60. சிங்களப் பேரினவாதிகளின் அறிவுப்பெட்டக அழிப்பு 138

61. பண்பாட்டுப் படுகொலை - யாழ் பொது நூலகம் தீக்கிரையாக்கப்பட்டு பத்தொன்பது வருடங்கள் 141

62. யாழ்ப்பாணப் பொதுநூலகம் திறப்புவிழா (14.2.2003) 146

63. யாழ் நூலகத்திற்கு தீயிட்டது காமினி ஜயவிக்ரம பெரேரா சார்ந்த குழுவினர் 153

64. யாழ் நூலக எரிப்பு நினைவு தினம்: தமிழ் இன அழிப்பின் அடையாளமே யாழ் நூலக எரிப்பு 155

65. மீண்டும் ஒரு தடவை கடந்து போயிற்று 162

66. வரலாற்றை மறைக்கும் மறுக்கும் அரசியலை நிறுத்துங்கள் 173

67. யாழ்ப்பாண நூலகத்துக்குத் தீ வைத்தவர் ஒருவரின் வாக்குமூலம் 182

68. யாழ் நூலகம்: பிரபாகரனின் ஆணையில் புலிகளால் எரிக்கப்பட்டதா? 186


69. புத்தரின் படுகொலை (கவிதை) 208

70. நம்பிக்கையென்ன நமக்கு? (கவிதை) 210

பின்னிணைப்பு: யாழ்ப்பாணத்தில் ஆரம்பகால நூலகங்கள் 212

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண நூலகம்

***ஓவலாண்ட் சிலோன் ஒப்சேர்வர்***
***10 ஏப்ரல் 1894***

யாழ்ப்பாண நூலக அமைப்பின் பொதுக்கூட்டம் ஒன்று இம்மாதம் 5ஆம் திகதி மாலை 7 மணிக்கு இடம்பெற்றது. யாழ்ப்பாண அரச அதிபரும், யாழ்ப்பாண நூலக அமைப்பின் போஷகருமான திரு. டபில்யூ.சி. துவைனம் அவர்களின் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் பின்வருவோர் பிரசன்னமாயிருந்தனர்: டாக்டர் கிரேனியர், வணக்கத்திற்குரிய திரு. லெப்ரோய், திருவாளர்கள் எப்.போவ்ஸ், ரி.சங்கரப்பிள்ளை, டபில்யூ.சி.ஆர்னோல்ட், பி.சந்தியாகுபிள்ளை, எஸ்.உலகசேகரம், அலெக்ஸ் டூசைன்ட், எஸ்.பி. லோட்டன், ஏ.கனகசபை, சார்ள்ஸ் ஸ்ட்ரான்டன்பெர்க், டபில்யூ.வுட்ஹவுஸ்.

செயலாளர் அறிக்கையை வாசித்தார். திரு. அலெக்ஸ் டூசைன்ட் முன்மொழிய எஸ்.பி. லோட்டன் வழிமொழிய அவ்வறிக்கை அவையினரால் திருப்திகரமானதென ஏற்றுக்கொள்ளப்பட்டது. பின்வரும் இரண்டாவது தீர்மானத்தை டாக்டர் கிரேனியர் முன்மொழிய வணக்கத்திற்குரிய லெப்ரோய் வழிமொழிந்தார்: இச்சங்கத்தில் கடந்த காலங்களில் அளப்பரிய சேவையாற்றி இவ்வாண்டு முதல் தமது பொறுப்புகளில் இருந்து ஓய்வுபெறும் நிர்வாகிகளுக்கும், கடந்த ஆண்டின் அங்கத்தவர்களுக்கும் அவர்களது பெறுமதிமிக்க சேவையை கௌரவித்து அவர்களுக்கு நன்றிகள். சார்ள்ஸ் ஸ்ட்ரான்டன்பெர்க், செயலாளரும் தனாதிகாரியும், திருவாளர்களைத் தெரிவித்தல். அலெக்ஸ் டூசைன்ட், எஸ். ஏ. அழகக்கோன், எஸ். நாகலிங்கம், ஏ.கனகசபை நிர்வாக சபையினர். திருவாளர்கள் ரி.சங்கரப்பிள்ளை நடப்பாண்டிற்கான புதிய செயலாளராகவும் எஸ்.பி. லோட்டன் புதிய தனாதிகாரியாகவும் தெரிவு செய்யப்பட்டனர். பின்வரும் சந்தாதாரர்கள் இந்த ஆண்டுக்கான குழுநிலை உறுப்பினர்களாக தெரிவுசெய்யப்பட்டனர். இவர்கள் அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள சந்தா செலுத்தும் உறுப்பினர்களின் பொதுக்கூட்டம் வரை பணியில் இருப்பார்கள்: திருவாளர்கள் எப்.போவ்ஸ், அலெக்ஸ் டூசைன்ட், சி.ஸ்ரான்ற்பேர்க், எஸ்.உலகசேகரம், பி.சந்தியாகுபிள்ளை, எஸ்.ஏ.அழகக்கோன், எஸ்.நாகலிங்கம், ஏ. கனகசபை, டபில்யூ.சி.ஆர்னோல்ட்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண நூலக அமைப்பின் போசகரும் தலைவருமான டபிள்யூ.சி. துவைனம் அவர்கள் கனிவோடு இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்குவதையிட்டு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தை ஏ.கனகசபை முன்மொழிந்தார். சி.ஸ்ரான்ற்பேர்க் அதனை வழிமொழிந்தார். திரு. வூட்ஹவுஸ் அவர்கள் மாதாந்த சந்தா கட்டணத்தை ரூபாய் 1.50 சதமாக்கும் திட்டத்தை முன்மொழிந்தார். அதனை திரு. ஸ்ரான்ற்பேர்க் வழிமொழிந்தார். கனகசபை அவர்கள் சந்தாதாரர்கள் ஒரு ரூபா மாத சந்தா செலுத்துபவராகவும், ரூபாய் 1.50 மாத சந்தா செலுத்துபவராகவும் இரு பிரிவினராக பிரிக்கப்படவேண்டும் என்றும், மாத சந்தா ஒரு ரூபாய் 50 சதம் செலுத்தும் சந்தாதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கி பத்திரிகைகளும் பருவ இதழ்களும் அவர்களின் வீடுகளுக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்றும் பிரேரணையொன்றை முன்வைக்க திரு. எப். போவ்ஸ் அதனை வழிமொழிந்தார். திருத்தப்பட்ட தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அரசினால் வழங்கப்படும் உதவித்தொகையை 50 ரூபாயினால் அதிகரிக்க குழு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற பிரேரணையை திரு அலெக்ஸ் டீசைன்ட் முன்வைக்க அதனை திரு பி.சந்தியாகுபிள்ளை வழிமொழிந்தார். திரு எப். போவ்ஸ் பாடசாலைக் கட்டடங்களை பரிசோதிக்கும் அதிகாரியிடம் (Inspector of School's Building) நூலகத்திற்கான இடத்தை பெற்றுக்கொள்ள முடியுமா என்பதை பரிசீலனைசெய்ய குழுவினர் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற ஆலோசனையை முன்வைத்தார். டாக்டர் கிரேனியர் அதனை வழிமொழிந்தார். நூலகக் குழுவினர், மியூடி சகோதரர்கள் (Messrs Mudie & Bros) நிறுவனத்தினரிடமிருந்து புத்தகங்களை கொள்வனவு செய்வதற்கு முன்னோடியாக அவர்களுடன் தொடர்பினை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும் என்ற பிரேரணையை திரு டபில்யூ.வுட்ஹவுஸ் முன்வைக்க, டாக்டர் கிரேனியர் அதனை வழிமொழிந்தார். அவைத் தலைவர் திரு. டபில்யூ.சி.துவைனம் கூட்டத்திற்கு சமுகமளித்திருந்தவர்களுக்கு, தனது நன்றியைத் தெரிவித்துக் கொண்டார். மேலும் 1894 ஜூன் 30 வரையிலான மூன்று மாதங்களுக்கு மேலாக சந்தா நிலுவை வைத்திருப்பவர்களின் உறுப்புரிமையை ரத்து செய்ய வேண்டும் என்ற பரிந்துரையையும் அவர் வெளியிட்டார். அதுவும் சபையினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

***(The Overland Ceylon Observer, 10.04.1894)***

***(Reprinted in Sunday Observer 10.04.1994)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Jaffna Library

***The Overland Ceylon Observer***

A general meeting of the Jaffna Library took place on the evening of the 5th inst. at 7pm. Mr. W.C.Twynam, C.M.C. the patron of the institution was the Chairman, and the following members were present, Dr.Grenier, Rev.Mr.LeBracy, Messrs,F. Bowes, T.Changarapillai, S.T.Arnold, B.Santiagopulli, S.Olegasagaram, Alex Toussaint, S.P.Lawton, A.Kanagasabai, Chas. Strantenbergh and W. Woodhouse.

The secretary having read the report, which was satisfactory, the following resolutions were moved and seconded viz: 1st moved by Mr. Alex Toussaint and seconded by Mr. Lawton, that the report now read by the Secretary by adopted. 2nd moved by Dr. Grenier seconded by Rev. Mr. Labrooy, that a vote of thanks be accorded to the retiring office bearers and committee members for their valuable services rendered to this institution. C.Stratenberg, Secretary and Treasurer, Messrs Alex Toussaint, S.A.Allagakoen, S.÷agalingam, A.Kanagasabai, T.Changrapulli be elected the Secretary and Mr. Lawton the Treasurer, and that the following gentlemen be elected to a Committee for this year, and till the next annual general meeting of the subscribers, viz. Messrs,Bowes, Alex Toussaint, C.Strantenbergh, S.Olegasagaram, B.Santiagopulle, S.A.Allagakoen, S.÷agalingam, Kanagasabai, and Arnold.

Moved by A.Kanagasabai and seconded by C.Strantenberg, that a vote of Thanks be accorded to W.C.Twynam, Esq.CMC the Patron and Chairman for his kindness in presiding at this meeting.Proposed by Mr. Woodhouse that the subscription be raised to Rs.1.50 per month seconded by Mr. Strantenbergh. Amendment proposed by Mr. Kanagasabai that there be two classes of Subscribers, one of Rs. 1.50 and the other Rs.One, that those paying 1.50 may have the privilege of having the papers and periodicals sent home, seconded by Mr. Bowes.Amendment carried nemcon.

Mr. Alex Toussaint proposed and Mr. Santiagopulle seconded that the Committee should take steps to obtain an increase of grant from Government by Rs.50. Mr. Bowe proposed that the Committee take steps to see if the Inspector of School's building can be obtained for the Library. Seconded by Dr. Grenier. Carried. Proposed by Mr. Woodhouse and seconded by Dr. Grenier "That the Committee be instructed to write to Messrs Mudie & Bros with a view of obtaining books from them, carried. The president thanked the meeting for the welcome and the vote of thanks. Suggested by the president that all members who shall be over 3 months in arrears by 30th June 1894, shall cease to be members, Carried.

(The Overland Ceylon Observer, 10.04.1894)
(Reprinted in Sunday Observer 10.04.1994)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் நடக்கும் நூல்நிலைய இயக்கம்

*தினகரன் [கொழும்பு]*
*25 மார்ச் 1954*

இம்மாதம் 29ஆம் திகதி திங்கட்கிழமையன்று புதிய யாழ்ப்பாண மத்திய நூல்நிலையக் கட்டிடத்துக்கு அத்திவாரக் கற்கள் நாட்டப்படும் போது யாழ்ப்பாணத்தில் நூல்நிலைய அபிவிருத்தித் திட்டம் ஒருபடி முன்னேறும். இந்த அத்திவாரக் கல் நாட்டும் வைபவத்திலேயே ஒரு புதுமையான அம்சம் உண்டு. சாதாரணமாக இத்தகைய வைபவங்களில் ஒரு தனிப்பட்ட பிரமுகரால் ஒரு அத்திவாரக்கல் நாட்டப்படும். ஆனால் இந்த வைபவத்தில் ஐந்து பிரமுகர்கள் ஐந்து அத்திவாரக் கற்களை நாட்டுவார்கள்.

***முக்கியமான ஸ்தாபனம்***

மத்திய நூல்நிலையம் யாழ்ப்பாணமெங்குமுள்ள அநேக கிளை நிலையங்களுக்கு தாய் நூலகமாகப் பயன்படும். ஆதலால் இத்தகைய ஒரு முக்கிய ஸ்தாபனம் அமைந்திருக்கக்கூடிய கட்டிடத்திற்குரிய அத்திவாரக் கற்களை நாட்டும் முக்கியமான வைபவத்தை நடத்த ஐந்து கனவான்களைத் தெரிவு செய்வதில் ஒரு திட்டமான முறை கையாளப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மக்களின் இப்போதைய அறிவு விருத்திக்கும், பொருளாதார நிலைமைக்கும் கீழ்க்கண்ட அம்சங்களே காரணமாகுமெனக் கூறலாம்.

1. இந்தியாவுடனுள்ள நெருங்கிய கலாசாரத் தொடர்புகள்.
2. கடந்த இரு நூற்றாண்டுகளின் போது பிரிட்டிஷாருடன் ஏற்பட்ட தொடர்புகள்.
3. அமெரிக்காவிலிருந்தும் ஐரோப்பாவிலிருந்தும் வந்த பணமும் மிஷனரிமார்களும்.
4. யாழ்ப்பாணத்தவர்களின் உரம் வாய்ந்த பகுத்தறிவும் செயற்திறன் பொருந்திய மனப்பான்மையும் பழைய சம்பிரதாயங்களை விடாது காக்கும் அடிப்படை இயல்பும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்படும் இந்தப் புதிய நூல்நிலையக் கட்டிடத்துக்குப் பிரிட்டிஷ் ஹைகமிஷனர் சர் செசில் சயர்ஸ், இந்திய ஹைகமிஷனர் திரு.ஸி.ஸி. தேசாய், அமெரிக்க ஸ்தானிகர் திரு. பிலிப் குறோ, வடபகுதியைச் சேர்ந்த பிரபல கல்விமானும் மிஷனரியும் யாழ்ப்பாண மத்திய நூல்நிலையச் சங்கத்தின் உபதலைவருமான அதிவந். பிதா. ரி.எம்.எப்.லோங், ஓ.எம்.ஐ. ஆகிய பிரமுகர்கள் நான்கு மூலைக் கற்களை இடும்போது இந்த அம்சங்கள் யாவும் இடம்பெறும். இவ்விதமாக ஆராய்ச்சி நிலையமாகவும், அறிவுக் களஞ்சியமாகவும் திகழக்கூடிய இந் நூல்நிலையத்துக்கு அத்திவாரமான நான்கு மூலைக் கற்களும் அமெரிக்காவுக்கும் பிரிட்டனுக்கும் இந்தியாவுக்கும் மிஷனரிமார்களுக்கும் பிரதிநிதித்துவம் வகிக்கும் நான்கு பிரபலஸ்தர்களால் இடப்படும்.

***உலகமறிந்த நவீன வசதிகள்***

இவ்வைபவத்தில் யாழ்ப்பாண மக்களின் பிரதிநிதியாக யாழ்ப்பாண மேயர் திரு.சாம்.ஏ.சபாபதி கலந்துகொள்வார். இவர்தான் வடபகுதியில் நூல்நிலைய இயக்கத்தின் முன்னணியில் நின்று, பொதுமக்களிடையேயிருந்து உபகாரிகளின் குழுவொன்றை வெற்றிகரமாகத் திரட்டினார். இவர்களே இன்று யாழ்ப்பாண நூல்நிலையச் சங்கமாக அமைந்துள்ளனர். யாழ்ப்பாண நூல்நிலையத்தின் தலைவராகவுமிருக்கும் திரு.சபாபதி புதிய நூல் நிலையத்தின் வாயிலை அலங்கரிக்கக்கூடிய ஒரு அத்திவாரக் கல்லை நாட்டுவார்.

இக் கட்டடத்துக்குரிய அமைப்புப் படங்கள் சென்னையைச் சேர்ந்த பிரபல சிற்ப ஆலோசகரும் திராவிட சிற்ப முறையில் அங்கீகரிக்கப்பெற்ற விற்பன்னருமான திரு. வி.எம். நரசிம்மனால் தயாரிக்கப்பெற்றன. டில்லிப் பல்கலைக்கழகத்தின் நூல்நிலைய சாஸ்திரப் பேராசிரியரும் இன்று உலகிலுள்ள தலைசிறந்த நூல்நிலைய நிபுணருமான டாக்டர் எஸ்.ஆர்.ரங்கநாதன் நூல்நிலையத் தலைவரையும் வாசகரையும் கருத்திற்கொண்டு கட்டடத் திட்டத்தைப் பூர்த்தி செய்தார். இவ்விதமாகப் புதிய கட்டடத்தினுள்ளே நூல்நிலையச் சாத்திரத்துக்குத் தெரிந்த சகல நவீன வசதிகளும் அடங்கியிருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***பத்து இலட்சம் திரட்ட முயற்சி***

நூல்நிலையத்தின் வெளித் தோற்றம் திராவிட சிற்ப முறையின் சிறந்த அம்சங்களை எடுத்துக் காட்டும். கட்டடத்தின் முதற்பகுதியை நிர்மாணிக்கும் வேலை கூடிய விரைவில் கொந்தராத்துக்காரர்களிடம் விடப்படும்.

இக்கட்டடத்துக்கும் நூல்நிலைய இயக்கத்தை மேலும் அபிவிருத்தி செய்வதற்கும் தேவைப்படும் பணம் சுய உதவி அடிப்படையில் கண்டுபிடிக்கப்பட்டு வருகிறது. ஒரு களியாட்டவிழா நடத்தியதன் மூலமும் ஸ்தாபகர்கள் வழங்கிய 5000 ரூபா நன்கொடையாலும் சீட்டு ஸ்தாபனங்கள் வழங்கிய 1000 ரூபா நன்கொடையாலும் சுமார் ஒரு இலட்சம் ரூபா சேகரிக்கப்பட்டுள்ளது. அபிமானிகளிடமிருந்து இதே போன்ற நன்கொடையாக மேலும் 50,000 ரூபா நிச்சயம் கிடைக்கும். சான் பிரான்ஸிஸ்கோவிலுள்ள சுதந்திர ஆசியக் கமிட்டியிடமிருந்து குறைந்த பட்சம் ஒரு இலட்சம் ரூபாவாவது நன்கொடையாகக் கிடைக்குமென்று திடமாக நம்பப்படுகிறது.


இலங்கை அரசாங்கம் வருமானவரிச் சட்டத்தின் கீழ் யாழ்ப்பாண மத்திய நூல்நிலையத் தர்மநிதியை ஒரு அங்கீகரிக்கப்பட்ட தர்ம ஸ்தாபனமாகப் பிரகடனம் செய்ததன் மூலம் இவ்வியக்கத்துக்குக் குறிப்பிடத்தக்க சேவை செய்துள்ளது. பத்து இலட்சம் ரூபா இலக்கை அடைவதற்காக நிதி வசூல்செய்ய மேலும் முயற்சிகள் தொடர்ந்து எடுக்கப்படுகின்றன.

இன்று பாலர் வகுப்பிலிருந்து பல்கலைக்கழகம் வரை இலவசக்கல்வி வழங்கப்படுகின்றது. இதனால் பாடசாலைக்குச் செல்லும் குழந்தைகளின் தொகை முன்னெப்பொழுதும் கண்டிராத அளவுக்கு அதிகரித்துள்ளது. புத்தகங்கள், சஞ்சிகைகளின் விலைகள் ஏறிக்கொண்டிருக்கின்றன. பாட சாலைகளில் போதிய இடவசதி இல்லை. இந்நிலைமையில் அறிவுத் தாகத்தையும் ஞானவேட்கையையும் தீர்க்க நன்கு திட்டமிடப்பட்ட ரீதியில் நூல்நிலைய வசதிகளை ஏற்படுத்துவதே தகுந்த வழியாகும். இத்தகைய ஒரு ஆக்க நடவடிக்கை வாலிபர்களிடையே புரட்சி மனப்போக்குகள் தோன்றுவதற்கெதிரான சிறந்த அரணாக விளங்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*யாழ்ப்பாண உதாரணம்*

உபயோகமான தர்ம ஸ்தாபனங்களை ஆதரிப்பதற்காகத் தேடிக் கொண்டிருக்கும் கம்பனிகளும் தனிப்பட்ட நபர்களும் தங்களுடைய இலாபங்களில் ஒரு மிகச் சிறிய தொகையை நன்கொடையளிப்பதன் மூலம் இந்த ஆதரவை நல்க இது ஒரு நல்ல சந்தர்ப்பமாகும். மத்திய இலவச நூல்நிலையம் பூர்த்தியாகி, அதனுடன் தொடர்புள்ள டிஸ்திரிக் எங்கும் கிளை நூல்நிலையங்களும் இடத்துக்கிடம் செல்லக்கூடிய நூல் நிலையங்களும் அமைக்கப் பட்டதும், உயர்ந்தவரா யிருந்தாலென்ன, அல்லது தாழ்ந்தவராயிருந்தாலென்ன, பணக்காரராயிருந்தா லென்ன அல்லது ஏழையாயிருந்தா லென்ன ஒவ்வொரு தனி நபருக்கும் அறிவைப் பெறு வதற்கு மட்டுமின்றி ஆராய்ச்சி செய்வதற்கும்கூடச் சிறந்த சந்தர்ப்பங்கள் கிடைக்கும் என்பது திண்ணம்.



யாழ்ப்பாணம் காட்டி யுள்ள இவ்வுதாரணத்தை மற்றும் டிஸ்திறிக்கு களிலுள்ள தலை நகரங்களும் பின்பற்று மேயானால், டிஸ்திறிக் நூல் நிலையங்களுக்குப் பேருதவி யாயிருக்கக்கூடிய ஒரு பிரம்மாண்டமான மத்திய நூல்நிலையத்தைக் கொழும்பு மாநகரில் அமைக்க முடியும். அப்பொழுது அநேக இலங்கை வாலிபர்களுக்கு நூல்நிலையப் பராமரிப்புத் துறையைத் தங்கள் வாழ்க்கைத் துறையாக மேற்கொள்ளவும் சந்தர்ப்பம் கிட்டும்.

*(நன்றி: தினகரன் (கொழும்பு) 25 மார்ச் 1954)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் நகரில் நேற்றிரவு தேர்தல் கூட்டத்தில் துப்பாக்கிப் பிரயோகம் – கடைகள் எரிந்தன

*செய்தி: ஈழநாடு மலர் 23, இதழ் 111. 01.06.1981: ப.1,8.*

*(ஈழநாடு காரியாலயம் எரிக்கப்படுவதற்கு முன்னர் வெளிவந்த 111ஆவது இதழ்)*

யாழ்ப்பாணம் நாச்சிமார் கோவிலடியில் நேற்று (31.05.1981) இரவு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெற்றுக்கொண்டிருந்த போது நிகழ்ந்த துப்பாக்கிப் பிரயோகத்தைத் தொடர்ந்து கூட்டம் குழம்பியது. துப்பாக்கிப் பிரயோகத்தின்போது, பலத்த காயமடைந்த மூவரில் ஒருவர் காலமானார். இருவரின் நிலைமை கவலைக்கிடமாகவுள்ளது.

நிலைமை இவ்வாறிருக்க யாழ் நகரில் நேற்றிரவு தீவைப்புச் சம்பவங்கள் இடம்பெற்றன. பல கடைகள் சேதத்துக்குள்ளானதாகவும், சில கடைகள் தீக்கிரையாகின என்றும் தெரிவிக்கப்பட்டது.

நாச்சிமார் கோவிலடியிலும் தீவைப்பினால் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது.

நேற்றிரவு நிகழ்ந்த அசம்பாவித சம்பவங்கள் தொடர்பாக யாழ் மாவட்ட செயலாளரும் அரச அதிபருமான திரு. யோகேந்திரா துரைசுவாமி ஜனாதிபதியுடனும் பொலிஸ் மா அதிபருடனும் இராணுவத் தளபதியுடனும் உடனடியாகத் தொடர்புகொண்டதாகத் தெரியவருகின்றது.

பொலிஸ் மா அதிபரும் இராணுவத் தளபதியும் இன்று அதிகாலை விசேஷ விமானத்தில் யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்கள் என்று நமது கொழும்பு நிருபர் நேற்று நள்ளிரவு தெரிவித்தார். இச்செய்தி அச்சுக்குப் போகும்வரை (31.05.1981 நள்ளிரவு) யாழ் நகரில் பல கடைகள் தீக்கிரையாகிக்கொண்டிருந்தன. தியேட்டர் ஒன்றும் தீக்கிரையாகியுள்ளது. நேற்றைய சம்பவத்தின்போது பலர் காயமடைந்தனர். இச்சம்பவம் பற்றிய முழு விபரங்களும் நாளைய இதழில் வெளிவரும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(துர்அதிர்ஷ்டவசமாக 01.06.1981 அன்று ஈழநாடு காரியாலயமும் எரிக்கப்பட்டதால், மறுநாள் பத்திரிகை வரவில்லை. அடுத்த பத்திரிகை 06.06.1981 இலேயே வெளிவந்தது.)

## வருந்துகிறோம்

*செய்தி: ஈழநாடு மலர் 23,*
*இதழ் 112. 06.06.1981: ப.1.*

*(ஈழநாடு காரியாலயம் எரிக்கப்பட்டதன் பின்னர் வெளிவந்த 112ஆவது இதழ்)*

தவிர்க்கமுடியாத சூழ்நிலைமைகளின் காரணமாக கடந்த சில தினங்களாக 'ஈழநாடு'' வெளிவரமுடியாது போய்விட்டது. இதனால் சந்தாதாரர்கள், விளம்பரதாரர்கள், வாசகர்களுக்கு ஏற்பட்ட சங்கடங்களுக்காக வருந்துகிறோம்.

மறு அறிவித்தல்வரை விளம்பரங்கள், அறிவித்தல்கள், ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது என்பதையும் அறிவித்துக்கொள்கிறோம்.

***தணிக்கை***

நாடு முழுவதும் அவசரகால நிலைமை அமுலில் இருப்பதால் செய்திகள் தணிக்கை செய்யப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண பொதுசன நூலகம்
# ''நமது நோக்கு''

### ஈழநாடு ஆசிரியர் தலையங்கம்

எல்லா நாடுகளிலும் கல்விக்குப் பெருமை அதிகம். ஆனால் எங்கள் பழைய தமிழ் நூல்களில் கல்விக்குக் கொடுக்கப்பட்ட தனிப்பெருமை மிக மிக அதிகம்.

கல்வியில்லாதவர்ளை விலங்காகவே வைத்தார்கள் தமிழ் மக்கள். நாற்கால் சீவனாகிய மிருகத்துக்கும் மனிதனுக்கும் எத்தனை தூரம். அத்தனை தூரம் உண்டு கல்லாதார்க்கும் கல்வியுள்ளவர்களுக்கும்.

இந்த உண்மையைக் கருதிற்கொண்டால் இம்மாதம் முதலாம் திகதி இரவு தீக்கிரையான யாழ்ப்பாண பொதுஜன நூலகம் எத்தகையவரால் தாக்கப்பட்டதென்பது தெளிவாகும். இவ்வித அநாகரிக நிகழ்ச்சி இக்கால வரலாற்றில் இடம்பெறாததொன்றாகும்.

அமரர் செல்லப்பா போன்ற இந்நாட்டின் பரோபகாரிகள் தொடக்கம் யாழ்ப்பாணம் பெற்றெடுக்காத அருந்தவப் புதல்வன் வணக்கத்துக்குரிய லோங் சுவாமிகள் (Very Rev. Fr.T.M.F.Long) வரைக்கும் அரை நூற்றாண்டு காலத்தில் கட்டி எழுப்பிய கலைக்கோவில் இது. அன்றிரவு சிலை வடிவில் காவல் புரியும் சுவாமியின் ஆன்மா எந்நிலையில் இருந்ததோ?

அரிய பெரிய இலங்கு நூல்கள் மட்டுமல்ல மேற்கில் வளரும் புத்தம் புதிய கலைகளில் வெளியாகும் பல்லாயிரக்கணக்கான நூல்கள் கொண்டதும், நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து வந்த திவ்விய ஆலயம் இது. இதற்குப் புத்துயிர் அளிக்க உலக நாடுகள் பல திரளுமென்பது திண்ணம்.

உயர் கல்விக்கு வசதிகள் மறுக்கப்பட்டுத் தத்தளிக்கும் தகைமை பெற்ற ஆயிரக்கணக்கான தமிழ் மாணவரின் புகலிடம் இது. பூரண மனிதனாக்க உதவும் வாசித்தலுக்குரிய நூலகம் மட்டுமல்ல.

செல்வத்துள் செல்வம் செவிச்செல்வம் என்பதற்கமைய கல்வியை விட கேள்விக்கும் உதவும் நிலையமாக அருஞ்சேவை செய்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வந்திருக்கிறது. தானே படித்தறிந்த அறிவில் குற்றங்கள் புகுந்திருக்கலாம். கேள்வியில் அது கிடையாது. அது இருமுறை வடிகட்டிய அறிவு.

எனவே யாழ். நூலகத்தின் இன்னொரு முக்கிய சாதனமாக இயங்கி வந்தது கேட்போர் நிலையம். இவ்விரண்டு அங்கங்களையும் உயிர்ப்பிக்கும் பொறுப்பு யாழ்.மாவட்ட மக்களினதும், சிறப்பாக யாழ். மாநகர சபையினதும் அவசியமானதும் அவசரமானதுமாகும்.

உலகின் மிகப்பெரிய மேதாவிகள் கார்ள் மார்க்ஸ், பேரறிஞர் ஷா, சேர் வின்ஸ்டன் சேர்ச்சில் போன்றவர்கள் பல்கலைக்கழகத்தின் பட்டதாரிகளல்லர். இப் பெரியோருக்கு கல்வி புகட்டியது லண்டன் பொருட்காட்சி நூல்நிலையம் (British Museum Library) என்றால் ஒரு நூலகத்தின் பெருமை, வலிமை எத்துணையதென்பதை எடுத்துரைக்க முடியுமா?

யாழ் மாவட்டத்தின் அபிவிருத்தி இந்நூலகத்தில் பெரிதும் தங்கியிருப்பதால் காலம் தாழ்த்தாமல் எவ்வித கட்சி அரசியலுக்கும் நிருவாகப் போட்டி பொறாமைக்கும் அப்பால் இயங்கிவந்த இந்த அருமந்த ஸ்தாபனம் - இப்பகுதி மக்களின் கண்கண்ட தெய்வம் - உயிர்த்தெழுந்து ஆல்போல் தழைத்து, அறுகு போல் வேரூன்ற துரிதமான நடவடிக்கைகளில் இறங்குவோமாக.

***(நன்றி: ஈழநாடு (யாழ்ப்பாணம்) 13.06.81)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் யாழ்ப்பாணம் எரிகின்றது

*நீலவண்ணன் [செங்கை ஆழியான்- க.குணராசா]*

இக்கட்டுரைப் பகுதி நீலவண்ணன் எழுதிய 'மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது'' (வரதர் வெளியீடு, யாழ்ப்பாணம், 1981) என்ற நூலின் பக்கம் 30-33 களிலிருந்து மீள்பிரசுரமாகின்றது. யாழ்ப்பாண நூலகம் எரியுண்ட வேளையில் பரவலாக இடம்பெற்ற வன்முறைகள் தொடர்பான நேரடி சாட்சிகளினதும் பத்திரிகைச் செய்திகள், அறிக்கைகள் என்பவற்றையும் தொகுத்து புகைப்பட ஆதாரங்களுடன் எழுதப்பட்ட இந்நூலும் இதே ஆசிரியரின் ''இருபத்திநான்கு மணிநேரம்'' என்ற நூலும் குறிப்பிடத் தகுந்தவையாகும்

பாதுகாப்பு அமைச்சரின் செயலாளர்கேர்ணல் சி.ஏ.தர்மபால, திரு.சோபால ஆட்டிகல, மந்திரிசபைச் செயலாளர் திரு.ஜி.வி.பி.சமர சிங்க ஆகிய அதிகாரிகள் யாழ்ப்பாணம் வந்தனர். ஜனாதிபதியின் விசேஷ பணிப்பின் பேரில் காணி, காணி அபிவிருத்தி, மகாவலி அமைச்சர்திரு காமினி திசாநாயக்கவும், கடற்றொழில் அமைச்சர்திரு பெஸ்டஸ் பெரேராவும் யாழ்ப்பாணம் வந்தனர்.

கொழும்பில் தேசிய பாதுகாப்புச் சபை (÷ational Security Council) அவசரக் கூட்டம் ஒன்றினைக் கூட்டியது. யாழ்ப்பாண நிலைமைகளையும் வியாழக்கிழமை (04.06.81) நடைபெறவிருக்கும் அபிவிருத்திச் சபைத் தேர்தலைப் பற்றியும் கலந்தாலோசித்தது. இக்கூட்டத்திற்கு பிரதி பாதுகாப்பு அமைச்சர்திரு.ரி.பி. வெரப்பிட்டிய தலைமை வகித்தார். வடக்கின் வன்செயல்கள் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டன.

திங்கட்கிழமை முழுநாளும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் பதட்டநிலை காணப்பட்டது. மாலை மெதுவாகக் கவிழ்ந்தது. யாழ்ப்பாணம் இருளில் மூழ்கியது. வன்செயல் பிசாசுகள் தென்புலமிருந்து புறப்பட ஆயத்தமாயின.

**ஐயகோ, நூலகம் எரிக்கப்பட்டதே!**

'பொலிஸ்மா அதிபரும், பிரிகேடியர்வீரதுங்காவும் யாழ்ப்பாணத்தில் இருக்கத்தக்கதாக, யூன் 1ஆம் திகதி இரவு யாழ்ப்பாணத்தில் நிகழ்ந்த சம்பவங்கள் கொடூரமானவையும் வியப்பானவையுமாகும். அதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொலிசார் அன்று இரவு யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்திற்குத் தீயிட்டனர். ஏறத்தாழ 97,000 பெறுமதி மிக்க நூல்கள் எரிந்து கருகிப்போயின. உலகில் எங்கும் இனிமேல் பெறுவதற்கரிய நூல்கள் பல எரிந்து போயின. அந்த நூல்நிலையம் நீண்ட காலமாகக் கட்டி எழுப்பப்பட்டது. அதனை எரித்து முடித்தனர். இந்த நாட்டில் வாழ்கின்ற ஒரு சில மக்களின் மனநிலையை புரிவதற்கு இந்தச் சம்பவம் தக்க குறிகாட்டி ஆகும்.

இரண்டாம் உலக மகா யுத்தத்தின் போது பிரித்தானியாவின் மீது குண்டுகளை வீசச் சென்ற விமானப்படை விமானிகளுக்கு, ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்திற்குக் குண்டுகளை வீசி அழித்துவிடக்கூடாது என ஹிட்லர்உத்தரவிட்டான். அதே போல ஜேர்மனியின் ஹைடல் பேர்க் பல்கலைக்கழகத்தைத் தவிர்க்கும் படி பிரித்தானியா தனது விமானப் படைக்குப் பணிப்புரை வழங்கியது. அறிவுத் தளங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற எண்ணம் பகைவர்களுக்குக் கூட இருந்தது. ஆனால் யாழ்ப்பாணத்தில் கண்மூடித்தனமாக நடந்துகொண்ட பொலிசார்அங்கிருந்த நூல்நிலையத்தைக் கூட விட்டு வைக்கவில்லை.'' என எதிர்க்கட்சித் தலைவர்திரு. அமிர்தலிங்கம் நாடாளுமன்றத்தில் கவலையுடன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்திற்கு எதிரே 700யார்தூரத்தில் யாழ். பொதுசன நூலகம் அமைந்திருக்கிறது. யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்தி சபைத் தேர்தல் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காகத் தென்னிலங்கையிலிருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த விசேஷ பொலிசார் தங்கியிருந்த துரையப்பா விளையாட்டரங்கும், யாழ் நூலகத்துக்கு நேர்எதிரேதான் இருந்தது. இவ்வளவு பாதுகாப்பு இருந்தும் திங்கள் இரவு, பொதுசன நூலகம் தீ பிடித்து எரிந்தது.

அன்று இரவு 10 மணி போல, நூலகத்திற்குள் நுழைந்த கொடியவர்கள், காவலாளியைத் துரத்திவிட்டு, நூலகக் கதவைக் கொத்தித் திறந்து, உள்ளே நுழைந்து அட்டுழியங்கள் புரிந்தனர். 97 ஆயிரம் கிடைத்தற்கரிய நூல்களுக்குப் பெற்றோல் ஊற்றிக் கொழுத்தி அழித்தனர். லெண்டிங் செக்ஷன் முற்றாக எரிந்து சாம்பலாகிவிட்டது. உருக்கு பீரோவுக்குள் இருந்த நூல்கள் கூட எரிந்து சாம்பலாகிப்போயின. றெபரன்ஸ் செக்ஷனில் இருந்த சேகரிக்க முடியாத அற்புத நூல்கள் யாவும் தீயவர்களால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவைத்துப் பொசுக்கப்பட்டன. சிறுவர்நூலகப் பிரிவில் உள்ள நூல்கள் யாவும் அழிவுற்றன. தளபாடங்கள் யாவும் ஒன்றாகக் குவிக்கப்பட்டு எரிக்கப்பட்டன. சுவர்கள் வெப்பத்தால் வெடித்து உதிர்ந்திருந்தன. யன்னல்கள் சிதறிப்போயின. நூலகத்தினுள் சாம்பல் குவியல்களே எஞ்சிக் கிடந்தன. அந்தக் சாம்பல் குவியல்களுள் ஏதாவது நூல்கள் எரியாது எஞ்சிக் கிடக்குமோ என்ற நப்பாசையில் நூலக உதவியாளர்கள் திரு.சு.யோ. இமானுவேலும், திரு.அ.டொன் பொஸ்கோவும், திரு.ச.கந்தையாவும் சாம்பலைக் கிளறிக்கொண்டிருக்கின்ற நிலையைக் காண முடிந்தது.

நூலகம் கருகிக் காரை பெயர்ந்து கிடக்கின்றது. நூல் நிலையத்தின் விளம்பரப் பலகையில் நூலகம் அபிவிருத்தியின் அடித்தளம் - இலங்கை நூலகச் சங்கம் என்ற விளம்பரம் எஞ்சி நிற்கிறது. உண்மையில் அடித்தளம் மாத்திரமே எஞ்சிக் கிடக்கின்றது. புகைத்தல் தடை செய்யப்பட்டுள்ளது என்ற அறிவித்தலும் நூலக வாசலில் இருக்கின்றது. கயவர்கள் நூலகத்தையே புகைத்துவிட்டார்கள்.

தென்கிழக்கு ஆசியாவிலுள்ள மிகச்சிறந்த நூலகங்களில் ஒன்று எனக் கருதப்படுவது யாழ்ப்பாணம் பொதுசன நூலகம் அகும். 97 ஆயிரம் பல்துறை சார்ந்த நூல்கள் எரிந்து போயின. ஏறத்தாழ 19 ஆயிரம் அங்கத்தவர்கள் இந்த நூலகத்திலிருந்து நூல்களைப் பெற்று வாசித்துப் பயனடைவார்கள். மருத்துவம், இலக்கியம், ஜோதிடம் சம்பந்தமான ஓலைச்சுவடிகள் நூற்றுக்கணக்கானவை எரிந்து சாம்பலாகின.

நூல்நிலையம் அழிந்தது யாழ்ப்பாண மக்களுக்கு ஏற்பட்ட பேரிடியாகும். வணக்கத்துக்குரிய தாவீது அடிகள் மரணமாக நேர்ந்தது கவலைக்குரியதாகும். அவர்சுவாமி ஞானப்பிரகாசரின் மாணவர். ஒப்பியல் ஆய்வாளர். பொதுநூல் நிலையம் எரிகிறது என்ற தகவல் கிடைத்ததும் அவர்அதிர்ச்சியடைந்தார். அந்த அதிர்ச்சியில் ஏற்பட்ட மாரடைப்பால் அவர்உயிரிழந்தார். புத்தகங்களின் பெறுமதி அவருக்குத் தெரியும். யாழ்ப்பாண நூலகத்தில் ஊழியராக வேலை செய்து வரும் திரு.பற்குணம் என்பவர்நூல்நிலையம் எரிந்த நிலையைக் கண்டு பிரமை பிடித்தவரானார். அவர்ஒரு நாடகக் கலைஞராவார். மூன்று நான்கு நாட்கள் அவர்சித்தம் குழம்பிய நிலையில் காணப்பட்டார்.

நூல்நிலையம் தீப்பற்றி எரிவதாக அன்றிரவு 10.15 மணியளவில் மாநகரசபை ஆணையாளர்திரு.க.சிவஞானம் அறிய நேர்ந்தது. உடனே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகரசபை பவுசர்களையும் மாநகரசபை ஊழியர்களையும் பொதுசன நூலகத்தில் ஏற்பட்ட தீயை மேலும் பரவாது அணைக்குமாறு பணித்தார். தீயை அணைக்கச் சென்றவர்களை துரையப்பா விளையாட்டரங்கில் தங்கியிருந்த பொலிசார் தடுத்தனர் என்பதை காவலாளர்கள் கூறி அறிந்தனர்.

யாழ். விளையாட்டரங்கில் தங்கியிருந்த பொலிசாரே யாழ். நூல்நிலையத்திற்குத் தீ வைத்திருக்க வேண்டும் என மாநகரசபை ஆணையாளர் திரு.சிவஞானம் விசேஷ பொலிஸ் விசாரணைக் குழுவிடம் தெரிவித்துள்ளார்.

## யாழ். நூலக எஞ்சிய நூல்கள் சேகரிப்பு

*[செய்தி: ஈழநாடு, யாழ்ப்பாணம், 13.06.1981]*

யாழ்ப்பாணப் பொதுசன நூல்நிலையத்தில் எஞ்சிக் கிடந்த சொற்பமான நூல்கள் யாழ்.மாநகரசபை ஆணையாளர் திரு.கே.சிவஞானத்தால் சேகரிக்கப்பட்டு நகரமண்டபத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளன. பொதுசன நூல்நிலையம் முற்றாக மூடப்பட்டுக்கிடக்கின்றது.

பொதுசன நூல்நிலையக் கட்டிடத்தின் பெரும் பகுதி திருத்தியமைக்கப் பட வேண்டியிருப்பதால் இதற்கு ரூபா 15 லட்சம் செலவு ஏற்படும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பலதரப்பட்ட நிலவரங்கள் குறித்து யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தில் சகல நிலையியற் குழுக்களும் ஆராய்ந்தன.

யாழ். நூலகத்திலிந்து நூல்களை இரவலாகப் பெற்றவர்கள் தற்காலிகமாக அந்நூல்களை வைத்திருக்குமாறும் நூலகப்பொறுப்பாளர் அறிவித்தல் விடுக்கும் பொழுது அந்நூல்களை கொண்டுவந்து தருமாறும் அலுவலர் ஒருவர் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொலிஸ் விசாரணைக் குழு முன்
## யாழ். நூலகப் பொறுப்பதிகாரி 3 மணி நேரம் சாட்சியம்

*[செய்தி: தினகரன், கொழும்பு, 16.06.1981]*

யாழ்.வன்செயல்கள் பற்றி விசாரணை நடாத்தும் பொலிஸ் உயர்மட்டக்குழு முன்னிலையில் தீக்கிரையாகிய யாழ்.பொதுசன நூலகப் பொறுப்பதிகாரி நேற்று சுமார் மூன்று மணித்தியாலங்களுக்குமேல் சாட்சியமளித்தார்.

வடபிராந்திய உதவிப்பொலிஸ் மா அதிபர் காரியாலயத்தில் யாழ்.மாநகர எல்லைக்குட்பட்ட சம்பவங்களின் விசாரணைக்குப் பொறுப்பான திரு.கிங்ஸ்லி விக்ரமசூரியா தலைமையிலான பொலிஸ்குழு நேற்று இரண்டாவது தினமாக சாட்சியங்களைப் பதிவுசெய்தது.

கடந்த ஞாயிறு காலை ஆரம்பமாகிய இவ்விசாரணைகளில் அன்று சுமார் 30 பேர்வரை சாட்சியமளித்தனர்.

நேற்றுக் காலை 8.00 மணியளவில் மீண்டும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்ட பொழுது யாழ்.பொதுநூலகப் பொறுப்பதிகாரி, முதலாவதாக அழைக்கப்பட்டார்.

யாழ். சம்பவ விசாரணைகளை மேற்கொண்டுவரும் உயர்மட்ட பொலிஸ் கோஷ்டியின் தலைவரான பிரதிப் பொலிஸ்மாஅதிபர் திரு.சுந்தரலிங்கம் பாதிக்கப்பட்டவர்களையும், தகவல் அறிந்தோரையும் விசாரணைகளில் பங்குகொள்ளுமாறு கோரியுள்ளார். இதற்கிடையில் திரு.ஆர்.சுந்தரலிங்கம் யாழ். வர்த்தகர்களுக்கு நேற்று விடுத்த வேண்டுகோளொன்றில் வழமைபோல் கடைகளைத் திறந்து வியாபாரத்தை நடத்துமாறும் போதிய பாதுகாப்புகள் அளிக்கப்படுமெனவும் கூறியுள்ளார்.

யாழ்.மக்களுக்கு அன்றாட உணவு வகைகளை வழங்கவேண்டியது யாழ். வர்த்தகர்களின் கடமையாகும். கடைகளைப் பூட்டிவிட்டு பொருட்களைப் பாதுகாப்பாக வீடுகளில் வைத்திருக்க வேண்டாமென்றும், வியாபார நிலையங்களுக்குப் பொருட்களை எடுத்துச்சென்று மாமூலான வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் சுந்தர் விடுத்துள்ள வேண்டுகோளில் குறிப்பிட்டுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். வன்செயல்கள் பொலிஸ் விசாரணைக்குழு முன் 15க்கு மேற்பட்டோர் சாட்சியம்


### மாநகர சபைக்கு ஏற்பட்ட சேதம் 20 லட்சம்

*[செய்தி: வீரகேசரி, கொழும்பு, 16.06.1981]*

யாழ். வன்செயல் சம்பவங்கள் தொடர்பான உயர்தர பொலிஸ் விசாரணை நேற்றும் தொடர்ந்து நடைபெற்றது. யாழ். பொலிஸ் நிலையத்தில் நடந்த இந்த விசாரணையின் போது பலர் நேரில் வந்து சாட்சியமளித்தனர். யாழ். பொது நூல்நிலைய பொறுப்பதிகாரியான திருமதி நடராசாவும் வேறும் 15 பேரும் வாக்குமூலமளித்தனர். வன்செயல் சம்பவங்கள் பற்றிய விபரங்களை இவர்கள் எடுத்துரைத்தனர். வன்செயல் சம்பவங்களால் யாழ். மாநகராட்சி மன்றத்துக்கு ஏற்பட்ட கட்டிட மற்றும் பொருட்செலவுகள் 20 லட்சம் ரூபா என மதிப்பிடப்பட்டுள்ளது. மேயர் திரு இராஜா விசுவ நாதனின் உத்தரவின் பேரில் யாழ்.மராமத்து பகுதி இந்த மதிப்பீட்டை மேற்கொண்டது.

கட்டிட தளபாடங்களின் அழிவு 10லட்சம் ரூபா என்றும் யாழ். பொது நூலக கட்டிடத்தின் அழிவு ரூபா 10 இலட்சம் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது.

இந்த நூலகத்தின் அழிவுக்குள்ளான தளபாடங்கள் யாவும் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட பாகங்களாலானவை என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



Jaffna public library with ancient archives and stacks destroyed.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். பொது நூல்நிலையம் எரிக்கப்பட்டதற்கு இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்கம் கண்டனம்

*[செய்தி: வீரகேசரி, கொழும்பு, 20.06.1981]*

யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலையம் எரிக்கப்பட்டு நாசமாக்கப் பட்டதையும், யாழ். மத்திய கல்லூரி நூல்நிலையம் உடைக்கப்பட்டு விலை மதிப்புள்ள புத்தகங்கள் களவாடப்பட்டதையும் கண்டித்து இலங்கைத் தமிழ் ஆசிரியர் சங்க மன்னார் மாவட்டக் கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இத்தீர்மானத்தை ஜனாதிபதி, பிரதமர் ஆகியோருக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனவும் இக்கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டம் கடந்த சனிக்கிழமை மன்னார் புனித சவேரியார் பெண்கள் கல்லூரி மண்டபத்தில் மாவட்டத் தலைவர் திரு.என்.எஸ். முறாய்ஸ் தலைமையில் நடைபெற்றது. பல நூற்றுக்கணக்கான ஆசிரியர்கள் கூட்டத்தில் பங்குபற்றினர்.

## யாழ். நூல்நிலையத்துக்கு பொலிசாரே தீவைத்தனர் என காவலாளி கூறினார்

*-ஆணையாளர்*

*[செய்தி: தினபதி, கொழும்பு, 20.06.1981]*

யாழ். விளையாட்டு அரங்கில் தங்கியிருந்த பொலிசாரே யாழ். நூல் நிலையத்துக்கு தீ வைத்தனர். தீயை அணைக்கச் சென்றவர்களையும் அவர்கள் தடுத்தனர் என மாநகராளுமன்றக் காவலாளிகள் எனக்குத் தெரிவித்தனர். யாழ். மாநகராளுமன்ற ஆணையாளர் திரு கந்தையா சிவஞானம், பொலிஸ் விசாரணைக் குழு முன்னிலையில் சாட்டியம் அளிக்கையில் மேற்கண்டவாறு கூறினார்.

பொலிஸ் அதிபர் திரு. கிங்ஸ்லி விக்கிரமசூரியா தலைமையிலான பொலிஸ் விசாரணைக்குழு முன் அவர் சாட்சியம் அளித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரு. சிவஞானம் சாட்சியம் அளிக்கையில் தெரிவித்ததாவது - சம்பவதினம் எனக்கு ஒரு அநாமதேய டெலிபோன் அழைப்பு வந்தது. யாழ். நூல்நிலையம் எரிவதாக டெலிபோனில் தெரிவிக்கப்பட்டது.

உடனடியாக யாழ். மாநகராளுமன்ற காவலாளிக்கு டெலிபோன் செய்தேன். நூல்நிலையம் எரிகின்றதா எனப் பார்த்து அறிவிக்கும்படி கூறினேன். அதே வேளை, யாழ். அரசாங்க அதிபருக்கும் டெலிபோன் செய்தேன். திருமதி யோகேந்திரா துரைசுவாமிதான் போனை எடுத்தார். அவரிடம் இது பற்றிக் கேட்டேன். விசாரித்து அறிவிப்பதாக அவர் சொன்னார். 5 நிமிடங்களின் பின் அவர் டெலிபோன் செய்து கிடைத்த தகவல் சரியென உறுதிப்படுத்தினார்.

## ''பொலிஸார்தான் தீ வைத்தனர்'' — இப்படித் தாம் கருதுவதாக யாழ். மாநகர ஆணையாளர் சாட்சியம்

*[செய்தி: ஈழநாடு, யாழ்ப்பாணம், 20.06.1981]*

இம்மாதம் முதலாம் திகதி இரவு 10.15 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது தொலைபேசி மூலம் பொதுசன நூலகம் எரிவதாக எனக்குத் தகவல் கிடைத்தது. இத்தகவல் கிடைத்ததும் யாழ் நகர மண்டபத்துடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு பொதுசன நூலகம் எரிகின்ற செய்தி உண்மை என அறிந்தேன். உடனே 2 தண்ணீர் பவுசர்களையும் ஆறு மாநகர சபை ஊழியர்களையும் பொதுசன நூலகத்தில் ஏற்பட்ட தீயை மேலும் பரவாது அணைக்குமாறு பணித்தேன்.

யாழ். மாநகரசபை ஆணையாளர் திரு.க.சிவஞானம் மேற்கண்டவாறு பொலிஸ் உயர்மட்ட விசாரணைக்குழு முன்னிலையில் தெரிவித்துள்ளார்.

வடபகுதிப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் இயங்கும் உயர்மட்ட பொலிஸ் விசாரணைக் குழு முன்னிலையில் திரு.க.சிவஞானம் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது -

''எனக்கு கிடைத்த தகவலின்படி துரையப்பா விளையாட்டரங்கிலிருந்த பொலிசார்தான் பொதுசன நூலகத்திற்கு தீவைத்திருக்க வேண்டுமென்று கருதுகின்றேன். பொதுசன நூலகத்திலிருந்த புத்தகங்களைவிட கட்டிடம், மின்சாரம் ஆகிய சேதங்கள் சுமார் 12 லட்சம் ரூபாவாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நான் கண்ட யாழ். பொது நூலகம்

*எஸ்.எம்.கமால்தீன்*

எமது கண்களையே நம்ப முடியவில்லை. அந்த விசாலமான மண்டபத்தின் தரை முழுவதுமே சாந்தும் சாம்பலுமின்றி, வேறெதுவும் காணப்படவில்லை. ஓர் இடுகாட்டின் மத்தியில் நிற்பது போன்ற உணர்ச்சி என்னை மேலிட்டது.

***எமக்கு ஏன் இந்தக் கொடுமையைச் செய்தார்கள்?***

கலங்கிய கண்களோடு என் முன் நின்ற யாழ்.பொது நூலகர் திருமதி ரூ.நடராஜா விடுத்த உருக்கமான கேள்வி இது.

நாட்டின் அனைத்துத் திசைகளில் இருந்தும் ஏன், உலக நாடுகள் எங்கணுமிருந்தும் ஆயிரமாயிரம் நல்லிதயங்களிலிருந்து எழும் கேள்வியும் இதுவே.

யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் இரவல் வழங்கும் பகுதியின் நடுவே பொறுமையின் கோரத்தில் சிந்தையைச் செலுத்தியவனாக நிற்கிறேன் நான்.

முன்னர் எத்தனையோ தடவைகளில் என் சிந்தைக்கு விருந்தளித்த அந்த அறிவுக் களஞ்சியம். சிதைந்து சூன்யமாகி விட்டிருந்தது. இதயமற்றோர் கடந்த ஜூன் மாதம் முதல் நாளிரவு மூட்டிய தீயினால் இத்தகு அழிவுகளைப் பற்றி வரலாற்று ஏடுகளிலே வாசித்திருக்கிறேன். ஆனால் வாழ்க்கையில் கண்டதில்லை.

பண்டைய எகிப்தில் உலகப் புகழார்ந்த அலெக்ஸாந்தரியா நூலகம் தீக்கிரையாக்கப்பட்டதை நினைத்தேன் ஒரு கணம்.

எமது நாட்டிலும் பதின்மூன்றாம் பதினாறாம் நூற்றாண்டுகளில் பொலநறுவை, கண்டி ஆகிய நகர்களில் அழிக்கப்பட்ட நூலகங்களும் என் எண்ணத்தைத் தொட்டன.

ஊனமுற்ற சுவர்களிலே பயங்கரமான புண்களைப் போல் காட்சியளித்த ஜன்னல்களின் இடைவெளியினூடாக அவ்வேளை திடுமென வீசிய காற்று என்னை நூலகர் வழங்கிக்கொண்டிருந்த விளக்கத்திற்கு மீட்டு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தது. அத்தோடு முற்றாய்க் கரிந்து போன நூல்களின் சாம்பலை அக்காற்று எம் உடம்பின் மீதும் தூவிச் சென்றது.

### நூலகத்தின் தோற்றம்

யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் சிதைவினால் அறிவுலகத்திற்கு ஏற்பட்டுள்ள ஈடுசெய்ய முடியாத இழப்பின் தன்மையை விளக்குமுன், இந்நூலகத்தின் தோற்றத்தையும் வளர்ச்சியையும் பற்றிய சில தகவல்களை நாமறிந்துகொள்வது அவசியமாகும்.

1934ஆம் ஆண்டு ஆனி மாதம் 9ஆம் திகதி யாழ்ப்பாணத்தில் கலாநிதி ஐசாக் தம்பையா அவர்களின் தலைமையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றே பொது நூலகத்தின் தோற்றத்திற்கு அடிகோலியது. இக்கூட்டக் காரியதரிசி திரு க.மு.செல்லப்பா அவர்கள் சிரமப்பட்டுத் திரட்டிய 1184ரூபா 22சதம் தான் முன்னோடியான பொது நூலகம் ஒன்றிற்கான மூலதனமாய் அமைந்தது.

இதன் வழி ஆஸ்பத்திரி வீதியில் வாடகை அறை ஒன்றில் 844 நூல்களுடனும், 30 பருவ வெளியீடுகளுடனும், 1934ஆம் ஆண்டு ஆவணி மாதம் 1ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்ட சிறியதொரு பொது நூலகம் வெகு விரைவில் நிதி வசதியின்றி இடர்ப்பட்ட போது அதனை யாழ்.பட்டினசபை பொறுப்பேற்க முற்பட்டது.

யாழ். பட்டினசபையினர் பொறுப்பேற்ற இந்நூலகம் 1.1.1935இல் வாடி வீட்டிற்குத் தெற்கிலுள்ள மேல்மாடிக்கு இட மாற்றஞ் செய்யப்பட்டு, அங்கே இயங்கி வந்தது. எனினும் பெருகிவரும் வாசகர்களின் தேவைகளை அதனால் ஈடுசெய்ய முடிவதில்லை.

### புதிய நூலகக் கட்டிடம்

எனவே சகல வசதிகளையும் கொண்ட நவீன பொதுநூலகக் கட்டிடம் ஒன்றினை அமைப்பதற்கான முயற்சிகள் 1952ஆம் ஆண்டு ஆனி மாதம் 14ஆம் திகதி சாம் ஏ.சபாபதி அவர்களின் தலைமையில், நடைபெற்ற ஒரு மகாநாட்டினை அடுத்து ஆரம்பிக்கப்பட்டன. அம்மாநாட்டில் திரு.அ.த.துரையப்பா அவர்கள் நூலகத்தை நிறுவுவதற்கான நிதியை ஒரு களியாட்ட விழாவின் மூலமும் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் மூலமும் திரட்ட வேண்டுமென்றும் கொண்டு வந்த தீர்மானம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இத்திட்டத்தின் மூலம் எதிர்பார்த்ததைவிட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூடுதலான நிதியைத் திரட்டிக்கொள்ள முடிந்தது. அந்தளவு இத்திட்டத்திற்கு யாழ்.மக்களின் அமோகமான ஆதரவு கிட்டியது.

புதிய நூலகக் கட்டிடத்தை அமைப்பதில் அதி வண. பிதா லோங் அவர்கள் மிகுந்த அக்கறை காட்டி வந்தார்கள். அவர்களது முயற்சியின் மூலம் நூலகத்துறையில் நிபுணத்துவம் வாய்ந்த கலாநிதி எஸ்.ஆர். இரங்கநாதன் அவர்கள், நூலகத்தின் அமைப்பிற்கான திட்டங்களை வகுத்துக்கொடுக்க சென்னை அரசின் கட்டிடக்கலை நிபுணர் திரு வி.எம். நரசிம்மன் அவர்கள் வரைபடங்களைத் தயாரித்து உதவினார். கட்டிட அடிக்கல் நாட்டுவிழா 1953ஆம் ஆண்டு பங்குனி மாதம் 29ஆம் திகதி நடைபெற்றது.

திராவிடக் கலையம்சம் பொருந்திய எழில் மிகு அறிவுக்கோயில் ஒன்று வெகு விரைவில் பொதுமக்களின் நிறைவான ஆதரவுடன் உருப்பெற ஆரம்பித்தது.

பொதுநூலகத்தின் முதற்கட்டம் பூர்த்தி செய்யப்பட்டு 11.10.1959 இல் அதி விமர்சையாக யாழ்.முதல்வர் அ.த.துரையப்பா அவர்களால் திறந்து வைக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து நூலகத்தின் ஏனைய கட்டிடங்களும் பூர்த்தி செய்யப்பட்டன. இக்கட்டிடத்தில் அமைக்கப்பட்ட சிறுவர் நூலகத்தை நாம் சிறப்பித்துக் கூறவேண்டும்.

பூரணத்துவம் பெற்று இயங்கி வந்த இந்நூலகத்தில் நூலகர் உட்பட 33 பேர் கடமையாற்றி வந்தார்கள்.

***நூலக அங்கங்கள்***

மொத்தம் 15910 சதுர அடிகளைக்கொண்ட யாழ்.பொது நூலகம் அளவில், கொழும்பு மாநகர சபையின் பழைய நூலகத்தை விட விசாலமானது, புதிய பொது நூலகத்துக்கு அடுத்ததாக உள்ளது.

யாழ். மாவட்டத்திற்கு ஏன் வடமாகாணத்து அனைத்து நூலகங்களுக்குமே இப்பொது நூலகம் தலைமைத்துவம் வழங்கிவந்ததென்றால் அது மிகைக்கூற்றாகாது. மேலும் புதிய மாவட்ட சபைகளின் நிர்வாகத்தின் கீழ் இதுவே யாழ்.மாவட்ட மத்திய நூல்நிலையமாக இயங்கவிருந்தது.

இந்நூலகத்தின் சிதைவுகளுக்கு முன் பின்வரும் அங்கங்கள் சிறப்பாக இயங்கி வந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. நூல் இரவல் வழங்கும் பகுதி
2. புதின ஏடுகளையும் சஞ்சிகைகளையும் கொண்ட வாசிகசாலை
3. சிறுவர் நூலகம்
4. உசாத்துணை நூலகம்
5. கருத்தரங்கக்கூடம்
6. கலாபவனம்
7. காரியாலயமும் நூற்சேமிப்பு அறையும்.

பல்லாயிரக்கணக்கான நகர மக்கள், சிறப்பாகக் கல்லூரி மாணவரும், சிறார்களும், சுமார் 95ஆயிரம் நூல்களைக்கொண்ட இந்த நூலகத்தின் பல்வேறு அங்கங்களிலிருந்தும் பெரும் பயன்பெற்று வந்தார்கள்.

இந்நூலகத்தில் நூல் இரவல்பெறும் அங்கத்தவர்களாகப் பதினேழாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் பதிவு செய்துகொண்டிருந்தார்கள்.

சிதைந்த நூலகத்தின் பின்புற வாயில் ஒன்றின் மூலம் நான் உள்ளே நுழையச் சென்றபோது வெளியே சிதறுண்டுகிடந்த ஓரளவு கரிந்துபோன சில அங்கத்துவ அட்டைகளைக் கண்டெடுத்தேன். இந்நூலகத்தில் பின்வருவோர் அங்கத்துவம் பெற்றிருந்தார்கள் என்பதற்கு நினைவுச் சின்னங்களாக அந்த அட்டைகள் மௌனச்சான்று பகர்ந்தன. யோகினி பரமநாதன், இராமலிங்கம் சபாரத்தினம், ஏ.ஜே.சாக்கா, தம்பிராஜா சிவராஜா, இவர்களைப் போன்ற எத்தனை ஆயிரம் வாசகர்கள் தங்கள் அபிமான அறிவுத்தீபம் அக்கிரமமாக அணைக்கப்பட்டதை எண்ணி இரத்தக்கண்ணீர் வடித்துக்கொண்டிருப்பார்கள் என்றார் அருகே நின்ற நூலகப் பணியாளர் ஒருவர்.

***இரவல் வழங்கும் பிரிவு***

நூலகத்தின் ஆகக்கூடுதலான நூற்தொகை இப்பிரிவிலேயே இடம்பெற்றிருந்தது. யாழ்நகரில் சில காலத்திற்கு முன் இயங்கி வந்த அமெரிக்க நூலகக்கிளையின் பெரும்பாலான நூல்களும் இதில் அடங்கும். இங்கிருந்த 57,000 நூல்களுள் சுமார் ஐந்தில் ஒரு பாகம் தமிழ் நூல்களாகும்.

இப்பெருந்தொகையான நூல்களின் விபரங்கள் எதையுமே பெற முடியாதவாறு நூற்பட்டியல் பெட்டகமும் நூல்வரவுப் பதிவேடுகளும் அழிக்கப்பட்டுவிட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியில் கிடந்து நான் பொறுக்கிய ஒரே ஒரு நூற்பட்டியல் அட்டை எனது நண்பர் சோமலே எழுதிய 'மொரிஷியஸ் தீவு'' என்னும் நூல் பற்றிய தகவல்களைத் தந்தது.

நூலகத்தின் சிதைவுக்கு முன் இரவல் வழங்கப்பட்ட ஒரு சிறுதொகை நூல்கள் தாமும் யார் யார்க்கு வழங்கப்பட்டனவென்பதைக் காட்டும் பதிவு அட்டைகளும் அழிந்துவிட்டதால், வாசகர்கள் தாமாகவே அவற்றைத் திருப்பிக்கொடுத்தாலன்றி நூலகத்தைப் பொறுத்தவரையில் அவைகளும் இழந்த நூல்களாகவே கணிக்கப்பட வேண்டும்.

***உசாத்துணைப் பிரிவு***

நூலகத்தின் உயிர்நாடியெனக் கொள்ளக்கூடியது இப்பிரிவு. மிகவும் அரிதான விலைமதிக்கவொண்ணாத பெருந்தொகையான நூல்கள் இங்கு வைக்கப்பட்டிருந்தன. இப்பிரிவிலிருந்த நூற்தொகை சுமார் 29,500 ஆகும். இவற்றுள் பெருந்தொகையான நூல்கள் அன்பளிப்பாகப் பெற்றவையாகும்.

உசாத்துணைப் பிரிவின் சிறப்பு நூற் தொகுதிகளுள் பின்வருவன பிரதானமானவைகளாகும்.

அ. கலாநிதி ஆனந்த குமாரசுவாமி நூற்தொகுதி - இது மலேசியாவைச் சேர்ந்த திரு.துரைராஜசிங்கம் அவர்களின் அன்பளிப்பாகும். (சுமார் 700 நூல்கள்)

ஆ. திரு சி.வன்னியசிங்கம் நூற்தொகுதி (சுமார் 100 நூல்கள்)

இ. திரு ஐசாக் தம்பையா நூற்தொகுதி (சமயம், தத்துவம் பற்றிய நூல்கள் சுமார் 850)

ஈ. திரு. கதிரவேற்பிள்ளை நூற்தொகுதி (சுமார் 600 நூல்கள்)

உ. ஏட்டுச் சுவடித் தொகுதியொன்று

ஊ. அமெரிக்க நூலகத்திலிருந்து அன்பளிப்பாகப் பெற்ற உசாத்துணை நூற்தொகுதி.

இப்பெறுமதி வாய்ந்த நூற்தொகுதிகளைத் தவிர இன்னும் பல சிறு சிறு நூற்தொகுதிகள் தனிப்பட்டவர்களாலும் நிறுவனங்களாலும் அன்பளிப்பாய் யாழ்.நூலகத்திற்குத் தாராளமாய் வழங்கப்பட்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வுசாத்துணைப் பிரிவின் பேரிழப்பு எத்தகையதென்பதைச் சுட்டெரிந்து போன மேலும் பல நூற்தொகைகளிலிருந்து அறியலாம். விரிவஞ்சி முக்கியமான சில கலைக்களஞ்சியங்கள் போன்ற நூல்களை மட்டும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.

பிரித்தானியா கலைக்களஞ்சியம் (நான்கு பதிப்புக்கள்)

அமெரிக்கானா கலைக்களஞ்சியம்

கொல்லியர்ஸ் கலைக்களஞ்சியம்

விஞ்ஞான தொழில்நுட்பக் களஞ்சியம் (சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் 15,000 ரூபாவுக்கு இக்கலைக் களஞ்சியம் வாங்கப்பட்டது)

சமயங்கள் பற்றிய கலைக்களஞ்சியம்

மருத்துவக் கலைக்களஞ்சியம்

கலைக்களஞ்சியம் (சென்னை)

மக்மில்லன் கலைக்களஞ்சியம்

குழந்தைகள் கலைக்களஞ்சியம்.

அகராதிகள் (பல்வேறு வகைப்பட்டவை)

நெறிகாட்டிகள் (பல்வேறு வகைப்பட்டவை)

புவியியல் வரைபடங்களும் வரைபட நூல்களும்.

இவை தவிர இப்பிரிவில் பல முக்கியமான சோதிட நூல்களும், 'சிற்பச் செந்நூல்'' என்ற மிகஅரிதான நூல் ஒன்றும் இடம்பெற்றிருந்தன.

உசாத்துணைப் பிரிவில் ஏககாலத்தில் அறுபது வாசகர்கள் அமர்ந்து படிக்க ஏதுவாகப் போடப்பட்டிருந்த தனித்தனி மேசைகளும் கதிரைகளும் இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டன. இவற்றைப் பயன்படுத்திய அறிவுத்தாகம் கொண்ட அத்தனை வாசகர்களும் இன்று எங்கெங்கு அலைகின்றனரோ தமது அறிவுத் தேட்டத்திற்கு !

***சிறுவர் பகுதி***

நான் அறிந்த மட்டில் இலங்கையிலேயே மிகச் சிறந்த சிறுவர் நூலகப் பிரிவிலிருந்த 8995 நூல்களையும் முற்றாக இழந்துவிட்ட ஆயிரக்கணக்கான பிஞ்சு உள்ளங்கள் எவ்வாறு ஏங்கித் தவிக்கின்றனவோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்ந்த முகங்களுடன் கூடிய சிறுவர் சிறுமியரின் கலகலப்பான இந்தப் பிரிவில் சித்திர நூல்களில் சிந்தையை இழக்கவும், இனிக்கும் கதைகள் படித்து இன்புற்றிருக்கவும், நூலக உதவியாளர்கள் கதை சொல்லக் கேட்டு கற்பனை உலகில் சஞ்சரிக்கவும் வரும் அக்குழந்தைகளை எண்ணும் போது எவ்வாறு தான் இந்தப் பிரிவினைச் சிதைக்க அக்கொடியோர் மனமிசைந்தனரோ என்பது எனக்குப் புரியவேயில்லை.

*எஞ்சிய பிரிவுகள்*

புதின ஏடுகளும், பருவ வெளியீடுகளும் வைக்கப்பட்டிருந்த பகுதியில் அதிக சேதமில்லை எனினும் அங்கிருந்த ஏடுகள் அனைத்தும் ஒரு மூலையில் குவித்து தீ மூட்டப்பட்டிருந்தன. இரண்டாவது மாடியில் உள்ள கலாபவனத்தில் உபயோகத்திலிருந்து நீக்கி வைக்கப்பட்டிருந்த நூல்களைக்கூட அவர்களிட்ட தீ விட்டுவைக்கவில்லை. எஞ்சியதெல்லாம் நூலகரின் அலுவலகத்தில் ஒதுக்கப்பட்டுக் கிடந்த சேதமுற்ற சிறு நூற்தொகுதியொன்று மட்டுமேயாகும்.

அந்தப் பயங்கர இரவில் நூலகத்தினுள் புகுந்தோரின் நோக்கம் எல்லாம் நூல்களை ஒழித்துக்கட்டுவதொன்றுதானென்பது தெட்டத் தெளிவாகியிருந்தது.

யாழ் நூலகத்தில் நான் மேற்கொண்ட இந்த துன்பகரமான மதிப்பீட்டின் முடிவான தீர்ப்பு.

யாழ்ப்பாணப் பொது நூலகம் இன்று ஒரு பழங்கதையும் கனவுமாகி விட்டது. ஆனால் அறிவாலயங்களினதும், அறிவாற்றல் படைத்த மக்களினதும் வரலாறு என்றுமே இவ்வாறு முடிந்ததில்லை. மதியீனர் செயலால் மறைந்த இந்த அறிவாலயம் மீண்டும் உயிர்த்தெழுமென்பது உறுதி.

யாழ். பொது நூலகத்தில் எரிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான நூல்களின் சாம்பலிலிருந்து அறிவுலகம் பெருமைப்படக்கூடிய நவநூலகமொன்று உதயமாகி அறிவுக்கதிர் பரப்பும் நாள் வெகுதூரத்திலில்லை என்பது எனது அசையா நம்பிக்கையாகும்.

***(நன்றி: வீரகேசரி வார வெளியீடு, கொழும்பு, 19.07.1981)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# " What sort of animals are these?"
# (President Speaks...)

***(Tamil Times - London, October 1981. Vol.1, ÷o.1, pp.4)***

"What sort of animals are these?" cried Sri Lanka President Mr. J.R.Jayawardene referring to the widespread violence to which the Tamils of Sri Lanka were subjected to during July-August.

Speaking at the All Ceylon Executive Committee of the United ÷ational Party meeting held on September 4, the President said:

" I speak more in sorrow than in anger. Recent events throughout the Island ÷orth, Centre and South show that the religions we profess do not seem to influence for the good some of our people. I regret that some members of my party have spoken in Parliament and outside words that encourage violence and the murders, rapes and arson that have been committed.

"How many of our party leaders throughout the country have spoken against the recent acts of violence? What is the example we as leaders of the governing party are setting to our followers and to the rest of our countrymen? I must have reasons to be proud of the party of which I am leader.

"If I cannot, it is better for me to retire from the leadership of this party and let those who believe that the harming of innocent people and property that has happened recently is the way to solve the problems that face this multi-racial multi-religious and multi-caste society,take over the leadership of the party."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண பொதுசன நூல்நிலையத்தை மீள்விப்பதற்கான திட்டம்

## யாழ்ப்பாணம் மாநகரசபையின் பொதுவான வேண்டுகோள்

இப்பிரசுரம் மேற்கண்ட முன்னுரையுடனும், யாழ். மாநகர முதல்வர் இராசா விசுவநாதன் அவர்களின் வேண்டுகோளுடனும் நூலகக் கட்டிடத்தின் மாதிரி வரைபடங்களையும் எரியுண்ட நூலகப் பகுதிகளின் புகைப் படங்களையும் உள்ளடக்கியதாக தமிழ் ஆங்கில மொழிகளில் 15 பக்கங்களில் சிறு பிரசுரமாக 1981இல் வெளியிடப்பட்டது.

1981ஆம் ஆண்டு ஜூன் முதல் நாளின் இராப்பொழுதில் தான் யாழ்ப்பாணப் பொதுசன நூல்நிலையத்தின் விலை மதிக்க முடியாத சேர்வுகளான 97,000 புத்தகங்கள் கிடைத்தற்கரிய பல கையெழுத்துப் பிரதிகளுடன் சாம்பலாக்கப்பட்டதும், கட்டடவியலில் வடபகுதியின் பெருமைக்குரியதான ஒரு கட்டிடம் பாரதூரமான சேதத்திற்கு உள்ளாகியதும்.

விதிவசத்தால் இத்தீவு சுதந்திரம் பெற்ற ஆண்டில் (1948) இருந்து ஏழு தடவைகள் இலங்கை வாழ் தமிழர்கள் தாக்குதல், தீவைப்பு, கொலை, கொள்ளை, தமது பெண்கள் கற்பழிக்கப்படுதல் போன்ற ஒடுக்குமுறைகளை சகித்துக்கொள்ள வேண்டியிருந்தாலும் அவர்களின் பண்டைய பண்பாட்டின் வைப்பகத்தைக் கொளுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட எத்தனமோ தாங்கவொண்ணா மனவேதனையை ஏற்படுத்தியுள்ளது. குடிமக்களின் வரிகளால் பராமரிக்கப்படும் சட்டத்தினதும், பாதுகாப்பினதும் பாதுகாவலர்களால் இந்த அஞ்ஞானச் செயல் நிகழ்த்தப்பட்டிருப்பதும் இங்கிதமான ஓர் இணக்கமென நம்பப்படும் மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலுக்கு முற்பட்ட இறுதி நாட்களை தீநெறியிற் செலுத்தப்பட்ட தமது நடவடிக்கைக்கு அவர்கள் தெரிந்து கொண்டதும் தான் வேதனையின் தாக்கத்தை அதிகப்படுத்துகின்றது.

சர்வஜன வாக்குரிமை தொழிற்பட்ட (1931) போதே நகருக்கு ஓர் இலவச பொதுசன நூல்நிலையத்துக்கான இயக்கமும் கே.எம்.செல்லப்பா அவர்கள் முன்னின்று ஊக்குவிக்க ஆரம்பமானது. சுதந்திரமடைந்த மறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டில் யாழ்ப்பாணத்துக்கு மாநகர அந்தஸ்து வழங்கப்பட்டது. நகரின் முதலாவது முதல்வர் சாம்.ஏ.சபாபதி அவர்கள் ஒரு விசேஷித்த வடிவம் கொண்ட நூல்நிலையக் கட்டிடத்தை அமைப்பதற்கு மாநகரசபையின் அங்கீகாரத்தைப் பெற்றுக்கொண்டார். நூல்நிலையத் துறையில் நிபுணரான எஸ்.ஆர். இரங்கநாதனைக் கலந்துகொண்டு திராவிட சிற்பவியல் பாங்கில் ஒரு கட்டிடத்துக்கான படங்களை புகழ்பூத்த இந்திய சிற்பவியலாளர் நரசிம்மராவ் வரைந்தார். புதிய கட்டிடத்தின் முதல்கட்டம் 1959இல் நிறைவு எய்தி நூலகம் செயற்பட ஆரம்பமானது. அவர்களுடைய கனவை நனவாக்குவதில் உதவிய பலருள் அருள் திருத்தந்தை ரி.எம்.எப்.லோங் அடிகளார், ஆசிய பவுண்டேசன், மற்றும் இந்திய தூதுவராலயமும் செந்நெறி பாராட்டும் மக்களால் நினைவு கூரப்படுகின்றனர். கலாயோகி ஆனந்த குமாரசுவாமி சேர்வுகள், ஐசாக் தம்பையா சேர்வுகள் போன்ற அத்தகைய சேர்வுகளை அதன் புத்தகக் கையிருப்பு உள்ளடக்குவதாக இவ்விரு தசாப்த ஆண்டுகளிலும் அதற்குப் பிற்பாடும் நூல்நிலையம் துரிதமாக விருத்தியடைந்தது. அனேக கருத்தரங்குகளும், கண்காட்சி களும் நடாத்தப்பெற்றன.

சம்பவித்த இழப்பு வடக்கிற்கோ அல்லது தமிழர் கல்விக்கோ ஏற்பட்டதொன்றல்ல என்பதை நாம் உணருவோமா? அது தீவின் மதிநுட்ப முறையில் ஏற்பட்ட ஆழ்ந்த தழும்பாகாதா? அனைத்துலக மேதைகள் சமுதாயத்திற்கு ஏற்பட்ட பாரிய இழப்பாகாதா? ஆயின் அத்தகைய சோக அனுபவங்கள் பேரழிவுகளையே பெரும்பேறாக மாற்றிக்கொள்ளும் திருப்பு முனைகளாக்கிய நிகழ்வுகள் ஓர் இனத்தின் வரலாற்றில் அனேக தடவைகள் சம்பவித்துள்ளன. உதாரணத்திற்கு 1666இல் ஏற்பட்ட பெரு நெருப்பினாலல்லவா ஓரளவிற்கு உலகின் தலைப்பட்டினம் போன்ற தோற்றத்தில் சேர். கிறிஸ்தோப்பர் றென் அவர்களுடைய விவேகத்தால் லண்டன் மாநகரம் மீளவும் கட்டியெழுப்பப்பட்டது.

ஆகவே இன்றைய தொடர்பில் ஒரு பொதுசன நூல்நிலையத்தின் தொழிற்பாட்டிற்கு பயன்படக்கூடியதாக விரிவுபடுத்தப்பட்டதும் ஓரளவு மீள வடிவமைக்கப்பட்டதுமான கட்டிடத்துக்கு திட்டமிடும் பொருட்டு பிரபல கட்டிடக் கலைஞர் வி.எஸ்.துரைராஜா அவர்களை நூல்நிலையக் குழுவின் ஆய்வுரையின் பேரில் நகரபிதாக்கள் அழைத்திருப்பது உற்சாக மூட்டுவதாகவுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கு நோக்கிய நுழைவாயிலைக் கொண்ட மூன்றடுக்கு கட்டிடமாகிய அதனது கட்டுவேலைகள் பெயரளவில் நரசிம்மராவின் மூலத் திட்டத்தினது இரண்டாம் கட்டமே தான் என்பதுடன் இன்னமும் அதற்கு அமைய அதனது சிற்பவியல் பாங்கிலேயே அமையும். அது விடயத்தின் மீது சுவாமி விபுலானந்தர் அடிகளாரின் எழுத்தோவியத்தை நினைவு படுத்துவதாக யாழின் சின்னம் புதிய பிரதான நுழைவாயிலுக்கு மேல்வரும் மத்திய உயர் கோபுரத்தை அலங்கரிக்கும். கட்டிடக் கலைஞரின் சேவைகள் அன்பின் தொழிற்பாடே என்பது அவதானிக்கப்பட வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்டதும் புதிய பொதுசன நூல்நிலையம் - இரவல் கொடுக்கும் நூல் நிலையம், சிறுவர் நூல்நிலையம், செய்திப் பத்திரிகைகள் மற்றும் பருவ வெளியீடுகளின் அறை, மாநாட்டு அறைகள், கண்காட்சிப் பகுதி, இடம்பெயரும் நூல்நிலைய அறை, விஷேட சேர்வுகள் அறை, கேட்டல் காண்டல் (கட்புல செவிப்புல) ஆய்வு அறைகள், கேட்போர் கூடம், வலது குறைந்தோர் தமது சில்லு வண்டிகளுடன் வந்தடைவதற்கு விஷேடமாக வடிவமைக்கப்பட்ட ஏற்பாடு ஆகியவற்றை உள்ளடக்கியதான ஒரு கல்வி நிலையத்தின் கருவாக ஒரு நவீன நூல்நிலையத்தின் சகல சேவைகளுக்கும் போதிய ஏற்பாடுடையதாயிருத்தல் வேண்டும். நகரின் பல்வேறு பகுதிகளிலும் இவ்வசதிகள் பலவற்றுடன் கூடிய கிளை நூல்நிலையங்களுக்கான தொழிற்பாடு ஒன்றும் பேணப்படும் என நம்பப்படுகிறது என்பதுடன் நீண்டகால நோக்கில் மாவட்டத்தின் நூல்நிலையங்களது தொழிற்பாட்டுக்கான கேந்திர நிலையமாக அது வரவியலும் என்பதுடன் இலங்கை வாழ் தமிழ் மக்களுக்கான ஒரு தேசிய நூல்நிலையத்தின் குணவியல்புகளையும் அது கொண்டு இலங்கலாம்.

இந்த உன்னத நோக்கின் பொருட்டே யாழ்ப்பாண மாநகர முதல்வர் இராசா விசுவநாதன் நூலகத்தை மீளமைக்கும் பொருட்டும் அதன் சேவைகளை விரிவுபடுத்துவதற்காகவும் உதவும்படி பூபாகம் ஒவ்வொன்றிலும் உள்ள நிறுவனங்களுக்கும் மற்றும் தனிப்பட்டோருக்கும் ஒரு வேண்டுகோளை விடுத்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். நூல்நிலையத்துக்கு சர்வதேச நிதி உதவிக் கோரிக்கை

*[செய்தி: தினபதி, கொழும்பு, 13.06.1981]*

யாழ்ப்பாணத்தில் மே 31ம் திகதி முதல் மூன்று நான்கு நாட்கள் வெறியாட்டம் நடத்தியவர்கள் எரித்துச் சேதமாக்கிய யாழ். பொதுசன நூல் நிலையத்தை மீண்டும் பழைய நிலைக்குக்கொண்டுவர, சர்வதேச நிதி உதவி கோரப்படும்.

இதற்கான பிரேரணை ஒன்றுக்கு யாழ்.மாநகராளுமன்றத் துணை முதல்வர் திரு.பி.எப். சேவியர் முன்னறிவித்தல் கொடுத்திருக்கிறார். இந்தப் பிரேரணையை மாநகராளுமன்றத்தின் விசேஷ கூட்ட நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக்கொள்ளுமாறு அவர் மாநகராளுமன்ற முதல்வரைக் கேட்டுள்ளார்.

விசேஷ கூட்டம் வருகிற திங்கட்கிழமை நடைபெற இருக்கிறது. இலங்கை அரசாங்கம் யுனெஸ்கோ நிறுவனம், வெளிநாட்டுத் தூதரகங்கள், உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள பொதுநல ஸ்தாபனங்கள் ஆகியவற்றிடம் உதவி கோரும் விதத்தில் பிரேரணை அமைந்திருக்கிறது.

பின்வரும் நிறுவனங்களின் உதவியுடன் முன்னர் யாழ். பொதுசன நூல்நிலையம் ஆசியாவில் உள்ள மிகப்பெரிய நூல்நிலையங்களில் ஒன்றாக நிறுவப்பட்டது.

1. ஆசிய பவுண்டேஷன்
2. உலகத் திருச்சபைகள் கழகம்
3. வெளிநாட்டுத் தூதரங்கள்
4. யாழ். பொதுசன நூலக நம்பிக்கை நிதி
5. யாழ். மாநகராளுமன்றம்
6. யாழ்ப்பாணத்தில் முன்னர் இருந்த அமெரிக்கத் தகவல் நிலைய நூலகம்.

இவ்வளவு நிறுவனங்களின் உதவியுடன் உருவாக்கப்பட்ட யாழ்.பொதுசன நூல்நிலையம் எரிக்கப்பட்டுவிட்டது. அதை மீண்டும் பழைய நிலைக்குக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டு வருவதற்கு யாழ். மாநகராளுமன்றத்தின் நிதி நிலை இடம் தராது.

அதனால் -

1. இலங்கை அரசாங்கம்
2. யுனெஸ்கோ நிறுவனம்
3. வெளிநாட்டுத் தூதரங்கள்
4. உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் உள்ள பொதுநல ஸ்தாபனங்கள் ஆகியவற்றின் உதவியை யாழ். மாநகராளுமன்றம் கோருகிறது.

மேற்கண்டவாறாகத் துணை முதல்வர் சேவியரின் பிரேரணையில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

## ஈழத் தமிழருக்கு எப்படி உதவலாம் என்பது பற்றி முடிவு செய்ய அனைத்துக் கட்சி மகாநாடு தமிழக முதல்வர் கூட்டுகிறார்

### யாழ். நூலகத்துக்கு நூல்கள் வழங்க எம்.ஜி.ஆர் ஏற்பாடு

*[செய்தி: ஈழநாடு, யாழ்ப்பாணம், 12.10.1981]*

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து விவாதித்து சாத்தியமான நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ளும் பொருட்டு அனைத்துக் கட்சிகளின் மகாநாடொன்றை தமிழக முதல்வர் திரு. எம்.ஜி.ராமச்சந்திரன் இம்மாதம் பதினெட்டாம் திகதி சென்னையில் கூட்டுகின்றார்.

இலங்கைத் தமிழர்களின் இன்னல்களைத் துடைப்பதற்காக தமிழக மக்கள் மேற்கொள்ளக்கூடிய நடவடிக்கைகள் பற்றிக் கலந்தாலோசிப்பதற்காகவே அனைத்துக் கட்சிகளின் மகாநாட்டை இம்மாதம் 18ஆம் திகதி தாம் கூட்டுவதாக தமிழக முதலமைச்சர் திரு. எம்.ஜி ராமச்சந்திரன் தெரிவித்துள்ளார்.

இம்மகாநாடு தமிழ்நாடு அரசின் தலைமைச் செயலகத்தில் நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இதே நேரத்தில் கடந்த மே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதம் 31ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 3ஆம் திகதி வரை யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வன்செயல்களின் போது ஜூன் மாதம் முதலாம் திகதி தீக்கிரையாக்கப்பட்ட யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலையத்திற்கு பல அரிய நூல்களை அன்பளிப்பாக அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளிலும் முதலமைச்சர் திரு எம்.ஜி.இராமச்சந்திரன் ஈடுபட்டுள்ளார்.

இதன் பொருட்டு தம்மிடமுள்ள நூல்களில் ஒரு பிரதியையேனும் தமிழ்நாடு கல்வித்துறை செயலாளருக்கு அனுப்பி வைக்கும்படி தமிழ்நாடு கல்விமான்களையும் எழுத்தாளர்களையும் முதலமைச்சர் திரு. எம்.ஜி.இராமச்சந்திரன் கேட்டுள்ளார்.

இம்மாதம் பதினெட்டாம் திகதி நடைபெறும் அனைத்துக் கட்சிகள் மகாநாட்டில் இன்னலுக்குள்ளான இலங்கைத் தமிழர்களுக்கு தமிழக மக்கள் எத்தகைய விதத்தில் உதவலாம் என்பது பற்றித் தீர்க்கமாக ஆலோசித்து முடிவு எடுக்கப்படுவதுடன் வன்செயலின் போது எரிக்கப்பட்ட யாழ். பொதுசன நூலகத்திற்கு அரிய நூல்களை இந்திய மத்திய அரசின் வாயிலாக யாழ் மேயரிடம் கையளிப்பது குறித்தும் தீர்மானிக்கப்படும் என்றும் தமிழக முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.

## பொது நூல்நிலைய நஷ்டஈடு
## யாழ். முதல்வரிடம் உடன் 10 லட்சம் ரூபா காசோலை
### ஐ.தே.க – கூட்டணி பேச்சுவார்த்தையில் முடிவு

*[செய்தி: தினபதி, கொழும்பு, 21.05.1982]*

யாழ்ப்பாணம் பொதுநூல்நிலையத்துக்கு லயனல் பெர்னாண்டோ குழு சிபார்சு செய்த ஒரு கோடி ரூபா நஷ்டஈட்டில் 10 லட்சம் ரூபாவை ஜனாதிபதி நிதியில் இருந்து உடனடியாக காசோலையாக யாழ்ப்பாணம் மாநகர முதல்வருக்கு வழங்கப்படும்.

ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையில் புதன்கிழமை மாலை நடைபெற்ற ஐக்கிய தேசியக் கட்சி -தமிழர் விடுதலைக்கூட்டணி உயர்மட்ட பேச்சுவார்த்தையில் மேற்கண்டவாறு தீர்மானிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் தீ வைப்பு வன்செயல் சம்பவங்களில் பாதிப்புற்ற பொதுமக்களுக்கும் நிறுவனங்களுக்கும் லயனல் பெர்ணாண்டோ குழு சிபார்சு செய்த ஒரு கோடி ரூபா நட்ட ஈட்டை வழங்கும் வழிமுறைகள் குறித்து ஜனாதிபதி மாளிகையில் திறைசேரி அதிகாரிகளை அழைத்து நேற்று வியாழக்கிழமை ஆராய்வது என்றும் அங்கு முடிவானது.

ஜனாதிபதி திரு.ஜே.ஆர்.ஜெயவர்த்தனா தலைமையில் நடந்த பேச்சு வார்த்தையில் அரசாங்கத் தரப்பில் பிரதமர் திரு.ஆர்.பிரேமதாசா, அமைச் சர்கள் கலாநிதி நிசங்கா விஜேரத்ன, ஜனாப் ஏ.சி.எஸ்.ஹமித், காப்டன் சி.பி.ஜே.செனவிரத்ன, திரு எஸ். தொண்டமான், திரு.கே.டபிள்யு. தேவநாயகம், திரு ரணில் விக்கிரமசிங்க, திரு. மேர்வின் குலரத்ன, பதில் அமைச்சர்கள் ஜனாப் நைனா மரிக்கார், திரு எம்.எஸ்.அமரசிரி ஆகியோர் கலந்து கொண்டனர்.

கூட்டணியின் தரப்பில் எதிர்க்கட்சித் தலைவர் திரு.அ.அமிர்தலிங்கம், கூட்டணித் தலைவர் திரு.மு.சிவசிதம்பரம், வவுனியா எம்.பி. திரு.ரி.சிவ சிதம்பரம், திருகோணமலை எம்.பி. திரு.ஆர். சம்பந்தன், பட்டிருப்பு எம்.பி, திரு.பூ.கணேசலிங்கம், யாழ். அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு.எஸ்.நடராசா, கலாநிதி நீலன் திருச்செல்வம் ஆகியோர் கலந்து கொண்டனர்.

## யாழ். நூலக வாரம்:
## கொழும்பில் இன்று கொடி தினம்

*[தினபதி, கொழும்பு, 21.05.1982.]*

யாழ். நூலக வாரத்தை ஒட்டி கொழும்பில் கொடிதினம் இன்று அனுஷ்டிக்கப்படுகிறது. கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் 1500க்கு மேற்பட்ட தொண்டர்கள், பல்கலைக்கழக, பாடசாலை மாணவ மாணவிகள் காலை தொடக்கம், மாலை வரை கொடி விற்பனையில் ஈடுபடுவர்.

தமிழ் முஸ்லிம் சிங்களப் பாடசாலைகளிலும் கொடிகளை விற்பதற்கு கல்வி அமைச்சு அனுமதி வழங்கியிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்று வெள்ளிக்கிழமை ஆதலால் பக்தர்கள் கூடும் இந்துக் கோவில்களில் மாலை 5.00 மணி முதல் 8.00 மணி வரை கொடிகளை விற்பதற்கு விசேஷ ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

இதற்கிடையில் பொது மக்களின் வேண்டுகோளுக்கிணங்க யாழ். நூலக வாரம் எதிர்வரும் 23ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை நீடிக்கப் பட்டிருக்கின்றது. அத்தினம்வரை பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நூல்களும், நிதி அன்பளிப்புகளும் ஏற்றுக்கொள்ளப்படும் என்று யாழ்.நூலக வார ஏற்பாட்டுக்குழுப் பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

## யாழ்.நூலகப் புனரமைப்புக்கு பிரித்தானிய தமிழ் அகதிகள் மறுவாழ்வு நிறுவனம் உதவி

*[நன்றி: வீரகேசரி, கொழும்பு, 21.05.1982.]*

பிரித்தானிய அரசின் அங்கீகாரம் பெற்ற இயக்கமான பிரித்தானிய தமிழ் அகதிகள் மறுவாழ்வு நிறுவனம் யாழ். நூல்நிலைய புனரமைப்புக்கு உதவ முன்வந்துள்ளது. இது பற்றி அவ்வியக்கத்தின் திட்டச் செயலாளர் திரு.ஜோசப் யாழ். முதல்வர் திரு இராஜா விசுவநாதனுக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நூல்நிலையத்திற்குத் தேவையான நூல்களைப் பெற்றுத் தருவதில் பெருமளவில் உதவமுடியும் என்று கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதியின் உத்தரவு
## ஒரு கோடி ரூபா ஒதுக்கீடு

*[செய்தி: வீரகேசரி, கொழும்பு, 21.05.1982.]*

யாழ். வன்செயலின்போது ஏற்பட்ட சேதங்களுக்கான நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள் இம்மாதக் கடைசியில் வழங்கப்படுமென நம்பகரமாக அறியப்படுகின்றது.

நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள் இம்மாதம் முடிவதற்குள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென்று ஜனாதிபதி திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தன உத்தரவு பிறப்பித்துள்ளார். எனவே இந்தப் பணிப்புரையின் பிரகாரம், நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள் மாத இறுதியிலிருந்து வழங்கப்படும் எனத் தெரிய வருகிறது.

திரு. லயனல் பெர்னாண்டோ தலைமையிலான குழுவின் சிபாரிசுகளின் அடிப்படையிலேயே நஷ்டஈடுகள் வழங்கப்படும்.

மொத்த நஷ்டஈட்டுக் கொடுப்பனவாக அரசாங்கம் ஒரு கோடி ரூபாவை வழங்கும். இதில் 50 லட்சம் ரூபா திறைசேரியாலும் எஞ்சிய 50 லட்சம் ரூபா ஜனாதிபதி நிதியிலிருந்தும் வழங்கப்படும். ஜனாதிபதி தலைமையில் நேற்று நடந்த மாநாட்டிலேயே இதற்கான முடிவு எடுக்கப்பட்டது. இந்த மகாநாட்டில் பதில் நிதி அமைச்சர் அல்ஹாஜ் எம்.எச்.எம்.நைனா மரிக்கார், திறைசேரி அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.

மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் காலத்தில் யாழ்.நகரில் நடந்த வன்செயலால் ஏற்பட்ட சேதங்களுக்கே இந்த நஷ்டஈடு வழங்கப்படவிருக்கின்றது.

யாழ். நூலக புனரமைப்புக்கு ஜனாதிபதி நிதியிலிருந்து ஏற்கனவே 10 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.வன்செயல்களுக்கு

## லயனல் பெர்னாண்டோ கமிஷன் சிபாரிசுபடி நஷ்டஈடு

*[செய்தி: தினகரன், கொழும்பு, 22.05.1982.]*

1981ஆம் ஆண்டு மே மாத இறுதியிலும் ஜுன் மாத ஆரம்பத்திலும் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற வன்செயல்களால் பாதிக்கப்பட்டவர்களுக்கு லயனல் பெர்னாண்டோ கமிஷன் வழங்கிய நஷ்ட ஈட்டுத்தொகையை வழங்குவதற்கு ஜனாதிபதி திரு.ஜே.ஆர்.ஜயவர்த்தனா தலைமையில் நடைபெற்ற மகாநாடொன்றில் நேற்றுத் தீர்மானிக்கப்பட்டது.

ஜனாதிபதி தலைமையில் நேற்றுக்காலை நடைபெற்ற இந்த மாநாட்டில் பதில் திட்டமிடல் அமைச்சர் அல்ஹாஜ் எம்.எச்.எம்.நெயினா மரிக்கார், திறைசேரி அதிகாரிகள், எதிர்க்கட்சித் தலைவர் திரு.அமிர்தலிங்கம் ஆகியோர் கலந்துகொண்டனர்.

வன்செயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு லயனல் பெர்னாண்டோ கமிஷன் வழங்கத் தீர்மானித்த தொகையை வழங்குவது பற்றி நேற்று முன்தினம் நடைபெற்ற அரசு - கூட்டணி உயர்மட்டப் பேச்சுவார்த்தையில் கேள்வி எழுப்பப்பட்டபோது, இது பற்றி நேற்று மகாநாடொன்று நடத்தித் தீர்மானிப்பதாகத் தெரிவிக்கப்பட்டபடி நேற்றைய மகாநாடு கூட்டப்பட்டது.

நேற்றைய மகாநாட்டில் சிபார்சு செய்யப்பட்ட ஒரு கோடி ரூபாவை நஷ்டஈடாக பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்குவதற்கு முடிவு செய்யப்பட்டது.

இதேவேளை வன்செயலின்போது தீயிடப்பட்ட யாழ்.பொது நூலகத்தை நிர்மாணிக்க ஜனாதிபதி நிதியிலிருந்து ஒன்பது லட்சம் ரூபாவுக்கான காசோலை அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். நூலக புனரமைப்புக்கு வங்கிகள் உதவி

*[நன்றி: வீரகேசரி, கொழும்பு, 24.05.1982.]*

யாழ்.பொது நூல்நிலைய கட்டிட நிதிக்கு இலங்கையில் உள்ள சில வங்கிகள் பெருந்தொகையான நிதியை வழங்க முன்வந்துள்ளன.

கடந்த வருடம் ஜூன் மாதம் முதலாம் திகதி யாழ். பொது நூல்நிலையம் ஆயுதப் படையினரால் தீயிடப்பட்டு சாம்பலானது.

இந்த நூல்நிலையத்தை மறுபடியும் நிர்மாணித்து மக்களின் அறிவுப் பசியை தீர்ப்பதற்கு யாழ்.மாநகரசபை முதல்வர் திரு இராசா விசுவநாதன் எடுத்துவரும் முயற்சியினால் இலங்கையில் உள்ள வர்த்தக வங்கி, இலங்கை வங்கி, ஆகியன பெருந்தொகையான பணத்தினை நூல்நிலையக் கட்டிட நிதிக்கு வழங்க முன்வந்துள்ளதாக அறியப்படுகின்றது.

இதேவேளை யாழ்ப்பாணத்திலிருந்தும் அட்டன் நஷனல் வங்கிக் கிளை 50 ஆயிரம் ரூபாவை அன்பளிப்பாக வழங்கவுள்ளது. இந்நிதியை கிளை முகாமையாளர் திரு.மு.நவரத்தினராஜா இன்று யாழ்.மாநகரசபை அலுவலகத்தில் மேயர் திரு.இராசா விசுவநாதனிடம் கையளிப்பார். யாழ். மாநகர சபை அதிகாரிகள் பலரும் இன்றைய வைபவத்தில் கலந்துகொள்வர்.

## யாழ்.நூலக நிதிக்கு பம்பலப்பிட்டி இந்துக்கல்லூரி ரூ.10,000 சேகரித்தது

*[செய்தி: தினகரன், கொழும்பு, 24.05.1982.]*

கொழும்பில் யாழ். நூலக வாரத்தையொட்டி நடைபெற்ற கொடிதினத்தன்று பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி ஆசிரியர்களும் மாணவர்களும் சுமார் 10,000 ரூபா சேகரித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நிதியை இன்று மேற்படி கல்லூரி ஆசிரியர்கள் மாணவர்களின் சார்பில் கல்லூரி அதிபர் திரு.ரி. சங்கரலிங்கம் அவர்கள், கொழும்பு நூலகவார நிதி சேகரிப்புக் கமிட்டித் தலைவர் திரு. வி.எஸ். துரைராஜாவிடம் கையளிப்பார்.

## பர்மிய நூல்கள்

*[செய்தி: தினகரன், கொழும்பு, 25.05.1982]*

கடந்த ஜூன் மாதத்தில் யாழ்.பொதுசன நூல் நிலையத்துக்கு இழைக்கப்பட்ட பேரழிவையும், அதனை மீள்வித்துப் புதுப்பிப்பதற்கு நிதி உதவிகோரி யாழ்ப்பாணம் மாநகர சபையும், யாழ்.முதல்வர் திரு இராஜா விசுவ நாதனும் விடுத்திருந்த வேண்டுகோள்களையும் பிலிப்பைன்ஸ் தீவின் தலைநகரான மணிலாவில் இருந்து ஒலிபரப்பாகும் வெரித்தாஸ் வானொலியின் தமிழ்ப் பணிச் சேவை மூலம் அறியவந்த பர்மா நாட்டுத் தமிழ்ப் பெண்ணான செல்வி சீ.ராஜம் யாழ். முதல்வர் திரு இராஜா விஸ்வநாதனுக்கு பின்வரும் கடிதத்தை எழுதியுள்ளார்.

''வெரித்தாஸ் வானொலி தனது சிந்தனை விருந்து நிகழ்ச்சியில் அழிந்து போன நூல்நிலையத்தை மீண்டும் கட்டியெழுப்ப தாங்கள் முயற்சி எடுத்துக்கொண்டிருப்பதாகவும் அதற்காக உலகத் தமிழர்கள் அனைவரையும் ஒத்துழைக்கும் படியும் வேண்டுகோள் விடுத்தது. என் பங்கிற்கு நானும் என்னால் இயன்ற உதவிகளைச் செய்யக் காத்திருக்கிறேன். பர்மாவில் வாழும் அந்நிய பிரஜைகள் பர்மா நாட்டிலிருந்து மற்ற நாடுகளுக்கு பணவுதவி செய்ய அனுமதியில்லை. யாழ்ப்பாண நூல் நிலையத்துக்கு எந்த வகையிலாவது உதவி செய்ய வேண்டும் என்பது என்னுடைய தீராத ஆவல். பர்மாவில் வெளியாகும் தமிழ் நூல்கள் சிலவற்றை வாங்கி அனுப்புகிறேன். ஏற்றுக்கொள்வீர்களா?''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். நூலக நிதிக்கு வங்கி ரூ.50,000 நிதி உதவி

*[செய்தி: ஈழநாடு, யாழ்ப்பாணம், 26.05.1982]*

ஹற்றன் நெஷனல் வங்கியின் யாழ்ப்பாணக் கிளையின் சார்பில் கிளை முகாமையாளர் திரு.மு.நவரத்தினராஜா நேற்று முன்தினம் யாழ்ப்பாணம் பொதுசன நூல்நிலைய நம்பிக்கை நிதிக்கு ரூபா 50,000க்கான காசோலையை, யாழ்ப்பாண மாநகர முதல்வர் திரு. இராஜா விசுவ நாதனிடம் கையளித்தார்.

யாழ்ப்பாண மாநகர மண்டபத்திலுள்ள முதல்வரின் அலுவலகத்தில் வைத்து வங்கி முகாமையாளர் இக்காசோலையை கையளித்தார்.

கொட்டாஞ்சேனை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரியும், பொலிஸ் நலன்புரிச்சங்கத் தலைவரும், பொலிஸ் இன்ஸ்பெக்டர்களின் சங்கத்தின் பதில் தலைவருமான திரு.எஸ்.சுரேந்திரன் தனது குடும்பத்தின் சார்பில் நூல்நிலைய நிதியாக 1000 ரூபாவை முதல்வரிடம் அன்பளித்தார்.

யாழ்ப்பாண மாநகர முதல்வர் கடந்த வாரம் கொழும்பில் யாழ்ப்பாண பொதுசன நூலக வாரத்தில் கலந்துகொள்ளச் சென்ற சமயம் திரு சுரேந்திரன் 100 புத்தகங்களும் அன்பளிப்புச் செய்திருந்தார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற மேற்படி வைபவத்தில் ஹற்றன் நாஷனல் வங்கியின் யாழ்ப்பாணக் கிளை முகாமையாளருடன், வங்கி உத்தியோகத்தர் திரு.எஸ்.சூரியகுமார் வங்கியின் சட்ட ஆலோசகரும் வடபிராந்திய போக்குவரத்துச் சபை தகுதிவாய்ந்த அதிகாரியுமான திரு.எஸ்.கனகரத்தினம் மற்றும் முக்கிய பிரமுகர்களான தொழிலதிபர்கள் திரு.எஸ்.மகேந்திரன், திரு.இராஜலிங்கம் மற்றும் யாழ்ப்பாண மாநகர உதவி முதல்வர் திரு.எஸ். அலோசியஸ், யாழ்ப்பாண மாநகர உறுப்பினர் ஜனாப் இமாம், மாநகர ஆணையாளர் எஸ். சிவஞானம் ஆகியோரும் சமுகமளித்திருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாணம் பொது நூலகப் புனர்நிர்மாணம்

*[செய்தி: தினகரன், கொழும்பு, 30.05.1982]*

சனாதிபதி நிதி ஆளுநர் சபையானது 1981ஆம் ஆண்டு மே, ஜூன் மாதங்களில் சேதப்படுத்தப்பட்ட யாழ்ப்பாணத்திலுள்ள பொது நூலகத்தின் புனர்நிர்மாணத்திற்கென நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்படல் வேண்டுமென தீர்மானித்துள்ளதுடன் நலன் விரும்பிகளிடமிருந்து உதவு தொகைகளை ஏற்றுக்கொள்ளுதற் பொருட்டு இலங்கை மத்திய வங்கியில் தனியான நடைமுறைக் கணக்கு ஒன்றும் திறக்கப்பட்டுள்ளது.

ஆளுநர் சபையானது ஏகமனதாகத் தீர்மானித்து இந்நிதியத்திற்கு பத்து இலட்சம் ரூபாவை நன்கொடையாகச் செலுத்தியுள்ளது.

கட்டிடம் புனர்நிர்மாணத்தினதும், தளபாடங்கள், நூல்கள் முதலியவற்றினதும் மதிப்பிடப்பட்ட செலவானது ஒரு கோடி பத்து லட்சம் ரூபாவாகும். உதவுதொகை அளிக்க விரும்புவோர் தமது நன்கொடைகளை சனாதிபதி நிதியின் பெயரில் பெறப்பெற்ற காசோலைகள் அல்லது காசுக் கட்டளைகள் மூலம் சனாதிபதியின் செயலாளர், சனாதிபதி செயலகம், குடியரசுச் சதுக்கம், கொழும்பு 1 எனும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு தயவாகக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

சனாதிபதி நிதிக்கான நன்கொடைகள் வருமான வரியிலிருந்து விலக்கப்பட்டுள்ளன.

அதியுத்தமராம் ஜே.ஆர்.ஜயவர்த்தன,

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி.

மாண்புமிகு ஆர்.பிரேமதாஸ -பிரதம அமைச்சர்

மாண்புமிகு எம்.ஏ.பாக்கீர் மார்க்கார் - சபாநாயகர்

மாண்புமிகு ஏ.அமிர்தலிங்கம் - எதிர்க்கட்சித் தலைவர்

திரு. டபிள்யு எம்.பீ.பி.மெனிக்திவெல - சனாதிபதி செயலாளர்

திரு ஏ.டி.ஈ.த.எஸ்.விஜேரத்ன - பட்டயம் பெற்ற கணக்காளர்

சனாதிபதி நிதி ஆளுநர் சபை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு மாத காலத்துள்
## யாழ். நூலக கட்டிட வேலைகள் ஆரம்பமாகும்

*[செய்தி: தினகரன், கொழும்பு, 31.05.1982]*

யாழ்.நூலக 3வது கட்ட வேலைகளுக்கான கேள்விப்பத்திரம் இன்னும் இரு வாரங்களுக்குள் யாழ்.மாநகரசபையினரால் கோரப்படவுள்ளது. யாழ். மாநகரசபை நூலகத்தை மீளளிக்கும் பணியில் மிகத்தீவிரமாக மேயர் திரு இராசா விசுவநாதன் ஈடுபட்டு வருகின்றார்.

யாழ்.நகரிலும் கொழும்பு மாநகரிலும் கொடிதினத்தின் மூலமும் நூலக வாரம் நடாத்தியதன் மூலமும் நூலக நிதிக்கு வாரி வழங்கிய அனைவருக்கும் யாழ். மேயர் திரு விசுவநாதன் தினகரன் மூலம் நன்றியினைத் தெரிவித்த போது நூலக கட்டிட கேள்விப்பத்திரம் அடுத்த மாதம் 10ஆம் திகதி கோரப்படுமென்றும் ஒரு மாத காலத்தினுள் கட்டிட வேலைகள் ஆரம்பிக்கப்படுமெனவும் நம்பிக்கை தெரிவித்தார்.

## யாழ். பொதுசன நூலக நிவாரணத்துக்கு
## ஜனாதிபதி நிதி ஆரம்பித்தார்

*[செய்தி: ஈழநாடு, யாழ்ப்பாணம், 11-06-1982]*

யாழ்ப்பாணம் பொதுசன நூலக நிவாரணத்துக்காக நாடு முழுவதும் நிதி திரட்டும் இயக்கமொன்றை ஜனாதிபதி திரு.ஜே.ஆர்.ஜெயவர்த்தனா நேற்று ஆரம்பித்து வைத்தார். கொழும்பு ரோட்டரிக் கழகத்தில் வைத்து ஜனாதிபதி ஜெயவர்த்தனா நிதி திரட்டும் இயக்கத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் இந்த முயற்சியில் தனக்குத் தனிப்பட்ட அக்கறை இருப்பதாகத் தெரிவித்தார்.

நீண்டகாலத்துக்கு முன் தனது தந்தை யாழ்ப்பாணத்தில் தொழில் புரிந்தபோது யாழ். நூல்நிலையத்தைப் பயன்படுத்தினார் என்றும் தெரிவித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு ரோட்டரிக் கழகம் நடத்திய வைபவத்தில் பிரதமர் திரு ஆர்.பிரேமதாசா, அமைச்சர் திரு காமினி திசா நாயக்கா, எதிர்க்கட்சித் தலைவர் திரு அ.அமிர்த லிங்கம் உட்படப் பல பிர முகர்கள் கலந்துகொண்டனர்.

பிரதமர் ஆர்.பிரேமதாசா பேசுகையில் ''நூல்நிலையத் திற்கு நிதி சேர்க்கும் முயற்சி தேசிய ஒற்றுமைக்கு வழி வகுக்கும்'' என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு.அ.அமிர்தலிங்கம் பேசு கையில் ஜனாதிபதி யாழ் பொதுசன நூலக நிவாரணத்திற்கு தாமாகவே நிதி வழங்கியது மட்டுமல்லாமல் நாடு முழுவதும் நிதி திரட்ட இருக்கின்றார் என்று கூறினார்.

கொழும்பு ரோட்டரிக் கழகத்தினர் யாழ்.நூலகத்திற்கு 600 நூல்களை வழங்கியதுடன் 13 லட்சத்து 71ஆயிரம் ரூபாவிற்கான காசோலையையும் ஜனாதிபதியிடம் வழங்கினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுசன நூல்நிலையத்துக்கான தமது வேண்டுகோளைச் செவியேற்ற அனைவருக்கும் யாழ். மாநகர முதல்வர் நன்றி நவில்கின்றார்

(யாழ். மாநகர முதல்வரின் யாழ் நூலகத்தை மீள்விப்பதற்கான திட்டத்துக்கு உதவி வழங்கியோருக்கு நன்றி தெரிவித்து தமிழ் ஆங்கில மொழிகளில் யாழ்ப்பாண மாநகர சபையால் சென்.ஜேடசப் கத்தோலிக்க அச்சகத்தில் அச்சிடப்பெற்று 'யாழ்ப்பாண மாநகர முதல்வர் நன்றி நவில்கிறார்' என்ற தலைப்பில் சிறுநூலுருவில் 8 பக்கங்களுடன் 18.04.1983 இல் வெளியிடப்பெற்ற நன்றிக் கடிதம்.)

1981ஆம் ஆண்டு ஜுன் முதல் நாளிலும், அப்பொழுது நிலவிய அவசர காலத்தின் கீழ் ஊரடங்க வேண்டிய இராப்பொழுதிலும்தான் விலைமதிக்க முடியாத சேர்வுகளான 97,000 புத்தகங்கள், கிடைத்தற்கரிய பல கையெழுத்துப் பிரதிகளுடன் தென்கிழக்கு ஆசியாவிலேயே மிகப்பெரிய நூலகங்களுள் ஒன்றான யாழ்ப்பாணப் பொதுசன நூல்நிலையம் சாம் பலாக்கப்பட்டதும், வடபகுதியின் பெருமைக்குரியதாகத் திராவிட சிற்ப வியல் பாங்கில் அமைந்த கட்டிடம் பாரதூரமான சேதத்துக்கு உள்ளாகியதும்.

நாகரீக உலகமோ அதனை ஒரு பண்பாட்டுப் படுகொலையாகவும், மனுக்குலத்துக்கு விரோதமான ஒரு குற்றச் செயலாகவும் வர்ணித்திருந்தது. வேறெவராலும் அல்லாது குடிமக்களின் வரிகளால் பராமரிக்கப்படும் சட்டத்தினதும், பாதுகாப்பினதும் பாதுகாவலர்களால் இந்த அஞ்ஞானச் செயல் நிகழ்த்தப்பட்டிருந்தமையால், தமது பண்டைய பண்பாட்டின் வைப்பகத்தைக் கொழுத்துவதற்கு மேற்கொள்ளப்பட்ட எத்தனம் தாங்கவொண்ணா மனவேதனையைத் தமிழ் மக்களுக்கு ஏற்படுத்தியுள்ளது.

இன்றைய தொடர்பில் ஒரு பொதுசன நூல்நிலையத்தின் தொழிற்பாட்டுக்குப் பயன்படக்கூடியதாக விரிவுபடுத்தப்பட்டதும், ஓரளவு மீள வடிவமைக்கப்பட்டதுமான ஒரு கட்டிடத்துக்குத் திட்டமிடும் பொருட்டு பிரபல கட்டிடக் கலைஞர் வி.எஸ்.துரைராஜா அவர்களை நூல் நிலையக் குழுவின் ஆய்வுரையின் பேரில் நகர பிதாக்கள் அழைத்திருந்தார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூர்த்தி செய்யப்பட்டதும் புதிதாக மீள்விக்கப்பட்ட பொதுசன நூல்நிலையம் - இரவல் கொடுக்கும் நூல்நிலையம், சிறுவர் நூல்நிலையம், செய்திப் பத்திரிகைகள் மற்றும் பருவ வெளியீடுகளின் அறை, உடனுதவும் நூல்நிலையம், மாநாட்டு அறைகள், கண்காட்சிப் பகுதி, இடம்பெயரும் நூலக அறை, விசேட சேர்வுகள் அறை, கேட்டல்காண்டல் ஆய்வு அறைகள், கேட்போர்கூடம், சற்றேனும் அற்பமாகவில்லாது வலது குறைந்தோர் தமது சில்லுவண்டிகளுடன் வந்தடைவதற்கு விசேடமாக வடிவமைக்கப்பட்ட ஏற்பாடு ஆகியவற்றை உள்ளடக்கியதான ஒரு கல்வி நிலையத்தின் கருவாக ஒரு நவீன நூல்நிலையத்தின் சகல சேவைகளுக்கும் போதிய ஏற்பாடுடையதாகவிருக்கும்.

மேற்கு நோக்கிய நுழைவாயிலைக்கொண்ட இரண்டடுக்குக் கட்டிடமாகிய அதனது கட்டுவேலைகள் பெயரளவில் நரசிம்மனின் மூலத்திட்டத்தினது மூன்றாம் கட்டமே தான் என்பதுடன் இன்னமும் அதற்கு அமைய அதனது திராவிட சிற்பவியல் பாங்கிலேயே அமையும். அது விடயத்தின் மீது சுவாமி விபுலானந்த அடிகளாரின் எழுத்தோவியத்தை நினைவு படுத்துவதாக யாழின் சின்னம் புதிய பிரதான நுழைவாயிலுக்கு மேல்வரும் மத்திய உயர் கோபுரத்தை அலங்கரிக்கும்.

எனவே யாழ். பொதுசன நூல்நிலையத்தினை மீள்வித்துப் புதுப்பிக்கும் வேலைகள் இரு பகுதிகளாக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன. தற்போதைய கட்டிடத்தின் ஓர் விஸ்தரிப்பாகக் காணப்படவிருக்கும் மூலத்திட்டத்தின் மூன்றாவது கட்டடத்துக்கு 30,17,632 ரூபா செலவுகளுக்கான ஒரு மதிப்பீட்டில் ஏற்கெனவே வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுத் துரிதமாக நடைபெற்று வருகின்றன.

அது அங்ஙனம் இருக்க, தற்போதுள்ள கட்டிடத்தின் ( திருத்தப்படத்தக்க) அதன் வட பாகத்துக்கான மீள்விப்பு மற்றும் புதுப்பித்தல் வேலைகள் 2,93,296 ரூபாவுக்கான ஒரு மதிப்பீட்டுச் செலவில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

கடந்த மனித உரிமைகள் தினத்தில் ( அதாவது 1982 டிசம்பர் 10ஆம் நாளில்) இருந்து ஒரு கருநிலையில் யாழ்ப்பாண பொதுசன நூல்நிலையத்தின் ஆதாரச்சேவைகள் மீளவும் ஆரம்பித்துள்ளோம் என்பதுடன் ஆதரவாளர்கள், நலன்விரும்பிகளால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பாடப்புத்தகங்களுடன் உடனுதவு நூல்நிலையம் அங்கு ஏலவே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிற்படத் தொடங்கிவிட்டது. இடவசதி இல்லாத காரணத்தால் யாழ்ப்பாண நகர மண்டபத்தின் ஒரு பகுதியில் இயங்கி வந்த செய்திப் பத்திரிகைகள் மற்றும் பருவ வெளியீடுகள் பிரிவுகளும் இப்பொழுது இடம்பெயர்க்கப்பட்டுள்ளன. 1983 ஏப்ரல் மாத இறுதிக்குள் சிறுவர் நூல்நிலையத்தையும், இரவல் கொடுக்கும் நூல்நிலையத்தையும் திறந்து வைக்கலாமென நாம் எதிர்பார்க்கின்றோம்.

யாழ்ப்பாண பொதுசன நூல்நிலையத்தின் மீள்விப்புக்கும், புதுப்பித்தலுக்குமான நாளதுவரை அதாவது 1983 ஏப்ரல் 14ம் நாள்வரை சேர்ந்த தொகை 44,54.907.72 ரூபாவாகும்.

அண்மையில் இருவேறு சந்தர்ப்பங்களில் அமெரிக்கத் தூதுவராலயம் அண்ணளவாக நான்கு லட்சம் ரூபா பெறுமதி வாய்ந்த புத்தகங்களை அன்பளிப்புச் செய்திருந்ததுடன், எதிர்காலத்தில் மேலும் உதவியளிக்கப் படுமென உத்தரவாதமளித்துள்ளது. யாழ்ப்பாண ஐக்கிய கிறிஸ்தவ சங்கத்தின் மூலம் யாழ்ப்பாண பொதுசன நூல்நிலைய நம்பிக்கை நிதிக்கு ஏற்கனவே ஒன்றரை இலட்சம் ரூபாவை ரொக்கமாக அன்பளிப்புச் செய்துள்ள உலகத் திருச்சபைகள் கழகம் தனது பெயரில் நூலகத்துக்கு அன்பளிப்புச் செய்யும் பொருட்டு புத்தகங்களைக் கொள்வனவு செய்வதற்காக அதே நிறுவனத்திடம் மேற்கொண்டும் பத்து இலட்சம் ரூபாவுக்கான ஒரு தொகையை மீண்டும் அன்பளிப்புச் செய்துள்ளது.

இலண்டனில் உள்ள தமிழர் விவகாரங்களுக்கான நிலையக் குழுவினரிடமிருந்து நாற்பத்திநாலு தேயிலைப் பெட்டிகள் நிறைந்த புத்தகங்களும், மெல்போர்ண் ஈழத்தமிழர் கழகத்திடம் இருந்து பதினொரு தேயிலைப் பெட்டிகள் நிறைந்த புத்தகங்களும் ஏற்கனவே எமக்குக் கிடைத்துள்ளன. அவ்வாறு செய்வதை நாம் மிகவும் விரும்பகிற பொழுதிலும், இந்த அறிக்கையைச் சுருக்குவதன் பொருட்டு கிடைக்கப்பெற்ற தனிப்பட்ட அன்பளிப்புக்கள் அனைத்தையும் விபரமாகக் குறிப்பிடாமைக்கு எம்மை மன்னிக்கும்படி வேண்டுகின்றோம்.


நூல்நிலையத்தைத் திரும்பக் கட்டுவதற்காகவும் அதன் சேவைகளை விரிவுபடுத்துவதற்காகவும் அவர்கள் அளித்துள்ள உதவிக்கும் ஒத்தாசைக்கும் பூபாகம் அனைத்துமுள்ள நிறுவனங்கள் அனைத்துக்கும், தனிப்பட்டோர் ஒவ்வொருவருக்கும் எமது மனம் நிறைந்த நன்றியையும் பாராட்டுதலையும் தெரிவித்துக்கொள்ளும் அதே சமயம் யாழ்ப்பாண

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகர முதல்வர் பதவியை யாம் துறப்பதற்கு முன்பாக யாழ்ப்பாண பொதுசன நூல்நிலையத்துக்கு மனம்போனவாறாக நிகழ்த்தப்பட்ட அழிவின் எதிர்வரும் இரண்டாவது ஆண்டு நிறைவை இவ்வாண்டு பொருத்தமான முறையில் அவதானிப்பதற்கு மறந்து போகாதிருக்கும்படியும், எதிர்வரும் ஆண்டுகளிலும் ஒவ்வொரு ஐகன் முதல் நாளிலும் அங்ஙனமே தொடர்ந்து செய்துவரும்படியும் கேட்டுக்கொள்வதற்கு இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த விரும்புகின்றோம்.

இந்த உன்னத நோக்கத்திற்கு உதவியிருக்கக்கூடிய தனிப்பட்டவர்கள் ஒவ்வொருவருக்கும் எமது நன்றியைத் தெரியப்படுத்து முகமாகத் தயவுகூர்ந்து எமது இந்தக் கடிதத்தைச் சற்றுவிநியோகம் செய்ய வேண்டுகின்றோம்.

*நன்றி.*
*தங்கள் பணியில்,*
*இராஜா விசுவநாதன்,*
*மாநகர முதல்வர், யாழ்ப்பாணம்*
*நகர மண்டபம்,*
*யாழ்ப்பாணம், 18.04.1983.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொன்விழாப் பொலிவுகாணும் பொதுசன நூலகம்

***க.சி.குலரத்தினம்***

(இக்கட்டுரை யாழ்ப்பாண பொது நூலகம் மீள்விக்கப் பெற்ற கட்டடத் திறப்புவிழா மலர் 04.06.1984 இல் இருந்து மறுபிரசுரமாகின்றது. அமரர் க.சி.குலரத்தினம் அவர்களின் இச்சுருக்கக் கட்டுரையின் மூலப்பிரதி யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவந்த ஈழநாடு நாளிதழில் 20.07.1982 முதல் 19.08.1982 வரை தொடர்ச்சியாக வெளிவந்தது. இத்தொடர் கட்டுரையே யாழ்ப்பாணப் பொது நூலக வரலாற்றை விரிவாகக் கூறும் ஒரே ஒரு ஆவணமாகும். இது பின்னர் யாழ்ப்பாணம் நூல்நிலையம் - ஓர் ஆவணம் என்ற தலைப்பில் கலாநிதி வே.இ.பாக்கியநாதன் அவர்களால் பதிப்பிக்கப்பெற்று அவுஸ்திரேலியா மித்ரா வெளியீட்டகத்தினூடாக பெப்ரவரி 1997 இல் வெளியிடப்பட்டுள்ளது.)

தமிழ்நாட்டில் தஞ்சாவூரில் புகழ்பெற்ற சரஸ்வதி மஹால் உண்டாவதன் முன் யாழ்ப்பாணத்தில் தமிழரசர் நாயன்மார்கட்டு என்னும் குளக்கரையில் நூலகம் ஆரம்பித்திருந்தனர். சென்ற நூற்றாண்டில் 1842ஆம் ஆண்டில் நீதிமன்றக் காரியதரிசி கிறினியர் ஒரு நூலகத்தை ஆரம்பித்திருந்தார். அதன் பின் நீதிமன்றத்துக்குச் சட்டத்தரணிகள் தங்கள் உபயோகத்துக்கென ஒரு சட்டநூலகத்தை ஆரம்பித்திருந்தார்கள்.

இந்த நூற்றாண்டில் 1933ஆம் ஆண்டில் நீதிமன்றக் காரியதரிசி க.மு.செல்லப்பா அவர்களின் சிந்தனையில் ஒரு நூலகம் வாசிக சாலையளவில் உதிப்ப அவர் கந்தமடத்து முதல் நூற்றுவர் என்னும் இளைஞர் முன்னேற்றச் சங்கத்தாரிடம் கருக்கொள்ளச் செய்தார். இளைஞர் வீடுகள் தோறும் சென்று நூல்கள் சேகரிக்கத் தொடங்கினார்கள்.

இதற்குள் செல்லப்பா அவர்கள் பட்டணப் பகுதியில் "லங்காஹோம்" என்னும் மனைக்கு இடம் பெயர்ந்து, அங்கிருந்து 11-12-1933 ஆம் நாளில் உருக்கமான அறிக்கை விட்டார். அது செந்தமிழிலும் ஆங்கிலத்திலும் பிரசுரிக்கப்பெற்றுப் பரப்பப்பெற்றது. A Central Free Tamil Library in Jaffna என்பதே அதன் பழைய பெயராயும் அமைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*முதற் கூட்டம்*

யாழ்ப்பாண மாவட்ட நீதிபதி கனம் சீ. குமாரசுவாமி C.C.S. தலைமையில் 9-6-1934ஆம் நாள் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மண்டபத்தில் கூடிய கூட்டத்திலே குடாநாட்டின் பெரியவர்கள் பலரும் பல துறைகள், பண்ணைகள், திணைக்களங்கள் முதலிய நிறுவனங்களின் பிரதிநிதிகளெனக் கருதும் அளவில் வந்திருந்து கருத்துப் பரிமாறினார்கள்.

நீதவான் குமாரசுவாமி அவர்கள் தலைவராயும் கலாநிதி வணக்கத்துக்குரிய ஐசாக் தம்பையா அவர்கள் உபதலைவராயும், அரியாலையூர் அப்புக்காத்தர் சீ. பொன்னம்பலம் அவர்களும் செல்லப்பா அவர்களும் இணைச்செயலாளராயும் தெரியப்பெற்றார்கள். காரியநிர்வாக சபையில் பெரியவர்கள் பலர் இடம் பெற்றிருந்தார்கள். கல்வித்துறையின் பெரியவரான அருள்நந்தியும் காரிய நிர்வாகசபையை அலங்கரித்தார்கள். கல்லூரிகளின் அதிபர்கள் சிலர் இடம் பெற்றிருந்தார்கள்.

*உருக்கமான வேண்டுகோள் ஆக்கபூர்வமான முயற்சி*

செல்லப்பா அவர்கள் தமிழ்ப் பிள்ளைகளின் மேற்படிப்புக்கு வசதி செய்தலையே அழுத்தமாகப் பேசி, அதற்காக கிராமங்கள் தோறும் வாசிக சாலைகள் கிளம்ப வேண்டும். யாவும் மத்திய நிலையத்தோடு இணைதல் வேண்டும். அங்கத்தவர்கள் மாதாந்தம் 25 சதமாவது கொடுத்துதவுதல் வேண்டும் என்று வேண்டுகோள் விடுத்தார். உடனடியாக அவருக்குக் கிடைத்த பணத்தில் 160 ரூபாவைத் தளபாடங்கள் செய்வதற்குக் கையளித்தார்.

*வாசிகசாலை ஆரம்பம்*

உயர் நீதிமன்றத்துப் பதிவாளராயிருந்து ஓய்வு பெற்ற பெரியார் R.C. புரொக்ரர் இளைஞர்களுக்கு வழிகாட்டியாயும் முகாமையாளராயும் கௌரவமான சேவை செய்வதற்கு முற்பட்டதும், முதல் நூற்றுவரின் முதலாம் இளைஞரான சி.எஸ் இராசரத்தினம் கௌரவ நூலகராகப் பணிபுரிவதற்கு முற்பட்டுத் தம் நண்பர்கள் சேகரித்து வந்த நூல்களைத் தூசுதட்டி வரிசைப்படுத்தி வைத்திருந்தார்.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் மின்சார நிலையத்துக்கு எதிர்ப் பக்கமாகவுள்ள கடைகளில் ஒன்றை வாடகைக்கு எடுத்து அங்கே 01-08-1934 ஆம் நாள் வாசிகசாலையை ஆரம்பித்தார்கள். பலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குவிந்திருந்து படிக்க ஆரம்பித்தார்கள். இருக்கை வசதி போதாமையால் பக்கீஸ் பெட்டிகள் மீதும் இருந்து படித்தார்கள்.

### *உள்ளூராட்சிமன்றம் பொறுப்பேற்றல்*

யாழ்ப்பாணம் கொழும்புக்கு அடுத்த பெரிய நகரமாயிருந்தும் அக்காலத்தில் லோக்கல் போட், ஏர்பன் டிஸ்ட்ரிக் கவுன்சில், ஏர்பன் கவுன்சில் என்று படிப்படியாக முன்னேறியே மாநகர சபையானது. நூலகம் ஆரம்பித்த காலத்தில் 1931 ஆம் ஆண்டில் தோன்றிய ஏர்பன் டிஸ்ட்ரிக் கவுன்சில் (J.U.D.C.) இயங்கி வந்தது. அதன் முதல் தலைவர் அரியாலையூர் ஆ. கனகரத்தினம். அடுத்த தலைவர் ஆர்.ஆர். நல்லையா அவர்கள். இதில் அரியாலையூர் சட்டத்தரணி ஆர்.சுப்பிரமணியம் ஒரு பெரியார். அவர் இந்த வாசிகசாலையை உள்ளூராட்சி மன்றத்திடம் ஒப்படைப்பதற்கான முயற்சியெடுத்தார்.

கையளிப்பு வைபவம் 01.01.1935 ஆம் நாளில் கோலாகலமாக நடைபெற்ற போது, யாழ்ப்பாணத்து வரலாற்று நிபுணர் முதலியார் சி. இராசநாயகம், முகாமையாளர் புறொக்ரர், செயலாளர் செல்லப்பா ஆகியோர் தமிழர் கன்னிகாதானம் செய்த பாவனையில் வாசிகசாலையை உள்ளூர் ஆட்சி மன்றத்தலைவர் நல்லையா அவர்களிடம் ஒப்படைத்தார்கள். இங்ஙனம் ஒப்படைத்த போது 844 தரமான நூல்களைக் கையளித்தார்கள். இவற்றுள் 694 நூல்கள் பொதுமக்கள் அன்பளிப்புச் செய்தவை. எஞ்சியவை அவ்வப்போது விலைக்கு வாங்கியவை.

### *உபகரித்த பெரியவர்கள்*

நூல்களை ஒன்றிரண்டு எனத் தந்தவர் பெயர்களை விட்டு எட்டுப் பத்து பதினைந்து என அள்ளித்தந்தவர்கள் சிலரை இங்கே குறிப்பிடுதல் அமையும். வணக்கத்துக்குரிய கலாநிதி தம்பையா அவர்கள், நாயன்மார்கட்டு வைத்தியர் இராமநாதன், வித்தியாதரிசி நல்லூர் கந்தையா, வணக்கத்துக்குரிய நல்லூர் ஞானப்பிரகாசர், ந. சி. கந்தையாபிள்ளை, சட்டத்தரணி T.H. சுப்பையா, இவர்களோடு மன்றங்கள், சபைகள், சமயத்தாபனங்கள் கொடுத்த கொடையும் பெரிது. அதி மேற்றாணியார், கிறிஸ்தவ சேவாசங்கம், சென்னை பைபிள் சங்கம், வெஸ்லியன் சங்கம், கொழும்பு முஸ்லீம் சங்கம், யாழ்ப்பாணம் சைவ பரிபாலனசபை ஆகியோரை மறக்கலாகாது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*இடம் பெயர்ந்த வரலாறு*

பெரியகடைச் சூழலில் தினமும் காலை 8-00 முதல் மாலை 7-30 வரை தினமும் சராசரி ஐம்பதின்மர் நன்றாகக் கருத்தூன்றிப் படித்துப் பயன்பெற்றனர். இடவசதியின்மையால் வாசிகசாலையை உடனடியாகப் பறங்கித்தெருச் சந்தியிலுள்ள விசாலமான கடைக்கு மாற்றினார்கள். அங்கும் இடம் போதாமையால் விரைவில் வாடி வீட்டுக்குத் தெற்கில் அமைந்த மழவராயர் மனையின் மேல்மாடிக்கு மாற்றினார்கள். மேல் மாடியில் இரு பெரும் விசாலமான மண்டபங்களும் ஒரு நீளமான விறாந்தையும் அமைவாக இருந்தன. மழவராயர் கட்டடத்துக்கு மாறிய காலம் 1936ஆம் ஆண்டாகும். அன்று தொடக்கம் நீண்டகாலமாக நிலவி வந்த நூலகத்தின் முதுகெலும்பாக நின்று பிடித்தவர் முன்னர் கௌரவ சேவை செய்த இராசரத்தினம் ஆவார். உள்ளூராட்சியார் நிரந்தர நூலகர் தேவையென விளம்பரம் செய்தகாலத்தில் விண்ணப்பித்த பட்டதாரிகள் பலரைப் புறக்கணித்தவர்கள் மெற்றிக்குலேசன் சித்தியெய்திய இராச ரத்தினம் அவர்களையே நியமித்தார்கள். அவர் தனியொருவராய்க் காலை 7 மணி முதல் மாலை 7 மணி வரை கடமையாற்றினார். நூலகத்தின் வளர்ச்சிக்கு நகரசபையாய் மலர்ந்த உள்ளூராட்சி மன்றத்துத் தலைவர்களும் காரியதரிசியாய்க் கடமையாற்றியவர்களும் கைகொடுத்து வந்தார்கள். நாளடைவில் தனியொருவர் நூலகத்தை நடத்துவது முடியாது எனக்கண்டவர்கள் ஜோர்ஜ், சுப்பிரமணியம் ஆகிய இரு இளைஞர்களை உதவியாளர்களாக நியமித்தார்கள்.

*புதிய நூலகர்*

இராசரத்தினம் அவர்கள் பன்னிரண்டு ஆண்டுகள் வரை பணிபுரிந்தபின் 1-2-1947இல் புதிய நூலகர் க. நாகரத்தினம் அவர்களுக்கு இடங்கொடுத்து இளைப்பாறிக்கொண்டார். நாகரத்தினம் அவர்களின் முயற்சியும் பணியும் சுறுசுறுப்பானவை. இவர் பரமகுலசிங்கம் அவர்களின் உதவியால் வணக்கத்துக்குரிய ஐசாக் தம்பையா அவர்களின் நூல்கள் பலவற்றை நூலகத்துக்குப் பெற்றார். மேலும் பல பெரியார்கள் நூல்களை அன்பளிப்புச் செய்த வேளையில் நகரசங்கத்தார் ஆண்டு தோறும் நிதியொதுக்கி நூல்கள் வாங்கிக் குவித்தார்கள். தலைவர் சாம் சபாபதி அவர்களையும் காரியதரிசி பாலசுப்பிரமணியம் அவர்களையும் நினைவிற்கொள்ள வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***நூலகத்தின் அகலிப்பு வேலை***

சுதந்திர இலங்கையில் யாழ்ப்பாண நகரம் மாநகர சபையினால் பரிபாலிக்கப் பெறத் தொடங்கிய வேளையில் நல்லதொரு நூலகம் தனியாக அழகாக எழும்புதல் வேண்டும். யாழ்ப்பாணம் இலங்கை என்பனவோடு அமையாது, தென்கிழக்காசிய நாடுகள் புகழும் வண்ணம் அமைதல் வேண்டும் என்று நகரபிதா சாம் சபாபதி அவர்கள் நினைத்தபோது, அப்படியே ஆகுக என்று வணக்கத்துக்குரிய லோங் பிதா ஆசீர்வதித்தார்.

***அடிக்கல் நாட்டு விழா***

பாரிய நூலகத்தை மாடிகட்டடமாகக் கட்டுவதற்கான நல்லதொரு இடத்தை நகர் நிர்மாண நிபுணர் வீரசிங்கா, முனியப்பர் கோயில் முன்னுள்ள முற்றவெளியில் வகுத்ததைத் தமிழ் நாட்டுக் கட்டடக்கலை நிபுணர் நரசிம்மன் ஒத்துக்கொண்டதும் நல்ல ஆரம்பமானது. நகர பிதா சபாபதியவர்கள் 16-05-1952 முதல் யாழ்ப்பாண மத்திய நூலகசபை என ஒரு ஆளுனர் சபையினை ஆரம்பித்தார். நகரபிதா, வணக்கத்துக்குரிய லோங் பிதா, பிரித்தானிய தானிகர் செசில் சையேஸ், அமெரிக்கத் தூதுவர் பிலிப் குறோஸ், இந்திய தானிகரின் முதற் காரியதரிசி சித்தாந்தசாரி ஆகிய ஐவரும் 29-05-54 மாலை அடிக்கல் நாட்டினார்கள். ஆசிய அபிவிருத்திப் பணி நிதி மூலம் அமெரிக்கர் 1,04,000 ரூபா நன்கொடை நல்கும் வழிகண்டவர் லோங் பிதா. இந்திய தானிகரும் உடனடியாக 10,000 ரூபா உதவினார்.

***கைகொடுத்த களியாட்ட விழாக்கள்***

யாழ்ப்பாணம் கண்டிரா வகையில் களியாட்ட விழாக்கள் காலந்தோறும் நடைபெற்றன. அவை 1952, 1954, 1959, 1963 என்னும் ஆண்டுகளில் கலை விழாக்கள் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்புக்கள் முதலான வருமான வழிகளோடு நடைபெற்றன. வர்த்தகப் பிரமுகர்கள் பெரும் பரிசுகளாகப் புதிய மோட்டார் வண்டிகளை அன்பளிப்புச் செய்திருந்தனர்.

***புதுப்பொலிவும், பெயரும், திறப்பு விழாவும்***

கட்டட வேலைகள் நடைபெற்ற காலத்திலேயே 17.10.1958 முதலாக 'யாழ்ப்பாண பொது சன நூல்நிலையம்'' என்னும் பெயர் வழங்கலாயிற்று. அதற்குப் பொதுமக்களின் உபசரிப்பு 26-11-1958 நடைபெற்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடித்தினத்தில் அதிகமாயிற்று. அன்றி 1959ஆம் ஆண்டுக் களியாட்ட விழாவும் கைகொடுத்தது.

நூலகத்தில் இடநெருக்கடி தவிர்க்க முடியாது போனபோது, கட்டிடம் முற்றாக மாடியீறாகக் கட்டி முடிக்கப்பெறுமுன்பே கீழ்மண்டபத்தில் 11-10-1959 ஆம் நாளில் நகரபிதா அல்பிரெட் குடிபுகும் வைபவத்தை நடத்தினர். பாரிய நூலகத்துக்குப் பழம் பெரும் நூல்கள் பல கோப்பாய் வன்னியசிங்கம் அவர்களின் நினைவாகவும், வவுனியா பண்டிதர் இராசையனார் நினைவாகவும் கிடைத்தன. முதலியார் குல சபாநாதனிடம் பல அரிய நூல்கள் விலைக்குக் கிடைத்தன.

***பட்டம் பெற்ற நூலகர்***

அமெரிக்காவில் அற்லான்ராப் பல்கலைக்கழகத்தில் நூலகப் படிப்பில் எம்.எஸ்.சி. என்னும் முதுகலைமாணிப் பட்டம்பெற்ற வே.இ.பாக்கியநாதன் அவர்களின் சேவை 28-08-1964 முதல் கிடைத்தது. அவருக்குப் பின் சுறுசுறுப்பான இளைஞர் பலரும் சேவையில் இடம் பெற்றனர். நூலகம் நன்கு விசாலித்து பல்லாயிரம் அங்கத்தவர்களைக் கொண்டு நிலவியது. பாக்கியநாதன் பழந்தமிழ் ஏடுகள் பலவற்றை உள்ளூராட்சி மந்திரியார் திருச்செல்வம் அவர்கள் உதவியால் தேடிச் சேகரித்து வைத்தார்.


கட்டட வேலையில் திராவிட நாகரீகம் பொலிவுபெறப் பொறியிய லாளர் இ. வைத்திலிங்கம் பாடுபட்டார். ஆணையாளர் ஜெயசிங்கா தமிழறிந்தவராயிருந்து உதவி செய்தார். விசேட ஆணையாளர்கள் நடேசன், மாணிக்கவாசகர், நல்ல உதவியாயிருந்தார்கள். காலந்தோறும் நகர பிதாக்களாயிருந்தவர்களான பெரியவர்கள் முயற்சியெடுத்தார்கள்.

***அமெரிக்க நூலகம் சங்கமித்தது***

இரு வேறு நதிகள் கங்கை யமுனை ஒன்றிணைந்தாற் போல யாழ்ப்பாணத்தில் நிலவிய அமெரிக்க நூலகம் யாழ். நூலகத்தோடு இணைந்தமை பெரிய வரப்பிரசாதமாயிற்று. ஆயிரக்கணக்கான நூல்கள், ஒலிப்பதிவு நாடாக்கள் முதலானவை கிடைத்தன. இன்னும் அனுபவம் வாய்ந்த நூலகர் ஒருவரும் வந்து வாய்த்தார். திரிவேணி சங்கம் என்பது கங்கை, யமுனை, சரஸ்வதி நதிகளின் கூட்டம். இதில் சரஸ்வதி அந்தர் வாகினியாக வடக்கில் உள்ளது. இங்கே சரஸ்வதி பிரதியட்சமாய் இரு நூலகங்களை இணைத்து நடுவே அழகிய திருவுருவில் காட்சி தருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***உலகப் புகழ்பெற்ற ஒப்பற்ற ஒரு நூலகம்***




உடம்பெங்கும் குருதி பாய்ச்சும் இதயத்தின் நான்கு அறைகள் போல நூலகத்தின் மேல் மாடி, கீழ் மண்டபம் ஆகியவற்றின் வட, தென் பாகத்து மண்டபங்கள் நான்கும் அறிஹூட்டி வந்தன. ஆயிரக்கணக்கான தேனீக்கள் மலர்ந்த பூக்களில் தேன் திரட்டினாற் போல இளைஞர் யுவதிகள் விரித்த நூல்களில் அறிவைத் தேடிப்போயினர். நூல்களின் தொகை, சஞ்சிகைகளின் தொகை தளபாட வரிசை நூலகத்தாரின் பணிவான சேவை படிப்பார்வத்தை வளர்த்த பான்மை சொல்ல முடியாது. எழுத முடியாது.

நூலகர் பாக்கியநாதன் உத்தியோக உயர்வு பெற்று விரிவுரையாளராகப் போனதும், நாகரத்தினம் அவர்கள் ஓய்வுபெற்றதும், நகரபிதா அல்பிறெட் துரையப்பா அவர்களின் பகீரதப்பிரயத்தனத்தால் கேம்பிரிட்ஜ் பல்டிலைக்கழக முதுமானிப் பட்டதாரியும் பரமேஸ்வராக் கல்லூரி அதிபராய் ஓய்வு பெற்றவருமான சி.சிவபாதசுந்தரம் அவர்களின் மேற்பார்வை சிலகாலம் வரப்பிரசாதமாயிற்று.

***இன்றைய வளர்ச்சி***

மறுபிறப்பெடுத்து மலர்ந்து வரும் நூலகத்துக்கு உலகம் உபகரித்துள்ளது. விசேட ஆணையாளர் சிவஞானம் நல்ல முயற்சி எடுக்கிறார். நூலகப்பணியில் பயிற்சி பெற்ற பெண்கள் பலர் நல்ல முறையாகப் பணிபுரிகிறார்கள். நூலகர் திருமதி ரூ. நடராசா தலைமையில் நூல்கள் பல்லாயிரக்கணக்காக வந்துள்ளன. தளபாட வரிசைகள் தயாராகின்றன. மெல்ல மெல்ல உய்தியும் உயர்வும் அடையும் நாள் நெருங்குகிறது. செல்லப்பரின் நினைவு நிலவுவதாக.

***(நன்றி: மீள்விக்கப்பெற்ற திறப்புவிழா மலர், 04-06-1984)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பொது நூலகத்தின் அமைப்பும் சேவைகளும்

*திருமதி ரூபவதி நடராஜா*

இக்கட்டுரை, யாழ்ப்பாண பொது நூலகம் மீள்விக்கப்பெற்ற கட்டடத் திறப்புவிழா மலர் (04-06-1984) இல் இருந்து மறுபிரசுரமாகின்றது. திருமதி ரூபவதி நடராஜா யாழ்ப்பாண நூலகத்தின் நூலகராக கடமையாற்றிய காலகட்டத்திலேயே யாழ்ப்பாண நூலகம் தீக்கிரையாக்கப்பட்டது. எரியுண்ட நூலகம் மீள்விக்கப் பெற்று பொதுமக்கள் சேவைக்காகத் திறக்கப்பட்ட வேளை வரையிலான அதி முக்கியமான வரலாற்றுக் காலகட்டத்தில் அவர் நூலகராகச் சேவையாற்றினார்.

யாழ்ப்பாணப் பொதுநூலகம் தன் அறிவொளியினை எரிக்கப்பெற்ற பல்லாயிரக்கணக்கான விலைமதித்தற்கரிய நூல்களது சாம்பல் மேட்டிலிருந்து மீண்டும் கதிர்பரப்பத் தொடங்கியுள்ளது. அறிவுலகமே பெருமைப்படக்கூடிய முறையில் நவநூலகமொன்று உதயமாகி வருகின்றது. அறிவாலயங்களதும் அறிவாற்றல் பெற்ற பெரியோர்களது வரலாறும் என்றுமே முற்றுப் பெற்றதில்லை எனும் வாக்குக்கிணங்க நூலக அறிவு விருட்சம் வெட்டப்பெற்ற கிளைகளினின்றும், புதிய கிளைகளைத் தோற்றுவித்துப் பரந்த வளர்ச்சியினை மேம்படுத்த ஆரம்பித்துள்ளது. புதிய நூலக கட்டிடத்தின் நான்கு பெரும் மண்டபங்களும் நவீன நூலகங்களது செயற்பாடுகளைப் பின்பற்றியும் தமிழ் மக்களது பாரம்பரிய கலை, கலாச்சாரங்களை உலகறியச் செய்யும் வகையிலும் செயற்படவுள்ளது. மாநகர மக்களுக்கு மட்டுமின்றி யாழ்.மாவட்ட எல்லை வரை தனது சேவையினைப் பரப்ப இந்நூலகம் முன்னிற்கின்றது.

***உடமைகள் பாதுகாப்பிடம்***

நூலகத்தின் எப்பகுதியினையும் உபயோகிக்க விரும்பும் வாசகர்களது சொந்தப் பொருட்கள் யாவும் இவ்விடத்தில் வைத்துச்செல்ல வேண்டப்படுவர். இதற்குரிய அடையாளச் சின்னம் வழங்கப்படும். வெளியே செல்லும் பொழுது இச்சின்னத்தைக் கொடுத்து உடமைகளைத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். பிரதான நூலக வாயிலில் இப்பாதுகாப்பிடம் அமைந்துள்ளது.

***நூல்கள் பாதுகாப்பிடம்***

படிப்பகத்திற்குச் செல்பவர்கள் மட்டும் இப் பகுதியில் நூல்களைப் பதிந்துகொள்ளத் தேவையில்லை. நூலகத்தின் ஏனைய பகுதிகளிலிருந்தும் எடுத்துச் செல்லும் நூலகத்துக்குச் சொந்தமான நூல்கள் யாவும் இப்பகுதியில் பதிந்து செல்ல வேண்டப்படுவர். நூலக பிரதான வாயிலில் இப் பாதுகாப்புப் பகுதி அமைந்துள்ளது.

***காட்சிக்கூடம்***

பிரதான நூலக கீழ்த்தரை நடுமண்டபமே காட்சிக்கூடமாக அமைந்துள்ளது. இனத்திற்கும் மொழிக்கும் தொண்டாற்றிய பெரியோர்களது உருவப் படங்கள் இப்பகுதியில் ஏற்றப்படவுள்ளன. புராதனகால நூல்களும், ஏட்டுச் சுவடிகளும், கையெழுத்துப் பிரதிகளும், கலாச்சாரத்தை விளங்கவைக்கும் கைப்பணிப் பொருட்களும் இங்கு வைக்கப்படும். நூலகத்திற்குப் புதிதாகச் சேர்க்கப்பட்ட நூல்களும் காட்சிக்காக இங்கு வைக்கப்படும். தமிழ் மக்களதும், நாட்டினதும் சிறப்பினை எடுத்துக்காட்டும் காட்சிப்படங்கள் இங்கு விற்பனைக்கு விடப்படும்.

***நூல் இரவல் வழங்கும் பகுதி***

பிரதான நூலக கீழ்த்தள வடபாகம், இரவல் வழங்கும் பகுதியாக இயங்குகின்றது. மாவட்ட எல்லைக்குள் வசிக்கும் 14 வயதுக்கு மேற்பட்ட குடிமக்கள் அனைவருக்கும் இப்பகுதி தன் சிறந்த சேவையினை வழங்கி வருகிறது. நூல்களை இரவலாக வழங்கலும், மீண்டும் பெறலும் அங்கத்தவர்களைப் புதிதாகச் சேர்த்தலும், புதிப்பித்தல் செய்தலும், நூல்களை ஒதுக்கீடு செய்ய உதவுதலும், தண்டம் பெறலும், நினைவூட்டும் கடிதங்களை அங்கத்தவர்கட்கு அனுப்புதலுமான சேவை இப்பகுதியிலேயே நடைபெறும். 1981இன் பின்னர் மீண்டும் 14.7.1983 இல் தற்போதைய மாநகரசபை ஆணையாளரது விடாமுயற்சி காரணமாக இரவல் வழங்கும் சேவை ஆரம்பித்து வைக்கப்பட்டது. இயற்கை வெளிச்சமும், சுத்தமான காற்றோட்டமும் நூலகத்தில் பரவும் வண்ணம் இருக்கைகள் யாவும் ஒழுங்குமுறையாக நிரைப்படுத்தப்பட்டுள்ளன. அங்கத்தவர் வசதிக்காக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறாக்கைகளில் பொருள் அட்டைகளும், வகுப்பெண் வழிகாட்டியாக இணைக்கப் பட்டுள்ளன.

அன்பளிப்பாக கிடைத்துவந்த நூல்களது பெரும் பகுதி ஆங்கில நூல்களாகவும் சிறுபகுதி நூல்கள் மட்டுமே தமிழ் நூல்களாகவும் இப்பகுதியில் இடம்பெற்றுள்ளன. தமிழ் நூல்களுக்கான கேள்வியினைப் பூர்த்திசெய்ய முடியாதவிடத்து ஒதுக்கீட்டினைச் செய்து ஓரளவு வாசகர்களை ஆற்றுப்படுத்த முடிகின்றது. தமிழ் நூல்களைக் கொள்முதல் செய்யும் நடவடிக்கைகள் மேற்கொண்டுவந்த போதிலும் சந்தையில் தமிழ் நூல்களுக்கும் பற்றாக்குறை இருப்பதனால் ஓரளவு கொள்முதல் செய்தலும் சாத்தியமாகவுள்ளது.

இதுவரை காலமும் இடப்பற்றாக்குறை காரணமாக சிறுவர் பகுதியும், இரவல் வழங்கும் பகுதியின் ஒரு புறத்தில் செயற்பட்டு வந்தது. எரிக்கப்பட்ட சிறுவர் நூலக புனருத்தாரண வேலைகள் யாவும் முடிவுற்றமையால் சிறுவர் பகுதி தனக்குரிய இடத்திற்கு மாற்றப்படவுள்ளது. இதன் காரணமாக மேலும் இடவசதிகளைப் பெற்று இரவல் சேவை விஸ்தரிக்கப்படுகின்றது. இரவல் வழங்கும் பகுதியில் போடப்பட்டுள்ள புத்தக இறாக்கைகள் யாவும் யாழ். கிறிஸ்தவ சங்கத்தினது தாராள மனப்பான்மையால் கிடைக்கப்பெற்றவையாகும்.

கீழ்த்தள தென்பாகத்தில் உள்ள எரிக்கப்பெற்ற முன்னைய இரவல் வழங்கும் பகுதி, திருத்த வேலைகளின் பின்னர் மீண்டும் இரவல் வழங்கும் சேவையினை வாசகர்கட்கு வழங்கவுள்ளது. 4,200 சதுர அடி விஸ்தீரணம் கொண்ட பகுதியாக இரவல் பகுதியினை விஸ்தரிக்கத் திட்டமிட்டுள்ளோம்.

இப்பகுதி அங்கத்தவர்கட்காக பொதுவிடுமுறை, திங்கட்கிழமை தவிர்ந்த ஏனைய வார நாட்களில் 08.00 மணி முதல் 19.00 மணி வரை தனது சேவையினை வழங்கி வருகின்றது.

***சிறுவர் பகுதி***

பிரதான நூலகத்தினையும், புதிய கட்டிடத்தையும் இணைக்கும் இரண்டாம் கட்டப் பகுதியில் இச்சிறுவர் நூலகம் புனருத்தாரண வேலைகளின் பின், தனது சேவையினைச் சிறார்கள் மத்தியில் செயற்பட ஆரம்பித்துள்ளது. சர்வதேச அரிமாக் கழகம் '306 பி''யின் பெரும்பான்மை ஆதரவுடனும், ரெட்பானா நிறுவனத்தின் ஆதரவுடனும் புதுப்பொலிவு பெற்று இப்பகுதி காட்சியளிக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாநகரசபை எல்லைக்குள் வசிக்கும், படிக்கும், 14 வயதுடையவர்களும், கீழ்ப்பட்டோரும் இப்பகுதியினை பயன்படுத்த அனுமதிக்கப்படுவர். பொதுவிடுமுறை, திங்கட்கிழமை தவிர்ந்த ஏனைய நாட்களில் இந்நூலகம் சேவைக்காகத் திறக்கப்பட்டிருக்கும். பாடசாலை விடுமுறை தினங்களிலும், சனி ஞாயிறு தினங்களிலும் 08.30 மணி தொடக்கம் 18.00 மணிவரை செயலாற்றும் இந்நூலகம் ஏனைய வார நாட்களில் 11.30 மணி தொடக்கம் 18.00 மணி வரையிலும் சேவைக்காகத் திறக்கப்படும்.

உயரம் குறைந்த புத்தக இறாக்கைகள், வகுப்புப் பொருள்வாரியாக நிரைப்படுத்தப்பட்டுள்ளது. கண்கவர் வண்ண வட்ட மேசைகளும், கதிரைகளும் சிறுவர்களை மகிழ்விக்கும் என்பதில் ஆச்சரியமில்லை. சிறுவர் நூலகத்திற்கு அருகே அமைக்கப்பட்டிருக்கும் சிறுவர் பூங்கா எல்லையில்லா மகிழ்ச்சியை சிறுவர்களிடையே தோற்றுவித்துள்ளது. அத்துடன் சிறுவர்களை நூலகத்திற்கு ஈர்க்குமுகமாக நடாத்தப்பெறும் விரிவுசேவைகளான சித்திர வேளை, கதை வேளை, கைப்பணி வேளை, கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி, பொது அறிவுப்போட்டி போன்ற ஏனைய போட்டிகள் யாவும் நடாத்தப்பெறும். நூலகத்தினை அறிவுக் கருவூலங்கள் மத்தியில் தோன்றியுள்ள கனவுலகமாகவே சிறுவர் கருதுவர்.

இரவல் வழங்கும் நூல்கள் மட்டுமின்றி உடனுதவும் நூல்களான கலைக்களஞ்சியங்கள், அகராதிகள், பொதுஅறிவு நூல்கள் ஆங்கிலம், தமிழ் மொழியில் உண்டு.

சஞ்சிகைகளும், வார இதழ்களும் இப்பகுதியில் போடப்பட்டுள்ளன. வீடியோ படக் காட்சிகளும், சங்கீத மாலைகளும் சிறுவர்களுக்காக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன. இதற்கான உபகரணங்கள் கிடைத்தவுடன் இச்சேவை விரைவில் ஆரம்பிக்கப்படும்.

***வாசிகசாலைப் பகுதி***

புதினப் பத்திரிகைகளும், வார மாத சஞ்சிகைகளும், அரசாங்க தனியார் ஸ்தாபன வெளியீடுகளும், ஸ்தானிகராலயங்களால் இலவசமாக அனுப்பப்பெறும் சஞ்சிகைகளும், இப் பகுதியில் முக்கிய இடத்தைப் பெறுகின்றன.

1981-ம் ஆண்டு நடைபெற்ற வன்செயலின் பின்னர் தற்காலிகமாக வாசிகசாலைப் பகுதி மாநகரசபை அறை ஒன்றினுள் ஆரம்பிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிக்கப்பட்ட பிரதான நூலக வடபகுதி புனருத்தாரணம் செய்யப்பட்டுப் பொதுமக்களது பயனுக்காகச் சேவையிலிடப்படும்வரை தற்காலிக அறையொன்றினுள்ளேயே இப்பகுதி சேவையினை ஆற்றியது. புனருத்தாரண வேலைகள் பூர்த்தியாக்கப்பட்ட பின்னர் நூலக நடுத்தரைப் பகுதிக்கு மாற்றம் செய்யப்பட்டது.

பொதுமக்கள் தினசரிகளைத் தினந்தோறும் வாசிக்கும்வண்ணம் வாரத்தின் எல்லா நாட்களிலும், அரசாங்க, பொது விடுமுறை தினங்களுட்பட 08.00 மணி முதல் 20.00 மணி வரை இப்பகுதி சேவைக்கு விடப்பட்டுள்ளது. மும்மொழிகளிலும் இரு பிரதிகளில் புதினப் பத்திரிகைகள் போடப்படுவதுடன், ஜனரஞ்சகமாக பொது, முக்கிய சஞ்சிகைகளும், அரசாங்க வெளியீடுகளும் சந்தா முறையில் பெறப்படுகின்றன.

பழைய சஞ்சிகைகள் வாசிகசாலைப் பகுதி அங்கத்தவர்களுக்குத் தவணைமுறையில் இரவல் வழங்கப்படுகின்றன. இப்பகுதி புதிய கட்டிடத் திறப்பு விழாவுடன் கீழ்மாடி வடபாகத்திற்கு மாற்றம் செய்யப்படவுள்ளது. 2,100 சதுரஅடி விஸ்தீரணம் கொண்ட இம்மண்டபம் பொதுமக்களுக்கு வசதிகொண்ட ஆசனங்களையும் இயற்கையான வெளிச்சத்தையும், சுத்தமான காற்றோட்டத்தையும் கொண்டு விளங்குமென்பதில் ஐயமில்லை.

***கேட்போர் கூடம்***

புதிய கட்டிடத்தின் கீழ்த்தளத் தென்பாகப் பகுதியில் இக்கேட்போர் கூடம் அமைக்கப்படவுள்ளது. 2100 சதுரஅடி விஸ்தீரணம் கொண்ட இம்மண்டபத்தின் சுவர்கள் மர வேலைப்பாடுகளைக்கொண்டும் நிலத்தளம் சரிவாகவும், 200 வசதியான ஆசனங்களைக்கொண்டும் விளங்கவுள்ளது. இப்பகுதி விரிவுரைகள், கலந்துரையாடல்கள், கண்காட்சிகள், படக்காட்சிகள் போன்ற ஏனைய தேவைகளுக்காக உபயோகப்படுத்தப்படும். பகல் வேளைகளிலும் படக்காட்சி காண்பிப்பதற்காக பலகணிகளுக்குத் திரைகள் இடப்படும்.

***வலது குறைந்தோர்க்கு***

வலது குறைந்தோர்க்கான வசதிகளையும் புதிய கட்டிடத்தில் ஆரம்பித்துள்ளோம். இதற்காகத் தாம் இயங்கும் வண்டிகளிலிருந்து நூலகத்துக்குள் உட்செல்ல, சற்றே சாய்வான நிலத்தளம் கொண்ட சாய்வளைவு அமைக்கப்படுகின்றது. இது காலப்போக்கில் வாசிகசாலைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பகுதி, சிறுவர்பகுதி, இரவல் வழங்கும் பகுதி, கேட்போர்கூடம் ஆகிய பகுதிகளுக்கும் விரிவாக்கப்படும்.

விழிப்புலன் இழந்தோர்க்கு ஹெலன் கெல்லரது நாமம் என்றுமோர் வரப்பிரசாதமாகும். ஆகவே சிறிய அளவிலாயினும் பிரெய்ல் பகுதியொன்றினை ஆரம்பித்து விழிப்புலனற்றோர்களுக்கு வழங்குதல் எமது முக்கிய நோக்கமும் கடமையுமாகும்.

***நூற்களஞ்சியப் பகுதி***

சிறுவர் நூலகத்திற்கு மேல் உள்ள பகுதியே களஞ்சிய அறையாகவுள்ளது. அரசாங்க வெளியீடுகளினதும், பொது, விசேட சஞ்சிகைகளதும், செய்தித்தாள்கள், துண்டுப்பிரசுரங்கள், அதிக பாவனையில் ஈடுபடுத்தப்படாத நூல்களினதும், ஆண்டறிக்கைகளினதும் பழைய இதழ்களும் இப்பகுதியில் மட்டைகட்டப்பட்டு உடனுதவும் பொருட்டுச் சேகரிக்கப்பட்டுள்ளன. திறந்த இறாக்கைகளில் இவைகள் ஒழுங்கு நிரையாக அடுக்கப்பட்டுள்ளன.

***உடனுதவும் பகுதி***

பிரதான நூலக முதல்மாடி வடபாகத்தில் இப்பகுதி அமைந்துள்ளது. பொதுமக்கள் அனைவருக்கும் கட்டுப்பாடுகள் எதுவுமின்றி சேவையாற்றுகின்றது. திறந்த இறாக்கைகளில் வகுப்புவாரியாக நூல்கள் அடுக்கப்பட்டிருப்பதனால் வாசகர்கள் எவ்வித தடங்கலுமின்றி இலகுவில் நூல்களைப் பெற வழி வகுக்கப்பெற்றுள்ளது. அகராதிகள், கலைக்களஞ்சியங்கள், ஆண்டு நூல்கள், நூற்பட்டிகள், தேசப்படங்கள் போன்ற உடனுதவும் நூல்கள் தனி இறாக்கைகளில் வைக்கப்பட்டுள்ளன.

அன்பளிப்பாகக் கிடைக்கப்பெற்ற அநேக நூல்கள் ஆங்கில நூல்களேயாகும். தமிழ் நூல்கள் வாசகர்களது தேவைகளைப் பூர்த்தி செய்யுமளவிற்குப் போதியதாகவில்லை. மாணவர்கள் தமது பாடங்களுக்கேற்ற உடனுதவும் நூல்கள் தமிழ்மொழியில் இல்லாமை குறித்து குறைப்படுகின்றனர். ஆராய்ச்சி மாணவர்கள் போதியளவு விடயதானம் வழங்கும் ஆராய்ச்சி நூல்கள் இல்லையென அங்கலாய்க்கின்றனர். கிடைத்தற்கரிய தமிழ் நூல்கள் முதற்பதிப்பு நூல்களாகவும் அச்சில் இல்லாத நூல்களாகவும் இருப்பதனால், புத்தக சாலைகளில் கொள்வனவு செய்யும் வசதி இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இத்தகைய கிடைத்தற்கரிய நூல்களைத் தமிழ்க் குடிமக்களிடம் இருந்தே நூலகத்திற்குச் சேர்த்துக்கொள்ளுதல் அவசியமாகிறது. ஆதலினால் கருணை உள்ளம் படைத்தவர்கள், நூலகத்தில் எரிக்கப்பெற்ற மீண்டும் பெறற்கரிய நூல்களை உடன் உதவும் பகுதிக்கு வழங்குமாறு பணிவன்புடன் வேண்டுகின்றோம். கையேட்டுப் பிரதிகளையும், ஓலைச் சுவடிகளையும்கூட நூலகம் ஏற்றுக்கொள்ள முன்வருகிறது. விலைமதிப்புள்ள நூல்களைத் தந்துதவிய ஆசியா பவுண்டேசன் நிறுவனம், தூதரகங்கள், பிரிட்டிஷ் கவுன்சில், அமெரிக்க நிறுவன நூலகம், யாழ். ஐக்கிய கிறிஸ்தவ சங்கம், யாழ்.பல்கலைக்கழக மாணவர் அவை மற்றும் பொதுமக்கள், பாடசாலைகள், தனியார் ஸ்தாபனங்கள், அனைவருக்கும் பொதுமக்கள் சார்பில் நன்றி தெரிவிக்கக் கடமைப்பட்டுள்ளோம். உடனுதவும் பாடநூல்கள் மட்டுமின்றி, அரச வெளியீடுகளும் செய்தித்தாள் கட்டுரைகளும் ஆங்கில மொழி நாடாக்களும் இப்பகுதியில் காணப்படுகின்றன.

***விசேட சேர்க்கைப் பகுதி***

உடனுதவும் பகுதிக்கு எதிர்த்திசையில் காணப்படும் பகுதி புனருத்தாரணம் செய்து முடிக்கப்பெற்றவுடன் இச்சேவை அப்பகுதியில் ஆரம்பிக்கப் படவிருக்கின்றது. இலங்கை சம்பந்தமான நூல்களும், யாழ்ப்பாண மாவட்டம், மாநகரம் பற்றிய நூல்களும், கையேடுகளும், பிரசுரங்களும், ஏட்டுச் சுவடிகளும் சேகரிக்கப்படவுள்ளன. ஈழத்துத் தமிழ் எழுத்தாளர்களால் எழுதப்பெற்ற சகல நூல்களும், யாழ்ப்பாணம் பற்றி உள்நாட்டிலும், வெளிநாட்டிலும் பிரசுரிக்கப்பெற்ற நூல்களும் இப்பகுதிச் சேர்க்கையில் அடங்கும்.

எழுத்துருப் பெற்றவைகள் மட்டுமின்றி உபகரணங்கள், நாணயங்கள், சிலைகள் போன்ற பண்டைக்கால கலாச்சாரங்களை எடுத்துக்காட்டும் சின்னங்களும் இச் சேர்க்கையில் அடக்கப்படவுள்ளன.

மாணவர்கட்கும், ஆராய்ச்சியாளர்களுக்கும் தேவையான தகவல்களை சேகரிக்க உதவும் வண்ணம் நிழற்படப் பிரதிச் சேவை உபகரணம் இப்பகுதியில் ஏற்படுத்தப்படும்.

கிடைத்தற்கரிய நூல்களை நிழற்படப் பிரதிகளாகத் தொகுத்தும், பிறநாட்டு நூலகங்களிலிருந்து மைக்ரோ படச்சுருள்களாகக் கொள்முதல் செய்தும் ஆராய்ச்சியாளருக்கு உதவும் பொருட்டு வைக்கப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மைக்ரோ ரீடர் எனும் நிழற்படச் சுருள்களை வாசிக்கவல்ல கருவி எமது நூலகத்திற்கு ஆதரவாளர் ஒருவரினால் கிடைத்துள்ளமையால் இச் சேவையினை நாம் வழங்கும் காலமும் அதிக தூரத்தில் இல்லையென்றே கூறவேண்டும்.

**கட்புல செவிப்புலப் பகுதி**

வீடியோ படக்கருவிகளையும், படச்சுருள்களையும், கசற் நாடாக்களையும் இசைக்கருவிகளையும் கொண்டதாக இப்பகுதி அமைக்கப்படவுள்ளது.

**படிப்போர் கூடம்**

புதிய கட்டிடத்தின் மேல்மாடி வடபகுதியில் நூறு இருக்கை வசதிகள் கொண்ட படிப்போர்கூடம் அமைக்கப்படும். சொந்தப் பாடநூல்களையும், பயிற்சி நூல்களையும் கொண்டுசெல்ல இங்கு அனுமதிக்கப்படுவர்.

**நிர்வாகஸ்தர் பகுதி**

பிரதான நூலகத்தின் மேல்மாடி நடுத்தளப் பகுதியில் தற்பொழுது இப்பகுதி இயங்குகின்றது. அன்பளிப்பாகக் கிடைக்கும் நூல்களைப் பெறுவதும், பாவனைக்குதவாத பழைய பதிப்புக்களையும், உருக் குலைந்த நூல்களையும், பல பிரதிகளிலான நூல்களையும் விடுவித்தல் செய்தலும் இப் பகுதியிலேயாகும்.

நூலகத்திற்கு உபயோகமுள்ள நூல்கள் யாவும் நூலகவியலில் தேர்ச்சி பெற்ற நூலகர்களினால் பகுக்கப்படுகின்றது. நூலக கோவையில் பதிதலும், வகுப்பெண் பொறித்தலும், விவரண அட்டைகளை எழுதுதலும் ஏனைய மட்டை கட்டுதல், அறிவித்தல், திகதி அட்டவணைகளை ஒட்டுதலுமான நுட்ப வேலைகளும் இப் பகுதியிலேயே நடைபெறுகின்றன. புதிய நூலகக் கட்டிடம் பூர்த்தியானதன் பின்னர் மேல்மாடியின் தென்பாகத்திற்கு இப்பகுதி மாற்றப்படவுள்ளது. நூலகரது அலுவலகமும் இப்பகுதியிலேயே இயங்கும்.

**கலைக்கூடம்**

பிரதான நூலகத்தின் இரண்டாம் தளப் பகுதியில் கோபுரக் கூம்பின் நேர்கீழாக உள்ள பகுதியே இக் கலைக்கூடமாகும். தமிழுக்குச் சிறப்பாகத் தொண்டாற்றிய அறிஞர்களது உருவப்படங்களை இங்கு ஏற்றும் வண்ணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பகுதி அமைக்கப்பட்டுள்ளது. இப் பகுதியினை அடுத்து இட, வலப் புறங்களில் உள்ள மொட்டைமாடி முற்றம் யாழ். மாநகரத்தின் எழிலை ரசிக்கும் வண்ணம் அமைக்கப்பட்டுள்ளது ஓர் சிறப்பம்சமாகும்.

***விசேட வேண்டுகோள்.***

நூலகத்திலுள்ள நூல்கள் யாவும் எமது தேசிய சொத்தாகக் கருதி பொறுப்புணர்வுடன், பொதுமக்கள் பாதுகாக்கவும் உபயோகிக்கவும் வேண்டும். நூல்களில் பக்கங்களை வெட்டுதல், கிழித்தல், கிறுக்குதல் போன்ற செயல்களைச் செய்தல் கூடாது. எரிக்கப்பெற்ற நூலகம் மீண்டும் பொதுமக்களுக்காகவே செயலாற்றத் தொடங்கியுள்ளமையால், பலரும் இச்சேவையினைப் பயன்படுத்தவேண்டி இவ்வாறான செயல்களைச் செய்யவேண்டாமெனக் கேட்கப்படுகிறீர்கள். நூலகக் கட்டிடத்தையும், நூலக உபகரணங்களையும் கூட உங்கள் சொத்தாகவே பேணவும், நூலக உத்தியோகத்தருடன் ஒத்துழைக்கவும் அன்புடனும் பணிவுடனும் கேட்கப்படுகிறீர்கள். மிகப் பொறுப்பான இவ் வேண்டுகோளுக்குப் போதிய ஆதரவு கிடைக்குமென்பது எமது நம்பிக்கை.

*(நன்றி: மீள்விக்கப்பெற்ற கட்டிடத்*
*திறப்புவிழா மலர் 04.06.1984)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1981 ஜூன் 1
## பண்பாட்டுப் படுகொலை

***ஐங்கரன்***

அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கும் தமிழ் மக்களின் பண்பாடுகளின் அதி உச்சக்கட்ட வெளிக்காட்டலாய் பொதுசன நூலகம் 1981 ஜூன் 1 இல் எரித்து நாசமாக்கப்பட்டது. கொடூரம் மிக்க இந்நிகழ்வின் அரசியற் பின்னணிகளை யாவரும் அறிவர். ஆனால் இழந்த நூலகத்தை மீள எவரால் தான் கட்டியெழுப்பிட முடியும்? கட்டிடத்தைத்தான் புனருத்தாரணம் என்ற வகையில் கட்டலாம். ஆனால் எரிந்து போன அரிய கிடைக்கப் பெறாத நூல்களை சுவடிகளை எவ்வண்ணம் பெறலாம்?

தென்கிழக்காசியாவில் முதன்மையாக விளங்கியது யாழ். பொதுசன நூலகம். அத்துடன் சர்வதேச நூலக மட்டங்களுடனும் யாழ். பொதுசன நூலகம் சிறப்பான நிலையிலிருந்தது. அச்சியந்திர சாதனங்கள் எழுமுன்பாக கையால் எழுதப்பட்ட சுவடிகள், பனையோலை வாசகங்கள் இப்படியாக தொல்பொருள் நிலையம் போன்றும் யாழ் நூலகம் செயற்பட்டு வந்தது.

நூலக காங்கிரஸ் இலும் யாழ். நூலகம் அங்கத்துவம் வகித்தது. இலங்கையிலிருந்து வெளியிடப்படும் சஞ்சிகைகள், நூல்கள் இந்நூலகத்தினூடாக வெளிநாடுகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டன.

வரலாற்றுப் புகழ்வாய்ந்த யாழ். நூலகத்தின் சிறப்பான சிற்ப அமைப்புக் கட்டிடத்தை கட்டுவிக்க தனிநாயகம் அடிகளார், வணக்கத்துக்குரிய லோங் அடிகள் போன்றோர் முதன்மையாயிருந்தனர். யாழ். நூலகம் சிறப்பாக நடைமுறையிற் செயற்பட நூலகத்தை மாநகர சபை பொறுப்பேற்றுக் கொண்டது. சர்வதேச நூலகவியற் சங்கங்கள் யாழ். நூலகத்துடன் நேரடியான தொடர்புகளைக் கொண்டிருந்தன. இதனூடாக வெளிநாட்டு நூல்கள் தாராளமாக இங்கு கிடைக்கப்பெற்றன. பிரிட்டிஷ் கவுன்சில் நூலகத்தின் கொழும்புக் கிளையிலிருந்து வருடாந்தம் பல நூல்கள் யாழ். நூலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டன. இவை மாத்திரமன்றி சர்வதேசம் பூராக யாழ் நூலகத்துக்கு உதவிகளை வழங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தன. ஆசியா பவுண்டேஷன், போரூட், நொராட் போன்றன இவற்றுள் சில நிறுவனங்களாகும்.

தமிழ் பேசும் மக்களின் அறிவுக்களஞ்சியமாக விளங்கிய யாழ். நூலகம் மேன்மேலும் வளர்ந்து வருவதை இன வாதிகளால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை.

1958இலும் 1977 இலும் நிகழ்ந்த திட்டமிடப்பட்ட இனக்கலவரங்களால் தமிழர்களின் பொருளாதார வளங்களும் நிலையங்களும் அழித்து நாசமாக்கப்பட்டன. ஆயினும் அறிவாற்றலை அழித்தொழிக்க சந்தர்ப்பத்தைத் தேடிக் கொண்டிருந்த இனவாதிகளுக்கு 1981 மே 31 நல்ல முகூர்த்தத்தைக் கொடுத்தது. மாவட்ட சபைகளுக்காகவும் உள்ளூராட்சி மன்றங்களுக்குமான தேர்தல் காலமாக மே 1981 விளங்கியது. ஜூன் 5 இல் தேர்தல் நாளாகும். இதற்காக ஐ.தே. கட்சிக்குப் பிரச்சாரம் செய்ய காமினி திசநாயக்காவும் வேறு அமைச்சர்களும் அரசின் அதிகாரிகளும் யாழ். வந்திருந்தனர். இவர்களின் முன்னிலையிலேயே யாழ். நகரம் மீண்டும் எரிந்தது. நாச்சிமார் கோவிலடியில் நடந்த துப்பாக்கிச்சமரில் 3 பொலிசார் இறந்ததையடுத்து பொலிசாராலும் அரசின் காடையராலும் யாழ். நகரம் எரிக்கப்பட்டது. இவ்வேளையிலேயே யாழ். நூலகமும் தீக்கிரையானது.

இச்செயல்கள் அனைத்தும் அரசின் திட்டமிடப்பட்ட செயலாகவே அமைந்தன. யாழ். எம்.பி. யின் வீடு, ஈழநாடு பத்திரிகை அலுவலகம், நகர வர்த்தக நிலையம், ஆகியனவும் நாச்சிமார் கோவிலும் இக்கால வேளையிலேயே எரித்து நிர்மூலமாக்கப்பட்டன. இவ் எரிப்புகள் எல்லாவற்றிலும் மேலாக யாழ். நூலகம் எரிக்கப்பட்டதே தமிழ் பேசும் மக்களின் பாரிய இழப்பாகும்.

இக்கொடூர நூலக எரிப்பினைப் பொறுத்துக்கொள்ள முடியாது தாவீது அடிகளார் துயரத்துடன் சில நாட்களில் மரணமானார். சர்வதேச நாடுகள் பூராக அரசின் கொடூரச் செயலை வன்மையாகக் கண்டித்தன. வரலாற்றுப் படுகொலையாக நிகழ்ந்த அறிவாலய இழப்பினை பூசி மெழுக அரசு விசாரணை, புனருத்தாரணம் என்று பறைசாற்றியது. ஆனால் இதுவரை எவையுமே நிகழவில்லை. இழந்த நூலகத்தை மீளக்கட்டி எழுப்பிட அனைவரும் தோள் கொடுப்போமாக.

***(நன்றி: திசை, யாழ்ப்பாணம், 02.06.1989)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிப்பினை நீடித்து வைத்திடும்
# எழுச்சிக் கீதங்களுக்கு ஒரு முன்னுரை

*கவிஞர் முருகையன்*

யாழ்ப்பாண பொதுசன நூலகம் தீக்கிரையாக்கியதன் நினைவாக, 'அணையாத அறிவாலயம்'' என்ற தலைப்பில் ஆனி 1989இல் கவிதைத் தொகுப்பொன்று வெளிவந்தது. தீக்கிரையாக்கப்பட்ட யாழ். பொது சன நூலகம் தொடர்பாக சார்ள்ஸ் இயற்றிய இக்கவிதைகளின் தொகுப்பை யாழ்ப்பாணம் மாணவர் இளைஞர் பொது மன்றம் வெளியிட்டிருந்தது. அக்கவிதைத் தொகுப்பு கவிஞர் இ. முருகையன் வழங்கிய முன்னுரை இதுவாகும்.

எட்டு ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டது. அது நடந்தும் ஆண்டுகள் பல கடந்துவிட்டன. வடக்கின் அறிவாலயமாக விளங்கிய அந்த நிறுவனம் எரியூட்டி ஒழிக்கப்பட்டதே!

இது எவ்வளவு பெரிய பண்பாட்டுக் கொலை? தருமமும் ஞானமும் பேசிப் பெருமைகொள்ளும் ஒரு மக்கட் குழுவினர் இதனைச் செய்யலாமா? என்றவாறான உணர்வலைகள் பதிவு செய்யப்பட்டு ஒரு நூலாக இப்பொழுது வெளிவருகின்றது.

யாழ்ப்பாண நூல் நிலையம் அழிக்கப்பட்ட கொடிய செயல் உணர்வுக் கூர்மையுள்ள இளம் உள்ளங்களை எவ்வளவு கடுமையாகத் தாக்கியுள்ளது என்பதைக் காட்டும் ஓர் ஆவணமாக சார்ள்ஸ் எழுதியுள்ள அணையாத அறிவாலயம் என்னும் இந்தக் கவிதைத் தொகுப்பு இப்போது வெளியாகின்றது.

இதில் எல்லாமாக எட்டுக் கவிதைகள் இடம்பெற்றுள்ளன. யாவுமே அந்தப் பண்பாட்டுக்கொலையின் நினைவாக எழுந்தவைதான்.

அந்த எரியூட்டல், அந்த அறிவாலய அழிப்பு, அந்தப் பண்பாட்டுக் கொலை ஏன் நடந்தது? யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் எரிந்து சாம் பலாகி, இடிந்து சேதமாகிப் போவதற்குக் காரணம் என்ன? அந்தப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகங்கள் செய்த குற்றந்தான் என்ன? நூலகம் செய்த பாவம்தான் என்ன? வேறொன்றும் இல்லை. தமிழ் மக்களின் சொத்தாக அந்த நூலகம் இருந்தது தான் காரணம். தமிழ் வாசகர்களும் மாணவர்களும் ஆராய்ச்சி அறிஞர்களும் நாடிச் செல்லும் ஒரு கேந்திர நிலையமாக அது அமைந்து விட்டது. தமிழ் மக்களின் மேம்பாட்டுக்கு அடையாளமாக அது இருந்து விட்டது.

தமிழர் மேல் எழுந்த ஆத்திரம், பகைமை, எரிச்சல் அவர்களுடைய சொத்தாகிய நூலகத்தின் மேலே திருப்பப்பட்டு விட்டது.

இவ்வாறான எரிச்சலுக்கும் பகைமைக்கும் கொடுமைக்கும் காலாயுள்ள கருந்தோட்டங்களைப் பேரினவாதம் என்று குறிப்பிடுவது வழக்கமாகும். பெரும்பான்மையான ஓர் இனம் சிறுபான்மையினரை ஒடுக்கும் சிறுமையை நோக்கி அவ்வித எண்ணப் போக்குகளைப் பேரினவாதம் என்றனர் போலும்.

மக்கட்கூட்டம் ஒன்று தனக்கெனச் சில தனிப் பண்புகளையும் வரலாற்றையும் மரபையும் தாயகத்தையும் உரிமைபாராட்டி அபிமானங் கொள்வது புதுமை அன்று. தனது தனித்தன்மையையும் அடையாளத்தையும் பேணிக்கொள்வதற்கு அவ்வித அபிமானம் உதவுகிறது. அவ்வித அபிமானத்தை இன உணர்வு என்று கூறுகின்றோம்.

அவ்விதமான மக்கட்கூட்டம் பிறிதொரு மக்கட்கூட்டத்தைத் தனது பிறவிப் பகையாகக் கருதி அவ்வித பகையை வளர்த்து வன்மஞ் சாதிக்கும் சூழ்நிலை உண்டாகும்போது தான் விரும்பத்தகாத விளைவுகள் நேர்ந்து விடுகின்றன. வீடு உடைப்பும் கடையுடைப்பும் சூறையும் சூடும் அடியும் வெடியும் சிறைவைப்பும் சித்திரவதையும் என்று பயங்கரமான கோரமான செயற்பாடுகளுக்கு இடம் உண்டாகின்றது. வெட்டும் கொத்தும் அடிப்பும் முறிப்பும் அழிப்பும் ஒழிப்பும் எரித்தலும் நொருக்கலும் நடைபெற்று விடுகின்றன. இவ்வித சூழலால் இன உணர்வு இனப்பகை ஆகிறது.

எனது இனம் மேலானது, அது உலகிலுள்ள வேறெந்த இனத்தையும் விட மேலானது, ஆகையால் வேற்றினத்தவர்கள் என் பகைவர்கள், அவர்களை அடக்கி ஆழ வேண்டும் ஒடுக்கி ஒழிக்க வேண்டும் என்று எண்ணும் மனப்பான்மையை நாம் இனமேன்மை வாதம் என்று குறிப்பிடலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இனமேன்மை வாதம் ஒரு நாட்டில் வாழும் பெரும்பான்மையோரிடம் மட்டுமே அன்றிச் சிறுபான்மையோரிடமும் இருக்கலாம். இங்கு எண்ணிக்கை மட்டுமே நிலைமையைத் தீர்மானிக்கும் ஒரே ஒரு காரணி ஆவதில்லை. ஆகையால் பேரினவாதம் என்ற பதத்தைவிட இனமேன்மை வாதம் அல்லது இன ஆதிக்கவாதம் என்னும் தொடர்கள் விடய விளக்கத்துக்கு உதவி செய்வன ஆகலாம்.

இனமேன்மை வாதத்தின் ஒரு வெளிப்பாடு தான் நூலக எரிப்பு. அந்த வெளிப்பாட்டின் தீங்கையும் கொடுமையையும் வெளிப்படுத்துவன தான் இந்தத் தொகுப்பிலுள்ள ஆக்கங்கள்.

வரலாற்று ஏடுகளை நாம் புரட்டிப் பார்க்கும் போது இனமேன்மை வாதிகளிலே பேர் போன ஒருவனாகத் தென்படுகின்றவன் ஹிட்லர். அவனுடைய செயல்களோடும் இலங்கையில் நடந்த நிகழ்வுகளைத் தொடர்புபடுத்திக் காட்டுகிறார் கவிஞர்.

*ஹிட்லரின் அடிச்சுவட்டில்*
*தொடரும் இனவாதம்*
*ஹிட்லரை மீறுகின்றதோ!*

என்ற வினா எழுப்பப்படுகின்றது.

*இன்னும் இவர்கள்*
*போதி மரத்தினில் 'பிரித்'' ஓதல்*
*வேண்டுமா?*
*நல்ல நூல்களை எரித்து*
*குளிர் காயலாமே!*

என்று ஆத்திரம் கலந்த எதிர்க்குறிப்போடு சொற்கள் பாய்கின்றன.

*வாளேந்திய*
*சிங்கக் கொடியாளர்கள்*
*சிம்மாசனத்தில் ஏறிய பின் - மக்கட்*
*சிரங்களையே*
*அறுத்தனரே*
*அரசாள்வோர்*

இனமேன்மை வாதத்தை அடையாளம் காட்டுவதற்கு சிங்கக்கொடி, போதி மரம், பாளி மொழி, என்னும் தொடர்கள் உதவுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வாறே விடியலுக்குப் பூபாளமும் போர்க்காலப் புலம்பல்களுக்கு முகாரியும் கையாளப்படுகின்றன. இவை பலபேர் பல தடைவை கையாண்ட பிரயோகங்கள். கேட்டலுத்துப் புளித்துப் போனவை. இவை போன்ற பலவீனமுள்ள இடங்கள் சிற்சில இந்தக் கவிதைத் தொகுப்பில் ஆங்காங்கு காணப்படுகின்றன. ஆயினும் இத்தொகுப்பின் அடிநாதமாக ஒலிப்பது ஓர் ஆக்கபூர்வமான எழுச்சிக் கீதம்.

*அக்கினி சாட்சியில்*
*கருவைப் பெற்றெடுக்கும்*
*அன்னையாய்*
*சுமைகளைச் சோராது சுமந்து*
*நாளைய வாழ்வுக்காய்*
*ஜீவித்துக் கொண்டிருந்தாய்*
*உன்னுடைய இழப்பினிலும்*
*புதிய வரலாற்றைக் காண்கிறோம்*
*இன்னுமோர் சகாப்தம்*
*எழுந்து கொள்வதையும் கூட*

இவ்விதமான எழுச்சிக் கீதம் நாம் பெற்றுக்கொண்ட விழிப்பினை நீடித்து வைத்திட உதவட்டும்.

**(நன்றி: அணையாத அறிவாலயம்: சார்ள்ஸ் கவிதைகள், 1989)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்ப்பாண நூல்நிலையத்தை தீயிட்டவர் காமினியே – ஜனாதிபதி பதில்

*[செய்தி: ஈழநாடு [யாழ்ப்பாணம்] 26.10.1991]*

வடக்கு- கிழக்கின் இன்றைய நிலைக்கு காமினி திஸநாயக்காவே பிரதான சூத்திரதாரி என்றும் யாழ். நூலக எரிப்புக்கு அவரே காரணமென்றும் ஜனாதிபதி திரு. பிரேமதாஸா கூறியுள்ளார்.

யாழ் நூலகம் எரிக்கப்பட்டது தொடர்பாக திரு.காமினி திஸாநாயக்கா எழுதிய கடிதத்திற்கு ஜனாதிபதி பதிலளிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

ஜனாதிபதி மேலும் கூறுகையில் வடக்கு - கிழக்கில் தற்போதைய நிலைமையை எழுப்பியவர்கள் யார்? இதற்கு பிரதான காரணம் திரு காமினியே. பத்து வருடங்களுக்கு முன் 1981இல் நடந்த சம்பவங்கள் இந்நாட்டின் சமுதாயங்களுக்கிடையேயான உறவுகளில் இது ஒரு கறை படிந்த துயரமான சம்பவமாகும்.

பாராளுமன்றில் மாவட்ட அபிவிருத்திச்சபை முறையை நாம் கொண்டுவந்து அதிகாரத்தை பரவலாக்க முயன்ற போது காமினி திஸாநாயக்காவே அதனை எதிர்த்தார். தேர்தல் நடைபெற்றன. தேர்தல் நடைபெறுவதற்கு முதல்நாள் திரு காமினி நிறைய ஆட்களைக் கூட்டிக்கொண்டு யாழ்ப்பாணம் சென்றார்.

யாழ்ப்பாணம் சென்ற அவர் வாக்குச்சீட்டு பெட்டிகளைச் சேகரித்து கள்ள வாக்குகளைப் போட்டார். இதனை நான் கூறவில்லை. பாராளுமன்றத்தில் காமினி பிரசன்னமாய் இருந்த போது கூட்டணி செயலதிபர் ஆற்றிய உரை என்னிடம் உள்ளது.

மாவட்ட அபிவிருத்திச்சபை தேர்தல்களில் சதிநாசவேலைகள் இடம்பெற்ற பின்னர் ஒரு சர்வதேச நூல் நிலையமான யாழ். நூல்நிலையம் எரியூட்டப்பட்டது. வாக்குச்சீட்டுகளால் நீதியைப் பெறுவதற்கே எமது தலைவர்களால் முடியாவிடில் நாங்கள் நீதியை குண்டுகள் மூலம் பெறுவோம் என இளம் தமிழ் தீவிரவாதிகள் நினைத்தனர். இப்படித்தான் அவர்கள் தீவிரவாத செயல்களில் இறங்கினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காமினி திஸாநாயக்கா யாழ்ப்பாணத்திலிருந்து தேர்தல்களில் ஈடுபட்டார் என்பது இரகசியமல்ல. வெளியிலிருந்து 300 பேர் தேர்தல் கடமைகளைச் செய்ய யாழ்ப்பாணம் அழைத்துச் செல்லப்பட்டனர். பல வாக்குச்சீட்டுப் பெட்டிகளை காணவில்லை. சில வாக்குப் பெட்டிகள் இன்னமும் காணாமலிருக்கின்றன.

இவைகள் எல்லாம் காலம் தாழ்த்தி வெளிவந்துள்ளன. புலிகளுக்கு ஆயுதங்கள் கொடுத்தது பற்றி நீங்கள் பேசுகிறீர்கள். வடக்கு- கிழக்கிலுள்ள மக்களைப் பாதுகாக்க புலிகளுக்கு எதிராக ஆயுதப்படையினரும் பொலிசாரும் மேற்கொண்ட நடவடிக்கைகளை நீர் மறந்து விட்டீர்போலும்.

தேசிய பந்தோபஸ்து அமைச்சராக ஐந்து வருடம் கடமையாற்றிய உமது சக பாடியான லலித் அத்துலத் முதலியினால் சாதிக்க முடியாததை கடந்த இரண்டரை வருடகாலத்தில் எனது நிர்வாகத்தின் கீழ் நாங்கள் புலிகளையும் ஜே.வி.பியையும் அழிப்பதில் வெற்றிகண்டுள்ளோம் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## நூலகத்தை எரித்தவர்களுக்கு வாக்களிக்கக் கூடாது

*[செய்தி: ஈழநாடு [யாழ்ப்பாணம்] 05.10.1994]*

தென்கிழக்கு ஆசியாவிலேயே சிறந்த நூல்நிலையமாக விளங்கிய யாழ். நூல் நிலையத்தை எரித்து சாம்பலாக்குவதற்கு முக்கிய சூத்திரதாரியாக இருந்த திரு. காமினி திஸாநாயக்காவுக்கு ஜனாதிபதி தேர்தலில் சிறு பான்மை மக்கள் ஒருபோதும் வாக்களிக்க மாட்டார்கள்.

அமரர் எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்காவின் சிரார்த்த தினத்தை முன்னிட்டு புத்தளத்தில் அண்மையில் நடைபெற்ற கூட்டத்தில் பொதுசன ஐக்கிய முன்னணியின் புத்தளம் அமைப்பாளர் ஜனாப் எம்.எச்.எம். நாவாஸ் கூறினார்.

அவர் தமதுரையில் மேலும் கூறுகையில், பிரசித்தி பெற்ற யாழ். நூல் நிலையத்தை இலங்கை மக்கள் நன்கு அறிவார்கள். அதே போல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நூல் நிலையத்தை எரித்து சாம்பலாக்கியவர்களையும் சிறுபான்மை மக்கள் மறக்கவும் மாட்டார்கள், மன்னிக்கவும் மாட்டார்கள் என்று கூறினார்.

## எரிக்கப்பட்ட நூல் நிலையத்தை குழுவினர் பார்வையிட்டனர்

*[செய்தி: ஈழநாடு [யாழ்ப்பாணம்], 14-10-1994]*

நேற்றைய பேச்சுக்கள் முடிவடைந்த பின் அரச குழுவினரும் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளும் யாழ்ப்பாணத்தில் எரிக்கப்பட்ட நூல்நிலையத்தை நேரில் சென்று பார்வையிட்டனர்.

மாலை 5.30 மணியளவில் இருதரப்பினரும் இந்த நூல்நிலையத்தையும் குண்டு வீச்சுக்கு இலக்கான வீரசிங்கம் மண்டபத்தையும் யாழ்ப்பாணத்தில் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டின் போது கொல்லப்பட்டோரின் நினைவுத் தூபியையும் அந்த சுற்றுவட்டாரத்தையும் பார்வையிட்டனர்.

இன்றைய பேச்சுக்களில் நூல்நிலைய புனர்நிர்மாண வேலை குறித்து ஆராயப்படவுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## யாழ் நூல்நிலைய எரிப்பு விசாரிக்கப்பட வேண்டும்

*[செய்தி: ஈழநாடு [யாழ்ப்பாணம்] 15-10-1994]*

யாழ்ப்பாண பொது நூல்நிலையம் எரிக்கப்பட்டதை விசாரணை செய்வதற்கு விசாரணைக்குழு ஒன்றை நியமிக்க வேண்டும் என்று விடுதலைப் புலிகளின் அரசியல்துறை துணைப் பொறுப்பாளர் திரு.கரிகாலன் அரசின் பிரதிநிதிகளிடம் நேற்று வேண்டுகோள்விடுத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நூலகப் புனர்நிர்மாணம்
## அத்தியாவசியமாக மேற்கொள்ளப்பட வேண்டிய மீட்புப் பணிகள்

*எஸ்.எம்.கமால்தீன்*

'யாழ்ப்பாணப் பொது நூலகம் இன்று ஒரு பழங்கதையும் கனவுமாகிவிட்டது. ஆனால் அறிவாலயங்களினதும் அறிவாற்றல் படைத்த மக்களினதும் வரலாறு என்றுமே இவ்வாறு முடிந்ததில்லை. மதியீனர் செயலால் மறைந்த இந்த அறிவாலயம் மீண்டும் உயிர்த்தெழும் என்பது உறுதி. யாழ். பொது நூலகத்தில் எரிக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான நூல்களின் சாம்பரிலிருந்து அறிவுலகம் பெருமைப்படக்கூடிய நவநூலகம் ஒன்று உதயமாகி அறிவுக்கதிர் பரப்பும் நாள் வெகு தூரத்திலில்லை என்பது எனது அசையாத நம்பிக்கையாகும்.'

இற்றைக்குப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன் வீரகேசரி வார இதழில் (19.07.1981) எரியுண்ட யாழ். பொது நூலகத்தைப் பற்றி நான் எழுதிய கட்டுரையை மேல்போந்த பந்திகளால் முடித்திருந்தேன்.

சில தினங்களுக்கு முன் யாழ். நூலகத்தைப் புனர்நிர்மாணஞ் செய்வதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுவதாகப் புதின ஏடுகளில் வெளிவந்த செய்திகளைப் படித்தபோது நான் நம்பிக்கையுடன் விழைந்த நவநூலகம் என் மனத்திரையில் தோற்றியது. யாழ். குடாநாட்டில் தற்போது உணவு, உறையுள் ஆகிய அடிப்படைத் தேவைகளையும் அச்சமற்ற மன அமைதியையும் மக்கள் நாடி நிற்கும் இவ்வேளையில் நூலகம் பற்றிய சிந்தனை ஓரளவு பொருத்தமற்றதாயினும் நெடுநாள் திட்டமாகவேனும் புனர் அமைப்புப் பணி மேற்கொள்ளப்பட வேண்டியது அத்தியாவசியமாகும்.

### *பெறுதற்கரிய பொக்கிஷங்கள்*

இந்நூலகத்தில் எரியுண்ட பெறுதற்கரிய பொக்கிஷங்களான சில நூல்தொகைகளின் மீது எமது கவனம் செல்கின்றது. எந்தளவு இவற்றை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீளப் பெற முடியுமோவென்பது கேள்விக் குறியேயாகும். இந்நூற் சேர்க்கைகளின் பட்டியல்கள் இல்லாத நிலையில் நூல் மீட்பு முயற்சி பெரும்பாலும் பயனளிப்பதாயிராது. ஒரு வேளை இந்நூல்களை உதவியவர்கள், மற்றும் இந்நூல்களை அன்பளிப்புச் செய்தவர்கள் தகவல் உதவினால் ஒரு சில நூல்களையாவது தொழில்நுட்பக் கருவிகள் மூலம் பிரதியாக்கம் செய்வித்துப் பெறக்கூடும். இவ்வகையில் எமது தேசிய ஆவணக் காப்பகம், அரும்பொருள்சாலை நூலகம், பிரிட்டிஷ் மியுசியம் நூலகம், சென்னை ஆவணக்காப்பகம், மற்றும் சில ஐரோப்பிய தேசிய நூலகங்கள் யாழ் நூலகத்துக்கு உதவ முடியும்.

யாழ். நூலகத்தின் உசாத்துணைப் பிரிவின் வைப்பிலிருந்த சிறப்பு நூற்தொகுதிகளுள் எமது கவனத்திற்குரியன சில பின்வருவனவாகும்.

அ) கலாநிதி ஆனந்தக் குமாரசுவாமி நூற்றொகுதி (சுமார் 700 நூல்கள்) இது மலேசியாவைச் சேர்ந்த திரு. துரைராஜசிங்கம் அவர்களின் அன்பளிப்பாகும்.

ஆ) திரு. வன்னியசிங்கம் நூற்றொகுதி (சுமார் 100 நூல்கள்)

இ) திரு. ஐசாக் தம்பையா நூற்றொகுதி. சமயம், தத்துவம் பற்றிய நூல்கள் (சுமார் 850 நூல்கள்)

ஈ) திரு. கதிரவேற்பிள்ளை நூற்றொகுதி (சுமார் 600 நூல்கள்)

யாழ் நூலகம் ஒரு நவநூலகமாக உருப்பெறும் பொழுது அது சாதாரண பொதுநூலகப் பணிகளில் மாத்திரம் ஈடுபடும் ஒரு நிறுவனமாக இயங்காது. உயர்நிலையிலான ஆய்வுக்குரியதொரு நூலகமாகவும், சிறப்பாகத் தமிழ் பேசும் மக்களின் மொழி, சமயம், கலாச்சாரம், ஆகிய துறைகள் சார்ந்த அறிவேடுகளின் வைப்பிடமாகவும் பிரதேச ஆவணக்காப்பகமாகவும் திகழவேண்டும்.

***நவீன அச்சகம் அவசியம்***


இந்நூலகத்தில் இன்றியமையாததொரு அங்கமாக இடம் பெற வேண்டியது ஒரு நவீன அச்சகமாகும். எமது நாட்டில் தமிழ் நூல் வெளியீட்டுத் துறையென்று சிறப்பித்துக் கூறக்கூடியதாக எதுவுமில்லை. எனவே இவ்வகையிலான முயற்சிக்கு நவீன வசதிகளுடனமைந்த அச்சகமொன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ். நூலகத்தோடு இணைவது அத்தியாவசியமாகும். மேலும் அச்சிலில்லாத அரிதான நூல்களை மறுபிரசுரம் செய்து வழங்க இவ்வேற்பாடு வழிவகுக்கும். மற்றும் கட்புல செவிப்புல சாதனங்களும் முக்கிய இடம் பெறுவதோடு நூலக நடவடிக்கைகள் அவசியமான அளவு கணனிமயப்படுத்தப்பட வேண்டும்.

வளர்ச்சியடைந்துள்ள நாடுகளில் பல பொது நூலகங்களே மாநிலமட்டத்திலும் தேசிய மட்டத்திலும் தலைமைத்துவம் வழங்கி வருவதை இங்கு நாம் குறிப்பிட வேண்டும். யாழ் பொது நூலகமும் இவ்வகையிலேயே வளர்ச்சி காணவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.

*(நன்றி: வீரகேசரி (கொழும்பு),*
*26.07.1996)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.நூல் நிலைய புனரமைப்பு
## ஜனாதிபதி தலைமையில் கூட்டம்

*[செய்தி: உதயன் [யாழ்ப்பாணம்], 23.03.1997]*

யாழ்ப்பாண நூல்நிலைய புனரமைப்புத்திட்டம் தொடர்பான அங்குரார்ப்பண நிகழ்ச்சி அடுத்த மாதம் 10ஆம் திகதி கொழும்பு பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ஜனாதிபதி சந்திரிகா தலைமையில் நடைபெறும் எனத்தெரிவிக்கப்படுகிறது.

புனரமைக்கப்படவிருக்கும் யாழ்.நூல்நிலையக் கட்டடத்தின் மாதிரி ஒன்றையும் ஜனாதிபதி அப்போது திரைநீக்கம் செய்துவைப்பார்.

1981ஆம் ஆண்டு மாவட்டசபைத் தேர்தலின் போது யாழ். நூல்நிலையம் எரிக்கப்பட்டது தெரிந்ததே.

## யாழ். நூலக புனரமைப்புக்கு தென்பகுதி மக்களும்
## நிதியுதவி வழங்க வேண்டும்

*[செய்தி: வீரகேசரி [கொழும்பு], 13.04.1997]*

கடந்த 16 ஆண்டுகளுக்கு முன்னர் எரிக்கப்பட்ட யாழ்ப்பாண நூலகத்தை மீண்டும் கட்டியெழுப்ப தென்மாகாண மக்களும் நிதியுதவி வழங்க வேண்டும் எனவும் இலங்கைப் பிரஜை என்ற ரீதியிலும் கட்சியின் சார்பிலும் ஜனாதிபதி நிதியில் இருந்து யாழ் நூலகப் புனரமைப்புக்கு நிதி வழங்குவதாகவும் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க நேற்றுத் தெரிவித்தார்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தர அரசியல் தீர்வுகண்டு அமைதியையும் சமாதானத்தையும் ஏற்படுத்த ஏனைய அரசியல் கட்சிகளும் அரசுக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இடையிலான இணக்கப்பாட்டிற்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆதரவளிக்க முன்வரவேண்டும் என்ற அழைப்பையும் ஜனாதிபதி விடுத்துள்ளார்.

நேற்றுக்காலை (10.04.1997) பண்டாரநாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற வெண்தாமரை இயக்கத்தின் புலமைப்பரிசில் மற்றும் யாழ். வாசிகசாலைக் கட்டிட மீளமைப்பு வேலைகள் தொடர்பான வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்க உரையாற்றினார்.

இனப்பிரச்சினை காரணமாக வட-கிழக்கு மகாணத்திலும் நாட்டின் ஏனைய இடங்களிலும் ஏற்பட்ட அழிவுகள் கணக்கில் அடங்கா.

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் தொடரும் யுத்தம் காரணமாக தாய் தந்தையரை இழந்து அகதிகள் முகாம்களில் தங்கியிருந்து கல்வியைத் தொடரும் தமிழ், முஸ்லீம் மாணவர்களுக்கு புலமைப் பரிசில்களை வழங்கிய ஜனாதிபதி அங்கு தொடர்ந்து உரையாற்றியதாவது,

கடந்த 16 வருடங்களுக்கு முன் யாழ். நூலகம் எரிக்கப்பட்ட சம்பவமும் அதனோடு இணைந்த சம்பவங்களும் தமிழ் முஸ்லீம் மக்கள் மத்தியில் ஒருவித கசப்புணர்வை ஏற்படுத்தியது.

அது ஒரு பிரச்சினையாக தலையெடுத்தது. நாட்டின் இன ஒற்றுமையை குலைக்க சில சக்தி எடுத்த நடவடிக்கை ஒரு பாரிய அழிவு இழப்பை ஏற்படுத்தியது. அரசும் தென்மாகாண வாழ் மக்களும் யாழ்.நூலகத்தை மீளமைக்க எடுத்துள்ள நடவடிக்கைகள் அமைதியை சமாதானத்தை நோக்கி எடுக்கப்பட்ட நடவடிக்கையாகும்.

***தனிப்பட்ட விமர்சனத்துக்கு இடமில்லை***

கடந்த கால சம்பவங்கள் தொடர்பாக தனிப்பட்டவர்களை விமர்சிக்காமல் நடந்தவற்றை சரித்திரமாகக்கொண்டு எதிர்கால செயற்பாடுகளை ஒருமித்த கருத்துடன் செயல்படுத்துவோம். கடந்த கால சம்பவங்களுடன் தொடர்புடையவர்களைத் தண்டிக்கும்படி மக்கள் கோருகின்றனர். ஆனால் எதிர்கால பயணத்தில் பாரிய பொறுப்புக்கள் உள்ளன. ஆகையால் தனிப்பட்டவர்கள் எவரையும் விமர்சிக்க விரும்பவில்லை.

ரணவிரு திட்டம் நாட்டின் சகல இடங்களிலும் அமைக்கப்படும். அதே போன்று ஜனநாயக உரிமைகளுக்காக அல்லது மனித உரிமை களுக்காக தமது உயிரைத் தியாகம் செய்த இளைஞர்களை கௌரவிக்கும் முகமாக நினைவாலயம் அமைக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெண்தாமரை இயக்கம்

## சமாதானத்துக்கான யுத்தத்தின் புதிய சூழ்ச்சி

*எஸ். பாலகிருஷ்ணன்*

வெண்தாமரை இயக்கத்தின் ஏற்பாட்டில் தேசிய நல்லிணக்கத்துக்கான செயற்திட்டங்கள் 1997 ஏப்ரல் 10ம் திகதி வைபவ ரீதியாக கொழும்பில் ஆரம்பித்து வைக்கப்பட்டன. இந்த வைபவத்தில் யாழ். நூலகத்தை மீண்டும் கட்டியெழுப்புவது, உயிரிழந்த இராணுவ வீரர்கள் ஞாபகமாக நினைவாலயம் ஒன்றும், கொலை செய்யப்பட்ட அப்பாவி மக்களின் ஞாபகமாக நினைவுச்சின்னம் ஒன்றும் கட்டியெழுப்புவது, இறந்த இராணுவ வீரர்களின் குடும்ப உறுப்பினர்கள், அரசு நிறுவனங்களுக்கு அலுவல்களுக்காகச் செல்லும்போது அவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படுவதற்கான ஜனாதிபதியின் கட்டளையைக் கொண்ட வெண்தாமரை இயக்க விசேட அடையாள அட்டையை வழங்குவது போன்ற செயற்திட்டங்களை (விளம்பரத்தில்) முதன்மைப்படுத்தி தேசிய நல்லிணக்கத்துக்கான செயற்திட்டங்களாக பிரகடனப்படுத்தப் பட்டுள்ளன.

இச் செயற்திட்டங்களை சற்று ஆழமாக அரசியல்ரீதியாகவும், கருத்தியல் ரீதியாகவும் ஆராய்வதும், வெண்தாமரை இயக்கத்தின் மேற்கூறிய செயற்திட்டங்கள் மூலம் தேசிய நல்லிணக்கத்தை அடைவதற்கான வாய்ப்புக்கள் பற்றி கலந்துரையாடுவதையும் நோக்கமாகக் கொண்டது இக்கட்டுரை.

முதலாவதாக 1981 ஜூன் 1ம் திகதி அப்போதைய ஐ.தே.க அரசின் பேரினவாத வெறியர்களினால் எரித்து சாம்பலாக்கப்பட்ட யாழ். மக்களின் அறிவியற் கருவூலமாகத் திகழ்ந்த நூலகத்தை மீண்டும் கட்டியெழுப்புவது தொடர்பான விடயத்தைப் பார்ப்போம்.

1948ம் ஆண்டு நாடு சுதந்திரம் அடைந்தது முதல் இன்றைய ஜனாதிபதி சந்திரிகாவின் ஆட்சி வரை இனஉறவு தொடர்பாக தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வந்துள்ள நடவடிக்கைகளில் இரண்டு விடயங்கள் மிகவும் முக்கியமானவை. ஒன்று, ஒற்றை ஆட்சி முறையையும் பெரும்பன்மை ஜனநாயக நடைமுறையையும் பயன்படுத்தி சிங்கள

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பௌத்த மேலாதிக்கத்தை நிலைநாட்டிக்கொள்ள அரசை, சிங்கள பௌத்தர்களின் ஆயுதமாகப் பயன்படுத்துதல். இரண்டாவது, தமிழர்களின் சமூக, பொருளாதார, கலாசார அபிவிருத்திக்கான ஆற்றல்களை அரச பலத்தினதும், இராணுவத்தினதும் துணையுடன் சீரழிப்பதன் மூலம் சிங்கள பௌத்தர்களின் மேலாண்மையை (Superiority) நிலைநாட்டிக் கொள்வது. இக் குறிக்கோள்களை நிறைவேற்றிக் கொள்ளும் செயற்திட்டத்தின் ஒரு அங்கமாக அமைந்ததே யாழ். நூலக எரிப்புச் சம்பவம். தமிழினக் கலாசாரப் படுகொலையில் மிகவும் முக்கியமான சம்பவமாக இது நிகழ்கின்றது.

15 வருடங்களுக்குப் பின்பாவது செய்த தவறை உணர்ந்து, அந்த குற்றவியல் மன நிலைக்கு பிராயச்சித்தமாக அந்நூலகத்தை மீண்டும் கட்டியெழுப்ப முயல்வது வரவேற்கத்தக்கதொரு விடயமாகும். ஆனால், இவ்வரசாங்கத்தினதும் வெண்தாமரை இயக்கத்தினதும் நடவடிக்கை இக்குறிக்கோளைக் கொண்டதா? அல்லது இந்நூலகம் ஐ.தே.க. அரசினால் எரிக்கப்பட்டது என்பதால் அக்கட்சிக்கெதிராக மேற்கொள்ளப்படுகின்ற பிரச்சாரங்களின் ஒரு நடைமுறையா? அல்லது இவ்வரசு யாழ். நகரை சின்னாபின்னமாக்கி, யாழ்ப்பாணத்தைக் கேந்திரமாகக் கொண்டு பல நூற்றாண்டுகளாக உருவாக்கப்பட்ட இலங்கைத் தமிழர்களின் பாரம்பரிய கலாசாரத்தையும், அவர்களின் வாழ்வியலையும் சீரழித்த ரிவிரச படையெடுப்பின் விளைவுகளை மூடிமறைக்க மேற்கொள்ளும் முயற்சியா? அல்லது (சிங்கள) இராணுவ ஆதிக்கத்துக்குட்பட்ட தமிழ்ப் பிரதேசங்களில் அன்றாடம் காணாமற் போகும் தமிழர்கள் பற்றிய தகவல்களையும் தமிழர்களுக்கெதிராக நடைமுறைப் படுத்தப்படும் பொருளாதாரத்தடை, விடுதலைப் புலிகளுக்கெதிரான தாக்குதல்களாகக் கருதி தமிழ் மக்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் தாக்குதல்களையும் மூடி மறைத்து நியாயப்படுத்த இவ்வரசு மேற்கொள்ளும் சூழ்ச்சியா என்பன போன்ற கேள்விகள் எழுகின்றன.

யாழ். மக்களின் வாழ்வியலையே சின்னா பின்னமாக்கிய இவ்வரசுக்கு யாழ். நூலகத்தைக் கட்டியெழுப்ப அருகதை இருக்கிறதா? இருக்க வீடுகளின்றி வாழ வழியின்றித் தவிக்கும் மக்களின் உடனடித் தேவை நூலகமா? வீடுகளா? இவ்வரசு பதவிக்கு வந்த பின் அதனது இராணுவ அடாவடித்தனங்களின் மூலம் சீரழிக்கப்பட்ட பொது மக்களின் வீடுகளையாவது கட்டிக் கொடுக்காமல், அவ்விதமாக வீடுகளை இடித்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னா பின்னமாக்கிய மிலேச்சத்தனமான சம்பவங்களுக்காக அவ்வீடுகளின் உரிமையாளர்களிடம் மன்னிப்புக் கோராமல் இவை யாவற்றையும் இவ்வரசின் மாபெரும் வெற்றியாகப் புகழ்பாடிவரும் இவ்வரசாங்கம், யாழ். நூலக எரிப்பு தொடர்பாக முதலைக் கண்ணீர் வடிப்பது யாரை ஏமாற்றுவதற்காக? இவ்வீடுகள் திருப்பிக் கட்டப்படல் வேண்டுமேயானால் ஒவ்வொரு வீட்டிற்கும் பல இலட்ச ரூபாய்கள் தேவைப்படும். ஆனால் இவ்வீடுகளை மீளக் கட்டிக்கொடுப்பதற்காக தமது வீடுகளை இழந்த மக்களுக்கு எதுவித உத்தரவாதத்தையும் வழங்காமல் நூலகத்தைக் கட்டியெழுப்ப மிகவும் மலினத்துவமான முயற்சியில் அரசாங்கம் இறங்கியுள்ளது.

***வெண்தாமரை இயக்கம்***

தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துகின்ற தகுதி வெண்தாமரை இயக்கத்திற்கு இருக்கிறதா என்பது முதற் கேள்வி. வெண்தாமரை இயக்கம் என்பது பொதுஜன முன்னணி அரசின் பேரினவாத யுத்த செயற்திட்டத்தின் ஒரு அங்கமாகும். இந்த யுத்தத்திற்குச் சிங்கள மக்களின் ஆதரவைத் திரட்டுவதையும், யுத்தத்தில் பாதிப்புறும் சிங்கள இராணுவத்தினரின் தேவைகளைக் கவனிப்பதையும் முதன்மைக் குறிக்கோளாகவும், அரசாங்கத்தின் தீர்வுப் பிரேரணைகளை ஆயுதமாகப் பயன்படுத்திக் கொண்டு, அவற்றை மக்கள் மத்தியில் பிரச்சாரப்படுத்துவதன் மூலம் அரசின் யுத்தத்தை நியாயப்படுத்தக் கூடிய வகையில் சமாதான முகமூடியை அணிந்துகொள்வதை அடுத்த குறிக்கோளாகவும் கொண்டு, சமாதானத்திற்கான யுத்தத்தை முன்னெடுப்பதில் முன்னின்று உழைப்பது வெண்தாமரை இயக்கமாகும்.

இந்த யுத்தத்தில் தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட சீரழிவுகளையோ அல்லது பொல்கொட, அளவ்வை, தியவன்னஓயா போன்ற பிரதேசங்களில் அரசின் சீருடையணிந்த பொலிசாரினால் அப்பாவித் தமிழ் மக்கள் கொள்ளையடிக்கப்பட்டு கொலை செய்யப்பட்டமை போன்ற சம்பவங்கள் தொடர்பாக எதுவித அவதானத்தையுமே செலுத்தாத சமாதான இயக்கமே வெண்தாமரை இயக்கம். அது மட்டுமல்ல, இக் கொலைகளுடன் தொடர்பு பட்டவர்களை நீதிமன்ற விசாரணை முடியும் முன்னரே விடுதலை செய்து சேவைக்கு அனுப்பியதன் மூலம் தமிழர்களின் படுகொலையாளர்களை பாதுகாத்து வரும் ஒரு அரசின் அமைப்புத்தான் வெண்தாமரை இயக்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வியக்கத்துக்கு தமிழர்களுடனான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பும் தகுதி இருக்கின்றதா? இது மட்டுமல்ல. சிறீலங்கா சுதந்திரக் கட்சிக் குள்ளேயே முரண்பாட்டைத் தோற்றுவித்துள்ளதுடன், அக்கட்சியைச் சேர்ந்த சிலரால் நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில், அக்கட்சிக்குள்ளேயே நல்லிணக்கத்தை ஏற்படுத்தத் தவறியுள்ள வெண்தாமரை இயக்கம் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த விளைவது யாரை ஏமாற்றுவதற்காக, எனவே இவ்விடயத்தில் மறைத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் நோக்கத்தை இனம் காணுதல் மிகவும் முக்கியமானதாகும்.

*புத்திஜீவிகளின் பங்களிப்பு*

இந்த அரசாங்கத்தின் சமாதானத்துக்கான யுத்தத்தை விமாசனங்களுக்கு அப்பால் ஏற்றுக்கொண்டும், மேடைகளிலேயே யுத்தத்தை அரை குறையாக விமர்சிப்பதன் மூலமும் இவ்வரசுக்கு முக்குக் கொடுத்துக் கொண்டிருக்கும் புத்திஜீவிகளும், பத்திரிகையாளர் சிலரும் இத்திட்டத்தின் வேலைகளைப் பொறுப்பேற்று நடைமுறைப்படுத்துவது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றையும் நடத்தியுள்ளதாக தகவல்கள் வெளிவந்துள்ளன. தேசிய நல்லிணக்கம் என்பது கட்சி, இன, மொழி, மத பேதங்களுக்கு அப்பால் பிரசைகள் ஒன்று கூடி சுதந்திரமான, சமாதானமான, நீதியான சூழ்நிலையில் ஏற்படுத்தப்படும் புரிந்துணர்வின் அடிப்படையில் அடைய வேண்டியதொன்றாகும். அது வெண்தாமரை போன்ற கருத்தியல் ரீதியில் பேரினவாதத்திற்குக் கடமைப்பட்டுள்ள அரசியல் ரீதியில் பிளவுகளுக்கு உட்பட்டுள்ள ஒரு இயக்கத்தினால் ஏற்படுத்தக் கூடியதொன்றல்ல என்பதை இந்த புத்திஜீவிகளும், பத்திரிகையாளர்களும் உணர முடியாதவர்கள் அல்லர். சுயதேவை கருதி இவ்வரசுக்கு மண்டியிட்டுள்ள இவர்களுக்கு இம் முரண்பாடுகள் ஒரு பெரிய விடயமாகத் தென்படாமை ஒரு ஆச்சரியப்பட வேண்டிய விடயமுமல்ல. எனினும் இது தன்மானத்தையும் சுயகௌரவத்தையும் இழக்க விரும்பாத ஒவ்வொரு தமிழ் பிரஜையும் ஆழமாக சிந்திக்க வேண்டிய விடயமாகும். எனவே யாழ். நூலகம் கட்டப்படுவதையோ அல்லது அதற்கான நல்லிணக்க முயற்சியையோ திறந்த மனப்பான்மையுடன் ஏற்றுக்கொள்ள முடியாது.

வெண்தாமரை இயக்கம் விளம்பரப்படுத்தியுள்ள திட்டங்கள் எல்லாமே யுத்தத்தை முதன்மைப்படுத்துவதையும் யுத்தத்தின் அரச தரப்பு பங்காளிகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதையுமே அடிப்படையாகக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டுள்ளன. பேரினவாத தேவை கருதி முன்னெடுக்கப்பட்ட இந்த யுத்தத்தில் உயிர் நீத்த இராணுவத்தினரின் குடும்பங்களுக்கு விசேட சலுகைகள் வழங்க முன்வந்திருக்கும் வெண்தாமரை இயக்கம், இதே இராணுவத்தினால் கொலையுண்ட ஆயிரக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் பற்றி எதையுமே பேசாத வெண்தாமரை இயக்கத்தின் இனவாத நிலைப்பாடு, அதன் தேசிய நல்லிணக்கத்தின் உள்நோக்கத்தை தெளிவுபடுத்தப் போதுமானவையாகும். கொல்லப்பட்ட அப்பாவிகள் தொடர்பான நினைவுச்சின்ன அடிக்கல் நாட்டு விழாவில் ஐ.தே.க. அரசினாலும் மக்கள் விடுதலை முன்னணியினராலும் கொலை செய்யப்பட்டவர்களின் குடும்ப உறவினர்கள் முக்கிய பங்கு வகித்தனர். இதன் மூலம், இவ்வரசு பதவிக்கு வந்ததன் பின் கொல்லப்பட்ட அப்பாவித் தமிழர்களின் உறவினர்களையும் பங்கு பற்ற வைத்து இவர்கள் எமது அரசினால் கொல்லப்பட்டவர்களின் உறவினர்கள் என்ற உண்மையை இவ்வரசோ அல்லது வெண்தாமரை இயக்கமோ பிரகடனப்படுத்தியிருந்தால் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கான தகுதியை ஏற்படுத்திக் கொள்ள உதவியிருக்கும். ஆனால் கொல்லப்பட்ட தமிழர்களையெல்லாம் கொல்லப்பட்ட விடுதலைப்புலிகளின் போராளிகளுடன் இணைத்து இனங்கண்டு வரும் இவ்வரசுக்கு தேசிய நல்லிணக்கம் என்பது பெரும்பான்மையினத்தினர் தமிழர்களுக்கு வழங்கும் பிச்சையாகக் கருதுகின்றமையையே காணக்கூடியதாக இருக்கின்றது.

யாழ். நூலகத்தை மக்களின் பங்களிப்புடன் கட்டியெழுப்புவது தேசிய நல்லிணக்கத்துக்கான மிகவும் சிறந்ததொரு வாய்ப்பாக அமையும். யாழ். நூலகத்தை திருப்பிக் கட்டி முடிப்பதென்பது இழந்த நூலகத்தை மீண்டும் பெற்றுக் கொள்வது என்பது மட்டுமல்ல. இதை நாட்டின் ஒரு தேசிய சமாதான சின்னமாகத் திகழ வைக்கக் கூடிய வாய்ப்புகள் நிறைய இருக்கின்றன. ஆனால் இவை பக்கச் சார்பற்ற இனவாதத்திற்கெதிரான, பிரசைகளைக் கொண்ட சமாதான இயக்கத்தின் பணியாகுமேயன்றி முழுத் தமிழினத்தின் வயிற்றிலும் தொடர்ந்தும் உதைத்துக் கொண்டிருக்கும் ஒரு அரசாங்கத்தின் செயலாக அமைய முடியாது. தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது தொடர்பான தனது கடமைப்பாட்டையோ அல்லது தயார் நிலையையோ ஜனாதிபதியோ அல்லது வெண்தாமரை இயக்கமோ இதுவரை நிரூபிக்கவில்லை. மறுபக்கம் பேரினவாத எதிர்பார்ப்புக்களைப் பாதுகாப்பது தொடர்பான தமது கடமைப்பாட்டை மிகவும் தெளிவாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வலியுறுத்தி வருகின்றது. இவ்வரசு, யுத்தம், திருகோணமலைப் பிரதேச சிங்களவர் குடியேற்றம் வடபகுதி தமிழ்ப் பிரதேசங்களில் சப்புமல் குமாரர்களின் திருநாமங்களை சூட மேற்கொண்டுள்ள முயற்சிகள் போன்றவை இவ்வரசினதும் வெண்தாமரை இயக்கத்தினதும் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முயற்சியில் சாதனைகள்தான் என்பதை மறந்துவிட்டு இவர்களின் சமாதானம், ஜனநாயகம், சமூகநீதி, சமத்துவம் ஆகியவற்றின் மூலமே தேசிய நல்லிணக்கம் உருவாக்கப்பட முடியும். எனவே, போர் நிறுத்தப்பட்டு, தமிழ் மக்களின் சமத்துவம் சட்ட ரீதியாக நிலைநாட்டப்படுவதன் மூலம் தோன்றும் சமாதான சூழல் இன்றி யுத்தத்தின் மூலமோ, அரச பலாத்காரங்களின் மூலமோ அல்லது செங்கல்லும் புத்தகமும் தரும்படி தென்னிலங்கை மக்களைப் பலவந்தப்படுத்துவதன் மூலமோ தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது.

இதை வெண்தாமரை இயக்கமோ, அதற்கு முக்குக்கொடுத்துக் கொண்டிருக்கும் புத்திஜீவிகளோ உணரப்போவதில்லை. இந் நல்லிணக்கத்துக்கான திட்டங்கள் வெண்தாமரை இயக்கத்தின் சமாதானத்துக்கான யுத்தத்தை நியாயப்படுத்த உதவுமேயன்றி உண்மையான நல்லிணக்கத்தை ஏற்படுத்த உதவப்போவதில்லை. இவற்றை தமிழ் மக்கள் சரியாக உணர்ந்து செயற்படாவிட்டால் சமாதானத்துக்கான யுத்தத்தின் புதிய சூழ்ச்சியில் சிக்கிக்கொள்ள நேரிடும்.

*(நன்றி: சரிநிகர் (கொழும்பு),*

*1997 மே 22-ஜூன் 4)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். பொது நூலகத்துக்கான நட்ட ஈட்டை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா?

*-த.இன்பரசு*

யாழ்ப்பாணப் பொதுநூலகம் எரிந்து கொண்டிருந்த கோரக்காட்சியை யாழ். சம்பத்திரிசியர் கல்லூரியின் மேல் மாடியிலிருந்து காண நேர்ந்த அதிர்ச்சியினால் மூர்ச்சையுற்ற பன்மொழிப்புலவர் வண.பிதா. தாவீது அடிகள் மயங்கிய நிலையிலேயே உயிர்நீத்தார். நடமாடும் நூலகமாக விளங்கிய அடிகளார் மறைந்தார் என்னும் செய்தி யாழ். நகரபிதா இராஜா விஸ்வநாதன் மரணமடைந்ததாக மாறி வதந்தியாகப் பரவியது. பிலிப்பீன்ஸிலிருந்து ஒலிபரப்பாகும் வெரித்தாஸ் வானொலிச் செய்தியிலும் அவ்வாறாகவே பிரஸ்தாபிக்கப்பட்டிருந்தது.

இப்போதைய முயற்சி போன்றே அப்போதும் அதிகாரப் பரவலாக்கல் மூலம் இனப்பிரச்சனைக்கு பேச்சுவார்த்தை நடத்தி ஒரு தீர்வு காணும் நோக்கத்துடன் மாவட்ட அபிவிருத்திச் சபைகளை உருவாக்க இணக்கம் ஏற்பட்டிருந்தது. யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபைக்கான தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் நாச்சிமார் கோயில் வீதியில் யாழ். மாநகர முதல்வர் இராஜா விசுவநாதன் தலைமையில் நடைபெற்றுக்கொண்டிருந்தது. மாவட்ட அபிவிருத்திச் சபைகளை இனப்பிரச்சனைக்கு ஒரு தீர்வாக ஏற்க மறுத்த தீவிரவாத இளைஞர் குழுவொன்று கூட்டத்தில் நிகழ்த்திய துப்பாக்கிப் பிரயோகத்தால் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் (பண்டார என்பவர்) கொல்லப்பட்டார். அதனை அடுத்து யாழ் நகரில் கட்டவிழ்த்து விடப்பட்ட வன்செயல்களைத் தொடர்ந்தே யாழ். பொது நூலகம் தீக்கிரையாக்கப்பட்டிருந்தது. ஆகையால் மேலே தெரிவிக்கப்பட்ட வதந்தி உண்மைச் செய்தியாகவே எடுத்துக் கொள்ளப்பட்டதில் வியப்பில்லை.

நூலகத்தைச் சட்டத்தின் காவலர்களே எரித்தார்கள் என்ற உண்மை உலகெங்கும் பரவியது. தனது குற்றத்தை ஏற்றுக்கொள்ளப் பின் நின்றாலும் அரசு நிவாரணம் வழங்குவதற்கு நிர்ப்பந்திக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சம காலத்தில் அதாவது 1981 மார்ச் 31க்கும் ஜூன்3ம் திகதிக்கும் இடைப்பட்ட காலத்தில் யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் வன்செயல்களால் விளைவிக்கப்பட்ட சொத்துக்கான சேதங்களை மதிப்பீடு செய்து வழங்கப்பட வேண்டிய நட்டஈட்டுத் தொகைகளைப் பரிந்துரைத்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி முன்னாள் யாழ். அரசாங்க அதிபர் லயனல் பெர்னாண்டோ தலைமையில் தனிநபர் விசாரணைக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

மேற்படி விசாரணைக்குழு அதன் அறிக்கையில் செய்திருந்த ஏனைய பரிந்துரைகளுடன் எரிந்த யாழ். நூலகத்துக்கு வழங்கப்பட வேண்டிய நட்டஈடாக ஒரு கோடி இரண்டு லட்சம் ரூபாவுக்கான ஒரு தொகையைப் பரிந்துரைத்திருந்தது.

சம்பந்தப்பட்ட மேற்படி லயனல் பெர்னாண்டோ விசாரணைக்குழு அறிக்கையில் காணும் பரிந்துரையின் பிரகாரம் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய கொடுப்பனவுகளை நிறைவேற்றும்படி யாழ். பொது நூலகத்துக்குப் பரிந்துரைக்கப்பட்டிருந்த தொகையை மட்டும் புற நீங்கலாகக் குறிப்பிடாமல் தவிர்த்திருந்தது.

அதன் பிரகாரம் யாழ்ப்பாணத் தொகுதியின் அப்போதைய நாடாளுமன்ற உறுப்பினர் உள்ளடங்கப் பாதிக்கப்பட்டிருந்த ஏனைய அனைவருக்கும் அவர்களுக்குச் சேரவேண்டிய நட்டஈட்டுக் கொடுப்பனவுகள் யாழ். அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்டிருந்தன.

யாழ் பொது நூலகம் எரிக்கப்பட்டதற்கான குற்றப் பொறுப்பை அரசு ஏற்றுக் கொள்ளாது தவிர்க்கும் பொருட்டாகவே நூலகத்துக்கு வழங்கப்பட வேண்டிய தொகை மேற்படி அறிவுறுத்தலில் இருந்து புறநடையாக விடப்பட்டிருத்தல் வேண்டும்.

யாழ். பொதுநூலக விவகாரம் வேறு விதமாக அணுகப்பட்டது. ஜனாதிபதி நம்பிக்கை நிதியில் இருந்து பத்து லட்சம் ரூபாவுக்கான ஒரு தொகையை விடுவித்து ஜனாதிபதியின் யாழ்ப்பாணப் பொது நூல்நிலையப் புனரமைப்பு நிதி எனும் பெயரில் அத்தொகையை முதலாக இட்டு ஒரு புதிய வங்கிக்கணக்கு திறக்கப்பட்டது.

அந்த நிதிக்கு நன்கொடைகள் வழங்குமாறு பொது மக்களுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. இவ்வாறு ஜனாதிபதி நம்பிக்கை நிதியில் இருந்த பெறப்பட்ட பத்து லட்சம் ரூபாவுக்கான நிவாரணத்துடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுமக்களிடம் இருந்து கிடைக்கப் பெற்ற நன்கொடைகளையும் சேர்த்து யாழ் பொது நூலகத்துக்கு இருபது லட்சம் ரூபா வழங்கப்பட்டிருந்தது.

யாழ் நூல்நிலையத்தின் ஒரு பகுதி புனரமைக்கப்பட்டு 1984 ஜூன் மாதம் 4ம் திகதி மீள்விக்கப்பட்டது. எனினும் ஒரு சில வருடங்களில் அதனைப் பயன்படுத்த முடியாத நிலை தோன்றியது.

அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா 1986 ஜூலைத் திங்களில் ஒரு சர்வதேச பத்திரிகையாளர் மாநாட்டை கூட்டியிருந்தார். இம்மாநாட்டில் உள்நாட்டுப் பத்திரிகையாளர் யாரும் அனுமதிக்கப்பட்டு இருக்கவில்லை.

இம்மாநாட்டில், பத்திரிகையாளர்களால் விடுக்கப்பட்ட கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில் - யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலின் போது சட்டம் ஒழுங்கைப் பராமரிப்பதற்காகத் தம்மால் வடபகுதிக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்த விஷேட பொலிஸாரே யாழ். நகர மண்டபத்தைத் தீக்கிரையாக்கியிருந்தார்கள் என்று ஜெயவர்த்தனா பதிலளித்திருந்தார். யாழ்ப்பாணத்தில் எரிக்கப்பட்டது நூலகமேயன்றி நகர மண்டபம் அல்ல. இந்தக் குட்டு உடைபடாது காத்துக்கொள்ளவே அம் மாநாடு சர்வதேச பத்திரிகையாளர்களுக்கு மட்டும் என மட்டுப்படுத்தப்பட்டிருந்தது.

1987ம் ஆண்டுக்கான வரவு-செலவுத் திட்டத்தின் குழுநிலை விவாதத்தின் போது (1986 நவம்பரில்) பிராந்திய அமைச்சுக்கான விவாதத்தின் போது அப்போதைய அத்தனகல்ல தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் ஜெயக்கொடி, யாழ். நூலகத்துக்கு லயனல் பெர்னாண்டோ விசாரணைக்குழு பரிந்துரைத்திருந்த ஒரு கோடி ரூபா நட்டஈடு வழங்கப்பட்டிராமையை அம்பலப்படுத்தியிருந்தார்.

அதே போன்று - இத்தீவில் நிகழ்ந்த முதல் ஜனாதிபதி தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்ட கொப்பேகடுவ யாழ் திறந்த வெளியரங்கில் தாம் நடாத்திய தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசும்போது, அருகேயிருந்த எரிந்த நூலகக் கட்டிடத்தை அவையினருக்குச் சுட்டிக் காண்பித்து மேற்படி நூலகத்துக்கு லயனல் பெர்னாண்டோ குழு பரிந்துரைத்திருந்த ஒரு கோடி இரண்டு லட்சம் ரூபா நட்டஈட்டை ஜே.ஆர் ஜெயவர்த்தனாவின் அரசு வழங்கத் தவறியமையைக் கண்டித்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனாதிபதித் தேர்தலில் தாம் வெற்றியடைந்தால் அத்தொகையை வழங்குவார் என்று வாக்குறுதியும் அளித்திருந்தார்.

திரு. கொப்பேகடுவ அளித்த அந்த வாக்குறுதியை சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் சார்பில் அதன் ஜனாதிபதி வேட்பாளரால் அளிக்கப்பட்ட வாக்குறுதியை- நிறைவேற்றுவதற்கு ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சியும் கட்டுப்பட்டதே!

தற்போதைய ஜனாதிபதி திருமதி சந்திரிகா குமாரதுங்காவைப் பொறுத்த மட்டில் மாகாணசபை, நாடாளுமன்றம், ஜனாதிபதித் தேர்தல்கள் மூன்றிலும் யாழ். பொது நூலக அழிப்புடன் பின்னணியில் சம்பந்தப்பட்டு இருந்தவர்களை அம்பலப்படுத்துவதில் தீவிரம் காட்டியிருந்தார். ஆகவே யாழ். பொது நூலகத்தைச் சேரவேண்டிய நட்டஈட்டுத் தொகையை முழுமையாக வழங்க அவர் பார்த்துக்கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத்தின் வரலாற்றில் ஒரு பொது நூலகம் எரிக்கப்பட்டு அழிக்கப்பட்டது அதுவே முதல் நிகழ்வும் அல்ல. அதுவே இறுதி நிகழ்வும் அல்ல. கோட்டை இராசதானியில் இருந்து யாழ்ப்பாண இராசதானி மீது படையெடுத்து வந்த சப்புமல்குமாரயா நாயன்மார்கட்டில் அமைந்திருந்த யாழ்ப்பாண இராசதானியின் தேசிய நூல் நிலையமாகிய சரஸ்வதி நூலகத்தை தீயினால் அழித்தது பழைய வரலாறு. 150 வருடகால புத்தகச் சேர்வுகளுடன் ஹார்ட்லி கல்லூரி நூலகம், சுவிடிஷ் அன்பளிப்பான காரைநகர் குளோப் நூலகம் போன்று இன்னும் பல நூலகங்கள் அழிக்கப்பட்டமை பிற்பட்ட சம்பவங்கள்.

ஆழமான புண்ணை ஆற்றும் நடவடிக்கையாக ஜனாதிபதி சந்திரிகா வெண்தாமரை இயக்கம் மூலம் எரிந்த யாழ். நூலகத்தை திரும்பவும் கட்டி எழுப்புவதற்கு முயற்சி செய்து வருகிறார். அந்த முயற்சி எப்போது கைகூடும் என்பது அரசியலைப் பொறுத்ததே.

அது ஒரு புறமிருக்க - இதுபோன்ற அறிவாலய அழிவு வேலைகளும் அவற்றை நினைவுபடுத்தும் நடுகற்களும் எதிர்காலத்தில் தவிர்க்கப்பட வேண்டும். அது விடயத்தில் ஜனாதிபதி கண்டிப்பாக இருப்பார் என்று எதிடபார்ப்போமாக.

***(நன்றி: உதயன், யாழ்ப்பாணம், 01.06.1997)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் நடக்கும் நூல்நிலைய இயக்கம்

*ஆவணஞானி இரா. கனகரத்தினம்*

யாழ்ப்பாணத்தில் தோன்றிய முதலாவது பொதுமக்கள் நூலகம் இற்றைக்கு 82 ஆண்டுகளுக்கு முன்பே ஆரம்பிக்கப்பட்டது என்றால் அது பலருக்கும் ஆச்சரியத்தைத் தரும் ஒரு செய்தியாகும். இது பற்றிய தகவலை யாழ்ப்பாணத்திலிருந்து அன்று வெளிவந்த இந்து ஓர்கன் (Hindu organ) என்ற ஆங்கில ஏட்டின் (1916 ஜனவரி 17ம் திகதி இதழின்) மூலம் அறிய முடிகின்றது. யாழ்ப்பாணத்தில் முதலாவது பொது நூலகம் என மகுடமிடப்பட்ட அப்பத்திரிகையின் ஆசிரியத் தலையங்கம் மூலம் அரிய பல தகவல்கள் நமக்குக் கிடைக்கின்றன.

இந்த நூலகத்தை நிறுவியவர், புகழ் பூத்த தமிழ் அறிஞரும் சைவப் பெரியாருமாகிய திரு.சி.நமசிவாயம். இந்த நூலகத்தைத் திறந்து வைத்தவர் ஆத்மீகத் துறவி ஸ்ரீமத் சர்வானந்த அடிகளார். இத்திறப்பு விழா 1915 டிசம்பர் 27ம் திகதி யாழ்ப்பாணத்தின் வடக்கேயுள்ள கீரிமலையில் நிகழ்ந்தது கீரிமலை காங்கேசன்துறைக்கு அண்மையில் மாவிட்ட புரத்திலிருந்து சில கிலோ மீட்டர்களுக்கு அப்பால் கடற்கரையை அண்டிய புனித பூமியாகும்.

இலங்கையில் பழம் பெருமை கொண்ட சிவனுக்கே உரிய ஈஸ்வரங்களுள் ஒன்றான நகுலேஸ்வரம் கீரிமலையில்தான் இருக்கின்றது. போர்த்துக்கேயரால் இடிக்கப்பட்டு பின்னர் ஆங்கிலேய ஆட்சியில் புனர்நிர்மாணம் செய்யப்பட்ட நகுலேஸ்வரக் கோவில் சூழலில் ஆரம்பிக்கப்பட்ட இந்த நூலகத்துக்கு நகுலேஸ்வர படிப்பகமும் நூல்நிலையமும் எனப் பெயரிட்டமை ஒன்றும் புதுமையானதல்ல. கீரிமலையிலுள்ள நீரூற்றும், நீச்சல் குளமும் அதனையொட்டி அமைந்துள்ள இறந்தவர்களுக்கான கிரியைகள் நடாத்தும் மண்டபங்களும் யாழ்ப்பாண மாவட்டத்தில் மிகவும் பிரசித்தமானவை.

சமய வரலாற்று ரீதியாக தமிழகத்திலிருந்து தவ சிரேஷ்டர்களும் முனிவர்களும் வந்து தங்கி வழிபட்டுச் சென்ற புனித பூமி அது. பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆண்டு காலமாக நோயாளிகளும் ஓய்வை நாடும் மேல்தட்டு மக்களும் கீரிமலைக்கு வந்து அங்குள்ள விடுதிகளில் தங்கிச் செல்வர். ஆடிமாதம் பிறந்து விட்டால் இங்கு ஒரே மக்கள் கூட்டம்தான். மாவிட்டபுரம் கந்தன் தீர்த்தமாட கீரிமலைத் திருக்கடலில் இறங்கும் காட்சியை காணக் கண்கள் கோடி வேண்டும்.

பரோபகாரியும் இந்து சமய வளர்ச்சிக்கு முன்னின்று உழைத்தவரும் திரு. நமசிவாயத்தின் தந்தையுமான திரு.கதிரவேற்பிள்ளையால் நிறுவப்பட்ட மடமும் தண்ணீர்ப் பந்தலும் அடிக்கடி அங்கு நடக்கும் அன்னதானமும் சைவ உலகத்தில் மிகவும் பிரசித்தமானவை.

ஆக, ஆத்மீகவாதிகளும், ஓய்வையும் தேக நலத்தையும் தேடி வருபவர்களும், அன்னதானத்துக்காக திரள்பவர்களுமாக அலை மோதும் மக்கள் கூட்டத்தின் அறிவுப் பசியைத் தீர்க்கும் நிறுவனமாக நகுலேஸ்வரா படிப்பகமும் நூலகமும் செயற்பட்டு வந்தது. சரியானதோர் இடத்தில் இப்படியான படிப்பகத்தையும் நூலகத்தையும் நிறுவிய நம் ஆன்றோரின் செயற்பாடு ஊன்றிக் கவனிக்க வேண்டியதொன்றாகும். இந்த நூலகம் ஆரம்பிக்கப்படுவதற்குச் சரியாக ஒரு வாரத்துக்கு முன் 1915 டிசம்பர் 18ம் திகதி அன்றைய பிரபல அரசியல்வாதியும் பருத்தித்துறைப் பிரதிநிதியுமான திரு.கே.பாலசிங்கம் கொழும்பில் நடைபெற்ற எழுத்தாளர் சந்திப்பின்போது ஆற்றிய சொற்பொழிவு (1916 ஜனவரி 17ம் திகதி - இந்து ஓர்கன்) மேலும் புதிய சில தகவல்களைத் தருகின்றது.

''கொழும்பு நகரில் ஒரு பொதுமக்கள் நூலகம் இன்று வரை ஆரம்பிக்கப்படாமல் இருப்பது மிகவும் வருந்தக்கூடியது. இங்கு இயங்கும் பல்வேறு இலக்கிய அமைப்புக்களும் ஒன்று சேர்ந்து கூட்டாக ஒரு பொது நூலகத்தை நிறுவ முன்வரவேண்டும். நீண்ட தூக்கத்தில் இருந்து நம் மக்கள் விடுபட்டுத் துடிப்பும் ஆற்றலும் மிக்க ஒரு சமுதாயத்தைக் கட்டியெழுப்ப நூலகங்கள் பெரும்பயனைத் தரவல்லன'' எனக் குரலெழுப்பியிருந்தார். அவரது இந்த வேண்டுகோள் காற்றோடு கலந்து மறையுமுன் சரியாக ஒரு வாரத்துள் நகுலேஸ்வரா நூல்நிலையம் கீரிமலையில் திறந்து வைக்கப்பட்டது. இந்த நூலகத்தில் அன்று கொழும்பில் இருந்து வெளிவந்து கொண்டிருந்த 3 தினசரிகளும் தமிழகப் பத்திரிகைகளும், சஞ்சிகைகளும், யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவந்து கொண்டிருந்த ஏடுகளும் பல நூற்றுக்கணக்கான ஆங்கில, தமிழ் நூல்களும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆத்மீக வெளியீடுகளும் மக்கள் படிப்பதற்காக வைக்கப்பட்டிருந்தன என இப்பத்திரிகை தகவல் தருகிறது. 1935ல்தான் கொழும்பு நூலகம் ஆரம்பிக்கப்பட்டது.

1916ம் ஆண்டு கீரிமலையில் ஆரம்பிக்கப்பட்ட நகுலேஸ்வரா நூலகத்துக்கு 26 வருடங்களுக்கு முன்பாகத்தான் 1890 மார்ச் 22ல் தமிழகத்தின் தலைசிறந்த நூலகமான கன்னிமாரா நூல்நிலையத்துக்கான கால்கோள் விழா நிகழ்ந்தது. இதனை முன்னின்று ஸ்தாபித்தவர் அன்றைய சென்னை மாநில ஆளுனராக இருந்த திரு. கன்னிமாரா அவர்களாகும். ஒரு சில நூல்களோடு ஆரம்பிக்கப்பட்ட இந்த நூலகம் இன்று பல இலட்சக்கணக்கான நூல்களைத் தன்னகத்தே கொண்டு வளர்ந்து வருகிறது.

தஞ்சையை ஆண்ட சோழ, மராட்டிய, நாயக்க வம்ச மன்னர்களின் முயற்சியால் திரட்டப்பட்ட ஏராளமான ஓலைச்சுவடிகளை பழம் பெரும் நூல்களை இரண்டாம் சரபோஜி மன்னர் (1798-1832) ஒரு நூலக அமைப்பின் கீழ் கொண்டுவர, 1918ல் சரஸ்வதி மஹால் தலையெடுத்தது. பிரசித்தி பெற்ற அடையாறு நூலகம் ஒல்கொட் அவர்களால் 1880ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. கிடைத்தற்கரிய கருவூலங்களைக் கொண்டு நிறுவப்பட்ட மறைமலை அடிகள் நூலகம் 1958ல் பொதுமக்கள் பார்வைக்காகத் திறந்து வைக்கப்பட்டது. அது போலவே வரலாற்றுப் புதையலென வர்ணிக்கப்படும் தமிழகத்தின் இன்னுமொரு புகழ் வாய்ந்த நூலகம் டாக்டர் உ.வே.சாமிநாதையர் நூலகமாகும். இது 1943ம் ஆண்டு நிறுவப்பட்டது.

நகுலேஸ்வரா படிப்பகம் திறக்கப்பட்ட காலகட்டத்தின் பின், குடாநாட்டுப் பல்வேறு அறிஞர்களின் வீடுகளில் பல்லாண்டுகளாக சேகரிக்கப்பட்டுத் தேங்கியிருந்த நூல்களை எல்லாம் திரட்டிச் சாதாரண பொதுமக்களும் படிக்கக்கூடிய நூலகங்கள் திறக்கப்பட வேண்டும் என்ற உத்வேகம் படித்த மக்களிடையே கிளம்பியிருந்தது. யாழ் நகரில் செல்லப்பா என்ற தமிழ் அறிஞர் தம்மிடமிருந்த ஏராளமான நூல்களைக் கொண்டு ஒரு நூலகம் நிறுவ விரும்பியபோது பல்வேறு அறிஞர்களும், அவர் முயற்சிக்கு உதவ முன்வந்தனர். 1934ம் ஆண்டு, ஜூன் 9ம் நாள் ஒன்று கூடியிருந்த அறிஞர் குழுவின் தொடர் முயற்சியால் 1934ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதலாம் திகதி, யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியில் ஒரு சிறிய வாடகை வீட்டில் படிப்பகமும் நூலகமும் திறந்து வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடுத்த ஆண்டு ஜனவரியில் பிரதான வீதிக்கு இடம் மாறியது. 1936ம் ஆண்டு யாழ்ப்பாண நகரசபைக் கட்டடம் நிறுவப்பட்ட போது, ஏராளமான நூல்கள், ஆவணங்களைத் தன்னகத்தே கொண்டிருந்த இந்த நூலகமும் நகர சபையின் சூழலில் இயங்க ஆரம்பித்தது. 1954ம் ஆண்டு மார்ச் 4ம் திகதி, புதியதோர் கட்டடத்துக்கான அடிக்கல் நாட்டுவிழா மேயர் சாம் சபாபதி அவர்கள் தலைமையில் நிகழ, மேயர் அல்பிரட் துரையப்பா காலத்தில் யாழ். பொது நூலகக்கட்டடம் பூரணத்துவம் பெற்றது.

***நூலக அழிவு தரும் பாடங்கள்***

அறிவைத் தேடுவது மனிதனின் பிறப்புரிமை. இயற்கையின் பாற்பட்ட நிகழ்வு அது. தேடலும், அத்தேடலின் பெறுபேறாகக் கிடைக்கும் புதிய தரவுகளும் தன்னைச் சார்ந்த சமூகத்துக்குப் பயன்பட வைத்தல் மனித இனத்தின் அடிப்படை உரிமை. ஒரு இனத்தின் நீண்ட வரலாற்றையும் மரபுவழிச் செல்வங்களையும் பதிவு செய்யும் இந்த மையங்கள், பயன்பாட்டுக்கு மட்டுமன்றி அதன் பாதுகாப்புக்கும் உத்தரவாதம் அளிக்கப்படவேண்டும். மிகவும் நிதானத்துடனும் தீர்க்கதிருஷ்டியுடனும் பேணப்பட வேண்டியவை. பொதுவாகவே நூலகங்களில், காப்பகங்களில் திரட்டி வைக்கப்படும் நூல்கள் ஆவணங்கள், அவை வெளியிடப்பட்ட காலகட்ட சமூக வாழ்க்கையை, ஒப்பந்தங்களை, பண்டைய பழக்க வழக்கங்களை, உடை, உணவு, மரபு முறைகளை, வெள்ளத்தை, விபத்தை, அழிவுகளை, நல்வாழ்வை, முக்கிய சம்பவங்களை விளக்கும் ஊடகங்கள் என்பதால் அச்சமுதாயத்தின் காலக்கண்ணாடி என்பர்.

இந்த நூலகங்கள் மாற்றாரால் தீயிடப்படும் போது அந்த நூல்கள், ஆவணங்கள், வெளிவந்த காலப்பகுதி வரலாறும் கூடவே அழிந்து போய் விடுகின்றது.

இலங்கை வாழ் தமிழர்களைப் பொறுத்த வரை 1897ம் ஆண்டு வாழ்வு 1997ல் இல்லை. இந்த 100 ஆண்டுகளில் எவ்வளவு மாற்றங்கள்! எத்தனையோ நிகழ்வுகள்! அரசியல் ரீதியாக மட்டுமல்ல பண்பாட்டு ரீதியாகக் கூட மாபெரும் வீழ்ச்சிகள். நாம் எப்படி வாழ்ந்தோம் என்பது உணரப்பட்டால் தான் நாம் இன்று எப்படி வாழ்கின்றோம் என்ற நிலையை அறிந்து கொள்ள முடியும். எதிர்காலம் எப்படி அமைய வேண்டுமென்ற சிந்தனைத் தெளிவும் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர்கள் மத்தியில் காணப்பட்ட பண்பாட்டு விழுமியங்கள் பலவற்றை நாம் இன்று இழந்துவிட்டோம். பாரம்பரிய கலை கலாச்சாரச் செல்வங்கள் கைநழுவிப் போகின்றன. கரகம், காவடி, கும்மி, கோலாட்டம் போன்ற கலைகளை, போர்த்தேங்காய் அடித்தல், கிட்டியடித்தல் போன்ற மரபுவழி விளையாட்டுக்களை, தாலாட்டு, தாய் தந்தையரிடம் காட்டும் அன்பு, பண்பு, அனைத்தையும் நாம் படிப்படியாக மறந்துவிட்டோம். இவை தொடர்பான தகவல்களைப் பெறக்கூடிய நூலகங்களையும் இழந்து வருகின்றோம்.

சரியோ தவறோ இன்று தமிழர் தொடர்பான ஆய்வை மேற்கொள்ளும் ஒருவர் எத்தனையோ தடைகளைத் தாண்டினால் தான் ஒரு சில தரவுகளையேனும் பெற முடிகின்றது. யாழ் நூலகத்தில் இருந்த பல்லாயிரக்கணக்கான ஆவணங்களை நாம் அன்று விழிப்புடன் இருந்திருந்தால் காப்பாற்றியிருக்க முடியும். ஆவணங்களின் பிரதிகள் பெறப்பட்டு வேறு சில நூலகங்களிலும் அவற்றைப் பேணிப் பாதுகாத்து வந்திருக்கலாம். கடல் கடந்த நாடுகளுக்கு எடுத்துச்சென்று அங்கு அவற்றைப் பாதுகாத்திருக்க முடியும். உரிய நேரத்தில் நவீன கணனி தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி அவற்றை நுண்சுருள்களாக்கிக் கடந்த அக்காலத்தைக் கையகப்படுத்தியிருக்கலாம். நுண்சுருள் மூலம் ஆவணப்படுத்தும் முறை இலங்கையில் அண்மையில் புகுத்தப்பட்டதெனினும், பக்கத்தேயுள்ள இந்தியாவில் இத் தொழில்நுட்பம் நீண்ட காலத்துக்கு முன்பே அறிமுகப்படுத்தப்பட்டுவிட்டது என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

லேசர் தட்டுக்கள், காந்த நாடாக்கள் எனப் பல முறைகளின் முன்னேற்றம் கண்டிருந்த மேலை நாட்டுத் தூதரகங்களை நாடி உதவி கோரியிருக்கலாம். முழுமையாக இல்லாவிட்டாலும் கணிசமான பழம்பெரும் நூல்களைக் காப்பாற்றியிருக்கலாம். தவறவிட்டுவிட்டோம்.

இன்று கூட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம், மட்டக்களப்பு, திருமலை மாவட்ட நூலகங்கள் மற்றும் பாடசாலை தனியார் சேகரிப்புகளென கணிசமான பழம்பெரும் ஆவணங்கள் அழிந்து போய்க் கொண்டிருக்கின்றன. கறையான், எலி, நூல்களைக் குடைந்து செல்லும் பூச்சிகள் இன்று தமிழர் பாரம்பரிய செல்வங்களை, அவர்களின் வரலாற்றை மெல்ல மெல்லச் சிதைத்து சீரழித்து வருவது நாம் இன்னும் இத்துறையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



போதிய கவனஞ்செலுத்தாத கையாலாகாத் தனத்தையே காட்டுகிறது. வரலாற்றுத்துறை மாணவர்களும் அறிஞர்களும் ஒரு தடைவை நம் நூல்களைப் போய்ப் பார்வையிட்டால் இந்த வரலாற்றுத் தற்கொலை நிகழ்வுகளை அங்கே அவதானிக்க முடியும். நூலகர்கள், நூலக ஊழியர்கள் மாத முடிவில் சம்பளத்தை மட்டுமே நோக்காகக் கொண்டு, பலசரக்குக் கடைகளில் பணிபுரிவது போல் பொறுப்பற்று, இன உணர்வு, சமுதாயக் கடப்பாடு, துளியும் இன்றி நடந்து கொள்வதால் தான் இந்தப் பாரிய அழிவுகள் இன்னமும் தொடர்கின்றன.

எனவே தமிழ் அறிஞர்கள், வரலாற்று ஆசிரியர்கள் ஒன்று கூடி நூலகங்களில், தனியார் சேகரிப்புக்குள் பெறுதற்கரிய பழம்பெரும் நூல்களின் பட்டியல் ஒன்றினைத் தயாரிக்க வேண்டும். இவற்றை மறுபிரசுரம் செய்யவும் ஒருசில பிரதிகளைத் தமிழர் புலம்பெயர்ந்து வாழும் நாடுகளில் பேணிப் பாதுகாக்கவும் முன்வர வேண்டும். ஆவணங்களை நவீன தொழில் நுட்பத்தைப் புகுத்தி எப்படியெல்லாம் பாதுகாக்க முடியும் என்ற விபரங்கள் பெறப்பட வேண்டும்.

வாய்மொழி ஆவணச் சேகரிப்பு நம்மவர்கள் இன்னும் தொட்டுப் பார்க்காத துறை. புலம்பெயர்ந்து உலகின் பல கோடிகளிலும் வாழும் தமிழர்களுக்குப் பெரும் பொறுப்பு காத்து இருக்கின்றது. தம் தாயகத்தின் வரலாற்றைப் பேணிப் பாதுகாப்பதுதான் அது! செய்ய முன்வரவேண்டும்! இது காலத்தின் கட்டளை!

*(நன்றி: தினகரன் வாரமலர் (கொழும்பு)*
*27.07.1997)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ் நூலகத்துக்கு
## இந்திய மத்திய, தமிழக அரசு நூல்கள் அன்பளிப்பு

*[செய்தி: வீரகேசரி [கொழும்பு], 18.01.1998]*

மீண்டும் செயற்படும் யாழ்ப்பாண நூலகத்திற்கு இந்தியா நன்கொடையாக ஆயிரக்கணக்கான தமிழ் மற்றும் ஆங்கில நூல்களை வழங்கியுள்ளது. டில்லி மத்திய அரசு 800க்கு மேற்பட்ட புராணக் கதைகள் சம்பந்தமான நூல்களையும் இலக்கியம், ஆய்வு, தத்துவ நூல்கள் மற்றும் பாடப் புத்தகங்களையும் வழங்கியுள்ளது. டில்லியில் உள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயம் ஊடாக இது வழங்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு முதல் அமைச்சரின் உத்தரவின்படி தமிழ்நாடு அரசாங்கம் சென்னையில் உள்ள இலங்கைப் பிரதிநிதி ஊடாக 1500க்கு மேற்பட்ட நூல்களைக் கையளித்துள்ளது. இவை இந்தியாவிலிருந்து யாழ்ப்பாண நூலகத்தின் பாவனைக்கென அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

கொழும்பில் உள்ள இந்திய உயர் ஸ்தானிகரின் காரியாலயம் யாழ்ப்பாண நூலகத்திற்கு இருபதிற்கும் மேலான தமிழ் சஞ்சிகைகளையும் பத்திரிகைகளையும் கிரமமாக யாழ்.அரசாங்க அதிபர் மூலம் அனுப்பி வருகின்றது. இவை யாவும் இலங்கையின் வேண்டுகோளுக்கிணங்க தைப்பொங்கல் நாளன்று திறக்கப்பட்ட யாழ்ப்பாண நூலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## யாழ் நூலகத்தை புதிய முதல்வரிடம் ஒப்படைப்போம்

*[செய்தி: வீரகேசரி [கொழும்பு], 18.01.1998]*

யாழ்ப்பாணத்து மக்களின் அறிவுப் பொக்கிஷமாக விளங்கிய யாழ்ப்பாணப் பொதுநூலகம் 1981 ஆம் ஆண்டு காட்டுமிராண்டி அரசியல்வாதிகளின் வழிநடத்தலினால் அங்கிருந்த அரச கைக்கூலிகளினால் எரித்து நாசமாக்கப்பட்டது. இந்த நூலகத்தை மீண்டும் கட்டி எழுப்பி தமிழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்களின் நல்லெண்ணத்தை பெறும் முயற்சியில் ஈடுபட்டுள்ள இன்றைய அரசாங்கம் கடந்த பொங்கல் தினத்தில் யாழ்ப்பாணத்து பழைய கச்சேரிக்கு அருகில் அமைந்துள்ள வீடமைப்பு அதிகாரசபையின் கட்டிடத்தில் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. இது ஒரு தற்காலிக ஏற்பாடு. பின்னர் எழுபது கோடி ரூபாவில் கட்டிடம் அமைக்கப்படுமாம்.

இந்த வைபவத்திற்கு தபால், தந்தி, தொலைத்தொடர்பு வெகுசன துறை அமைச்சர் மங்கள சமரவீர, கல்வி உயர்கல்வி அமைச்சர் ரிச்சட் பத்திரன, சமூகசேவை அமைச்சர் பேர்ட்டி பிரேமலால் திசாநாயக்க, ஆகியோர் வந்திருந்தனர். இங்கே பாதுகாப்பு கெடுபிடிகள் பயங்கரம். அங்குரார்ப்பண விழாவுக்கு ஆசி வழங்க அழைப்பு விடுக்கப்பட்ட நல்லை ஆதீன முதல்வர் தன்னை சோதனையிட படையினர் முயன்றதையும் விழா நடைபெற இருந்த இடத்திற்கு நடந்து போகும்படி உத்தரவிடப் பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்து விழாவில் கலந்து கொள்ளாமலே திரும்பிச் சென்றார். யாழ்ப்பாணம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா, புளொட் உபதலைவர் மாணிக்கதாசன் ஆகியோரை அடையாள அட்டையைக் கேட்டு மெய்ப்பாதுகாவலர்களை சோதனையிட வேண்டும் என்று படையினர் கூறியதை அடுத்து அவர்கள் விழாவிற்கு வராமலே திரும்பிச் சென்றனர். இச்சம்பவம் பற்றிக் கேள்விப்பட்ட யாழ். மாவட்ட இராணுவ பொறுப்பதிகாரி மேஜர் ஜெனரல் லயனல் பலகல்ல, நல்லை ஆதீன முதல்வரையும் டக்ளஸ் தேசா னந்தாவையும் அழைத்துவர இராணுவத்தை அனுப்பினார்.

ஆனால் நல்லை ஆதீன முதல்வர் விழாவிற்கு வரவில்லை. டக்ளஸ் தேவானந்தா மாத்திரம் நண்பகல் அளவிற்கு விழாவிற்கு வந்திருந்தார்.

இந்த வைபவத்தை நேரடியாக வானம்பாடி ஒலிபரப்பு மூலம் நேரடி அஞ்சல் செய்வதற்கு கொழும்பிலிருந்து வந்திருந்த அறிவிப்பாளர் இங்கே ஆசி உரை வழங்க யாழ். ஆயர். திரு. தோமஸ் சௌந்தரநாயகம் வந்திருக்கின்றார். நல்லை ஆதீன முதல்வர் வந்திருக்கிறார் என்றெல்லாம் வர்ணனை செய்தார். கிறிஸ்தவ மதத் தலைவர் ஒருவரை திரு திரு என அழைக்கக் கூடாது என்பதை வர்ணனையாளர் அறிந்திருக்கவில்லை போல் தெரிகிறது. மற்றது, நல்லை ஆதீன முதல்வர் அங்கு இல்லாத வேளையில் அவர் வந்திருக்கிறார் எனக் கூறியது வேடிக்கையானது. தற்காலிக நூலக மண்டபத்தில் கூடினால் ஐநூறு பேர் கூட இல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறிய மண்டபத்தில் நடக்கும் நிகழ்வுகள் கூட நேரடியாகப் பார்த்து வர்ணனை செய்யக்கூட இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் அறிவிப்பாளர் இல்லையா எனக் கேட்கத் தோன்றுகின்றது.

## யாழ் நூலகம் எரிக்கப்பட்ட சம்பவத்தை இலகுவில் மறந்துவிட முடியாது

*[செய்தி: தினகரன் [கொழும்பு], 20.01.1998]*

1981 ஆம் ஆண்டு யாழ். நூலகம் எரிக்கப்பட்ட சம்பவத்தை மறக்க முடியாது. இன்றுடன் 16 வருடங்களாகின்றன. அன்று நூலகம் எரிக்கப்பட்ட போது அதனை அணைக்க உதவி செய்ய எவரும் இல்லை. தீயணைக்கும் படையினரும் இல்லை.

இவ்வாறு முன்னாள் யாழ். அரசாங்க அதிபர் யோகேந்திரா துரை சாமி யாழ். இடைக்கால பொது நூலகத் திறப்புவிழாவில் உரையாற்றும் போது கூறினார்.

தொடர்ந்து பேசிய அவர் எரிக்கப்பட்ட இந்த நூலகத்தை திருத்தி அமைக்க ஜனாதிபதி எடுத்து வரும் முயற்சிகளுக்கும், இன்று இந்த நூலகத்தை எமக்கு அளித்திருப்பதையிட்டும் நாம் அவருக்கு நன்றி கூற வேண்டும். எமது மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கு நூலகம் மிகவும் அவசியமானது. யாழ். இடைக்கால பொது நூலகம் இன்று தைப்பொங்கல் திருநாளில் திறந்து வைக்கப்படுவது எல்லோருக்கும் மகிழ்ச்சியே என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய யாழ். நூலகம்
# தமிழரின் அறிவுக் கண்ணைத் திறக்குமா?

*வி.அருணாசலம்*

1981இல் சாம்பல்மேடாக்கப்பட்ட யாழ்ப்பாண நூலகம் 17 ஆண்டுகளுக்குப் பின் இவ்வருட தைப்பொங்கல் நாளில் தற்காலிகமான ஒரு கட்டிடத்தில் அமைக்கப்பட்டுள்ளது. பொதுஜன முன்னணி அரசின் பல அமைச்சர்களும் இவ்வைபவத்தில் கலந்துகொண்டனர். இந்த அவசரத் திறப்புவிழா தமிழ் மக்களின் மனங்களில் மாற்றத்தைக்கொண்டு வருமா? கடந்த காலங்களில் இடம்பெற்ற ஆக்கிரமிப்பு யுத்தங்களின் போது தமிழ் மக்கள் இழந்த எல்லாவற்றையும் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசு தனது சீவிய காலத்திற்குள் பெற்றுக்கொடுத்துவிடுமா?

யாழ்ப்பாணத்திலிருந்து புலம்பெயர்ந்து வன்னிப் பெருநிலத்தில் சொல்லொண்ணாத் துயரங்களுடன் வாழ்ந்து வரும் மக்கள் யுத்தத்தை நிறுத்துமாறும், அத்தியவசிய பொருட்களை கிடைக்கப்பெறுமாறும் அரசிடம் கோரிக்கைவிடுத்து மல்லாவியில் உள்ள செஞ்சிலுவைச்சங்க அதிகாரிகளிடம் மகஜர் ஒன்றைக் கையளித்தனர். இது போன்ற பிறிதொரு மகஜரை கிழக்கு மாகாண மக்கள் வாகரையில் வைத்து அரசுக்கு அனுப்பிவைத்தனர். ஆனால் வடகிழக்கில் வாழும் மக்கள் உடனடியாகத் தமக்கொரு நூலகம் வேண்டுமென்று மகஜர் கொடுக்கவுமில்லை. ஆர்ப்பாட்டம் செய்ததுமில்லை.

அரசு யாழ்ப்பாண உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன் சர்வதேச அரங்கில் தன்னை நியாயப்படுத்தவே இந்நூல் நிலையத்தைத் திறந்துள்ளது. இத் திறப்பு விழாவில் தமிழ்க்கட்சிகளுக்கு எந்த முக்கியத்துவமும் கொடுக்கப்படவில்லை. பொதுஜன ஐக்கிய முன்னணி அமைச்சர்களான ரிச்சட் பத்திரான, மங்கள சமரவீர ஆகியோர் சிறப்பு அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

தமிழரின் தனித்துவ அடையாளங்களை சிங்கள ஆட்சியாளர்கள் என்றுமே விரும்பியிருக்கவில்லை. இது ஐக்கிய தேசியக் கட்சியாக இருந்தாலென்ன ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியாக இருந்தால் என்ன இந்த விடயத்தில் பொதுவான ஒரு அணுமுறையையே கொண்டிருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழருக்கென ஒரு தனியான நிலப்பரப்பு இருக்கக்கூடாது என்பதற்காக 1948இல் பதவியேற்ற டி.எஸ்.சேனநாயக்கா வரண்ட வலயக் குடியேற்றத் திட்டங்களை ஆரம்பித்து வைத்தார். தமிழருக்கென தனியான மொழியும் மதமும் இருக்கக்கூடாது என்பதற்காக 1956இல் எஸ்.டபிள்யு. ஆர்.டி.பண்டாரநாயக்கா தனிச்சிங்களச் சட்டத்தைக் கொண்டுவந்தார். பின்பு 1972இல் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியாலும் 1978இல் ஐக்கிய தேசியக் கட்சியாலும் அறிமுகம் செய்து வைக்கப்பட்ட அரசியற் திட்டங்களில் சிங்கள பௌத்தம் என்ற கோட்பாட்டிற்கு அதிக முக்கியத்துவம் கொடுத்துள்ளமையைக் காணலாம்.

1971 இல் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆட்சியில் இருந்த போதுதான் பல்கலைக்கழக அனுமதியில் தரப்படுத்தல் முறை கொண்டுவரப்பட்டது. இதன் மூலம் தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதிக்கும் கல்விக்கும் தடை விதிக்கப்பட்டது. பொருளாதார அபிவிருத்தி வேலைத் திட்டங்களும் வடகிழக்குத் தவிர்ந்த பகுதிகளிலேயே அமுல் செய்யப்பட்டன. 1977 இல் கோலாகலமாக திறந்த பொருளாதாரக்கொள்கை நடைமுறைக்குக் கொண்டுவரப்பட்ட போதும் கூட பாரிய கைத்தொழில் சாலைகள் எதனையும் வடகிழக்கில் நிர்மாணிக்க அனுமதி மறுக்கப்பட்டது. இதன்மூலம் தமிழ் இளைஞர்களுக்கான வேலைவாய்ப்பு வசதிகளும் மறுக்கப்பட்டன.

1974இல் யாழ். முற்றவெளி மைதானத்தில் நடத்தப்பட்ட தமிழாராய்ச்சி மாநாட்டில் பொலிசாரினால் அடக்குமுறை பிரயோகிக்கப்பட்டதன் விளைவாக மின்சாரக்கம்பிகள் அறுந்து விழுந்ததால் ஒன்பது தமிழர்கள் ஸ்தலத்திலேயே கொல்லப்பட்டனர்.

1981 இல் ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சிக் காலத்தில் தமிழரின் பிரத்தியேக அறிவுத் தேட்டத்திற்கு காரணமாக இருந்த யாழ்.நூலகம் மறைந்த ஐ.தே.க தலைவர்களில் ஒருவரான காமினி திசநாயக்காவினால் தலைமை தாங்கிக் கொழுத்தப்பட்டது. மாறி மாறி பதவிக்கு வந்த அரசுகள் ஏன் தமிழர்களுக்கு எதிரான நடவடிக்கைகளில் கங்கணம் கட்டி நின்றன. இதற்கு சிங்கள மக்களிடமும் அரசியல்வாதிகளிடமும் நிலவி வருகின்ற மேலாதிக்க உணர்வுதான் காரணமாகும்.

சிங்கள மக்களோ அரசியல்வாதிகளோ தம்மை உதிரிகளாக அல்லது தனி ஆளுமை உள்ளவர்களாகக் கருதுவதில்லை. எப்பொழுதும் தம்மை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குழு நிலையிலேயே அடையாளம் காணுகின்றனர். இது சிங்கள மக்களில் ஒரு பகுதியினர் விளங்கிவைத்துள்ள மேலாண்மை உணர்வின் வெளிப்பாடே.

1994இல் பொதுத்தேர்தல் நடைபெற்றவேளை 17 ஆண்டுகள் அதிகார ஊசலாட்டமின்றி தொடர்ச்சியான ஆட்சியிலிருந்த ஐ.தே.க.வை தேர்தலில் தோற்கடிப்பதற்காக திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தனது பெயருடன் தனது தந்தையின், கணவரின் பெயர்களையும் இணைத்து அவர்கள் இருவரையும் மக்களுக்கு ஞாபகப்படுத்தி இரு கட்சி ஆதரவாளர்களையும் தன்னுடன் இணைத்தார்.

அதேவேளை தமிழ் மக்களினதும் ஐ.தே.கட்சி ஆட்சிக்காலத்தில் படுகொலை செய்யப்பட்ட சிங்கள இளைஞர்களின் பெற்றோர்களையும் அரவணைக்கும் வகையில் சமாதனமே தனது இலக்கு என்றார். ஆனால் தாயாரான ஸ்ரீமாவின் ஆட்சிக் காலத்தில் (1971) ஜே.வி.பி என்ற சந்தேகத்தில் படுகொலை செய்யப்பட்ட 14000 க்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகள் பற்றி அவர் பேசவும் இல்லை, மக்கள் கண்டுகொள்ளவும் இல்லை.

தமிழரின் தனித்துவமான நூல்நிலையமொன்றை சிங்கள மக்களின் ஒரு பகுதியினர் கொளுத்தியதால் முழுச் சிங்கள மக்களுமே என்றும் அழியாக் களங்கத்தைப் பெற்றுவிட்டனர். வடகிழக்குப் பகுதிகள் தவிர்ந்த இலங்கையின் ஏனைய பாகங்களில் ஓடுகின்ற அனைத்து நதிகளின் நீரைச்சேர்த்துக் கழுவினாலும் கரைந்து போகாத களங்கமாக அது இருக்கும் என்பதை கொழுத்தும் போது அவர்கள் உணர்ந்திருக்கவில்லை.

கடோல் பொத்தக் (செங்கல், புத்தகம்) பற்றி எல்லாத் தொடர்பு சாதனங்களும் பல மாதங்களாகப் பிரச்சாரம் செய்தது பலருக்கு ஞாபகம் இருக்கலாம். ஒவ்வொரு சிங்களப் பிரஜையும் தமிழர்களின் எரிந்த நூல் நிலையத்தை புனரமைத்துக் கொடுக்க ஒரு செங்கல்லையும் ஒரு புத்தகத்தையும் செலுத்தி தமது வரலாற்றுக்கடனைத் தீர்க்க முனைந்ததே கடோல் பொத்தக் ஏற்பாடாகும்.

சிங்கள மக்கள் நூல்நிலையத்துக்கான கட்டிடத்தை நிர்மாணித்துக் கொடுக்க நினைப்பது தப்பில்லை. ஆனால் தமிழ் மக்கள் படிப்பதற்காக ஒவ்வொருவரும் ஒவ்வொரு சிங்களப் புத்தகத்தை ஏன் கொடுக்கிறார்கள் என்பதுதான் தெரியவில்லை. காலகதியில் கல்விரீதியான ஒரு சிங்களமய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாற்றத்தை யாழ்ப்பாணத்தில் ஏற்படுத்த அரசு முனைகிறதோ எனவும் எண்ணத் தோன்றுகிறது. தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு தமிழ்ப் புத்தகத்தை தென்பகுதியில் இருக்கும் நூல்நிலையம் ஒன்றிற்கு வழங்கினால் இதன் தாற்பரியம் புரியும்.

இனப்பிரச்சினையை உரிய முறையில் தீர்த்து வைப்பதில் அரசு அக்கறை செலுத்துமேயானால் இவ்வாறு வலுக்கட்டாயமாகக் கஷ்டப்பட்டு நூல்நிலையம் ஒன்றைக் கட்டத்தேவையில்லை. எரிந்த நூலகத்தைப் புனரமைப்பதற்காக புல்டோசர்களைப் பயன்படுத்தி புனரமைப்பு வேலைகள் தொடங்கிவிட்டதாக இரண்டு மாதங்களுக்கு முன்பே செய்திகள் வெளிவந்தன. சிங்கள மக்களும் அரசும் இணைந்து எரிக்கப்பட்ட நூலகத்தைவிட பல மடங்கு பெரிய நூலகமொன்றை அமைத்துக்கொடுத்தால் கூட தப்பில்லை. ஆனால் எரிக்கப்பட்ட நூலகத்தின் எச்சங்களை அவ்வாறே பேணுவதே சாலச் சிறந்தது. வரலாற்றின் வடுக்கள் கண்ணுக்கு முன்னால் தெரிவதால் தமிழ், சிங்கள மக்கள் இறந்த காலத்தில் நடந்தவற்றை மீட்டுப் பார்க்கவும் இளம் சந்ததியினருக்கு தாம் எத்தகைய பழைமையைக் கொண்டிருக்கின்றோம் என்ற உணர்வைப் பெறவும் அது வழி வகுக்கும்.

உணவு, உடை, உறையுள் இவை மூன்றும் ஒரு மனிதனின் அடிப்படைத் தேவைகளாகும். இவை பூர்த்தி செய்யப்பட்ட பின்பே ஓய்வும் சிந்தனை வளர்ச்சியும் இருக்க முடியும். யுத்தத்தால் உருக்குலைந்து போன தமிழ் மக்களுக்கு நூல்நிலையத்தை அமைத்துக்கொடுத்து முதலில் சிந்திக்கவிட்டு பின்பு அடிப்படைத் தேவைகளை நிறைவு செய்யலாம் என அரசு நினைக்கிறது.

1971இல் அறிமுகப்படுத்தப்பட்ட பல்கலைக்கழகத் தரப்படுத்தல் முறையால் அதிக புள்ளிகளைப் பெற்றும்கூட யாழ்.மாணவர்கள் பலருக்கு பல்கலைக்கழக அனுமதி பெறுவது மறுக்கப்பட்டு வருகிறது. இவ்வாறு பாதிக்கப்பட்ட மாணவர்குழு ஒன்று 1996இல் ஜனாதிபதி சந்திரிகாவை சந்தித்தது. அதனால் எந்தப் பயனுமில்லை என்பது பின்னர் தெரியவந்தது. இவ்வாறு கல்விரீதியாக தமிழருக்கு ஏற்பட்ட பாதிப்புக்கள் தொடர்ந்துகொண்டே போகிற நிலையில் தமிழ் மக்களின் அறிவுக் கண்களைத் திறக்க அரசு முனைவது எந்த யதார்த்தத்துக்குப் பொருந்தும்?

***(நன்றி: தினக்குரல் (கொழும்பு), 24.01.1998)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண நூலக மீள் நிர்மாணம்

*அனுஷா*

தைப்பொங்கல் தினத்தன்று யாழ்ப்பாணத்தில் தற்காலிகக் கட்டடமொன்றில் யாழ்.நூலகம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஐக்கிய தேசியக்கட்சி ஆட்சியின் போது எரித்துச் சாம்பலாக்கப்பட்ட நூலகத்தை மீண்டும் நிர்மாணிக்கும் பணியைப் பொதுசன ஐக்கிய முன்னணி அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது. ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் சிரேஷ்ட அமைச்சர்களான காமினி திசாநாயக்காவும் சிறில் மத்தியுவும் நூலகத்திலிருந்து இருநூறு யார் தூரத்திற்குள் இருந்த நேரம் அது எரிக்கப்பட்டது. தேடக்கிடைக்காத ஏராளமான அரிய நூல்கள் எரிந்து சாம்பலாகின.

தபால், தந்தித்தொடர்பு அமைச்சரும் வெகுஜனத்தொடர்பு அமைச்சருமான மங்கள சமரவீர அவர்களால் தற்காலிகக் கட்டடத்தில் நூலகம் திறந்து வைக்கப்பட்டது. அமைச்சர் வெண்தாமரை இயக்கத்தின் தலைவரும் கூட.

வெண்தாமரை இயக்கம் 1995 ஆம் ஆண்டு யூலை மாதம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இனங்களுக்கிடையே நல்லுறவை வளர்ப்பது இந்த இயக்கத்தின் பிரதான நோக்கம். யாழ்ப்பாண நூலகத்தைப் புனர்நிர்மாணம் செய்தல் தொடர்பான பணிகளையும் இந்த இயக்கமே பொறுப்பேற்றிருக்கின்றது. இதற்காக நூலும் செங்கல்லும் என்ற ஓர் இயக்கத்தை நாடளாவிய ரீதியில் இது ஆரம்பித்திருக்கிறது.

ஒவ்வொரு குடும்பமும் ஒரு புத்தகமும் ஒரு செங்கல்லும் அன்பளிப்புச் செய்ய வேண்டுமென்பது இந்த இயக்கத்தின் நோக்கம். இதன் மூலம் எல்லோரும் இப்பணியில் பங்குதாரர்களாகின்றனர். அத்தோடு புத்தகம் அறிவுக்கும், செங்கல் இன ஐக்கியத்துக்கான அத்திவாரத்துக்கும் குறியீடுகள்.

புத்தகங்கள் பற்றிக் குறிப்பிடும்போது, பீட்டர் கெனமனின் நினைவு நிச்சயமாக வரும். யாழ்ப்பாணத்தில் ஆரம்பித்துவைக்கப்பட்ட தற்காலிக நூலகத்திலுள்ள புத்தகங்களில் எழுபத்தைந்து வீதத்திற்கும் மேலானவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பீட்டர் கெனமனின் புத்தகங்கள். அவர் வாழ்நாள் முழுவதும் சேகரித்த பெறுமதி வாய்ந்த புத்தகங்கள் அனைத்தும் அவரது இறுதி விருப்பப்படி யாழ்ப்பாண நூலகத்துக்கு அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளன. பீட்டர் கெனமனுக்கு யாழ்ப்பாணத்துடனும் யாழ்ப்பாண மக்களுடனும் நல்ல தொடர்புண்டு. இப்போது அரிய பொக்கிஷமான புத்தகங்கள் யாழ்ப்பாண மக்களுக்குப் பயன்படப்போகின்றன.

எதிர்வு கூறல்கள் எல்லாம் அப்படியே நடப்பதில்லை என்பதற்கு இந்த நூலகம் நல்ல உதாரணம். யாழ்ப்பாண நூலகத்தைப் புனர்நிர்மாணம் செய்யும் பணியை வெண்தாமரை இயக்கம் ஆரம்பித்த நேரத்தில் ஒரு தமிழ்த் தினசரி கூறிய எதிர்வுகூறல் பொய்த்துவிட்டது.

யாழ்ப்பாண நூலகம் செயற்படத் தொடங்கும் போது அதைப் பயன்படுத்துவதற்கு அங்கு மக்கள் இருக்கமாட்டார்கள் என்று அத் தினசரி எதிர்வு கூறியது.

நூலகத்தைப் பயன்படுத்த மக்கள் அங்கே இருக்கின்றார்கள். வன்னியிலிருந்து தொடர்ந்து யாழ்ப்பாணத்துக்குச் சென்று கொண்டிருக்கிறார்கள்.

*(நன்றி: தினகரன் (கொழும்பு),*
*29.01.1998)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17 வருடங்களுக்கு முன்னர் தமிழர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கான பரிகாரம்?

*பவித்திரன்*

பலத்த பாதுகாப்புக்கள், ஆரவாரங்களின் மத்தியில் யாழ்ப்பாணத்தில் தற்காலிக நூலகம் திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. தற்காலிகத்தின் திறப்பு விழாவுக்கே இந்தளவுக்கு ஆரவாரம் என்றால், எரிந்த நூலகம் புனரமைப்புச் செய்யப்பட்டு நிரந்தரமாகி திறக்கப்படும் போது எந்தளவுக்கு ஆரவாரங்கள் இருக்கும்?

பல வருடகால இடைவெளியின் பின்னர் மூன்று அமைச்சர்கள் யாழ்ப்பாணத்துக்கு வந்து இதனைத் திறந்து வைத்திருக்கிறார்கள். ஜனாதிபதியின் விசேட செய்தியும் தொலைக்காட்சி மூலம் ஒலிபரப்பப் பட்டது. ஜனாதிபதி தனது உரையை முழுமையாகத் தமிழில் நிகழ்த்தியது முக்கியத்துவமானது. தற்காலிக நூலகத் திறப்புவிழாவுக்கே அரசாங்கம் இந்தளவுக்கு முக்கியத்துவம் கொடுத்திருப்பது ஒரு அசாதாரண நிகழ்வுதான்.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட அநியாயங்களுக்குப் பரிகாரம் தேடும் முயற்சியில் ஒன்றுதான் இது என நூலகத்தைத் திறந்து வைத்த அமைச்சர் மங்கள சமரவீர கூறியிருக்கிறார். தமிழர்களால் வரவேற்கப்பட வேண்டிய ஒரு விடயம்தான் இது.

பதினேழு வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாண நூலகம் பொலி சாரால் எரித்துச் சாம்பலாக்கப்பட்டது தமிழ் இனத்துக்கு எதிராக இழைக்கப்பட்ட ஒரு அநீதி என்பதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை. இதற்குப் பரிகாரம் தேடவேண்டியதும் அவசியமானதுதான்.

நூலகத்திலிருந்த ஒரு இலட்சத்துக்கும் அதிகமான நூல்கள் எரிந்து சாம்பலானதால் ஏற்பட்ட இழப்பை விட, பெறுமதி மதிப்பிட முடியாத ஓலைச் சுவடிகளும், கையெழுத்துப் பிரதிகளும் தீக்கு இரையானது தான் அதைவிட அளவிட முடியாத இழப்பு. புத்தகங்களை வாங்கி நிரப்பி விடலாம். ஆனால் இந்த ஓலைச் சுவடிகளையோ அல்லது கையெழுத்துப் பிரதிகளையோ மீண்டும் வாங்கத்தான் முடியுமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம் எரிக்கப்பட்ட பின்னர் அதனையிட்டு விசாரணை நடத்த வேண்டும் என்ற கோரிக்கைகள் அதிகரித்தன. யாழ்ப்பாண அரச அதிபராக இருந்த லயனல் பெர்னாண்டோ தலைமையிலான குழு ஒன்றை ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தனா இதற்காக நியமித்தார். நூலகத்தைப் புனரமைப்புச் செய்து கட்டியெழுப்புவதற்காக ஒரு கோடி ரூபா நட்டஈடு வழங்கவேண்டும் என இக் குழு பரிந்துரைத்தது.

ஆனால் இதனை ஜே.ஆர் வழங்கவில்லை. நட்டஈட்டை வழங்குவது பொலிசார் தான் நூலகத்தை எரித்தார்கள் என்பதை ஒப்புக்கொண்டது போலாகி விடும் என அவர் நினைத்தாரோ என்னவோ தெரியவில்லை. பின்னர் யாழ். நூலக புனரமைப்புக்கென ஜனாதிபதி நிதியம் ஒன்றினை ஆரம்பித்த அவர் அதற்குப் பத்து லட்சம் ரூபாவை வழங்கினார். பொது மக்களிடமிருந்து நிதியுதவியும் கோரப்பட்டது. ஆனால் பின்னர் இதனைக்கொண்டு பெரிதாக எதுவும் செய்யப்படவில்லை.

பொதுஜன முன்னணியும் நூலகப் புனரமைப்புச் செய்யப்படும் என்ற உறுதி மொழியைத் தேர்தலுக்கு முன்னே வழங்கியது. ஆனால் ஆட்சிக்கு வந்து மூன்றரை வருட காலத்தில் தற்காலிகமான நூலகத்தை அமைக்கவே இவ்வளவு வருடங்கள் என்றால் . . .?

1981இல் நூலகம் எரிக்கப்பட்ட போதிலும், அதன் சில பகுதிகள் புனரமைப்புச் செய்யப்பட்டு சில வருடங்களிலேயே இயங்கத் தொடங்கியது. ஆனால் கோட்டையில் இருந்த இராணுவத்தினரின் செல் தாக்குதலால் பொதுமக்கள் செல்ல முடியாத ஒரு பிரதேசமாகியபோதே இந்த நூல்நிலையம் கைவிடப்பட்டது.

இந்த நூலகம் மூடப்பட்டபோது அங்கிருந்து மீட்கப்பட்ட நூல்கள் யாழ்.நகரின் பல பகுதிகளிலும் அமைக்கப்பட்ட கிளை நூலகங்களுக்கு அனுப்பப்பட்டன. நல்லூர், சுண்டிக்குளி, நாவாந்துறை எனச் சில பகுதிகளில் மக்கள் செல்லக்கூடிய பகுதிகளில் இந்தக் கிளை நூலகங்கள் அமைக்கப்பட்டன.

இராணுவம் குடாநாட்டைக் கைப்பற்றும் வரையில் இந்த நூலகங்கள் சிறப்பான முறையில் மக்களுடைய தேவைகளை நிறைவேற்றக்கூடியவையாக செயற்பட்டு வந்தன.

நல்லூரிலுள்ள மாநகரசபைக் கட்டடத்துடன் இணைந்ததாக அமைக்கப்பட்ட நூலகம் பொதுமக்களுக்குப் பெருமளவு பயன்படக்கூடிய


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியளவிலானதாக இருந்தது. யாழ்.மாநகரசபையின் முயற்சியாலேயே இது அமைக்கப்பட்டது. பெருந்தொகையான நூல்கள் இங்கு இருந்த போதிலும் 1995 பிற்பகுதியில் இராணுவம் குடாநாட்டைக் கைப்பற்றிய பின்னர் இங்கிருந்த ஆயிரக்கணக்கான நூல்கள் காணாமற் போய்விட்டன. இவை எப்படிக் காணாமற்போனது என்பது யாருக்கும் தெரியவில்லை.

இந்த நிலையில் தான் புதிய நூல்நிலையக் கட்டடத்தை பெரும் ஆரவாரங்களுடன் அரசு திறந்து வைத்துள்ளது.

யாழ். கச்சேரிப் பகுதியிலுள்ள வீடமைப்புத் திணைக்கள அலுவலகத்திலே புதிய தற்காலிக நூல்நிலையம் அமைக்கப்பட்டுள்ளது. சுற்றிவர இராணுவ முகாம்களையும், அரச செயலகத்தையும் கொண்டுள்ள இந்த நூல்நிலையம் பொதுமக்களின் பாவனைக்கு எந்தளவுக்கு பயன்படுத்தப்படும் என்பது கேள்விக் குறியாகவே உள்ளது எனக் குடாநாட்டு மக்கள் குறிப்பிடுகின்றார்கள்.

***(நன்றி: ஞாயிறு தினக்குரல் (கொழும்பு), 01.02.1998)***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்குச் சுதந்திரம் நெருங்கியபோது தமிழ் மக்கள் முற்றிலும் ஒதுக்கப்பட்டனர்

*டியு.குணசேகர நேர்காணல்*
*[தொகுப்பு: எஸ்.எம்.நௌபர்]*

யாழ்ப்பாண நூல்நிலையப் புனரமைப்பு தொடர்பாக, இலங்கை ரூபவாகினிக் கூட்டுத்தாபனத்தின் தலைவர் டியு.குணசேகர இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ''சுபாரத்தீ'' நிகழ்ச்சிக்கு வழங்கிய நேர்காணல்.

**கேள்வி:** யாழ்ப்பாண நூல்நிலையத்தை எரித்தவர்கள் அதனால் எதிர்பார்த்ததென்ன?

**பதில்:** பழைய நிகழ்வுகளை நினைவு கூர்ந்து பதிலளிக்கவேண்டிய கேள்வி இது. இன்று யுத்தமாக மாற்றம் பெற்றுள்ள இனப்பிரச்சினைக்கான காரணங்கள் பல உள்ளன. பல தசாப்தங்களாகப் படிப்படியாக வளர்ந்த விடயங்களும் அதிருப்தியும் இதற்கான காரணிகள் எனக் குறிப்பிடலாம். மொழிப்பிரச்சினை, பிரஜா உரிமைச்சட்டம், சட்டசபை இருந்த காலத்தில் ஏற்பட்ட நிகழ்வுகள், பழைய காரணிகள் எனவும், 1977க்குப் பிந்திய நிகழ்வுகள் அண்மைக்காலக் காரணி எனவும் குறிப்பிடலாம்.

வடக்கு, கிழக்கு மாகாணத்தைத் தவிர்ந்த தமிழ் மக்களில் பெரும்பான்மையினர் ஐக்கிய தேசியக் கட்சிக்கு வாக்களித்த ஒரே சந்தர்ப்பம், 1977 பொதுத்தேர்தலாகும். தமிழர்களில் சுமார் 95 வீதமானோர் அக் கட்சிக்கு வாக்களித்தனர்.

வடக்கு, கிழக்கில் இனப்பிரச்சினையொன்று உள்ளதாகவும் தாம் ஆட்சிக்கு வந்தவுடன் அப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதாகவும் ஐ.தே.க. தனது 1977 தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிட்டிருந்தது. எனவே தமிழ் மக்கள் ஐ.தே.கட்சியில் அபார நம்பிக்கை வைத்தனர். வடக்கு, கிழக்கு மாகாணத்தில் தமிழர் விடுதலை முன்னணியே பலம் பெற்றிருந்தது. அவர்களில் 18 பேர் தெரிவான பொதுத் தேர்தல் ஜுலை மாதத்தில் நடந்தது. ஆகஸ்ட் மாதம் முதல் வாரத்தில் சப்ரகமுவ மாகாணத்தில் இனவாரியான மோதல்கள் ஆரம்பிக்கப்பட்டன. தோட்டத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தொழிலாளர்களைத் தாக்கினார்கள். 1978, 1979, 1980, 1981ஆம் வருடங்களில் மோதல்கள் இடம்பெற்றன.

**கேள்வி:** இதற்கான காரணம் என்ன?

**பதில்:** 1981இல்தான் யாழ்ப்பாண நூல்நிலையம் எரிக்கப்பட்டது. அபிவிருத்திச்சபைத் தேர்தல்கள் அப்போது தான் நடந்தன. அத்தேர்தலில் பல குளறுபடிகள் செய்யப்பட்டன. அதிர்ச்சி தரும் நிகழ்வு 1983 ஜுலை மாதம் நடந்தது. இவை அனைத்தும் இனப் போராட்டம் ஒன்றுக்கு பின்னணியை அமைத்தன.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன சகல உபாயங்களையும் மாற்றியிருக்கக் கூடும். முதலில் அமைதியான பேச்சு வார்த்தைகள் மூலம் பிரச்சினையைத் தீர்க்க நினைத்தாலும் பின்னர் அடித்து அச்சமூட்டி பேச்சு வார்த்தைகளுக்கு அழைத்துக்கொள்ள நினைத்தாரோ என்னவோ.

இனப்பிரச்சினை என்று ஒன்று இல்லை. எனவே அரசியல் தீர்வொன்று அவசியமில்லை என்று நினைத்தவர்கள் ஐ.தே.கட்சிக்குள் இருந்தார்கள். இவர்கள் அரசாங்கத்தின் கொள்கைகளை மாற்றியிருக்கக்கூடும். எப்படியானாலும் அரசாங்கம் அறிந்தும் அறியாமலும் பல நிகழ்வுகள் நடந்தன. இவ்வாறு 1983 ஜுலை மாதத்தில் பெரும் பிரச்சினை ஏற்பட்டு நாடு பிளவுபட்டது. ஜனநாயக அமைப்பு சிதறுண்டது.

**கேள்வி:** யாழ்ப்பாண நூலகம் தீவைத்து எரிக்கப்பட்டதால் நாட்டின் கௌரவம் பாதிக்கப்பட்டதா? உண்மையில் என்ன நடந்தது?

**பதில்:** வீடொன்றிலுள்ள குடும்ப நூலகத்தை உதாரணத்திற்கு எடுத்துக்கொள்ளுவோம். அதை நாம் எவ்வளவு அக்கறையுடன் பாதுகாக்கின்றோம். தெற்காசியாவிலுள்ள மிகப் பெரிய நூல்நிலையமே யாழ்ப்பாணத்தில் இருந்தது. இது தேசிய சொத்தாகும். தென்னிலங்கையைச் சேர்ந்த மாணவர்கள் யாழ்ப்பாணம் சென்று நூல்களை வாசித்து அறிந்தனர். அதில் மூலாதார நூல்கள் நிறைய இருந்தன. கையேடுகள் இருந்தன. எனவே இத்தகைய நூல்நிலையம் ஒன்றை இழப்பது பெரும் அநீதியாகும். வரலாற்றில் காலா காலமாக ஆய்வுகளை நடத்தி குறிப்புகளை ஒன்று சேர்த்து நூல்களாக்கி எதிர்கால சந்ததியினருக்கென உருவாக்கப்பட்ட யாவற்றையும் ஒட்டுமொத்தமாக தீ வைத்து எரித்துவிடுவதால் என்ன நிலை ஏற்படும்? எனது கருத்து என்னவென்றால் தமிழர்கள் மட்டும் எதிர்நோக்கவேண்டிய பிரச்சினை அல்ல இது. வீடொன்றில் சிறிய வாசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கசாலை ஒன்றுள்ள புத்திசாலி ஒருவரால் கூட இந்த அநீதியைச் சகித்துக் கொள்ள முடியாது.

**கேள்வி:** யாழ்ப்பாணத்திலிருந்த சிங்கள மக்களுக்கும் தமிழர்களால் இன்னல்கள் ஏற்பட்டன. எனவே ஒருதலைப்பட்சமாக சிந்திக்கக்கூடாது. மத்திய வங்கியிலும் பெறுமதி வாய்ந்த நூலகமொன்று இருந்தது. அதுவும் அழிக்கப்பட்டதல்லவா?

**பதில்:** நூலகத்திற்குத் தீ மூட்டப்பட்டது. புலிகள் சும்மா இருந்துவிடவில்லை. தாக்குதல் நடத்தினர். அதற்கு எதிர்த்தாக்குதல் இங்கிருந்து நடத்தப்பட்டது. இப்படித்தான் யுத்தம் மூண்டது. இப் பிரச்சினை உருவான முறையை ஆராய்வோம். அதற்கு சமூக, அரசியல், பொருளாதாரக் காரணிகள் இருந்தன.

யாழ்ப்பாண நூல்நிலையம் எரிக்கப்படல் திட்டமிட்ட செயல் என்பது தெரிகின்றது. சாதாரண பொது மக்கள் உணர்ச்சிவசப்பட்டுச் செய்யும் காரியங்கள் வேறு. ஆனால் கொழும்பில் இருந்து திட்டமிட்டு, குருநாகல் மாகோவிலிருந்து மூவாயிரம் பேரை அழைத்துச் சென்று யாழ்ப்பாண சுபாஷ் ஹோட்டலில் இருந்து மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தல் வேலைகளை ஒழுங்கு செய்தவர்கள் இந்த அநியாயத்தைச் செய்தார்கள் என்பது இப்போது நிரூபிக்கப்பட்டுள்ளது. தாம் செய்த இந்த அநியாயம்தான் இன்று நாடு பிளவுபடக் காரணமென்று அன்றைய அமைச்சர் ஒருவரே ஒப்புக்கொண்டார். அவரது பெயரைக் குறிப்பிட விரும்பவில்லை. ஒருமுறை நான் பாராளுமன்றத்திலும் இது பற்றிப் பேசினேன். தென்னிலங்கைத் தமிழ் மக்களில் 95 வீதமானோர் வாக்களித்து அதிகாரத்துக்கு கொண்டுவரப்பட்ட ஐ.தே.க. அரசாங்கம் இவ்வாறு பாரிய அநியாயமொன்றைச் செய்துள்ளது.

**கேள்வி:** 1970க்குப் பின்னரே இனக்கலவரங்கள் ஏற்பட்டதாகக் கூறினீர்கள். 1956 இலும், 1958இலும் இனக் கலவரங்கள் ஏற்பட்டனவே. ஏன் அவை பற்றிக் குறிப்பிடுவதில்லை?

**பதில்:** நான் அப்படிக் கூறவில்லை. 1958 இனக் கலவரத்தின் போது கொழும்பு காலிமுகத் திடலில் பாராளுமன்றத்திற்கு எதிரே பலருடைய காதுகள் துண்டிக்கப்படுவதைக் கண்டுள்ளேன். கொன்றுவிடவென கொண்டு செல்லப்பட்ட பல அரசாங்க ஊழியர்களை நான் காப்பாற்றியிருக்கிறேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1956இலும் 1958 இலும் பல நிகழ்வுகள் ஏற்பட்டன. யாழ்ப்பாணத்திலும் தென்னிலங்கையிலும் மோதல்கள் ஏற்பட்டன. எங்கு நடந்தாலும் இவை தவறானவை என்பதை ஏற்றுக்கொண்டு அரசியல்வாதிகளல்ல சமூகவியலாளர்கள் என்ற கண்ணோட்டத்தில்தான் இப்பிரச்சினையை நோக்க வேண்டும். நமது அரசியல்வாதிகள் பன்னெடுங்காலமாக இதே பிரச்சினையை முன்வைத்துக் கொண்டு பதவிக்கு வர முயற்சிக்கிறார்கள். நமது நாட்டுக்கு இடிவிழ இதுவே காரணமாக அமைந்தது.

இப்பிரச்சினையில் வெளிச்சாயலைப் பற்றித்தான் பேசுகின்றோம். நோயின் அறிகுறிகள் பற்றியே பேசுகின்றோம். நோய்க் காரணியைத் தேடி, உரிய சிகிச்சை அளித்து நோயை முற்றாக ஒழித்துவிட வேண்டும்.

**கேள்வி:** (நாரஹேன்பிட்டிய நிமல் பெர்னாண்டோ) 1977 வரை யாழ்ப்பாணத்திலிருந்த சிங்களவருக்கும் பெரும் அநீதிகள் நடந்தன. அவை பற்றிப் பேசாமல் 1977க்குப் பின்னர் நடந்தவை பற்றி மட்டும் பேசுவது சரியா?

**பதில்:** இனப்பிரச்சனைக்கான காரணம் டொனமூர் கமிஷன் காலம்வரை செல்வதை ஏற்கெனவே குறிப்பிட்டேன். 1981இல் யாழ்ப்பாண நூல்நிலையம் எரிக்கப்படல் அண்மைக்கால காரணி எனவும் குறிப்பிட்டேன். தொடர்ந்து பல காரணங்களைக் குறிப்பிட முடியும். துரையப்பா கொல்லப்பட்டார்.

சட்டமன்றம் இருந்த காலத்தில் சேர். டீ.பீ.ஜயத்திலக்க ஒரு தமிழரையேனும் இரண்டாவது சட்டசபைக்கு நியமனம் செய்யவில்லை. சுதந்திரம் வழங்குவது அண்மித்தபோது, தமிழ் மக்கள் முற்றிலும் ஒதுக்கப்பட்டனர். எனவே 1983 ஆனபோது சகல தமிழ் மக்களும் புலிகளின் அரவணைப்புக்குத் தள்ளப்பட்டனர்.

1983இல் புலிப்படையில் தீவிர உறுப்பினர்கள் 32 பேர்தான் இருந்தனர். யாழ்ப்பாண நூல்நிலையம் எரிக்கப்பட்ட போது 32 உறுப்பினர்களே இருந்தனர்.

**கேள்வி:** (களுத்துறை போம்புவல ரஞ்சன) கடற்படை வீரன் என்ற முறையில் நான் யாழ்ப்பாண நூல்நிலையத்துக்குப் பல தடவைகள் சென்று நூல்களை வாசித்துள்ளேன். அதே நூல்நிலையம் எரிக்கப்பட்டதை கேள்விப்பட்டு மிகவும் துக்கமடைந்தேன். அது புனரமைக்கப்படுவது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பற்றி மகிழ்ச்சி அடைகிறேன். மேலும் வரலாற்று ரீதியாக, நீங்கள் குறிப்பிடாத ஒன்றை நினைவூட்ட விரும்புகின்றேன். அதாவது 1947இல் பிரஜாஉரிமைச் சட்டத்தின் மூலம் தமிழ் தோட்டத் தொழிலாளரின் வாக்குரிமை பறிக்கப்பட்டதால், செல்வநாயகம் சமஷ்டிக் கட்சியை ஆரம்பித்தார் என்பதை நினைவுபடுத்துங்கள்.

**பதில்:** பிரஜா உரிமைச் சட்டமும் இனப் பிரச்சனைக்கான காரணிகளுள் ஒன்றாகும். 1830இல் ஆங்கிலேயர் கோப்பி, தேயிலைப் பயிர்ச்செய்கையை முன்னிட்டு தென்னிந்தியாவிலிருந்து தமிழ் மக்களை வரவழைத்தனர். 1947இல் இலங்கைக்கு சுதந்திரம் வழங்கப்படும்போது இம்மக்கள் வாக்குரிமை உள்ளவர்களாக இருந்தனர். 1947இல் நடந்த பொதுத் தேர்தலின் போது இந்தியக் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 7 பேர் பாராளுமன்றத்துக்குத் தெரிவானார்கள்.

கரையோரம், சபரகமுவ தென்னிலங்கை போன்ற பிரதேசங்களைச் சேர்ந்த தமிழ் தோட்டத் தொழிலாளர்கள் லங்கா சமசமாஜக் கட்சிக்கும் கம்யூனிஸ்ட் கட்சிக்கும் வாக்களித்தனர். 1956இல் பாராளுமன்றத்தில் தோட்டத்தொழிலாளர்களுக்கான சமசமாஜ கம்யூனிஸ்ட் கட்சிகளிலிருந்து 20 உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் ஐ.தே.க பெரிதும் கஷ்டத்துடனேயே தமிழ் மக்களின் ஆதரவைப் பெற்று ஆட்சிக்கு வந்தது. 1948 இல் பிரஜா உரிமைச் சட்டத்தைக் கொண்டுவந்தது. இதன் மூலம் 1949 இல் தோட்டத் தொழிலாளரின் வாக்குரிமை பறிக்கப்பட்டது. 1952இல் நடந்த தேர்தலின்போது தமிழ் தோட்டத் தொழிலாளர்களில் ஒரு பிரதிநிதிகூட பாராளுமன்றத்தில் இருக்கவில்லை.

1956 இலும் அப்படித்தான். 1960-65 இலும் 1970இல் தொண்டமான் அவர்கள் நியமன எம்.பி யாகவே இருந்தார். இந்நிலையில் சிங்கள மக்களின் மீது தமிழ் மக்களுக்கு சந்தேகமும் அவநம்பிக்கையும் ஏற்பட்டன. இப் பின்னணியில்தான் சமஷ்டிக்கட்சி உருவாகியது.

***(நன்றி: தினகரன் வாரமலர் (கொழும்பு),***

***01.02.1998)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிந்து சாம்பலான பழைய கட்டிடத்தில் யாழ். புதிய நூலகத்தை அமைக்க வேண்டாம் அது தமிழர் பாரம்பரியமல்ல

*ச.தியாகராஜா*

யாழ்ப்பாண மாநகரசபையின் கீழ் இயங்கிய பொதுநூல்நிலையம் மாநகர சபைக்குரிய காணித் துண்டில் 1967 - 68 இல் மு.திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சராக இருந்த போது கட்டியெழுப்பப்பட்டது. இந்த நூல்நிலையம் அதி. வணக்கத்துக்குரிய பிதா லோங் அவர்களின் அரிய முயற்சியால் அப்போதைய சூழ்நிலையில் அவ்விடத்தில் அமையப்பெற்றது. ஆனால் அப்படிப்பட்ட பிரமாண்டமான நூல்நிலையம் அக்கினியுடன் சங்கமமாகு மென்று எமது மக்கள் கனவிலும் எண்ணியிருக்கமாட்டார்கள்.

தற்பொழுது பதவியில் இருக்கும் அரசு இந்நூல்நிலையத்தை மறுபடியும் அதே இடத்தில் எரிந்த கட்டிடத்தையே புனருத்தாரணம் செய்து யாழ்.மக்களுக்கு திரும்பவும் பாவனைக்குவிட திட்டங்களைத் தீட்டியுள்ளது. அதற்கு முன்னோடியாக யாழ்.கச்சேரிக்கு அருகில் உள்ள கட்டிடத்தில் ஒரு தற்காலிக நூல்நிலையம் கைவசம் உள்ள நூற்பிரதிகளுடன் தைப்பொங்கல் தினத்தன்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

எரிந்து சாம்பலான நூல்நிலையத்தில் எங்கும் கிடைக்கப்பெறாத பழமைமிக்க பொக்கிஷங்கள், ஏட்டுச்சுவடிகள் உட்பட ஒரு லட்சத்துக்கும் அதிகமாக நூல்கள் இருந்தன. யாழ்.மக்களின் அறிவு வளர்ச்சியை மட்டந்தட்டும் திட்டத்துடனேயே அந்த நூல்நிலையம் தீக்கிரையாக்கப் பட்டது.

இப்பொழுது யாழ்.மாநகரசபையின் முதல்வராக முன்னாள் யாழ். தொகுதி நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் யோகேஸ்வரனின் மனைவியார் சரோஜினி தமிழர் விடுதலைக்கூட்டணியின் மாநகர முதல்வராகி இருக்கின்றார். இச்சந்தர்ப்பத்தில் இந்நூல் நிலையம் எப்படி அமைய வேண்டும் என்று சில கருத்துக்களை தெரிவிக்க விரும்புகின்றேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முதலில் ஓர் எரிந்து சாம்பலான கட்டிடத்தை மீண்டும் அதே அத்திவாரத்தில் கட்டி எழுப்புவது தமிழர் பாரம்பரியமல்ல. அதுவும் சரஸ்வதியின் கடாட்சம் உள்ள அறிவு வளர்ச்சிக்கும் களஞ்சியத்தை அதே இடத்தில் புனரமைப்பதிலும் பார்க்க வேறு இடத்தில் பாதுகாப்பாகவும் சனநடமாட்டமும் கூடிய இடத்தில் அமைத்தலே சாலச் சிறந்ததாகும். அதே கட்டிடத்தை கட்டி எழுப்புவதற்கு கோடிக்கணக்கான பணத்தைச் செலவிட்ட பின்பும் இப்படியொரு அக்கினி சங்கமம் மீண்டும் நடந்தால் என்ன செய்ய முடியும்.

இப்பொழுது அரைகுறையில் இருக்கும் எரிந்த கட்டிடத்தை மாற்றியமைத்து மாநகரசபையின் செயலகமாகவோ அல்லது ஓர் அரசாங்க செயலகமாகவோ பாவிக்கலாம். அப்படி மாற்று நடவடிக்கை மூலம் கட்டிடத்துக்குரிய நஷ்டஈட்டை எடுத்து புதிதாக ஒரு நூல்நிலையத்தை நவீன முறையில் ஒரு கேட்போர் கூடமும் உள்ளடக்கியதாக அமைத்தலே இக்கால கட்டத்திற்கு ஏற்புடையதாகும். யாழ்.கோட்டைக்கு அருகில் இனிமேல் இப்படியான கட்டிடங்களை அமைத்தல் பாதுகாப்பானதல்ல என்ற உண்மையை நாம் மறக்கலாகாது.

யாழ். மாநகர எல்லைக்குள் ஒரு பொதுவான வசதியுள்ள இடத்தில் நூல்நிலையத்தைப் பயன்படுத்துவோர் சுமுகமாகப் போய்வரக் கூடியதாகவும் வாகன தரிப்பிட வசதிகொண்டதாகவும் பொது நூல்நிலையம் அமைவதே சாலச்சிறந்தது. நடந்து முடிந்தவற்றில் இருந்து பெற்ற அனுபவத்தின் ஊடாக இனி மேலும் மூலை முடக்குகளில் இப்படிப்பட்ட அறிவாலயங்களை அமைக்காது பொதுமக்களின் நன்மை கருதி மக்களுக்கு பாவனைக்கு வசதியான இடத்திலேயே அமைப்பதே புத்திசா லித்தனமானதும் விவேகமானதும் ஆகும்.

தற்பொழுது நகரசபைக்குப் புதிதாக தெரிவு செய்யப்பட்டவர்கள் இந்த விடயத்தில் ஆக்கபூர்வமாக செயற்படுவார்கள் என்று நம்புகின்றோம். மேலும் யாழ் மாநகரசபையின் பல பகுதிகள் நல்லூர் வரைக்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளதால் இந் நூல்நிலையமும் கோட்டைப் பகுதிக்கு வெளியே அமைவதில் என்ன தவறு? இந் நூல்நிலையம் மறுசீரமைப்பில் ஆர்வம் உள்ள மக்கள் நன்றாகச் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

***(நன்றி: தினக்குரல் (கொழும்பு),***
***16.02.1998)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரூபா 70 கோடி செலவில்
## யாழ். பொதுநூலகம்

*[செய்தி: உதயன் [யாழ்ப்பாணம்], 23.02.1998]*

16 ஆண்டுகளுக்கு முன்னர் எரிக்கப்பட்ட யாழ் பொது நூலகம் 70 கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்கான ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்படவுள்ளன என்று யாழ் பொது நூலக பணிப்புரைக்குழு உறுப்பினரும், யாழ்.மாவட்ட முன்னாள் அரச அதிபருமான யோகேந்திரா துரைசாமி தெரிவித்தார்.

இந்த நூலகத்தை நிர்மாணிப்பதற்கான வரைபடங்கள் இந்தியக் கட்டடக்கலை நிபுணர்களின் உதவியுடன் தயாரிக்கப்படுகின்றன. பாரம்பரிய இந்தியக் கலை நுட்பத்துடன் இந்த நூலகம் அமைக்கப்படும். இந்த நூலகத்தை அமைப்பதில் ஜனாதிபதி அதிக அக்கறை கொண்டுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 150வது ஆண்டில் யாழ்.பொதுசன நூலகம்

## தீயில் சாம்பலான விலைமதிப்பற்ற ஏட்டுச் சுவடிகளை யாரால் வழங்க முடியும்?

*ந.பரமேஸ்வரன்*

இலங்கை தனது சுதந்திரதினப் பொன்விழாவைக் கொண்டாடும் வேளையில் யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் தனது 150வது ஆண்டு நிறைவை சோபையிழந்த நிலையில் கொண்டாடுகிறது. இலங்கை சுதந்திரமடைவதற்கு நூறு ஆண்டுகளுக்கு முன்னரே யாழ்ப்பாணப் பொதுசன நூல்நிலையம் தோன்றிவிட்டது.

1848ஆம் ஆண்டு அப்போது யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபராகவிருந்த சேர் வில்லியம் துவைனம் அவர்களால் யாழ்.பொதுசன நூலகம் தோற்றுவிக்கப்பட்டது. 1842 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் யாழ்ப்பாண நீதிமன்றக் காரியதரிசியாக இருந்த எல்.சி.கிரீனியரினால் உருவாக்கப்பட்ட வாசிகசாலையே 1848 இல் துவைனம் துரையினால் நூல்நிலையமாக மாற்றப்பட்டது. துவைனம் அரசாங்க அதிபராகப் பதவியேற்றதும் 3.6.1894 அன்று யாழ்.பொதுசன நூலக அபிவிருத்திக்கென கூட்டமொன்றைக் கூட்டினார். அப்போது துவைனம் யாழ். பொதுசன நூலக போஷகராயிருந்தார். இக்கூட்டத்தில் அரசாங்கத்திடமிருந்து 50 ரூபா நன்கொடையாகப் பெற்று மோடி அன் பிரதர்ஸ் நிறுவனத்திடமிருந்து நூல்கள் கொள்வனவு செய்வது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

11.12.1933 இல் அச்சுவேலியைச் சேர்ந்த க.மு.செல்லப்பா என்பவர் யாழ்ப்பாண பொதுசன நூல்நிலைய அபிவிருத்தி பற்றி துண்டுப் பிரசுரங்களை வெளியிட்டும் பத்திரிகைகளில் விளம்பரம் செய்தும் நிதி சேகரித்தார். 09.06.1934 இல் யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்ற கூட்டத்தில் ஏட்டுச் சுவடிகளை வாங்கிப் பாதுகாப்பது என்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 01.08.1934 முதல் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள கடை ஒன்றில் நூலகம் செயற்படத் தொடங்கியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01.01.1935 முதல் நூலகத்தை யாழ்.நகர அபிவிருத்தி சபை பொறுப்பேற்றுக்கொண்டது. நகர அபிவிருத்திச்சபை நூலகத்தைப் பொறுப்பேற்றதும் யாழ்ப்பாண வாடி வீட்டுக்கருகில் உள்ள ஒரு வீட்டில் சிறப்பான முறையில் நூலகம் தனது சேவையைத் தொடர்ந்தது. நூலகத்தை மேலும் சிறப்புறச் செய்யும் நோக்குடன் சாம் சபாபதி, வண.பிதா.லோங் அடிகளார் ஆகியோர் 06.06.1952 இல் கூட்டமொன்றை நடத்தினர். இக்கூட்டத்தில் களியாட்டவிழா நடத்தியும் அதிர்ஷ்ட லாபச் சீட்டு விற்பனை செய்தும் நூலக வளர்ச்சிக்கு நிதி திரட்டுவது எனத் தீர்மானிக்கப்பட்டது.

இதனையடுத்து லோங் அடிகளார் லண்டனுக்குச் சென்று தென்கிழக்காசியாவில் சிறந்த நூலகம் ஒன்றை அமைப்பது பற்றி பிரிட்டிஷ் நூலகவியல் நிபுணர்களுடன் கலந்துரையாடினார். பிரிட்டிஷ் நூலகவியல் நிபுணர்களின் சிபார்சின் பேரில் லோங் சுவாமிகள் தஞ்சாவூருக்கு வந்து நூலகவியலின் தந்தை என அழைக்கப்படும் எஸ்.ஆர்.ரங்கநாதனுடன் ஆலோசனைகளைச் செய்தார்.

லோங் அடிகளாரின் வேண்டுகோளின் பேரில் டாக்டர் எஸ். ஆர்.ரங்கநாதனும் கட்டிடக்கலை நிபுணர் நரசிம்மனும் யாழ்ப்பாணம் வருகை தந்து யாழ் கோட்டை முனியப்பர் கோயிலடிப் பிரதேசத்தை நூலகம் அமைப்பதற்குப் பொருத்தமான இடமாகத் தெரிவு செய்தனர். அத்துடன் 16.10.1953 இல் நூலகக் கட்டிட வரைபடத்தையும் தயாரித்து வழங்கினர். 29.03.1954 இல் தமிழ்ச் சம்பிரதாய முறைப்படி நூலகத்திற்கு அடிக்கல் நாட்டப் பெற்றது. அடிக்கல் நாட்டு வைபவத்தில் அப்போதைய பிரிட்டிஷ் தூதுவர் சேர். சிசில் ஐஸ், அமெரிக்கத் தூதுவர் பிலிப் குரோவ், இந்தியத் தூதரக முதல் அதிகாரி சித்தார்த்தாயி ஆகியோரும் கலந்துகொண்டனர்.

1952, 54, 59, 63 ஆகிய ஆண்டுகளில் நான்கு களியாட்ட விழாக்கள் நடத்தப்பட்டன. அதிர்ஸ்டலாபச் சீட்டு விற்பனை மூலமும், கொடி விற்பனை மூலமும் எதிர்பார்த்ததை விடக் கூடுதலான நிதி திரட்டப்பட்டது. 11.10.1959 அன்று நூலகத்தின் முதற் கட்டிடம் பூர்த்தியாக்கப்பட்டுத் திறந்து வைக்கப்பட்டது. 03.11.1967 இல் சிறுவர் பகுதியும் 1971 இல் கேட்போர்கூடம் என்பனவும் அமைக்கப்பட்டு 1973இல் நூலகத்தின் இரண்டாவது கட்டிடமும் பூர்த்தியாக்கப்பட்டு திறந்து வைக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படியாக துவைனம் துரை, டாக்டர் எஸ்.ஆர்.இரங்கநாதன் போன்றோரால் உருவாக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க யாழ்ப்பாண பொதுசன நூலகம் 31.05.1981 அன்று இரவு சிங்களக் காடையர் கும்பலினால் தீக்கிரையாக்கப்பட்டது.

யாழ்ப்பாண நூல்நிலையத்தின் சிறப்பு அதன் கட்டிடத்திலோ அல்லது நூல்களின் எண்ணிக்கையிலோ தங்கியிருக்கவில்லை. அதன் நூற் சேர்க்கையே நூலகத்தின் சிறப்பம்சமாகும். நூலகம் எரிக்கப்பட்டபோது 97000 நூல்களும் 10000 அரிய கையெழுத்துப் பிரதிகளும் நூலகத்தில் இருந்தன. இவற்றைவிட ஆவணக்காப்பகத்தில் பல விலைமதிப்பற்ற ஏட்டுச் சுவடிகளும் இருந்தன. 1586 இல் வெளியிடப்பட்ட கத்தோலிக்க மத நூல்கள் (இதில் ஸ்பானிஷ் நூல்களும் அடங்கும்) 1660 இல் கண்டிச் சிறையிலிருந்த போது ரொபேட் நொக்ஸ் எழுதிய இலங்கை வரலாறு, 1672 இல் பிலிப்ஸ் பால்டியஸ் எழுதிய ஒல்லாந்தர் கால இலங்கை வரலாறு போன்றன குறிப்பிடத்தக்கன.

இவற்றைவிட சமஸ்கிருத வேத ஏட்டுச் சுவடிகள் பலவும் வைத்திய (வாகட) ஏட்டுச் சுவடிகளும் நூலகம் எரிக்கப்பட்ட போது தீயில் சங்கம மாயின. தற்போது பதவியிலிருக்கும் சந்திரிகா அரசு நூலகத்தை புனரமைப்புச் செய்யப்போவதாகக் கூறி வெளிநாடுகளிடம் நிதி கோரியுள்ளது. அரசு வேண்டுமானால் ஒரு நவீன கணனிமயப்படுத்தப்பட்ட நூலகத்தை யாழ் மக்களுக்கு வழங்கலாம். ஆனால் தீயில் சாம்பலான ஏட்டுச் சுவடிகளையும் கையெழுத்துப் பிரதிகளையும் ஏனைய விலைமதிப்பற்ற நூல்களையும் யாராலும் வழங்க முடியாது.

***(நன்றி: தினக்குரல் (கொழும்பு),***
***28.02.1998)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிக்கப்பட்ட நூலகத்தை புனரமைக்கப் போகிறவர் யாரோ?

*பரமர்*

யாழ்.பொது நூலகம் 31.05.1981 அன்று இரவு சிங்களக் காடையர்களாலும் அரச படையினராலும் எரியூட்டப்பட்டது. (நூலகக் காவலாளியின் நீதி மன்ற வாக்கு மூலம்) நூலகம் எரிக்கப்பட்ட போது மகாவலி காணி அபிவிருத்தி அமைச்சராகவிருந்த காமினி திசாநாயக்கா யாழ்ப்பாணத் திலேயே இருந்தார். இவை உலகறிந்த விடயங்கள். இந்த நூலக எரிப்பு, ஐ.தே.கட்சி அரசுக்கு உலகெங்கும் ஓர் அபகீர்த்தியை ஏற்படுத்திவிட்டது. இதனால் நூலக புனரமைப்புக்கென முன்னாள் யாழ் அரச அதிபரும் வடகிழக்கு மாகாண ஆளுநருமான லயனல் பெர்னாண்டோ தலைமையில் ஒரு குழுவை நியமித்தது அப்போதைய அரசு. இக்குழுவும் நூலக புனரமைப்புக்கென 10.5 மில்லியன் ரூபாவை நட்டஈடாக சிபாரிசு செய்தது. ஆனால் ஜே.ஆரின் பதவிக்காலம் முடியும்வரை நூலக திருத்த வேலைகள் எதுவும் ஆரம்பிக்கப்படவில்லை.

பின்னர் ரணசிங்க பிரேமதாச ஜனாதிபதியாகப் பதவியேற்றதும் தனது அரசியல் எதிரியான காமினி திசாநாயக்கவை ஓரம் கட்டுவதற்கு யாழ்.பொதுநூலக புனரமைப்பை ஓர் கருவியாக பயன்படுத்தி வந்தார். யாழ்.பொது நூலகம் எரிக்கப்பட்டது காட்டுமிராண்டித்தனமான செயல் எனவும் தனது பதவிக் காலத்தில் எப்படியும் நூலகத்தை கட்டியே தீருவேன் எனவும் கூட்டங்களில் பேசி வந்தார் பிரேமதாச. ஆனால் பிரேமதாச வின் ஆட்சிக் காலத்திலும் நூலக புனரமைப்பு நடவடிக்கைகளெதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

தற்போதைய பொதுஜன ஐக்கிய முன்னணி அரசும் தேர்தல் காலத்தில் ஐ.தே.கட்சியினால் எரிக்கப்பட்ட யாழ்.பொது நூலகத்தை நாம் பதவிக்கு வந்ததும் கட்டியெழுப்புவோம் எனப் பிரச்சாரம் செய்து வந்தது. ரிவிரச 2 இராணுவ நடவடிக்கையின் பின் அரசின் பிரச்சாரம் மேலும் தீவிரமாகியது. அரச தொடர்பூடகங்கள் யாழ் பொது நூலக புனரமைப்பு பற்றி தலைப்புச் செய்திகளை வெளியிட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலக புனரமைப்புக்கென குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. அமைச்சர்கள் பலர் சென்று எரிந்த நூலகத்தைப் பார்வையிட்டனர். தென்னிலங்கையில் ஒரு வீட்டுக்கு ஒரு புத்தகமும் ஒரு செங்கட்டியும் சேர்க்கத் திட்டமிட்டுள்ளோம் என்றார். இவை யாவும் தொடர்பு சாதனங்களில் வெளியிடப்பட்ட செய்திகள். நடைமுறையில் நூலக புனரமைப்பு என்பது கேள்விக்குறியாகவே உள்ளது.

கடந்த 10.08.1997 அன்று யாழ்ப்பாணப் பத்திரிகையாளர் சங்கத் தினால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கலந்துரையாடலில் யாழ்.பொதுசன நூலக நூலகர் திரு வி.எஸ்.தனபாலசிங்கம் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில் நூலக புனரமைப்புப் பற்றி இதுவரை தனக்கு எதுவித தகவல்களும் கிடைக்கவில்லையெனவும் தன்னுடன் இதுவரை எவரும் இது குறித்து தொடர்புகொள்ளவில்லையெனவும் குறிப்பிட்டார். அத்துடன் ரிவிரச இராணுவ நடவடிக்கையின்போது 25000 நூல்கள் தொலைந்துள்ளதாகவும் கூறியுள்ளார். மேலும் 1995ஆம் ஆண்டு தான் கொழும்பு சென்ற போது எடுத்து வைத்துவிட்டு வந்த கலைக் களஞ்சியங்களும் இதுவரை வந்து சேரவில்லையெனவும் சுண்டிக் குளி கிளை நூலகத்தில் இராணும் நிலைகொண்டிருப்பதால் அதனை வேறிடத்திற்கு மாற்றத் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தார். நூலகம் எரிக்கப்பட்டு பதினாறு வருடங்கள் கழிந்துவிட்டன. ஜே.ஆர், பிரேமதாசா, சந்திரிக்கா ஆகியோரின் ஆட்சிக்காலத்தில் நூலகம் புனரமைக்கப்படவில்லை. அடுத்தது யார்?

*(நன்றி: சரிநிகர் (கொழும்பு), 28.07.1998)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் உயிர்பெறும் முயற்சியில் புனருத்தாரணம் பெறும் யாழ்.நூலகம்

*மகாலிங்கம் அருள்குமரன்*

தென்கிழக்காசியாவில் மிகப்பெரிய நூலகங்களில் ஒன்று எனப் புகழ்பெற்ற யாழ்ப்பாணப் பொதுநூலகம் கருகிப்போய் 18 வருடங்கள். இவ்வேளையில் பழைய இடத்தில் மீண்டும் நூலகத்தைப் புனரமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருப்பது தமிழ் மக்களின் மனங்களில் நம்பிக்கை முளைவிடச் செய்திருக்கின்றது. 1981 இல் ஆயிரக்கணக்கானவர்களின் அறிவுப் பசிக்கு ஆரமுது விருந்தளித்த அறிவாலயத்துக்கு வைக்கப்பட்ட தீயே தமிழர்களுக்கெதிரான பேரினவாதத் தீயாக மாறி எரிந்து கொண்டிருக்கின்றது. நூலகங்கள் ஒரு நாட்டின் பொதுச்சொத்துக்களில் பிரதான பங்கினை வகிக்கின்றன. மக்களின் கலை கலாச்சார பண்பாட்டு விழுமியங்கள் மற்றும் கல்வியின் வெளிப்பாட்டுச் சின்னங்களாகத் திகழ்பவை.

தமிழர்களுக்கெதிரான பண்பாட்டுப் படுகொலைக்கு பேரினவாத அரசாங்கமே பொறுப்பு என்பதை அறியாத தமிழர் எவருமே இல்லை. தமிழர்களின் குறிப்பாகத் தமிழ் மாணவர்களின் திறமை மீது பெரும்பான்மை அரசுகொண்ட காழ்ப்புணர்ச்சியின் வெளிப்பாடுதான் யாழ் நூலகம் தீக்கிரையாக்கப்பட்ட சம்பவம் எனப் பலரும் கருதினர்.

சுமார் 65 வருடங்களுக்கு முன்னர் அச்சுவேலியைச் சேர்ந்த க.மு. செல்லப்பாவும், கலாநிதி ஐசாக் தம்பையாவும் இணைந்து யாழ்ப்பாண மக்களுக்கு என பொதுநூலகம் ஒன்றை அமைப்பதற்கான மாநாடொன்றை நடத்தினர். 1934 ஆனி 9ஆம் திகதியன்று நடைபெற்ற மாநாட்டினை அடுத்து க.மு.செல்லப்பா திரட்டிய ஆயிரத்து நூற்றெண்பத்து நான்கு ரூபா இருபத்தி இரண்டு சதத்தினை (ரூபா 1184.22) மூலதனமாகக்கொண்டு முதலாவது யாழ் பொது நூலகம் ஆஸ்பத்திரி வீதியில் உள்ள வாடகை அறையொன்றில் உருப்பெற்றது. இந்நூலகம் 844 நூல்களுடனும் 30 பருவகால வெளியீடுகள் சஞ்சிகைகளுடனும் 01.08.1934 இல் திறந்து வைக்கப்பட்டது. அவ்வேளையில் நூலகத்தை மேற்கொண்டு இயக்குவதில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்ட நிதிப்பற்றாக்குறை காரணமாக அவற்றை பொறுப்பேற்று நடத்துமாறு யாழ் மாநகரசபையிடம் க.மு.செல்லப்பா வேண்டிக் கொண்டதற்கிணங்க அப்போதைய நகரபிதா அ.த.துரையப்பாவினால் 1935ஆம் ஆண்டு ஐனவரி முதலாம் திகதியன்று பொறுப்பேற்கப்பட்டது. அன்றிலிருந்து மெல்ல நடைபயின்ற நூலகத்தை நிலையான பிரமாண்டமான கட்டிடமொன்றுக்கு மாற்ற வேண்டும் என்ற எண்ணம் 1950களில் தோற்றம் பெற்றது. சாம். ஏ. சபாபதி என்பவரின் தலைமையில் 1952-06-14 இல் நடைபெற்ற மாநாடு ஒன்றினை அடுத்து புதிய கட்டிடம் ஒன்றினை அமைக்கும் பணிகள் ஆரம்பமாயின. களியாட்டம், அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்புக்கள் போன்றவற்றின் மூலம் நிதி சேகரிக்கும் திட்டத்தினை அ.த.துரையப்பா பிரேரித்ததை அடுத்து அத்திட்டம் நடைமுறைப் படுத்தப்பட்டது.

இவை மட்டுமல்லாமல் யாழ்ப்பாண மக்களின் அறிவுப்பசியும் அதன்பாலுள்ள நாட்டமும் தங்களுக்கெனத் தனியான நூலகம் அமையவேண்டுமென்ற ஆர்வத்தில் பலரும் பலவாறாக ஆதரவளித்ததாகச் சொல்லப்படுகிறது. மக்களின் மேலான ஆதரவைக் கண்டு மலைத்துப் போனவர்கள் பலர். அவர்களுக்கு அதி.வணக்கத்துக்குரிய லோங் அடிகளார் மிகுந்த அக்கறை காட்டினார். லோங் அடிகளாரின் அயராத முயற்சியின் மூலமாக நூலகத்துறையில் நிபுணத்துவம் மிக்க கலாநிதி. எஸ்.ஆர். ரங்கநாதன் நூலக அமைப்புக்கான திட்டங்களை வகுத்துக்கொடுக்க, சென்னை அரச கட்டடக்கலை நிபுணர் கே.எஸ்.நரசிம்மன் வரைபடங்களை அமைத்துக் கொடுத்ததும் புதிய கட்டிடத் தொகுதிக்கான அடிக்கல்நாட்டுவிழா நடைபெற்றது. புதியகட்டிடம் ஒன்றை அமைப்பதற்கான திட்டம் முன்வைக்கப்பட்டு 9 மாதங்களில் 1953ஆம் ஆண்டு பங்குனி 29ஆம் திகதி அடிக்கல் அதி.வண.லோங் அடிகளாரால் நாட்டப்பட்டது.

திராவிடக் கட்டடக்கலை மரபிலான யாழ்ப்பாணப் பொதுசன நூலகக் கட்டிடம் 11.10.1959 இல் யாழ்.மாநகர மேயர் அ.த.துரையப்பாவால் திறந்துவைக்கப்பட்டது. இக்கட்டிடம் 15,910 சதுர அடி பரப்பு உடையதாகும். அன்றுடன் எழில்தரு தோற்றம் பெற்றது யாழ்ப்பாண நூலகம். கவினுறு யாழ்.அன்னை யாழில் இன்னிசையை மீட்டிடும் அழகிய முகப்புத் தோற்றத்துடன் நின்ற எம் அறிவாலயம், பெயர் சொல்லக்கூடிய புகழ்கொண்ட அந்தப் பேராலயத்தில் இரவல் கொடுக்கும் பகுதி, பத்திரிகை, சஞ்சிகைகள், பருவகால வெளியீடுகளைக்கொண்ட வாசிக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாலைப்பகுதி, உசாத்துணைப்பகுதி, கருத்தரங்கு மண்டபம், கலாபவனம், மற்றும் காரியாலயம், நூற்சேகரிப்புக் கூடம் ஆகிய பிரிவுகள் அமைந்திருந்தன. மிகத் தொன்மையான வரலாறும் அபரிமித வளர்ச்சியும் பேரும் புகழும் மிக்க பிரமாண்டமான நூலகத்தில் தீ கொழுந்துவிட்டு எரிந்த இரவு தமிழர் தம் வாழ்வில் என்றும் என்றென்றும் மறக்க முடியாத ஓர் இரவு.

1981 யூன் மாத முதல் நாளின் விடிகாலை வேளை மே 31ஆம் திகதியின் நள்ளிரவில் 97ஆயிரம் நூல்கள் தீயோடு போராடி தீக்குள் சங்கமித்த அந்த நாள் இன்னும் எல்லோர் நினைவுகளிலும் இருக்கின்றது. யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தலுக்கான பிரச்சாரக் கூட்டமொன்று நாச்சிமார் கோவிலடியில் நடைபெற்றுக்கொண்டிருந்த வேளையில் வந்த இனந்தெரியாத இளைஞர்களினால் பொலிசார் சுடப்பட்டதை அடுத்தே வன்செயல் வெடித்ததாகச் சொல்லப்படுகிறது. குடாநாட்டின் வரலாற்றில் மறக்கமுடியாத அளவுக்கு அந்த வன்செயல் பேரினவாதிகள் இட்ட தீ யாழ்ப்பாணத்தவர்களிடம் மட்டுமல்ல, சர்வதேச ரீதியிலும் ஆறாத ரணமாக அனைத்துலகினதும் கவனத்தை ஈர்த்துவிட்டது. அன்று மாபெரும் நூலகம், குடாநாட்டில் தனியொரு பத்திரிகையாக இயங்கிவந்த ஈழநாடு பத்திரிகையின் காரியாலயம், கடைகள் உட்பட 90 கட்டிடங்கள் வன்முறையாளர்களினால் தீக்கிரையாக்கப்பட்டன.

யாழ்ப்பாணத்தில் நடந்த சம்பவங்களுக்கு அரசாங்கம் முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும் என ஏகமனதாக யாழ். மாநகரசபையில் தீர்மானம் இயற்றப்பட்டதோடு அப்போதைய மாநகர மேயர் இராஜா விசுவநாதன் யூன் மாதம் முழுவதையும் துக்க நாட்களாக கொண்டாடும்படி பொதுமக்களிடம் வேண்டுகோளும் விடுத்தார். இந்தச் சம்பவம் காரணமாக உள்ளூரிலும் சர்வதேச ரீதியிலும் எழுந்த அனுதாப அலைகளும் கண்டனக் குரல்களும் விரைவில் புதியதொரு நூலகத்தை நிறுவுவதற்கான உதவும் கரங்களின் எண்ணிக்கையைக் கூட்டியது. யாழ் பொது நூலகப் புனரமைப்புக்கு வெளிநாட்டுத் தூதராலயங்கள் உட்பட பல அமைப்புக்கள் நிதிஉதவி செய்ய முன்வந்தன. உள்ளூரில் லயன்ஸ் கழகம், இன்ரறக்ட் கழகம் முதலானவற்றோடு பாடசாலை, பல்கலைக்கழக மாணவர்களின் நிதி சேகரிப்பு மூலமும் நிதி சேகரிக்கப்பட்டது. ஆசியா பவுண்டேஷன் அமைப்பும் உதவிகளைத் தர முன்வந்திருந்தது. சிங்கள அரசியல்வாதிகளும் நிதியுதவிகளைச் செய்தனர். அதே வேளை யாழ்.மாநகரசபை உறுப்பினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யோ.சு.செல்வநாயகம் தன் மாதாந்தப் படியை நூலகப் புனரமைப்புக்கென கொடுப்பதற்காக மேயருக்கு விண்ணப்பிக்க அதை ஏற்றுக்கொண்ட மேயர் தானும் தன் மாதாந்தப் படிகளை புனரமைப்புக்கு வழங்க முன்வந்ததை அடுத்து உறுப்பினர் தியாகராசாவும் தன் மாதாந்தப் படியை வழங்கினார். இவ்வாறு நிதியுதவித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுவது ஒருபுறமிருக்க எரிந்த வடு மாறுவதற்குள் ஒரு மாதத்திற்குள் தற்காலிக கொட்டகை ஒன்றினுள் நூலகம் நிறுவப்பட்டது. எரிந்து எஞ்சிய ஒரு தொகுதி நூல்கள் மாநகர மண்டபத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருந்தன. 17.6.1981 முதல் எரிந்த நூலகக் கட்டிட வளவில் அமைந்த சைக்கிள் கொட்டகையினுள் வாசிகசாலையும் சிறுவர் பகுதியும் செயற்படத் தொடங்கின. இங்கு ஆவணப்படுத்தப்பட்டிருந்த பல அச்சேறாத ஓலைச் சுவடிகளும் வேறுபல நூல்களும் கிடைத்தற்கரிய பொக்கிஷங்களும் அழிந்தவை அழிந்தது தாம்.

பழைய நிலைக்கு ஓரளவாகினும் நூலகத்தைக் கொண்டுவரப் போதிய நிதியுதவிகளுக்காகப் பல திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இந்தியாவின் தமிழகத்தில் இந்தப் பேரழிவை ஜீரணிக்க முடியாத தமிழக முதல்வர் எம்.ஜி.ஆர் வீட்டுக்கொரு நூல் பெறும் பணியில் இறங்கியதோடு இப்பணிக்கு மனமுவந்து நிதிஉதவி அளிக்குமாறு பல மனிதநேய அமைப்புக்களிடம் வேண்டுகோளும் விடுத்தார். யாழ்ப்பாணத்தில் மே 22, 1982 முதல் நூலாக வாரம் அனுஷ்டிக்கப்பட்டு கொடி விற்பனை மூலம் நிதி சேகரிக்கப்பட்டது. தமிழ் நாட்டு அரசின் ஆஸ்தான நர்த்தகி செல்வி சுவர்ணமுகியின் நடன நிதியுதவி நிகழ்ச்சியொன்று வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்று அதன் மூலம் நிதி சேகரிக்கப்பட்டது. அத்தோடு பல்கலைக்கழக மாணவர்கள் வீடு வீடாகச் சென்று நிதி சேகரித்ததாகவும் கூறப்படுகின்றது. இதற்கிடையில் யாழ் நூலகம் எரிக்கப்பட்ட கோரச் சம்பவத்தை நினைவு கூர்ந்தும் அச்செயலை வன்மையாகக் கண்டிக்கும் வகையிலும் ஏற்பாடு செய்யப்பட்ட 1ஆம் ஆண்டு நிறைவு உண்ணாவிரத நிகழ்வில் கலந்துகொண்ட பொதுமக்களுக்கு 02.06.1982 அன்று சட்டைகளில் அணிவதற்காக கறுப்புப் பட்டிகளை வீதியோரத்தில் வைத்து வழங்கிகொண்டிருந்த பிரபாகரன் என்ற இளைஞர் 02-06-1982 அன்று இரகசியப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டு குருநகர் இராணுவமுகாமில் தடுத்து வைக்கப்பட்டதாக யூன் 3ஆம் திகதி ஈழநாடு செய்தி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிட்டிருந்தது. அப்போதிலிருந்தே சுதந்திரநிலை பறிபோய் விட்டதாகவே கருதப்படுகின்றது.

ஜனநாயக நாடு ஒன்றில் பொதுமக்கள் என்ற உரிமையில் தமது உணர்ச்சிகளை பேரினவாதிகளின் அடக்குமுறைக்கெதிராக சாத்வீக முறையில்கூடக் குரலெழுப்பும் உரிமை பறிக்கப்பட்டதே இளைஞர் மத்தியில் சுதந்திர உணர்வைத் தூண்டிவிட்டது. ஜனநாயக நாட்டில் அதுவும் அமைதியான முறையில் தம் உணர்வுகளை வெளிப்படுத்தியது தவறு என்றால் அடக்குமுறையாளர்களினால் அறிவாலயம் தீக்கிரையாக்கப்பட்டது எந்தவகை? அழிவுக்குப் பிறகு மீண்டும் 1984 முதல் ஓரளவு நூல்களுடன் அதே இடத்தில் நூலகம் இயங்கத்தொடங்கியது. அந்நாளிலிருந்து 18.06.1990இல் யாழ் கோட்டைப் பகுதியில் இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் இரண்டாம் கட்ட ஈழப்போர் ஆரம்பமாகும்வரை யாழ்.நூலகம் யாழ்ப்பாண மக்களுக்குச் சிறப்பான சேவையை ஆற்றிவந்தது.

1990ஆம் ஆண்டின்பின் கோட்டைப் பகுதியிலிருந்து ஏவப்பட்ட ஷெல்கள், துப்பாக்கிச் சூடுகளால் மீண்டும் நூல்கள் அழிவை எதிர்நோக்கின. முன்னர் தீக்கிரையானது போல இம்முறை ஷெல் வீச்சுக்கு இலக்காகி அழிந்து போய்விடக்கூடாது என்பதற்காக மாநகரசபை நூல்களை அவ்விடத்திலிருந்து அப்புறப்படுத்தி மாநகர எல்லைக்குட்பட்ட பகுதிகளில் யாழ்.பொதுசன நூலகத்தின் கிளை நூலகங்களைத் திறந்து சேவை ஆரம்பிக்கப்பட்டது. இந்த அடிப்படையில் யாழ்.மாநகர சபை அலுவலகத்துக்கு அருகில் நல்லூர் கிளை நூலகம், சுண்டிக்குளி, குருநகர், மூர்வீதி, நாச்சிமார்கோவிலடி ஆகிய கிளை நூலகங்களோடு இந்து சமய நூல்களுக்கெனத் தனியாக மாநகரசபையின் நாவலர் கலாச்சார மண்டபத்திலும் நூல்கள் பிரிக்கப்பட்டு சேவையாற்றப்பட்டது.

1995இல் இடம்பெயர்வு ஏற்படும்வரை ஆறு கிளை நூலகங்களிலும் சுமார் 85ஆயிரம் நுல்கள் இருந்தன. ஆனால் துர்அதிர்ஷ்டவசமாக இடப்பெயர்வினால் எடுத்தவர்கள் திருப்பிக்கொடுக்காமலும், திருடப்பட்டும் 29ஆயிரம் நூல்களை யாழ்.நூலகம் இழந்துள்ளது. இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த பின்னர் அந்தக் கிளை நூலகங்கள் அவ்விடத்திலேயே இயங்க, யாழ் பொதுசன நூலகம் சுண்டுக்குளியில் அமைந்துள்ள செயலகக் கட்டிடமொன்றில் சுண்டுக்குளி கிளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகத்தையும் சேர்த்து இயங்கி வருகின்றது. (இக்கட்டுரை மார்ச் 2000இல் எழுதப்பட்டது)

1998ஆம் ஆண்டு தைப்பொங்கல் தினத்தன்று, இங்கு நூல்நிலையம் திறக்கப்பட்டுள்ளது. இங்கு 25ஆயிரம் நூல்கள் உள்ளன. எல்லாக் கிளைகளிலும் சேர்த்து 84ஆயிரம் நூல்கள் உள்ளன. இவ்வேளையில் யாழ் பொதுசன நூலகத்தின் பழைய சேதமாக்கப்பட்ட கட்டிடப் புனரமைப்புப் பணிகளை அரசு முடுக்கிவிட்டிருந்தது.

அரசு புதிதாக கட்டிடம் கட்டினாலும் புதிய நூல்கள் வாங்கிப் போட்டாலும் அழிந்த ஆவணங்களை எங்கே பெறுவது? 97ஆயிரம் நூல்களுக்குப் பதிலாக இருமடங்கு நூல்களைச் சேர்த்துவிடலாம். ஆனால் சர்வதேச தரம்மிக்க நூல்நிலையங்களில் ஒன்றெனப் பெயர் பெற்ற பழைய தரத்தினை இனி எப்போது எட்டுவது? தொலைந்தவை தொலைந்தது தான். தமிழர்கள் தம் வாழ்வையே தொலைத்த இனவெறியர்களின் கோரப்பசி, அன்று இட்ட தீ இன்று வரை கனன்று கொண்டுதான் உள்ளது. அரசின் முயற்சியும், சர்வதேச நிதி நிறுவனங்களின் உதவியும் யாழ்.பொதுசன நூலகத்தைப் புதுப்பொலிவு பெறச் செய்யும் என்பதில் அர்த்தமில்லை. கோடிக்கணக்கில் செலவழித்துக் கட்டிடங்களைக் கட்டும் அரசாங்கமே பின்னர் அவற்றை தவிடுபொடியாக்கிய வரலாறுகள் பல எம் மண்ணில் உண்டு. எனவே புதுப்பொலிவு பெற்றுக்கொண்டிருக்கும் நூலகக் கட்டிடம் என்றும் நிலைக்குமா என்பது கேள்விக்குறிதான்.

*(நன்றி: ஞாயிறு தினக்குரல் (கொழும்பு), 09.04.2000)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடிவை நோக்கிய ஒரு பயணம்: யாழ்ப்பாணத்துப் பொதுசன நூலகம்

*என். செல்வராஜா*

யாழ்ப்பாணத்து மக்களின் அறிவுப்பொக்கிஷமாகத் திகழ்ந்த யாழ்ப்பாணத்துப் பொது நூலகக் கட்டிடம் தன்னகத்தே கொண்டிருந்த விலை மதிப்பற்ற 97,000 நூல்களுடன் 1981 ஆம் ஆண்டு மே மாதம் 31ம் திகதி இரவோடு இரவாகத் தீக்கிரையாக்கப்பட்டமை வரலாறு.

29.05.1954 அன்று சர்வதேச அறிஞர் ஐவரால் அடிக்கல் நாட்டி ஆரம்பித்து வைக்கப்பட்ட திராவிட சிற்பவியல் பாங்கில் அமைக்கப்பெற்ற இக்கட்டிடத்தின் மூல வரைபு இந்தியக் கட்டடக் கலைஞர் திரு நரசிம்மராவ் அவர்களால் நூலகவியல் அறிஞர் எஸ் ஆர் இரங்கநாதன் அவர்களது ஆலோசனைக்கேற்ப உருவாக்கப்பட்டது. 1981இல் எரியும் வரை இக்கட்டிடம் தன் மூன்றாம் கட்டநிர்மாணப்பணியை முடித்து முழுமையடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

பன்நாட்டு நன்கொடைகள், பொதுமக்கள், மற்றும் வர்த்தகப் பிரமுகர்களின் நிதிஉதவியால், தன் தரைத் தளத்தைப் பூர்த்தியாக்கி 11.10.1959 அன்று யாழ்ப்பாணப் பொதுசன நூலகமாகச் சேவையாற்றத் தொடங்கியது. கால ஓட்டத்தில் பூர்த்தியாக்கப்பட்ட மேல்தளம் 03.11.1967 அன்று திறந்து வைக்கப்பட்டதையடுத்து சிறுவர் பகுதியுள்ளிட்ட பல பிரிவுகளுடன் முழு மூச்சுடன் தன் சேவையை ஆற்றத்தலைப்பட்டது.

நூலகவியல் அறிஞர் (கலாநிதி) வே.இ.பாக்கியநாதன் அவர்களின் துறைசார் வழிகாட்டுதலுடன் சர்வதேச தரத்தை எட்டும் நோக்குடன் வீறுநடை போட்டுத் தென் கிழக்கு ஆசியாவின் சிறந்த பொது நூலகங்களின் வரிசையில் முதலிடத்தில் இருந்த இந்த அறிவகம் 01.06.1981 அன்று முற்றாக எரியுண்டுபோனது.

அதன் பின்னர் இன்று வரை காலத்துக்குக் காலம் சாம்பலிலிருந்து துளிர்த்தெழுவதும் துர்ப்பாக்கியமான அரசியல் காரணங்களால் மீண்டும் வாடி வதங்குவதுமாகத் தன் பத்தொன்பதாம் ஆண்டை எதிர்நோக்கி நிற்கின்றது. இவ்வேளையில் யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் கடந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்த பாதை எவ்வாறு அமைந்தது என்பதை அறியும் ஆவலினால் ஏற்பட்ட தேடலின் விளைவு இந்தக் குறிப்பாகும்.

1981 இல் எரியுண்ட பின்னர் நூலகத்தை மீளக் கட்டியெழுப்ப அந்நாள் யாழ் மாநகர முதல்வர் இராஜா விஸ்வநாதன் மற்றும் யாழ் மாநகர ஆணையாளர் சீ.வீ.கே. சிவஞானம் ஆகியோரின் முயற்சியால் யாழ்ப்பாணத்துப் பொதுசன நூல்நிலையத்தை மீள்விப்பதற்கான திட்டம் ஒன்று மனித உரிமைகள் தினமான 10.12.1982 அன்று முன்வைக்கப்பட்டு நிதி சேகரிப்பு நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டன. மீளமைப்பு நடவடிக்கைகள் இரு கட்டமாக மேற்கொள்ளப் பட்டது. எரிந்த கட்டிடத்தில் புதுப்பிக்கத் தக்க நிலையிலிருந்த வடபாகக் கட்டிடத்தை புனரமைப்புச் செய்வது ஒரு கட்டமாகவும், நரசிம்மராவின் மூலப்பிரதியின் படியான நூலகக் கட்டிடத்தின் மூன்றாம் கட்ட வேலையைத் தொடங்குவது மறு கட்டமாகவும் திட்டமிடப்பட்டது.

திருத்தியமைக்கப்பட்ட கீழ்த்தளத்தில் இடைக்கால ஒழுங்காக வாசிகசாலைப் பகுதி, சிறுவர் பகுதி, உடனுதவும் பகுதி ஆகியன 10.12.1982 ஆம் திகதியிலும் இரவல் கொடுக்கும் பகுதி 14.07.1983ஆம் திகதியிலும் திறந்து வைக்கப்பட்டன. இதுவரை காலமும் யாழ் மாநகர எல்லைக்குள் வசிப்பவர்களுக்கு மட்டும் என வரையறை செய்யப்பட்ட இரவல் பெறுவோர்க்கான அங்கத்துவம் 10.01.1984 முதல் முழு யாழ்ப்பாண மாவட்டத்திலும் உள்ளவர்களுக்கும் திறந்து விடப்பட்டு விரிவாக்கப்பட்டது. புனரமைப்புச் செய்யப்பட்ட கட்டிடம் 04.06.1984 அன்று கோலாகலமாகத் திறக்கப்பட்டு கொண்டாடப்பட்டது.

இந்த நெருக்கடி காலக் கோலாகலம் நீண்ட காலத்துக்கு நீடிக்கவில்லை. யாழ்ப்பாணத்துப் போர்ச்சூழல் காரணமாக, குறிப்பாக யாழ். கோட்டைச் சூழல் இராணுவக் கெடுபிடிகளுக்கு உட்பட்டதால் பாதுகாப்பின்மை காரணமாக நூலகத்தை பாவிப்பவர்கள் குறையத் தொடங்கினார்கள். இதனால் யாழ்ப்பாணத்துப் பொதுசன நூலகம் இடம் பெயர வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டது. படிப்படியாக நூல்களும் தளபாடங்களும் நல்லூர் கோவிலுக்கு அருகாமையிலிருந்த மாநகர சபையின் இந்து விடுதிக்கு மாற்றப்பட்டது. நூலகர் அலுவலகம் மற்றும் முக்கிய நிர்வாகப் பணிகள் இந்து விடுதியில் இயங்கியது. நூலகத்தின் சேர்க்கைகள் நல்லூர், சுண்டிக்குளி ஆகிய பகுதிகளில் அமைந்த யாழ் மாநதர சபையின் கிளை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகங்களுக்குப் பிரித்து அனுப்பப்பட்டன. 1981ம் ஆண்டுக் காலப்பகுதியில், குறிப்பாக இக்கட்டான எரியூட்டுக் காலப்பகுதியில், நூலகராகப் பணியாற்றிய திருமதி ரூபவதி நடராஜா இளைப்பாற வேண்டிய வேளை ஏற்பட்டபோது, திரு. அருளானந்தம், திரு. சபாரட்ணம் ஆகியோரும் பதில் நூலகர்களாக சிலகாலம் பணியாற்றினர். அதன் பின்னர் அந்நாளில் உதவி நூலகராக இருந்த செல்வி சுலோசனா இரகுநாதன் அவர்கள் பதில் நூலகராகப் பொறுப்பேற்றார். நூலகத்தின் ஒழுங்கான வழிகாட்டுதலுக்காக இக்காலப் பகுதியில் கலாநிதி வே.இ. பாக்கியநாதன் அவர்களது சேவையும் ஒப்பந்த அடிப்படையில் பெறப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்துப் பொது நூலகத்தின் உறுதியான எதிர்காலத்தை உத்தேசித்து நிரந்தர நூலகரும் ஓரளவு நிரந்தரமான கட்டிட வசதியும் தேவை என்ற கருத்து காலத்துக்குக் காலம் வலியுறுத்தப்பட்டு வந்துள்ளது. இதன் பயனாக, திருகோணமலை நகரசபை நூலகத்தின் பிரதம நூலகராக நீண்டகாலம் கடமையாற்றிய திரு வி.எஸ்.தனபாலசிங்கம் அவர்கள் யாழ்ப்பாணத்துப் பொதுசன நூலகராகப் பொறுப்பேற்றார்.

யாழ். முத்திரைச் சந்தைக்கு அண்மையிலுள்ள யாழ் மாநகர சபை வளவில் தற்காலிக நூலகம் ஒன்றும் அமைக்கப்பட்டு மீண்டும் யாழ்ப்பாண நூலகம் தன் சேவையை மட்டுப்படுத்தப்பட்ட சுதந்திரத்துடனும் வளத்துடனும் தொடர்ந்தது. 1992ம் ஆண்டின் பின் 1995 வரையிலான காலப்பகுதி யாழ்ப்பாண நூல்நிலைய வரலாற்றில் குறிப்பிடத்தக்க அபிவிருத்தியை கண்டுநின்றது. மாநகரஆணையாளர் திரு. வி.பி.பால சிங்கம் அவர்களின் அயராத முயற்சியின் பயனாக பல லட்சம் ரூபா பெறுமதியான நூல்களை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணப் பொது நூலகத்துக்குத் தருவித்துப் பெற்றுக்கொள்ள முடிந்தது. ஏ9 பாதையின் போக்குவரத்துப் பிரச்சினைகள் மற்றும் பொருளாதாரத் தடைகளுக்கு மத்தியில் நூல்களையும் தளபாடங்களையும் யாழ்ப்பாணத்துக்கு எடுப்பிப்பதென்பது அவ்வேளையில் மிகவும் கடினமான காரியமாக இருந்தது.

இவ்வேளையில் 1997ஆம் ஆண்டு நடுப்பகுதியில் தேசிய நல்லிணக்கத்தை ஏற்படுத்துவது என்ற பதாதையுடன் சிறீலங்கா அரசினால் உருவாக்கப்பட்ட வெண்தாமரை இயக்கம் 10.04.1997 அன்று

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமது செயற்திட்டங்களை வைபவரீதியாக முன்வைத்தது. அதன் பல்வேறு செயற்திட்டங்களுக்குள் யாழ்ப்பாணத்து நூலகத்தை மீளக் கட்டி எழுப்புவதும் ஒன்றாகும்.

முன்னோடி நடவடிக்கையாக யாழ்ப்பாணம் பழைய கச்சேரிக்கு அருகில் அமைந்துள்ள வீடமைப்பு அதிகார சபையின் கட்டிடத்தில் 14.01.1998 அன்று பொங்கல் தினத்தன்று தற்காலிக நூலகம் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது. காலக்கிரமத்தில் எழுபது கோடி ரூபாவில் ஒரு நிரந்தரக் கட்டிடம் அமைத்துக் கொடுக்கப்படும் என்று அங்கு கூறப்பட்டது. அங்குரார்ப்பணக் கூட்டம் பலத்த ராணுவக் கெடுபிடிகளுடனும் தபால் தந்தி தொலைத் தொடர்பு அமைச்சர் மங்கள சமரவீர, கல்வி உயர் கல்வி அமைச்சர் ரிச்சட் பத்திரன, சமூக சேவை அமைச்சர் பேர்ட்டி பிரேமலால் திசாநாயக்க ஆகியோரின் பங்கேற்புடனும் இடம் பெற்றது. எவ்வளவு வாக்குறுதிகள் அளிக்கப்படினும் அவற்றின் நடைமுறைச் சாத்தியம் பற்றிய ஆழமான சந்தேகங்கள் எப்படியும் எழவே செய்யும். அதற்கு கடந்தகால அனுபவங்கள் சான்றாக உள்ளன.

1981 மார்ச் 31க்கும் ஜூன் 03க்கும் இடைப்பட்ட காலத்தில் யாழ்ப்பாண மாநகர எல்லைக்குள் அமைந்த சொத்துக்களுக்கு வன்செயல்களால் விளைவிக்கப்பட்ட சேதங்களை மதிப்பீடு செய்து வழங்கப்பட வேண்டிய நட்டஈட்டுத் தொகைகளைப் பரிந்துரை செய்து அறிக்கை சமர்ப்பிக்கும் பொறுப்பை முன்னைய அரசு முன்னாள் யாழ்ப்பாண அரசாங்க அதிபரான லயனல் பெர்னாண்டோ அவர்களின் தலைமையிலான தனிநபர் விசாரணைக் கமிஷன் ஒன்றை அமைத்து அதனிடம் வழங்கியிருந்தது. அக்குழுவின் பரிந்துரையில் எரியுண்ட யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்திற்கான நட்டஈடாக ஒரு கோடியே இரண்டு லட்சம் ரூபா பரிந்துரைக்கப்பட்டிருந்தது.

பரிந்துரைக்கமைய நட்டஈடு வழங்கும் நடவடிக்கை எடுக்கும் பொறுப்பை யாழ்ப்பாண அரச அதிபருக்கு வழங்கிய அப்போதைய அரசாங்கம், லயனல் பெர்ணாண்டோவின் பரிந்துரைக்கமைய நட்டஈடு வழங்கப்பட வேண்டியவர்களின் பட்டியலில் யாழ்ப்பாண நூலகத்தை நீக்கி விட்டிருந்தது. அதற்குப் பதிலாக ஜனாதிபதி நம்பிக்கை நிதியத்திலிருந்து பத்து லட்சம் ரூபாவுக்கான ஒரு தொகையை எடுத்து அதை ஆரம்ப முதலாக இட்டு ஜனாதிபதியின் யாழ்ப்பாணப் பொது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூல் நிலையப் புனரமைப்பு நிதி என்ற பெயரில் ஒரு வங்கிக் கணக்கு ஆரம்பிக்கப்பட்டது. பொதுமக்களிடமிருந்தும் மேலதிக நிதி திரட்டப் பெற்றும் இந்த நம்பிக்கை நிதியத்துக்கு செலுத்தப்பட்டது. பின்னாளில் இந்நிதியத்திலிருந்தே இருபது லட்சம் ரூபா யாழ்ப்பாணத்து பொதுசன நூல்நிலையத்துக்கு நட்டஈடாக வழங்கப்பட்டது. லயனலின் பரிந்துரை இன்னமும் கருத்துக்கெடுக்கப்படவில்லை. இத்தகைய கசப்பான அனுபவங்களின் காரணமாக அண்மைக்கால வெண்தாமரை இயக்க நூலக புனரமைப்பு முயற்சிகளும் அரச இயந்திரங்களின் புத்தகமும் செங்கல்லும் போன்ற நிதி வசூலிப்பு விளம்பரங்களும் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற தற்காலிக நூலக அங்குரார்ப்பணமும் தமிழ் மக்கள் மனதில் பாரிய பாதிப்பெதனையும் ஏற்படுத்தியதாகக் கருதமுடியவில்லை.

யாழ்ப்பாண பொதுசன நூல்நிலையம் பாதுகாப்புக் காரணங்களுக்காக இடம் மாறிய போது கிளை நூலகங்கள் யாழ்ப்பாண வாசகர் மத்தியில் அதிக செல்வாக்கைப் பெற ஆரம்பித்தன. நூலகத்தின் சேர்க்கைகள் கிளை நூலகங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டதால் தமது சேவைத்திறனை அதிகரிக்க வேண்டிய கட்டாயம் கிளைகளுக்கு ஏற்பட்டது. அன்று முதல் இன்றுவரை கிளை நூலகங்கள் யாழ்ப்பாணத்தில் முக்கியத்துவம் பெற்று நிற்கின்றன. யாழ்ப்பாண பொது நூலக நிர்வாகத்துடன் கிளை நூலக நிர்வாகமும் சேர்ந்து பொதுசன நூலகத்தின் நூலகரின் வேலைப் பளுவை அதிகரித்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

1998ம் ஆண்டு பொங்கலன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்ட தற்காலிக நூலகத்தின் (இடைக்கால நூலகம்) நிர்வாகம் ஜனாதிபதியின் நூலகக் குழுவின் நிர்வாகத்துக்குட்பட்டதாக உள்ளது. மாநகர ஆணையாளர் அதன் நிறைவேற்று அதிகாரம் கொண்ட அதிகாரியாகச் செயற்படுகின்றார். இடைக்கால நூலகத்துக்கான நூல்கள் பல்நாட்டு அரசுகளிடமிருந்து அன்பளிப்பாகப் பெறப்பட்டு வெளிநாட்டமைச்சினூடாக அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. 1998 ஜுலை மாதமளவில் ஏறத்தாள 20000 நூல்கள் சேகரிக்கப்பட்டுள்ளதாக தகவல் உண்டு. தேர்ந்த நூல் கொள்வனவுக்கு போதிய நிதி ஒதுக்கப்படாமையால் அன்பளிப்புகளை நம்பியே இடைக்கால நூலகம் தற்போது இயங்குகின்றது. இடைக்கால நூலகத்துக்கென ஜனாதிபதி நிதியிலிருந்து மூன்று மில்லியன் ரூபா ஆரம்பச் செலவினங்களுக்கென வழங்கப்பட்டிருந்தபோதிலும், அன்பளிப்புகளால் நிறைந்து வரும் நூல்களை இட்டு வைக்க மேலதிகத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தளபாட வசதி இல்லாமை குறிப்பிடத்தக்கது. மேலதிக நிதியை எதிர்நோக்கி இருக்கும் நிலையும் அங்கு காணப்படுகின்றது.

இடைக்கால நூலகத்துக்கென பிரிட்டிஷ் கவுன்சில் ஆங்கில நூல்களையும் இரு கம்பியூட்டர்களையும் வழங்கியுள்ளது. இந்திய மத்திய அரசும் தமிழக அரசும் பெறுமதிமிக்க நூல்களை வழங்கியுள்ளன. மத்திய அரசு 800க்கும் மேற்பட்ட புராணக் கதைகள் சம்பந்தமான நூல்களையும் இலக்கியம் ஆய்வு தத்துவ நூல்கள் மற்றும் பாடப் புத்தகங்களையும் வழங்கியுள்ளது. டில்லியில் உள்ள இலங்கை உயர் ஸ்தானிகராலயத்தினூடாக இது வழங்கப்பட்டுள்ளது. தமிழக அரசு சென்னையிலுள்ள இலங்கைப் பிரதிநிதியூடாக 1500க்கும் மேற்பட்ட நூல்களைக் கையளித்துள்ளது. கொழும்பிலுள்ள இந்திய உயர் ஸ்தானிகரின் காரியாலயம் யாழ்ப்பாண நூலகத்துக்கு இருபதிற்கும் மேலான தமிழ் சஞ்சிகைகளையும் பத்திரிகைகளையும் கிரமமாக யாழ் அரசாங்க அதிபர் மூலமாக அனுப்பிவருகின்றதென்ற செய்திக் குறிப்பும் (வீரகேசரி 18.01.98) குறிப்பிடத்தகுந்தது. குறுகிய கால நோக்கத்தோடல்லாது நீண்ட கால உதவியாக இத்தகைய அன்பளிப்புகள் அமைய வேண்டும் என்பது விரும்பத்தக்கது. பிரிட்டிஷ் இந்திய உதவிகள் தவிர Book Aid International, Asia Foundation, ஆகிய நிறுவனங்களும் நூல்களை அன்பளிப்பாக வழங்கியுள்ளன.

வீடமைப்பு அதிகார சபையின் மூன்று மாடிக் கட்டிடத்தில் தற்போது தரைத்தளம் மாத்திரம் திருத்தப்பட்டு அதில் இடைக்கால நூலகம் இயங்குகின்றது. ஏனைய இரு தளங்களும் திருத்தப்பட்டால் முழுமையாக இயங்க முடியும்.

இக்கட்டான இக்காலகட்டத்தில் மட்டுப்படுத்தப்பட்ட வளங்களைக் கொண்டு விடாப்பிடியாக நூலக அபிவிருத்தி காண்போம் என்ற குறிக்கோளுடன் இயங்கும் மாநகர ஆணையாளரும், நூலக ஊழியர்களும் வாழ்த்துக்குரியவர்கள்.

*(நன்றி: நம்நாடு (கனடா)*
*20.04.2000)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலகர் நெஞ்சை விட்டகலா நினைவலைகள்

*கலாநிதி வே.இ. பாக்கியநாதன்*
(முன்னாள் பிரதம நூலகர்,
யாழ்ப்பாணப் பொதுசன நூலகம்)

இக்கட்டுரையை வடிவமைக்கும் வேளையில் கலாநிதி வே.இ.பாக்கிய நாதன் அவர்கள் 06.11.2000 அன்று அவுஸ்ரேலிய மருத்துவமனை ஒன்றில் சத்திரசிகிச்சையொன்றின் போது காலமான மறைவுச்செய்தி கிட்டியது. அவர் இறுதியாக 24.10.2000 அன்று எனக்கு தபாலில் அனுப்பி வைத்த இக்கட்டுரையே அன்னாரின் இறுதிக் கட்டுரையாகும் - என்.செல்வராஜா

யாழ்ப்பாணப் பொது நூலக வளர்ச்சிக் கட்டத்திலும் அது 1981இல் எரியுண்ட பின்பும் அந் நூலகத்தின் பிரதம நூலகராக இருமுறை சேவை யாற்றி இருந்தபடியினால் நூலகர் நோக்கில் நின்று யாழ். பொது நூலக நினைவுகளை நிரைப்படுத்தித் தருமாறு நூலகர் திரு. என்.செல்வராஜா கேட்டுக்கொண்டதற்கிணங்க இக் கட்டுரையை எழுதியுள்ளேன்.

இது காலவரை நூலக நற்பெயருக்கும் வளர்ச்சிக்கும் பொறுப்பாளர் களாகவிருந்த நூலகர்கள் பற்றியே பலரும் எழுதியும் பேசியும் வந்துள்ளனர். தனிமரம் தோப்பாகாது என்பது போல நூலகர்கள் தான் நூலக நிர்வாகத்துக்குப் பொறுப்பு எனினும், அதன் வெற்றிக்கும் கீர்த்திக்கும் பலர் முன்னின்றும் பின்னின்றும் உழைத்து வருகின்றனர். இலைமறை காய் போல் இருக்கும் இவர்களுக்கு எவரும் தனிப்பட்ட முறையில் நன்றி கூறுவது கிடையாது. அவர்களின் பூரண ஒத்துழைப்பும் உற்சாகமும் இருந்திருக்காவிட்டால் நிச்சயமாக நூலகம் இவ்வளவு தூரம் வளர்ந்திருக்க முடியாது. எனவே அந்நல்லுள்ளங்களுக்கு நன்றி செலுத்தும் முகமாகவே என் நினைவலைகள் அமையும் என்பதனை முன்கூட்டியே சொல்ல விரும்புகிறேன்.

நான் நூலகராக வருவதற்கு உந்து சக்திகளாக விளங்கிய இருவருக்கு முதற்கண் என் நன்றியறிதல்களைத் தெரிவித்தாக வேண்டும். எனது பிறப்பிடமான புங்குடுதீவைச் சேர்ந்த திரு. வெற்றிவேலு குணரெத்தினம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொழும்பு உவெஸ்லி கல்லூரியில் தமிழாசானாக இருந்த பொழுது என்னை அக்கல்லூரியில் பட்டதாரி ஆசிரியராக நியமனம் பெற வழிவகுத்தார். அத்துடன் நில்லாது பிரிட்டிஷ் கவுன்சிலில் உயர்பதவி ஒன்றினில் அமர்ந்திருந்த முன்னாள் உவெஸ்லிக் கல்லூரியின் கணித ஆசிரியரான திரு. சி.ஜே.ரி. தாமோதரத்திடம் அழைத்துச் சென்று என்னை அறிமுகம் செய்து வைத்தார். அவர், இலங்கையில் புதிய துறையான நூலகவியற்றுறை அறிமுகப்படுத்தப்படாத நிலையில் இருந்ததால் அத்துறை சார்ந்த மேற்படிப்பினைத் தொடர்ந்தால் என்ன என வினவியதுடன் அமெரிக்காவில் நூலகத்துறையைப் போதிக்கும் அத்திலாந்தா சர்வ கலாசாலையைத் தெரிவு செய்து விண்ணப்பப் படிவம் பெறுவதற்கான கடிதத்தையும் எழுதிக் கொடுத்தார். அவர் ஆலோச னைக்கமைய புல்பிரைட் உபகாரச் சம்பளத்துக்கும் விண்ணப்பித்தேன். நல்லோர்களின் ஆசிகள் நிறைவேறின. புல்பிரைட் உபகாரச் சம்பளத்தில் கறுப்பினத்தவரின் தலைசிறந்த சர்வகலாசாலையான அத்திலாந்தா சர்வ கலாசாலையில் முதுமாணிப் பட்டம் பெற வாய்ப்பும் கிட்டியது. சமாதானத்துக்கான நோபல் பரிசைப் பெற்ற மார்ட்டின் லூதர் கிங் அக்காலகட்டத்தில், இச் சர்வகலாசாலையில் மத போதகராகவும் விரிவுரையாளராகவும் பணிபுரிந்து கொண்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

முதுமாணிப் பட்டம் பெற்றதும் தொழில் அனுபவம் பெற விரும்பினேன். சிகாகோ பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்ற எனது நூலகத்துறைத் தலைவி இவ்வாய்ப்பினை கலிபோர்ணியாவில் உள்ள சாண்டியாகோ பொது நூலகத்தில் பெற்றுத்தந்தார். இவ்விடத்தில் யான் பெற்ற அறிவும் அனுபவமுமே யாழ் பொது நூலகத்தைத் தென்கிழக்காசியாவின் தலைசிறந்த நூலகமாக அமைக்க உதவியது என்றால் மிகையாகாது.

நூலகத்துறை சார்ந்த தொழில் தேடிக் கொழும்பில் இருந்த வேளை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பழைய மாணவரும், யாழ்ப்பாண மாநகர சபை நகர பிதாவாகவிருந்த திரு. ரி.எஸ். துரைராஜா எனது சேவையை யாழ்ப்பாண பொது நூலகத்துக்குப் பெறும் நோக்குடன் நூலகர் பதவியொன்றினை ஏற்படுத்தி அப்பதவிக்கு என்னை உள்ளூர் ஆட்சிச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவைக்கு விண்ணப்பிக்குமாறு கடிதம் மூலம் கேட்டிருந்தார். அதன்படி பதவியும் எனக்குக் கிடைத்தது. யான் பெற்ற கல்வியும் அனுபவமும் யாழ்ப்பாணத்துத் தமிழ் மக்களுக்குப் பயன்படப்போகின்றதே என்பதில் எனக்கு அளவிலா மகிழ்ச்சியேற்பட்டது இயற்கையே.

யான் பிரதம நூலகராகப் பதவியேற்ற பொழுது நூலகத்தின் அடித்தளம் மட்டுமே கட்டப்பட்ட நிலையில் இருந்தது. மாநகர சபை மாதமொரு முறை கூட்டும் கூட்டங்களுக்குப் பகுதித் தலைவர்கள் சமூகமளிப்பது வழக்கம். அத்தருணம் நூலகம் சார்பான நீண்டதோர் அறிக்கையைச் சமர்ப்பித்தேன். கட்டிட நிபுணர் நரசிம்மனின் மாதிரி வரைபடத்திற்கமைய நூலகக் கட்டிடத்தைக் கட்டிமுடிக்க வேண்டும். நூலக நடவடிக்கைகளில் புதிய நவீன மாற்றங்களைச் செய்ய வேண்டும். சிறுவர் நூலகம் ஒன்றினை அமைக்க வேண்டும் என்பன முக்கியமானவையாகும். மாநகரசபை இவற்றினை ஏற்றுக்கொண்டது. நூலக நம்பிக்கை நிதியில் போதிய பணமிருந்தும் நகர பிதாக்களுக்கிடையே நடைபெறும் இழுபறிகள் காரணமாகக் கட்டிட வேலைகள் ஸ்தம்பித்தன எனக் கேள்வியுற்றேன். இருப்பினும் அப்பொழுது நகரபிதாவாக இருந்த சட்டத்தரணி அ.செ.மகாதேவா என்பவரை அணுகிக் கட்டிட வேலைகள் பற்றிக் கதைத்தேன். இவர் ஒரு பண்பட்ட இனிய சுபாவமுடைய மனிதர். சகலருடனும் பண்பாகப் பேசுவார். பழகுவார். 'என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர் காணும்'' எனக் கேட்டார். 'நீங்கள் வேறு ஒன்றும் செய்யவேண்டாம் ஐயா. கட்டிடத்தைக் கட்டி முடிக்க வேண்டிய வழிவகைகளைச் செய்தால் போதும்'' என்றேன். அவரும் அதற்கான நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கும் வேளை நகரபிதா திரு. அல்பிரட் துரையப்பாவினால் விலக்கப்பட்டார். நகரபிதாவான துரையப்பா, சா. ஏ. சபாபதிக்குப் பின்னர் யாழ்ப்பாணத்துக்குக் கிடைத்த சிறந்த மேயர் என்பது பொதுமக்களின் அபிப்பிராயமாகும். அவர் கருமம் ஆற்றும் பாணியே தனி. நகரபிதாவின் அறையில் உள்ள சுழல் கதவுகள் நீக்கப்பட்டு சகலரும் எளிதில் அவரைக் காண உள்ளே செல்லலாம். சகலரையும் ஒரே தன்மையாக நடத்தும் தன்மையர். தலைசிறந்த நிர்வாகி. வரியிறுப்பாளர்களின் குறைகளை உடனுக்குடன் தீர்த்து வைப்பார். அத்துடன் எந்நேரமும் நகரை வலம் வருவார். இதனால் அலுவலக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியர்கள் பகல் நேரத்தில் தங்கள் பிரத்தியேக வேலைகளைச் செய்யவே பயப்படுவர்.

மந்திரி திருச்செல்வம் உள்ளூராட்சி அமைச்சராக ஐக்கிய தேசியக் கட்சியில் அங்கம் வகித்த சமயம், யாழ்ப்பாண மாநகர சபை ஆட்சி கலைக்கப்பட்டது. இதனையடுத்து யாழ்ப்பாணம் உள்ளூராட்சி ஆணையாளராகவிருந்த திரு. சி. க. மாணிக்கவாசகரும், பல வருடகாலம் அனுபவம் கொண்ட பொறியியலாளர் திரு.ந.நடேசனும் விஷேட ஆணையாளர்களாக வந்து மாநகர ஆட்சியின் பொறுப்பை ஏற்றனர். இவர்கள் வரவு யாழ்ப்பாண நகருக்குப் பல நன்மைகளைக் கொண்டு வந்தன. யாழ்ப்பாண புதிய மார்க்கட், நவீன பஸ்தரிப்பு நிலையங்கள் இவர்களின் பெரு முயற்சியினால் உருவானவை. எனினும் யாழ்ப்பாண பொது நூலக வளர்ச்சியில் இவர்களின் பங்கு மகத்தானதும் மறக்க முடியாததுமாகும். மாநகரசபை மராமத்துப் பொறியியலாளராகவிருந்த திரு. இ. வைத்தியலிங்கத்தின் உதவியுடன் வேண்டிய பணியாட்களைக் கொண்டு நூலகக் கட்டட வேலைகள் துரித கதியில் ஆரம்பிக்கப்பட்டன. நூலகராகிய என்னையும் இதில் ஈடுபடுத்திய படியினால் எனது சிபாரிசு களையும் ஏற்றுக் கொண்டனர். தமது வீட்டுக் காரியம் போல நினைத்து நேரகாலம் பாராது சகலரும் ஒரே குடும்பம் போல செயற்பட்டனர்.

நூலகக் கட்டடத்தின் நடுவில் உள்ள கோபுரம் அமைக்கும் பொழுது ஓயாமல் உழைத்தது ஞாபகம். தென் இந்தியப் பண்பாட்டினை வெளிக்கொணரும் வண்ணம் நூலக முதற்கட்ட வேலை முடிக்கப்பட்டு நூலகம் கம்பீரமாகக் காட்சியளித்தது. யாழ்ப்பாண நூல்நிலையம் என்பதனைப் பிரலிபலிப்பதற்காக சகல யன்னல்களையும் யாழ் உருவில் அமைக்க வேண்டும் என விருப்புத் தெரிவிக்க அதற்கான மாதிரிப் படங்களை விபுலானந்த அடிகள் எழுதிய யாழ் நூலில் இருந்து பிரதியெடுத்துக் கொடுத்தேன். ராஜன் இரும்புத் தொழிற்சாலை அதிபர் இராஜரெத்தினம் பல்வேறு யன்னல்களையும் வெவ்வேறு நிறங்களில் செய்து கொடுத்துதவினார். உட்புற, வெளிப்புற, வர்ணங்களைக் கூட நான் கேட்டுக்கொண்டபடி செய்து கொடுத்தனர். நுழைவாயிலை அலங்கரிக்க வழிபாதை அமைத்துக் கொடுத்ததுடன் கலைகளுக்குத் தலைவியாகிய சரஸ்வதி சிலையையும் முகப்பில் நிறுவ உடன்பட்டனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம் நான்காம் குறுக்குத் தெருவில் அமைந்திருந்த அமெரிக்கத் தகவல் நிலையம் மூடப்பட்டதும் அதனை யாழ்ப்பாண நூலகத்துடன் ஒன்றிணைத்த பெருமையும் இவ்விரு விஷேட ஆணையாளர்களையுமே சாரும்.

சிறுவர் நூலகத்தினை அமைப்பதற்கான நிதி வசதியினைப் பெற ஆசியா பவுண்டேஷன் நிறுவனத்தை நாடும்படி கேட்டதற்கிணங்க, அதனையும் பெற்று இலங்கையில் முதன்முதலாக சிறுவர் நூலகம் ஒன்றினை யாழ் நூலகத்தில் ஏற்படுத்தினர். திரு.ந.நடேசன் அவர்கள் நூலக இரண்டாவது கட்ட வேலைகளை இரவு பகலாக மேற்பார்வை செய்து முடித்துக் கொடுத்தார். இவரது தன்னலமற்ற சேவையை எவரும் மறக்க முடியாது. கட்டி முடிக்கப்பட்ட நூலகம் முழுவதனையும் செவ்வனே செயல்படுத்துவதற்கு முன்னரே யாழ்ப்பாண மண்ணில் போர் அனர்த்தங்கள் தோன்றி நாட்டினைச் சின்னாபின்னப்படுத்தியுள்ளது. இது தமிழர்களின் துர்ப்பாக்கியமே. இருப்பினும் என்றாவது ஒருநாள் இப்பிரதேசத்தில் அமைதி தோன்றி மீண்டும் இந்நூலகம் செயல்படும் என்ற ஆதங்கம் பலர் உள்ளங்களில் உலவுகிறது என்பது கண்கூடு.

நினைவலைகள் என முன்னரே குறிப்பிட்டிருந்தேன். நூலகராகிய எனக்கு ஏற்பட்ட சில கசப்பான அனுபவங்களையும் இங்கு குறிப்பிட்டாக வேண்டும். நிறுவப்பட்ட சரஸ்வதி சிலை சில விசமிகளால் நூலகத்தில் இருந்து பெயர்க்கப்பட்டு சுப்பிரமணியம் பூங்காவில் எறியப்பட்டது. இச்சிலை பின்னர் அங்கு மீண்டும் நிலைநிறுத்தப்பட்டது. அதே போல் வேறொரு சரஸ்வதி சிலை நூலக முகப்பில் இன்றும் காட்சியளிக்கிறது.

நூலகராக இருந்த எனக்கு பலாலி கனிஷ்ட சர்வகலாசாலையில் நூலகவியல் விரிவுரையாளர் பதவி கிடைத்ததை அடுத்து உள்ளூராட்சிக் கமிஷன் அப்பதவியினை ஏற்க வசதி செய்து கொடுத்தது. அச்சமயம் புதிய ஆணையாளராக திரு. ஏ.ரி. சுந்தரம் என்பவர் பதவி ஏற்றார். நூலகச் சேர்க்கையினை இருப்பெடுத்துத் தருமாறு கடிதம் எழுதியிருந்தார். நானும் லீவு பெற்று இதனைச்செய்து முடித்து இறுதி அறிக்கையை அவருக்குச் சமர்ப்பித்தேன். இருப்பில் 975 விலையுயர்ந்த நூல்கள் காணாமல் போயுள்ளன. அவற்றின் மொத்தப் பெறுமதி ரூபா 11,000.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அத்தொகையை என்னைக் கட்டும்படி கேட்டு புதிய ஆணையாளர் கடிதம் எழுதியிருந்தார். நான் நூலகத்தைப் பொறுப்பேற்கும் வேளை முன்பிருந்த நூலக அதிகாரி என்னிடம் முறையாக நூலகச் சேர்க்கைகளைக் கையளிக்கவில்லை என்பதனை முன்னரே எழுத்து மூலம் கொடுத்தது எனக்கு வாய்ப்பாய் இருந்தது. இதனை விட யாழ்ப்பாண நூலகத்தின் சேர்க்கை அது ஆரம்பித்த காலத்தில் இருந்தே இருப்பு எடுக்கப்படவில்லை என்பது இன்னொன்று. இவற்றின் பிரகாரம் தொலைந்த நூல்களுக்கு யான் பொறுப்பாளராக இருக்க முடியாதெனப் பதில் அனுப்பினேன். அவர்களும் மாநகரசபை சட்டத்தரணியாக இருந்த திரு. சூரசங்காரத்திடம் அபிப்பிராயம் கேட்டிருந்தனர். அவர் என்னை எக்காரணம் கொண்டும் இதற்குப் பொறுப்பாக்க முடியாதெனத் தெரிவித்திருந்தார். ஆனால் ஆணையாளரோ பிடிவாதமாக நின்றார். இதனை விட ஈழநாடு பத்திரிகைச் செய்தியாளருக்குப் பின்வரும் செய்தியையும் வழங்கியிருந்தார். அச் செய்தி நீல் ஆம்ஸ்ட்ரோங் சந்திரனில் கால் பதித்த அன்று வெளிவந்த ஈழநாடு பத்திரிகையின் முன்பக்கத்தில் பிரசுரமாகியிருந்தது.

நூலகர் பாக்கியநாதன் ரூபா 11,000 பெறுமதியான நூல்களைக் களவாடிச் சென்றுள்ளார் என்பது தான் செய்தி. இச்செய்தியைக் கண்ணுற்றதும் யான் அடைந்த மனவேதனையைச் சொல்லில் வடிக்க முடியாது. எப்பொழுதும் விசுவாசமாக உழைக்கும் ஒருவருக்குக் கிடைக்கும் பரிசு இதுதானா என அங்கலாய்த்தேன். செய்யாத குற்றமொன்றுக்குக் குற்றவாளியாக என்னைக் கூண்டில் நிறுத்தி விட்டார் ஆணையாளர். இதற்கு எதிர் நடவடிக்கை எடுக்கும் நோக்கத்துடன் நண்பர் ஆலாலசுந்தரத்திடம் பேசினேன். அவர் என்னையும் பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனையும் அட்வகேட் திரு.சி.கதிரவேற்பிள்ளையிடம் கூட்டிச்சென்றார். அவர் பதில் ஒன்றை எழுதி அனுப்புமாறு கேட்டுக் கொண்டார். ஆனால் ஆணையாளரோ மசிந்தபாடில்லை. வழக்குத் தொடுப்பேன் என்றார். யானும் நீங்கள் அதனைச் செய்யுங்கள். உங்களுக்கு நீதி மன்றத்தில் பதில் இறுக்கின்றேன் எனப் பதிலளித்தேன். வழக்கு நடந்தது. முதல் அமர்விலேயே கோப்பாய் எம் பி கதிரவேற்பிள்ளை எனக்காக இலவசமாக வாதாடினார். வழக்கு எனக்குச் சார்பாகத் தீர்ந்தது. நிறுத்தி வைக்கப்பட்டிருந்த எனது வேதனம் ஆணையாளர் சிவ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞானத்தினால் வழங்கப்பட்டது. நூலகத்தில் என்னுடன் வேலை செய்த சக ஊழியர்களில் சிலர் திட்டமிட்டு என் நற்பெயருக்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் நோக்குடன் பல விலை உயர்ந்த நூல்களை எங்கோ மறைத்து வைத்திருந்ததாக எனக்கு விசுவாசமான சில ஊழியர்கள் மூலம் பின்னர் அறிந்தேன்.

தற்போதைய ஆணையாளரான திரு. ச.பொ. பாலசிங்கம் மீண்டும் என்னை நூலகராக வந்து சேவையாற்றும்படி 1989இல் கேட்டார். அவர் வேண்டுகோளை ஏற்று 1990 மார்ச் மாதம் வரை அங்கு சேவையாற்றினேன். உங்களைக் கூண்டில் ஏற்றிய மாநகரசபைக்கு மீண்டும் ஏன் சேவையாற்றப் போகிறீர்கள்? எனப் பலர் என்னைக் கேட்டனர். தொழில் தர்மத்தில் குரோதம் பார்க்கக்கூடாது. ஒருவரது சேவை தேவை எனக் கேட்கும் பொழுது அதற்கு ஒருப்படுவதே மனிதாபிமான செயல் என அவர்களுக்குப் பதில் அளித்தேன். எனது பதில் அவர்களைத் திருப்திப்படுத்தியதோ இல்லையோ தெரியாது. ஆனால் எனக்கு அது ஆத்மதிருப்தியைப் பெற்றுக் கொடுத்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிங்களப் பேரினவாதிகளின் அறிவுப்பெட்டக அழிப்பு

***எரிமலை***

தமிழரசுக் கட்சித் தலைவருடன் ஒப்பந்தம் செய்து கொண்டதன் மூலம் பண்டாரநாயக்க சிங்கள இனத்தின் நலன்களையே தாரைவார்த்து விட்டார் என வானதிரக் கோசமிட்டு கண்டிக்குப் பாதயாத்திரை சென்றவர் ஜே.ஆர். ஜெயவர்த்தன. இதன் மூலம் அந்த ஒப்பந்தம் கிழித்தெறியப்படக் காரணமாயிருந்த அவர் தான் இறக்கும்வரை கண்டிப் பாதயாத்திரை சரியானதே என்பதில் உறுதியாக இருந்தார்.

அவர் ஐந்தின் நான்கு பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்து நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக மாறிய பின் அதிகாரப் பரவலாக்கம் என்ற முத்திரையுடன் கொண்டுவந்த அமைப்பு மாவட்ட அபிவிருத்திச் சபைகளாகும். அந்த அபிவிருத்திச் சபைகள் பற்றி விசனமடைந்து தன்னிடம் வந்த பிக்குகளிடம் கூறிய சமாதானம் மாவட்ட அபிவிருத்திச் சபைகளின் கயிறு தன்னிடம் தான் உள்ளது என்பதாகும்.

இந்த மாவட்ட அபிவிருத்திச் சபைகள் கூட மக்களின் ஆதரவின்மையால் அழிந்தொழிந்த போதிலும் அதற்கென நடாத்தப்பட்ட தேர்தல்களுக்கென யாழ்நகர் கொண்டுவரப்பட்ட ஐ.தே.க. காடையர்கள் தமிழீழ மக்களின் வரலாற்றில் என்றுமே மறக்க முடியாத பேரழிவொன்றை நிகழ்த்தினர்.

ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் இளம் சீடன் காமினி திசாநாயக்காவின் மேற்பார்வையில் தமிழ் மக்களின் பண்பாட்டு அறிவுப் பெட்டகம் இக்காடையர்களால் 1981 மே மாதம் 31ம் திகதி இரவு தீ மூட்டி எரிக்கப்பட்டது. தென்னாசியாவிலேயே அதிக நூல்களைக் கொண்ட சுமார் ஒரு லட்சம் புத்தகங்கள், சுவடிகளைக் கொண்ட அழகிய நூல்நிலையம் சிங்களப் பயங்கரவாதிகளால் எரிக்கப்பட்ட இச்சம்பவம் தமிழ் இன அழிப்பு என்ற சிங்கள இனவாதிகளின் மன எண்ணத்தை அனைவருக்கும் ஐயத்துக்கு இடமின்றி வெளிப்படுத்தியது எனலாம்.

இந்த நூல்நிலையம் எரிக்கப்பட்ட செய்தியை முற்றாக இருட்டடிப்புச் செய்ய ஜே.ஆர். அரசாங்கம் எடுத்த முயற்சிகள் தமிழர்களால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறியடிக்கப்பட்டன. இச் சம்பவத்தை விசாரிக்க நியமிக்கப்பட்ட லயனல் பெர்னாண்டோ விசாரணைக்குழு ஒரு கோடி ரூபா நட்ட ஈடு வழங்குமாறு அரசாங்கத்தைப் பணித்தபோதும் நட்ட ஈட்டுத் தொகையாக ஒரு ரூபாவைக் கூட வழங்க ஜே.ஆர். அரசாங்கம் முன்வரவில்லை.

இயற்கை அனர்த்தங்கள் மற்றும் காரணங்களுக்காக என அமைக்கப் பட்ட ஜனாதிபதி நிதியத்திலிருந்து சிறு தொகை நிதியையே அன்றைய ஜே.ஆர்.அரசாங்கம் வழங்க முன்வந்தது. இந்த நூல்நிலைய அழிப்புடன் சேர்த்து மேற்கொள்ளப்பட்ட தமது சொத்தழிப்புகளுக்கு நட்ட ஈடு பெற்றுக் கொண்ட அன்றைய தமிழ்த் தலைவர்கள் இந்நூல் நிலையத்திற்கு ஏற்பட்ட பேரிழப்பிற்கு நட்ட ஈட்டைப் பெற திராணியற்ற நிலையிலேயே இருந்தனர்.

இந்நூல் நிலைய எரிப்பு மூலம் சிங்கள இனவாதம் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் மூட்டிய தீயின் வெம்மை இனவிடுதலைப் போராட்டத்திற்கு மேலும் உரமூட்டியது என்றே கூற வேண்டும். சர்வாதிகாரி, கொடூர இனவாதி என வர்ணிக்கப்படும் ஹிட்லர் தமது படைகளுக்கு இட்ட கட்டளைகளில் ஒன்று நூல் நிலையங்களை அழிக்கக்கூடாது என்பதாகும். ஆனால் ஜே.ஆரின் படைகள் அதனையும் விட்டு வைக்காமை அவர்களின் மனோநிலையை தமிழ் மக்களுக்கு உணர்த்தி மாறாத வரலாற்று வடுவை தமிழ்மக்கள் மனதில் ஏற்படுத்தியது.

இதற்காக மன்னிப்பு கோரவோ நட்டஈடு வழங்கவோ கூட முன்வராத ஜே.ஆர் ஜெயவர்த்தனாவும் அவரது படைகளும் பின்னரும் பல சிறிய நூலகங்களைச் சிதைத்தது கசப்பான வரலாறுதான்.

சமாதான தேவதையாக வெள்ளைப்புறாவாக காட்சியளிக்க முயன்ற சந்திரிகா அம்மையார் தனது எதிராளி ஜனாதிபதி வேட்பாளர் காமினி திசாநாயக்கவிற்கும், ஐக்கிய தேசியக் கட்சிக்கும் எதிராக எடுத்த முக்கிய ஆயுதங்களில் ஒன்றாக இந்த நூல்நிலைய அழிப்பு இருந்தது. அவர் இதனை மனப்பூர்வமான பிரச்சினையாகக் கொள்ளவில்லை என்பதை பின்னர் அவர் மேற்கொண்ட நடவடிக்கைகள் எடுத்துக்காட்டின. காமினி திசாநாயக்காவின் இறப்புக்குப் பின் அந்த ஆயுதத்தை கீழே போட்ட சந்திரிகா தமிழரையும், உலகையும் ஏமாற்ற மட்டும் அதனை இடையிடையே எடுத்து தூசு துடைப்பது வழமையாகும். சமாதானப் பிரியையாக அவர் தென்பகுதியில் நடத்திய வெற்றிக் களியாட்டங்களில் ‘புத்தகமும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கல்லும்'' என்பது அவர் முன்வைத்த ஏமாற்றுக் கோசங்களில் ஒன்றாகும். அவர் சேகரித்த செங்கற்களுக்கு நேர்ந்த கதி என்ன என்பது தெரியாத போதும் அவர் சேகரித்த புத்தகங்களில் பெரும்பாலானவை சிங்களப் புத்தகங்கள் என்பது வெளிவந்த செய்தியாகும்.

யாழ். நூல்நிலையப் புனருத்தாரண நிதி என்ற பெயரில் அவர் ஆரம்பித்த நிதியத்தில் சேர்ந்த பணத்தின் ஒரு பகுதி தென்பகுதி நூல்நிலையங்களுக்கு செலவிடப்படுகின்றது என்பது இறுதியாகக் கிடைத்த செய்தியாகும். யாழ் மண்ணை ஆக்கிரமித்துக் கொண்ட நிலையில் யாழ் மக்களின் மனங்களை வெல்ல அவர் எடுத்த நடவடிக்கைகளில் ஒன்று அங்கு நூல் நிலையம் ஒன்றை ஆரம்பித்து வைத்ததாகும். இடித்தழிந்த நூல்நிலையத்தை யாழ்ப்பாணத்திற்குக் குறியீடாக அடிக்கடி தொலைக் காட்சியில் காட்டி வரும் சந்திரிகா அம்மையார் நூல்நிலையத்துக்குப் புதிய கட்டிடம் ஒன்றை அமைக்கக்கூட முன்வரவில்லை. ஏற்கனவேயிருந்த கட்டிடம் ஒன்றிற்கு வர்ணம் பூசிய தொலைக்காட்சி உரைமூலம் அதனைத் திறந்து வைத்தார்.

இன்னும் கூட சந்திரிகாவின் ஆக்கிரமிப்புப் படைகளால் அழிக்கப்பட்டுவரும் நூல்நிலையங்கள் -அவர்கள் நிலை கொண்டுள்ள நூல்நிலையங்களின் எண்ணிக்கை கொஞ்சநஞ்சமல்ல. தமிழினத்தை அழிக்க முயலும் சிங்கள இனவாதம் தமிழ் மக்களின் அறிவுத்தேடலுக்கான நூல்களையும் நூல்நிலையங்களையும் தேடித்தருவதாக கூறுவது கண்ணைக் குருடாக்கிய பின் உல்லாசப்பயணம் அழைத்துச் செல்லுவது போன்றதாகும்.

இன்றைய உலகு அறிவைத்தேடும் வழி முறைகளில் பல மைல்கள் பயணம் செய்து விட்டது. தமது வரலாற்றையும் பண்பாட்டையும் ஆவணப்படுத்தி எதிர்காலத்துக்கு வழங்குவதில் உலகிற்கு பறை சாற்று வதில் நீண்ட நெடும்பயணம் செய்துகொண்டிருக்கிறது. இந்நிலையில் ஈழத்தமிழினம் இன்று ஒரு வரலாற்றைப் படைத்து வரும் நிலையில் அதனை ஆவணப்படுத்துவதிலும் தன்னாலியன்ற முயற்சிகளை மேற்கொண்டு வருவது கண்கூடு. இதற்கு அனைவரும் உதவுவது இன்றியமையாத ஒன்றாகும். தமிழரின் விடுதலைப் போராட்டத்தில் அதனையும் ஒரு அங்கம் என்றே கூறமுடியும்.

***(நன்றி: எரிமலை (பாரிஸ்),***
***மே 2000)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பண்பாட்டுப் படுகொலை
## யாழ் பொது நூலகம் தீக்கிரையாக்கப்பட்டு பத்தொன்பது வருடங்கள்

*சா. அ. தருமரத்தினம்*

இலங்கையில் தினக்குரல் பத்திரிகையில் 2.6.2000 அன்று பக்கம் 4, 5 களில் வெளியான இக்கட்டுரை அக்காலகட்டத்தில் இலங்கை அரசின் கடுமையான தணிக்கைக்கு உட்பட்டிருந்தது. மூலப்பிரதி கிடைக்காதமையால் தணிக்கைக்குட்பட்ட கட்டுரையே இங்கு மீள்பிரசுரமாகிறது.

1977இல் பாராளுமன்றப் பொதுத்தேர்தலை வடகிழக்குத் தமிழ் வாக்காளர் ஒரு பொதுக் கருத்துக் கணிப்பாகவே எதிர்கொள்ளுமாறு செய்திருந்த தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி அதனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் ஒரேயொரு விடயத்தை மட்டுமே குறிப்பிட்டு அதன் மீது தமிழ் மக்களின் ஆணையைக் கோரியிருந்தது.

*தணிக்கை*

தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் வேட்பாளர்களாக அத்தேர்தலில் போட்டியிட்டிருந்த 18 பேரைத் தெரிவு செய்வதன் மூலம் தம்மிடம் கோரப்பட்டிருந்த ஆணையை வாக்காளர் அபரிமிதமாகவே அளித்திருந்தார்கள்.

*தணிக்கை*

ஆயினும் 1978இல் நிறைவேற்றப்பட்ட யாப்பில் அவர்கள் பங்கு கொண்டிருக்கவில்லை. மக்கள் அளித்த ஆணையைத் தம்மால் மீறமுடியாது எனக்கூறி வந்த தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியினர், அரசு தீர்வாக முன்வைக்கும் ஏற்புடைய மாற்றுத்திட்டம் எதனையும் மக்கள் முன் வைப்போம் என்பதில் அப்போதே நிலை தளம்பிய நிலைப்பாடாக இருந்து வந்தது. அப்போதும் இலங்கையில் இருந்த அமெரிக்க இராஜாங்கத் தூதுவர் துஷான், நாட்டுப் பிரிவினையை அமெரிக்கா ஆதரிக்க மாட்டாது என்றும் அரசியல் அதிகாரப் பகிர்வே பிரச்சனையின் தீர்வுக்கான ஒரே வழி என்றும் சொல்லி வந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி கோரி ஆணை வழங்கப்படுவதற்கு முன் 1956 முதல் 1978 வரை ஐந்து பொதுத் தேர்தல்களில் ஒற்றையாட்சி அரசியல் அமைப்பை நிராகரித்தே தமிழ் மக்கள் சமஷ்டி முறையிலான அரசியல் அமைப்பை ஆதரித்து வாக்களித்து வந்திருந்தனர். இதனை கருத்தில் எடுத்துக்கொள்ளாத ஜே.ஆர். ஜெயவர்த்தன ஒற்றையாட்சித் திட்டத்தின் கீழ் அமைந்ததாக மாவட்ட அபிவிருத்திச் சபைகளை வழங்குவதாகப் பேரம் பேசத் தலைப்பட்டார். தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கான பேரப்பேச்சுகளில் கலந்து கொண்டதுமன்றி, பாராளுமன்றத்திலும் அதனை ஆதரித்து வாக்களித்திருந்தது. ஆயினும் அரசியல் அமைப்பிலான ஒரு திருத்தமாக அல்லது அதற்கு உட்பட்டதாகவே அது வந்திருந்தமை, அரசியல் அமைப்பு உருவாக்கத்திலோ அன்றேல் அவற்றிற்கான திருத்தங்களிலோ பங்கு பற்றாது ஒதுங்கிக் கொள்வதாயும் அது அமைந்திருந்தது. 1978ம் வருட யாப்பிற்குக் கொண்டு வரப்பட்ட 13வது திருத்தம், பாராளுமன்றத்தில் தமிழ்ப் பிரதிநிதிகள் இருந்திராமையால் அதனை அப்போது பங்கப்படுத்தி இருந்ததில்லை.

மாவட்ட அபிவிருத்திச் சபைகள் விவகாரத்தில் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணித் தலைமை நடந்து கொண்ட போக்குக் காரணமாக யாழ்ப்பாணம் தேவனை நடுவராகக் கொண்டு வறுத்தலைவிளானில் நடைபெற்ற வழக்காடு மன்றில் மேற்படி தலைமை குற்றக்கூண்டில் நிறுத்தப்பட்டு குற்றத் தீர்ப்புக்கும் உள்ளாயிற்று.

***தணிக்கை***

வவுனியாவில் கூடிய பொதுச்சபைக் கூட்டத்தில் வைத்து, மாவட்ட அபிவிருத்திச் சபைகளை ஆதரிக்கும் தீர்மானத்தை ஏகமனதாக நிறைவேற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட முயற்சி தந்தை செல்வாவின் மைந்தன் சந்திரஹாசன் காட்டிய எதிர்ப்பினால் முறியடிக்கப்பட்டது. பாராளுமன்ற உறுப்பினர் சிந்தனைச் சிற்பி எஸ்.கதிரவேற்பிள்ளை மேற்படி பொதுச்சபைக் கூட்டத்தில் கலந்து கொள்ளாது ஒதுங்கிக் கொண்டார்.

மாவட்ட அபிவிருத்திச் சபைகளை ஆதரித்ததன் பலாபலனாக அடுத்து 1989இல் நிகழ்ந்த பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் கூட்டணியின் தலைவர் மு.சிவசிதம்பரம், செயலதிபர் அ.அமிர்தலிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருவருமே தோற்கடிக்கப்பட்டிருந்தனர். ஆயினும் தேசிய பட்டியலின் மூலம் அமிர்தலிங்கம் பாராளுமன்றத்தில் இடம் பெற்றிருந்தார்.

இத்தனை வில்லங்கங்களுக்கும் முகம் கொடுத்து ஒரு சமரச ஏற்பாடாக இணங்கிக் கொள்ளப்பட்ட மாவட்ட அபிவிருத்திச் சபைகளுக்கான தேர்தல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற போது, 1978 யாப்பின் கீழான விகிதாசாரத் தேர்தல் முறையைப் பயன்படுத்தி ஒரு சில ஸ்தானங்களையேனும் ஆதாயப்படுத்திக் கொள்வதற்காக ஐக்கிய தேசியக் கட்சி பல தில்லுமுல்லு நடவடிக்கைகளில் இறங்கியிருந்தது. தேர்தல் ஆணையாளரால் முறையாக நியமிக்கப்பட்டிருந்த தேர்தல் உத்தியோகத்தர்களை நீக்கிவிட்டு, அமைச்சர் சிறில் மத்யுவினால் அழைத்துவரப்பட்ட ஊழியர்கள் அப்பணிகளில் ஈடுபடப் பணிக்கப்பட்டிருந்தனர்.

தேர்தல் தினத்திற்கு முந்திய இரவில் தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் கைது செய்யப்பட்டு அப்புறப்படுத்தப் பட்டிருந்தனர். யாழ். கத்தோலிக்க மறைமாவட்டப் பேராயரின் தலையீட்டின் பின்பே அவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். பல தேர்தல் முறைகேடுகளின் மத்தியில் நடைபெற்றிருந்த அத்தேர்தலில் வாக்குப் பெட்டிகள் முறையீனமாக அமைச்சர்கள் தங்கியிருந்த விடுதிகளுக்கும் எடுத்துச் செல்லப்பட்டு வாக்கு மோசடிகளும் மேற்கொள்ளப்பட்டன. அவ்வாறு முறையீனமாக எடுத்துச் செல்லப்பட்ட வாக்குப் பெட்டிகளில் ஆறு பெட்டிகள் கணக்குக்குக் கொண்டு வந்திருக்கப்படவில்லை. அதனால் தேர்தல் விவரண அதிகாரி யோகேந்திரா துரைசுவாமி வாக்குகளை எண்ணிப் பெறுபேறுகளை அறிவிப்பதற்கு முதலில் மறுத்திருந்தார்.

மேற்படி தேர்தலுக்கு முன்பாக 1981 மே 31ம் திகதி யாழ் நாச்சிமார் கோவில் வீதியில் யாழ். மாநகர முதல்வர் இராஜா விஸ்வநாதன் தலைமையில் நடைபெற்ற தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் பிரசாரக் கூட்டத்தின் போது மாவட்ட அபிவிருத்திச் சபைகளை ஆட்சேபித்த ஒரு போராளிக் குழுவினால் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தால் ஒரு பொலிஸ் உத்தியோகத்தர் கொல்லப்பட்டிருந்தார். அதனையே சாட்டாகக் கொண்டு அங்கிருந்து ஆரம்பித்து வைக்கப்பட்ட வன்செயல்களால் யாழ் நகரில் தீ தாண்டவம் புரிந்தது. யாழ். பாராளுமன்ற உறுப்பினர் இல்லம், தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணி அலுவலகம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழைய சந்தை, யாழ் மத்திய பஸ் நிலையத்தைச் சூழவிருந்த மாநகர சபைக் கடைத் தொகுதிகள் யாவும் சாம்பராக்கப்பட்டன.

மறுநாள் 1981 ஜூன் முதலாம் திகதி நள்ளிரவு திராவிட கட்டிடக் கலைப் பாங்கில் கட்டப்பட்டதும் தென்னாசியாவிலேயே மிகப்பெரியதுமான யாழ். பொது நூலகம் அதனது 98000 புத்தகச் சேர்வுகளுடனும் தேடற்கரிய கையெழுத்துப் பிரதிகளுடனும் ஒரு பண்பாட்டுப் படுகொலையாகவும், தீக்கு இரையாக்கப்பட்டிருந்தது. யாழ்ப்பாண இராசதானியைக் கைப்பற்றியிருந்த கோட்டை இராசதானியின் சேனாதிபதி சப்புமால்குமாரவினால் நாயன்மார்கட்டில் இருந்த யாழ்ப்பாண இராச தானியின் தேசிய நூல்நிலையம், சரஸ்வதி மகாலயம் தீக்கிரையாக்கப்பட்ட வரலாற்று நிகழ்வின் பின் நிகழ்ந்த பண்பாட்டுப் படுகொலையாக இப்பேரழிவு தமிழர்களால் நினைவு கூரப்பட்டது.

மனுக்குலத்துக்கு விரோதமாகத் தாம் நிகழ்த்தவிருந்த மேற்படி குற்றச்செயலை, உலகம் அறியவிடாது காக்கும் ஒரு முயற்சியாக சமகாலத்தில் யாழ்ப்பாணத்தில் வெளியிடப்பட்டு வந்த தினசரியான ஈழநாடு பத்திரிகை ஸ்தாபனத்தையும் தகனம் செய்திருந்தனர். போக்குவரத்தும் தொலைத்தொடர்பும் துண்டிக்கப்பட்டிருந்த காரணத்தினால் யாழ். பொது நூலகம் எரிக்கப்பட்ட தகவல் தலைநகர் கொழும்பில் இருந்த செய்தி ஊடகங்களையோ, வெளிநாட்டுச் செய்தி முகவர்களையோ எட்டியிருக்கவில்லை. ஏன் யாழ். குடாநாட்டில் கூட யாழ்.நகருக்கு அப்பால் மேற்படி தகவல் வதந்திகளாகப் பரவியிருந்ததேயன்றிச் செய்தியாக அறியப்பட்டிருக்கவில்லை.

### *தணிக்கை*

பல்வேறு தோற்றங்களில் எரிந்த நூலகத்தின் ஒளிப்படங்களுடன் கட்டுநாயக்கா வழியால் சென்னை சென்றடைந்த சந்திரஹாசன் அங்கு கூட்டிய சர்வதேச செய்தியாளர் மாநாட்டில் வைத்து பண்பாட்டுப் படுகொலையை முழு உலகமும் தெரியவருமாறு அம்பலப்படுத்தியிருந்தார். அதன் பின்னர் மிலேச்சச் செயல் குறித்து பிரஸ்தாபித்திராத சர்வதேசச் செய்தி ஊடகங்களோ, சஞ்சிகைகளோ எதுவும் கிடையாது.

ஓர் இலைச்சோற்றுக்குள் முழுப்பூசணிக்காயை நிர்வாக அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஜெயவர்த்தனாவினால் தானும், புதைக்க முடியாத நிலையில் 1981 மே 31க்கும் ஜூன் 3ம் திகதிக்கும் இடைப்பட்ட

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காலத்தில் யாழ். மாநகர எல்லைகளுக்குள் வன்செயல்களால் சேதமுற்ற சொத்துக்களை மதிப்பீடு செய்து அவற்றுக்கான நட்டஈட்டுக்கு கொடுப்பனவுகளைப் பரிந்துரைப்பதற்காக தனிநபர் விசாரணைக்குழு ஒன்றினை முன்னாள் யாழ் அரசாங்க அதிபர் லயனல் பெர்னாண்டோ தலைமையில் ஜனாதிபதி நியமித்திருந்தார். மேற்படி விசாரணைக் குழு எரிந்த நூலகத்துக்கு ஒரு கோடி இரண்டு லட்சம் ரூபா நட்டஈடு வழங்கப்பட வேண்டுமெனச் சிபார்சு செய்திருந்தது. அத்தொகை வழங்கப்படவில்லை என்பதைச் சென்னை இந்து அதன் 28.10.1984 ஆம் திகதி இதழில் ஜி. பார்த்தசாரதியின் கட்டுரையில் அம்பலப்படுத்தியிருந்தது.

1982இல் நிகழ்ந்த ஜனாதிபதி தேர்தலில் சிறீலங்கா சுதந்திரக்கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்ட கொக்பேகடுவ தாம் ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டால் மேற்படி நட்டஈட்டுத் தொகையை யாழ் நூலகத்துக்கு வழங்குவேன் என்று யாழ். திறந்த வெளியரங்கில் தாம் நடத்திய தமது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் வைத்து உறுதி உரைத்திருந்தார்.

***தணிக்கை***

யாழ். மாநகரின் முதலாவது முதல்வர் சாம் சபாபதியினால் நிறுவப்பட்டிருந்த வண.பிதா திமோத்தி லோங் அடிகளாரை உள்ளடக்கிய ஒரு பொதுமக்கள் குழுவே 1955 இல் அத்திவாரம் இட்டு யாழ். பொது நூலகத்தை நிர்மாணித்தது. பின்னர் எரிந்த நூலகத்தை மீள்வித்துப் புதுப்பிப்பதற்கு மாநகர முதல்வர் இராஜா விசுவநாதனால் நிறுவப்பட்டிருந்த பேராசிரியர் கு.நேசையாவை உள்ளடக்கிய ஒரு பொதுமக்கள் குழுவே விசேட ஆணையாளர் சி.வி.கே சிவஞானம் தலைமையில் 1984 ஜூன் 4ம் திகதி புதுப்பிக்கப்பட்ட நூலகம் வைபவ முறைப்படி அப்போதைய எதிர்க்கட்சித் தலைவர், அ.அமிர்தலிங்கத்தினால் திறந்து வைக்கப்பட்டது. ஆயினும் போரின் அனர்த்தங்களால் திரும்பவும் நூலகம் தகர்ந்து போயுள்ள நிலையில் பண்பாட்டுப் படுகொலையின் 19வது நினைவு தினத்தைத் தமிழினம் நேற்று நினைவு கூர்ந்தது. நூலகம் எரிவதைப் பார்த்து அந்த அதிர்ச்சியினால் மரணமடைந்த நடமாடும் பல்கலைக்கழகமாகப் போற்றப்பட்டு வந்த பன்மொழிப் புலவர் வண. பிதா தாவீது அடிகளாரின் 19ஆவது நினைவு தினமும் நேற்று அனுட்டிக்கப்பட்டது.

***(நன்றி: தினக்குரல் (கொழும்பு), 02.06.2000)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பொதுநூலகம் திறப்புவிழா (14.2.2003)

*என். செல்வராஜா*

யாழ்ப்பாணத்து பொதுசன நூலகத்தின் திறப்பு விழா மீண்டும் பிற்போடப்பட்டு விட்டது. ஏற்கெனவே பல தடவைகள் பிற்போடப்பட்ட அரசியல் நிகழ்வு தான் இது 1995இல் வெண்தாமரை இயக்கம் தொடங்கப்பட்டவேளை 15 வருட கால ஆழ்நிலைத் தூக்கத்திலிருந்த இலங்கை (சந்திரிகா) அரசு திடீரென விழித்துக்கொண்டு புத்தகமும் செங்கல்லும் என்ற பதாதையுடனும் 80கோடி ரூபா நிதி ஒதுக்கீட்டுடனும் குடை கொடி ஆலவட்டத்துடனும் யாழ்ப்பாணப் பொது நூலகத்தை மீளக்கட்டி எழுப்பித் தமிழர் நெஞ்சங்களைக் கவர 10.04.1997இல் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் வைத்து முடிவு செய்தது.

1981 மே மாத இறுதித் தினத்து நள்ளிரவில் கள்வர் போல வந்து எரித்துச் செல்லும் போது இலங்கை (ஜே ஆர்)அரசு அதை வெறும் கட்டிடத் தொகுதியாகக் காணவில்லை. அதை யாழ்ப்பாணத்து மக்களின் இதயமாகவே கண்டார்கள். அந்த இதயம் வெடித்துச் சிதறும் என்று கண்டார்கள். ஆனால் சொந்தச் சாம்பலிலிருந்து பீனிக்ஸ் பறவை போலப் புது வேகத்துடன் உயிர்த்தெழுந்து சர்வதேசத்தின் கவனத்தையும் அது கவர்ந்து அதன்மூலம் தன்னைச் சுற்றி ஒரு அரசியல் ஒளிவட்டத்தை ஏற்படுத்திக்கொண்டு உலகத்தின் பார்வைக் குவியமாக மாறிவிடும் என்பதனை அன்று அந்தத் தீக்குச்சியை உரச ஆணையிடும் போது அவர்கள் எதிர்பார்த்திருக்கவில்லை.

அரசியல் மயப்படுத்தப்பட்ட யாழ்ப்பாண நூலகத்தின் கட்டிடப் புனரமைப்பு ஆரம்பத்திட்டமிடலில் இருக்கும் போதே அரசு (பொதுஜன ஐக்கிய முன்னணி) திறப்புவிழாவொன்றை மேடையேற்றி நடத்தி விட்டது. யாழ்ப்பாண உள்ளூராட்சித் தேர்தலுக்கு முன்பாகச் சர்வதேச அரங்கில் தன்னை நியாயப்படுத்திக்கொள்ள அவசர அவசரமாக யாழ் கச்சேரிக்கு எதிரிலுள்ள வீடமைப்பு அதிகாரசபையின் மூன்று மாடிக் கட்டிடத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரைத்தளம் மாத்திரம் திருத்தப்பட்டு 1998 தைப்பொங்கல் நாளில் பொதுஜன ஐக்கிய முன்னணி அமைச்சர்கள் மற்றும் இராணுவத்தினர் புடைசூழ தபால் தந்தி மற்றும் வெகுஜனத் தொடர்பு அமைச்சராகவிருந்த மங்கள சமரவீரவினால் தற்காலிக நூலகம் திறந்து வைக்கப்பட்டது. பின்னர் படிப்படியாக நூலகக் கட்டட வேலைகள் பிசுபிசுத்துப் போய் அதற்கென ஒதுக்கப்பட்ட நிதியெல்லாம் ஆங்காங்கே கசியவாரம்பித்தது. பின்னர் அரசு கைமாறியதும் திருத்த வேலைகள் மீண்டும் உத்வேகம் எடுத்தது. யாழ்ப்பாண மாநகரசபையின் ஒரு சிறு பிரிவினரும் யாழ் மக்களும் அந்த நூலகத்தைப் புனரமைப்புச் செய்யாது அப்படியே நினைவுச்சின்னமாக வைத்திருந்து பாதுகாக்க வேண்டும் என்று விடுத்த வேண்டுகோள்கள் செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று.

கட்டட வேலைகள் மாநகர சபையின் கட்டிடப் பிரிவினரிடம் கையளிக்கப்படாது அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட குழுவின் நேரடி மேற்பார்வையில் அரச கட்டிடத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு 120கோடி ரூபா வரையில் செலவிடப்பட்டுள்ளதாக ஊடகச் செய்திகள் தெரிவிக்கின்றன. புனரமைப்புப் பணிகளின்போது யாழ்ப்பாண மாநகர சபையினர் வெறும் ஆலோசனை வழங்கும் மட்டத்திலேயே ஒதுக்கி வைக்கப்பட்டிருந்தனர். கட்டிடத்தின் செலவினம், மற்றும் நிதி ஒதுக்கீடு, வருமானம் தொடர்பான தகவல்களைக் கூட மாநகரசபையினர் அவ்வப்போது கேட்டறிந்து கொள்ளவேண்டிய நிலையிலேயே வைக்கப்பட்டனர். இந்நிலையில் அரசுக்கும் யாழ். மாநகரசபைக்கும் இடையில் நூலகத்தின் மேலான ஆளுமை தொடர்பான இழுபறிநிலை தொடர்ந்து கொண்டிருக்கின்றது.

இந்நிலையில் கடந்த ஆண்டு வெசாக் பண்டிகைக்கு முன்னர் நூலகத்தைத் திறந்து வைக்கவேண்டும் என்று புனர்வாழ்வளிப்பு, அகதிகள் மீள்குடியமர்த்துகை அமைச்சர் கலாநிதி ஜயலத் ஜயவர்த்தன அவர்கள் துரிதப்படுத்தியிருந்தார். அது கட்டிட வேலைகள் இழுத்தடிக்கப்பட்டமையால் கைகூடவில்லை. மாபெரும் அரசியல் விழா நிகழ்வாக பிரதம மந்திரியினால் இந்நூலகம் திறந்து வைக்கப்பட்டு யாழ்ப்பாணத்து மக்களிடம் கையளிக்கும் நோக்குடன் அவசர அவசரமாக இறுதிக்கட்ட வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கும் தற்போதைய சூழலில் தான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்தின் நிர்வாகத்தின் ஆயுள்காலம் முடிவுக்கு வரும் பெப்ரவரி 17ம் திகதியும் நெருங்கி வந்துகொண்டிருந்தது

இந்நிலையில் யாழ் மாநகரத்தின் 24வது முதல்வராக கடந்த ஆண்டு ஜனவரி 16இல் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. செல்லன் கந்தையனும் அவரது சபை உறுப்பினர்களும் தமது பதவிக்காலம் முடிவுறுவதற்கு முன்னதாக 14.2.2003 வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்து நூலகத்தைத் திறந்து வைப்பதென அவசர அவசரமாக முடிவு செய்தனர். நூலகத் திறப்பானது தமது மாநகராட்சிக் காலத்தை வரலாற்று முக்கியமானதாகப் பொறித்து வைக்கும் என்ற அவர்களது நம்பிக்கை அந்த அவசர முடிவிற்குக் காரணமாக இருந்திருக்கலாம். அதுவே யாழ்ப்பாணத்து மண்ணில் பலத்த சர்ச்சையைத் தோற்றுவித்து யாழ். மேயரையும் அவரது சார்பாளர்களையும் நூலகத் திறப்புவிழாவையும் கைவிட்டு பதவியிலிருந்தும் விலகிச்செல்ல வைத்துவிட்டது.

மாநகரசபையை நிர்வகிக்கும் முதல்வர் சார்ந்த தமிழர் விடுதலைக் கூட்டணியினது தலைவரும் கூட்டமைப்பின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வீ.ஆனந்தசங்கரி நூலகத்தைத் திறந்து வைப்பதாக முடிவாகி இருந்தது. அரசியல் ஆதாயம் கருதி இந்த முடிவு எடுக்கப்படுவதாக வெளிப்படையான விமர்சனங்கள் அறிக்கைகள் தாயக ஊடகங்களில் இடம்பிடித்தன.

கட்டிடவேலைகளில் சிற்றுண்டிச்சாலை மற்றும் லிப்ட் வசதிகள் முடிவுறாத நிலையில் நூலகக்கட்டிடத்தைத் திறந்து வைப்பதில் என்ன நன்மை உள்ளது என்பதே பிரதான குற்றச்சாட்டாக அமைந்தது. நூலகம் என்பது வெறும் கட்டிடத் தொகுதி அல்ல. அதன் உள்ளே உள்ள வளங்களும் சேவைகளுமே நூலகமாகும். வெறும் கட்டிடத்தை திறந்து வைப்பதென்பது நூலகத்தைத் திறந்ததாகாது. கட்டடம் பூர்த்தியடைந்து மின்சார, தொலைத்தொடர்பு வசதிகளை ஏற்படுத்தி, தற்காலிக கட்டிடத்திலுள்ள நூல்களையும் புனரமைக்கப்பட்ட நூலகத்திற்கெனக் காத்திருக்கும் 33 கணணிகளையும் பொருத்தி, போதிய ஆளணியுடன் நூலகத்தைத் திறந்து வைக்கத் தீர்மானித்திருந்தால் இந்தச் சர்ச்சைக்கு இடமிருந்திருக்காது என்பது தாயகத்தில் பொது அமைப்புகளினதும் மாணவர் அமைப்புகளினதும் கருத்தாக இருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10.2.2003 அன்று மாநகரசபையில் முதல்வர் கூட்டிய பத்திரிகையாளர் மாநாட்டின்போது நூலகப் புனரமைப்புக்கென ஒதுக்கப்பட்ட 120 கோடி ரூபாவில் 99.1 சதவீதமான புனரமைப்புப் பணிகள் முடிவடைந்து விட்டன எனவும் 14ம் திகதி நூலகம் திறக்கப்பட்டதும் 20ம் திகதி இதனை மக்கள் பாவனைக்கு விடுவதில் பிரச்சினைகள் இல்லை என்று கட்டடத் திணைக்களத்தினர் கூறியுள்ளதாகக் குறிப்பிட்டிருந்தார். முதல்வரின் மேற்படி செய்தியின் நடைமுறைச் சாத்தியம் பற்றிய சந்தேகம் அங்கே வெளிப்படையாகவிருந்தது.

நூலகத் திறப்பிற்கு எதிர்ப்புத் தெரிவித்த யாழ் கல்வி மேம்பாட்டுப் பேரவை தன் அறிக்கையில் யாழ் நூலகத்திற்கு குறைந்தபட்சமான பௌதிக வளங்கள், நூல்வளங்கள் என்பனகூட பூர்த்தி செய்யப்படாத நிலையில் அதனைத் திறப்பது நல்லதல்ல என்றும் வசதிகளற்ற நிலையில் நூலகம் திறக்கப்படுமானால் மீதி வேலைகள் நிறைவேற்றக் கால தாமதமாகும் என்றும் கூறியுள்ளது. இக்கூற்றுக்கு இதே நூலகத்தின் அழிப்பிற்கு முந்திய மந்தகதியிலான வளர்ச்சியே சான்றாக அமைவதை யாழ் நூலகத்தின் வரலாற்றை தெரிந்து வைத்திருப்பவர்கள் நினைவு மீட்கக் கூடும்.

இந்நிலையில் கொழும்பிலிருந்து இந்து விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் தனது காரசாரமான அறிக்கையில் மேயரையும் அவருக்குத் துணைபோனதாக நாடாளுமன்ற உறுப்பினர் ந.ரவிராஜையும், தமிழர் கூட்டணி அரசியல்வாதி வீ.ஆனந்தசங்கரியையும் சாடி, நூலகத்தை அரை வேக்காடாகத் திறக்க முடிவெடுத்ததன் மூலம் தமிழினத்தின் உண்மையான விரோதிகள் இனங்காணப்பட்டுள்ளார்கள் என்று குறிப்பிட்டுள்ளார்.

விழா ஏற்பாடுகள் பூர்த்தியடைந்து அழைப்பிதழ்களும் வழங்கப்பட்ட இந்நிலையில் நூலகத் திறப்பு விழா நாளான 14ஆம் திகதி வெள்ளிக் கிழமையன்று யாழ் நூலகத்தின் முன்பாக பெரும் மறியல் போராட்டத்தையும் யாழ் மாநகரசபைப் பிரதேசத்தில் வர்த்தக நிறுவனங்கள், கூட்டுறவு அலுவலகங்கள் ஆகியவற்றை மூடிப் பூரண கதவடைப்பையும் மேற்கொள்ள பொது அமைப்புகளின் ஒன்றியம் 11.2.2003இல் முடிவு செய்திருந்தது. மாநகரசபைப் பிரதேசத்தின் 30க்கும் மேற்பட்ட பொது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்துகொண்ட இந்நிகழ்வின்போது மக்களின் உணர்வுகளுக்கு மதிப்பளித்து முதல்வர் தனது முடிவை கைவிடவேண்டும் என்றும் அது வேண்டுகோள் விடுத்திருந்தது.

நூலகம் எரிக்கப்பட்ட வேளை யாழ் மாநகரசபையின் ஆணையாளராயிருந்த சி.வி.கே.சிவஞானம் தற்போது யாழ். மாவட்ட நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவராக இருக்கின்றார். ஊடக வாயிலாக அவர் தனது கருத்தைத் தெரிவிக்கையில் உண்மையில் இந்த நூலகத்தைத் தமது பதவிக்காலத்துக்குள் திறந்து வைக்க வேண்டும் என மாநகரசபை கருதியிருந்தால் முழு வேலைகளையும் பூர்த்தி செய்துவிட்டு திறப்பு விழாவைச் செய்திருக்கலாம். அப்படிச் செய்யாமல் நாட்களைக் கடத்திவிட்டு அரைகுறையாக நூலகத்தைத் திறப்பது அவர்களுக்கும் கௌரவமல்ல தமிழினத்துக்கும் கௌரவமல்ல. யாழ் நூலகத் திறப்பு விழா எதிர்ப்புக்கும் போராட்டத்துக்கும் மத்தியில் நிகழ்ந்தது என்ற கறை படிந்த வரலாறு எமது நூலகத்திற்கு ஏற்படவேண்டாம் என்றார்.

கூட்டணிப் பிரமுகரான வி.ஆனந்தசங்கரி மாநகர முதல்வரை ஆதரித்து நூலகத் திறப்புவிழாவில் பங்கேற்பதாக முடிவானபோது, அது கூட்டணியின் பிரதிநிதித்துவமாக அமையக்கூடாது என்பதில் ஆனந்த சங்கரி அக்கறையாக இருந்தமை அவரது அறிக்கையில் புலனாகின்றது.

'யாழ் நூலகத்தைத் திறந்து வைப்பதற்கான நடவடிக்கைகளை மாநகர சபை நிர்வாகமே மேற்கொண்டுள்ளது. அதற்கும் கூட்டணிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை. திறப்புவிழா கட்சிக்கு அப்பாற்பட்ட விடயம். மக்களால் தெரிவுசெய்யப்பட்ட மாநகரசபை உறுப்பினர்கள் தன்னை மூத்த தமிழ் நாடாளுமன்ற அரசியல்வாதி என்று கருதிக் கூட்டாக விடுத்த வேண்டுகோளை ஏற்றுத் திறப்புவிழாவில் கலந்து கொள்ளச் சம்மதித்தேன்'' என்ற அவரது கூற்றுக்குப் பதிலாக கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜாவின் அறிக்கையில் 'நூலகம் திறப்பது தொடர்பாக தமிழர் விடுதலைக்கூட்டணி இதுவரை கூடிஆராயவுமில்லை, திறப்புவிழா தொடர்பான எந்த வழிகாட்டலையும் மாநகரசபைக்கு வழங்கவுமில்லை, மாநகரசபை இது பற்றிக் கலந்தாலோசித்ததாகத் தனக்குத் தெரியவுமில்லை''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று கூறியதுடன் இந்த நிகழ்வில் கலந்து கொள்வது அர்த்தமற்றதாகையால் அதற்குத் தான் வரப்போவதுமில்லை என்று குறிப்பிட்டுள்ளார்.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அ.விநாயகமூர்த்தி தமது பங்கிற்கு முதல்வருக்கும் ஆனந்தசங்கரிக்கும் ஆலோசனை வழங்கும் பாணியில் முக்கியமான அரசியல் தீர்வுகள் யாழ்ப்பாணத்தில் எடுக்கப்படும் போது விடுதலைப் புலிகளின் யாழ். அரசியற் பிரிவினரையும் கலந்தாலோசித்துச் செய்தல் நன்று என்று குறிப்பிட்டுள்ளார். விநாயகமூர்த்திக்குப் பதிலளிக்கும் வகையில் முதல்வரினதும் அவர் சார்ந்த உறுப்பினர்களினதும் பதவி விலகல் அறிக்கை அமைந்துள்ளது.

விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் சி.இளம்பரிதி மற்றும் சர்வதேச தமிழீழ மாணவர் பேரவையினர், பொது அமைப்புக்களின் ஒன்றியத்தினர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நூலகத்திறப்பு விழாவைக் கைவிடுவதாகக் குறிப்பிட்ட முதல்வர் செ.கந்தையன் மேலும் தனது அறிக்கையில், 'திறப்புவிழா ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கும் இத்தருணத்தில் ஒன்றியங்கள் மூலமும் பத்திரிகைகள் மூலமும் தவறான தகவல்கள் வெளியிடப்பட்டன. யாழ். நூல்நிலையத்தின் திறப்புகள் அபகரிக்கப்பட்டன. ஊழியர்கள் அச்சுறுத்தப்பட்டார்கள். நகரபிதா உறுப்பினர்கள் கூடக் கடுமையான அச்சுறுத்தல்களுக்கு உட்படுத்தப்பட்டார்கள். மக்களுக்கு அவசியமான இந்த நூல்நிலையத்தை திறப்பதில் தமிழீழ அரசியல் பிரிவு இவ்வாறு தீவிரமாக செயல்படுவது துரதிர்ஷ்டவசமானது ஆகும். அறிவுக்கருவூலமான நூல்நிலையத்தை திறப்பதற்கு மக்கள் அமைப்புக்கள் என்று கூறிக்கொள்பவர்கள் நடந்துகொண்ட முறையையிட்டு நாங்கள் வேதனையடைகின்றோம். ஜனநாயக நிறுவனமான மாநகராட்சி தன்னுடைய பராமரிப்பில் உள்ள நூல்நிலையத்தை திறப்பதற்கு முடியாத சூழ்நிலையில் உறுப்பினர்களாகத் தொடர்ந்தும் இருப்பதற்கு எந்த உறுப்பினரும் விரும்பவில்லை. குடாநாட்டில் உள்ள ஜனநாயக சூழ்நிலை இப்படித்தான் இருக்கின்றது. இந்த நாடும், சர்வதேசமும் இதனை விளங்கிக்கொள்ள வேண்டும். இந்த ஜனநாயக மறுப்பிற்கு எதிர்ப்புத்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவித்து உறுப்பினர்களாகிய நாங்கள் பதவியில் இருந்து ராஜினாமாச் செய்து கொள்கின்றோம்'' என்று தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளனர்.

17.2.2003 திங்கள் அன்று பதவிக்காலம் முடிந்த நிலையில் சுமுகமாகக் கலையப்படவிருந்த யாழ் மாநகரசபையின் தற்போதைய நிர்வாகத்தின் ஆயுள்காலம் 13.2.2003 அன்று வியாழக்கிழமையே முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுவிட்டது. முதல்வரினதும் ஏழு சக உறுப்பினர்களினதும் பதவி துறப்பினையடுத்து நீண்ட சர்ச்சைக்குரியதாயமைந்த திறப்பு விழா இரத்துச் செய்யப்பட்டு விட்டது. அதையடுத்து ஹர்த்தால் மறியல் போராட்டங்களும் கைவிடப்பட்டு விட்டன. இனிப் பழையபடி மீண்டும் ஒரு திறப்புவிழாவை எதிர்பார்த்து அந்த நூலகம் காத்திருக்கப் போகின்றது. அடுத்த திறப்புவிழா நாடகத்தை யார் அரங்கேற்றப் போகின்றார்கள் என்று பொறுத்திருந்து பார்ப்போம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் நூலகத்திற்குத் தீயிட்டது காமினி ஜயவிக்ரம பெரேரா சார்ந்த குழுவினர்

## நிரூபிக்கப் போதுமான சாட்சியங்கள் இருப்பதாகக் கூறுகிறார் வடமேல் மாகாண முதலமைச்சர்

*இலங்கை நெற்*

யாழ்ப்பாண பொது நூலகத்தை தீயிட்டுக் எரித்தவர்கள் வடமேல் மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் காமினி ஜயவிக்ரம பெரேரா சார்ந்த குழுவினரே எனவும், அதனை நிரூபிப்பதற்கு போதுமான சாட்சியங்கள் தம்மிடம் இருப்பதாகவும் தற்போதைய வடமேல் மாகாணசபை முதலமைச்சர் அத்துல விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற மாகாண சபையின் மாதாந்தக் கூட்டத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து பேசிய முதலமைச்சர் அத்துல விஜேசிங்க, யாழ்.பொது நூலகத்திற்கு தீ வைத்தவர்களை நான் நன்றாக அறிவேன். யாழ்ப்பாண பொது நூலகத்திலிருந்து இங்கு கொண்டு வரப்பட்ட தமிழ் மொழியிலான புத்தகங்கள் பல இன்னமும் ஹெட்டிப்பொல பிரதேசத்தில் உள்ளன. அவற்றை எந்த நேரத்திலும் என்னால் காட்ட முடியும் என்று கூறினார்.

இதேவேளை, ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவர் இங்கு கருத்துத் தெரிவிக்கையில்,

'யாழ்ப்பாண பொது நூலகத்தை தீயிட்டுக் கொளுத்தவென குருநாகலிலிருந்து புகையிரத மார்க்கமாக ஒரு குழுவினர் சென்றனர். தற்போது அவர்கள் எதுவும் அறியாதவர்கள் போல் உள்ளனர்'' என்றார்.

'1983ம் ஆண்டு கறுப்பு ஜூலையை ஏற்படுத்தியவர்கள் யார் என இங்கு நினைவுகூரத் தேவையில்லை' என மீண்டும் முதலமைச்சர் கூறியதை அடுத்து சபையில் கூச்சலும் குழப்பமும் ஏற்பட்டது.

அவ்வேளையில் ஆவேசமாக எழுந்த எதிர்க்கட்சித் தலைவர் பிரஸன்ன சமல் செனரத் (ஐ.தே.க.) நாடாளுமன்றத்தைப் பிரதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிதித்துவப்படுத்தும் ஒரு உறுப்பினர் மீது இவ்வாறு அபாண்டமாகப் பழி சுமத்தப்படுவதைத் தம்மால் அனுமதிக்க முடியாது எனவும் முதலமைச்சரின் கூற்று மாகாணசபை விதிமுறைகளுக்கு முற்றிலும் முரணானது எனவும் தெரிவித்ததுடன் முதலமைச்சர் தனது கூற்றை உடன் மீள்பெற வேண்டும் எனவும் கூறினார்.

அதற்குப் பதிலளித்த முதலமைச்சர் 'எனது கூற்றுகள் மாகாணசபை நடைமுறை விதிகளுக்கு முரணானவையல்ல. அவ்வாறு முரண் எனக் கூறப்படுமிடத்து கூற்றை மீளபெற்றுக்கொள்ள முடியும். ஆனால், எனது கூற்றுகளுக்குத் தெளிவான சான்றுகள் உள்ளன. எந்தவேளையிலும் அவற்றைச் சமர்ப்பிக்க முடியும்' எனவும் தெரிவித்தார்.

இவ்வேளையில் மீண்டும் குறுக்கிட்ட எதிர்க்கட்சித் தலைவர் பிரஸன்ன சமல் 'இத்தகைய கருத்துகள், உறுப்பினர் ஒருவர் மீது சேறுபூசி, அகௌரவப்படுத்தும் செயலாகும். தொடர்ந்தும் இவ்வாறான அவதூறுகள் தெரிவிக்க இடமளிக்க முடியாது'' எனக் கூறினார்.

1981ம் ஆண்டு மே மாதம் 31ம் திகதி நள்ளிரவுக்குப் பின்னர் சிங்கள வன்முறைக் குழுவொன்றினால் யாழ்ப்பாணம் பொது நூலகம் எரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. 20ம் நூற்றாண்டின் இன, நூலழிப்புக்களில் ஒரு மிகப்பெரும் வன்முறையாக இது கருதப்படுகின்றது. அத்துடன், இந்தச் சம்பவம் இலங்கை இனப்பிரச்சினையில் ஒரு முக்கிய நிகழ்வாகவும் அமைந்தது. நூலகம் எரிக்கப்பட்டமை தமிழ் மக்கள் மத்தியில் அழியா காயம் ஒன்றை ஏற்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

***(நன்றி: இலங்கைநெற் July 15, 2009)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் நூலக எரிப்பு நினைவு தினம்: தமிழ் இன அழிப்பின் அடையாளமே யாழ் நூலக எரிப்பு

***பீ.பீ.சீ- தமிழ்***

தெற்காசியாவின் அறிவுக் களஞ்சியமாக போற்றப்பட்ட யாழ் பொது நூலகம் எரிக்கப்பட்டு இன்றுடன் (வெள்ளிக்கிழமை) 37 ஆண்டுகள் கடந்தாலும் தமிழ் மக்கள் மத்தியில் அத்துயர சம்பவம் ஏற்படுத்திய வடு இந்த கணம்வரை மாறாது உள்ளது.

ஜே.ஆர்.ஜெயவர்தனவின் ஐக்கிய தேசிய கட்சியின் அரசாங்கத்தின் ஆட்சி காலத்தில் திட்டமிட்டு நடத்தப்பட்ட இச் சம்பவமானது தமிழ் மக்களின் அடையாளம், அறிவு மற்றும் பண்பாடு போன்றவற்றை இல்லாதொழிக்கும் தமிழ் இன அழிப்பின் ஒரு அடையாளமாகவே தமிழ் மக்கள் இன்றும் பார்க்கின்றார்கள்.

இந்நூலக அழிப்பின் போது பல நூற்றாண்டு பழமைவாய்ந்த தமிழ், ஆங்கில நூல்களும் மற்றும் ஓலைச்சுவடிகளும் அழிந்து போயின.

***அழிந்த புத்தகங்கள் எவை?***

இவற்றில் கிடைப்பதற்கு அரிதான ஐசாக் தம்பையா நன்கொடை கொடுத்த இலக்கியம், சமயம், மொழியியல் தத்துவம் தொடர்பாக சுமார் 6000 நூல்களும், இந்திய வர்த்தகர் ஒருவரால் கொடுக்கப்பட்ட மகாத்மா காந்தியின் சத்தியசோதனை, 1672 ஆம் ஆண்டில் பிலிப்பஸ் பால்டியார் என்பவர் எழுதிய டச்சு ஆட்சியில் இலங்கை என்னும் நூல், 1660 ஆம் ஆண்டில் கண்டி மன்னரால் சிறைபிடிக்கப்பட்டவேளை றொபேட் நொக்ஸ் என்பவர் எழுதிய நூல் ஆகியவை அழிந்தன.

1585 ஆம் ஆண்டில் கத்தோலிக்க மதத்தலைவர்களால் தமிழில் எழுதப்பட்ட நூல், சேர் பொன்னம்பலம் இராமநாதன் எழுதிய பகவத்கீதை விளக்கம், சித்தாந்தம், செந்தமிழ் இலக்கிய நூல்கள், திருமதி இராமநாதன் அம்மையார் எழுதிய இராமாயண மொழிபெயர்ப்பு, மகாகவி பாரதியாரின் நண்பரான நெல்லையப்பன் எழுதிய நூல்கள், கடலைக்குடி நடேச

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சாஸ்திரியார் எழுதிய சோதிட சாஸ்திர நூல்கள், வானசாஸ்திரம் சம்பந்தமான நூல்கள், சித்தவைத்திய வாகடங்கள் அடங்கலான ஏட்டுச்சுவடிகள் ஆகியவை அழிந்தன.

மேலும், முத்துத்தம்பிபிள்ளை எழுதிய அபிதானகோசம், சிங்காரவேலு முதலியார் எழுதிய அபிதான சிந்தாமணி, முதலியார் இராசநாயகம் எழுதிய புராதன யாழ்ப்பாணம், சுவாமி ஞானப்பிரகாசர், முத்துத்தம்பிப் பிள்ளை எழுதிய யாழ்ப்பாணம் பற்றிய நூல்கள், கல்லடி வேலன் என்று அழைக்கப்பெற்ற கே.வேலுப்பிள்ளை இயற்றிய யாழ்ப்பாண வைபவ கௌமுகி, சிற்பக்கலை பற்றிய நூல்கள், தனிநாயக அடிகளார் பதிப்பித்து வெளியிடப்பட்ட 'தமிழ் கல்சர்'' எனும் ஆங்கில சஞ்சிகை, இராசையனார், வன்னியசிங்கம், கதிரவேற்பிள்ளை, ஆனந்தகுமாரசாமி மற்றும் முதலியார் குல சபாநாதன் சேகரித்த நூல்கள், மற்றும் 10 ஆயிரத்திற்கு மேற்பட்ட கையெழுத்து பிரதிகளும் அழிவடைந்தன.

இந்நூலகத்தை இலங்கையில் மட்டுமல்ல இந்தியாவின் தமிழ்நாடு உட்பட பல பாகங்களிலிருந்தும் தேடிச் சென்று பயன்படுத்தியிருந்தனர்.

யாழ் பொது நூலக எரிப்பு தொடர்பில் யாழ் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் சிரேஸ்ட பேராசிரியர் என்.சண்முகலிங்கன் பிபிசி தமிழுக்கு தனது கருத்துக்களை பகிர்ந்து கொண்டார்.

யாழ் பொது நூலகம் அழிக்கப்பட்டு 37 ஆண்டுகள் கடந்தாலும்கூட அந்த அழிப்பு நடவடிக்கை மூலம் தமிழ் மக்களின் இதயங்களில் ஏற்படுத்திய வடு இன்னமும் மாறாதது.

தென்னாசியாவின் மிகப் பெரிய அறிவியல் பொக்கிஷமாக போற்றப்பட்ட யாழ்ப்பாண பொது நூலகத்தின் அழிப்பு என்பது மனித நாகரிகத்தின் மோசமான துயரம். 1981ஆம் ஆண்டு மே மாதம் 31 ஆம் தேதி நள்ளிரவில் இந்த கொடுமை நேர்ந்த போது அதனை சென் பற்றிக்ஸ் கல்லூரியின் மாடியில் இருந்து நேரில் பார்த்த தாவீது அடிகளார் அந்த கணத்திலேயே உயிரிழந்தார் என்ற செய்தி ஒன்றே அந்த நூலகத்தின் பெறுமதியை எடுத்துக் காட்டுகின்றது.

நூலகம் எரிக்கப்பட்ட மறுநாள் ஜூன் மாதம் முதலாம் தேதி எனது நண்பன் நுஃமானும் நானும், யாழ் பல்கலைக்கழகத்தில் இருந்து துவிச் சக்கர வண்டியில் அங்கு சென்று பார்த்த போது எரிந்து சாம்பல்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊடாக நாங்கள் கொண்ட துயரமும் வலியும் இந்த கணம்வரை நெஞ்சுக்குள் வலிக்கின்றதாக உள்ளது.

நாங்கள் நூலகத்திற்குச் சென்ற போது அந்த தீ அணையாமல் இருந்தது. நான் சிறுவர் பகுதியில் படித்த புத்தகங்கள் சிலவற்றை இனங்காணக் கூடியதாக இருந்தது.

நூலகத்திற்குள் கம்பீரமாக நின்ற புத்தக அலமாரிகள் எல்லாம் நிலத்திலே பாட்டமாக வீழ்ந்து கிடந்தன. நாங்கள் கோவிலாக வழிபட வேண்டிய அந்த கட்டடம் எல்லாம் உடைந்து சீமெந்து துகழ்களாகவும், சாம்பலாகவும் காட்சியளித்தது. அன்று பார்த்த அழிவை வார்த்தைகளால் சொல்ல முடியாது.

அங்கு பகுதியளவில் எரிந்த புத்தக துண்டுகள் சிலவற்றை அடையாளமாக எடுத்துச் சென்று எனது வீட்டில் இருந்த நூலகத்தில் வைத்து பாதுகாத்திருந்தேன்.

பின்னர் யுத்தம் காரணமாக ஏற்பட்ட இடம்பெயர்வின்போது என்னுடைய வீட்டில் இருந்த புத்தகங்களோடு அவையும் அழிவடைந்து விட்டன.

நூலக பாதிப்பை பார்த்த பின்னர் எனது நண்பர் நுஃமான் ஒரு கவிதையினை எழுதியிருந்தார். அந்த கவிதை எரித்து சாம்பலாக்கப்பட்ட நூலகத்தின் நினைவுகளோடு உள்ளது.

புத்த பெருமான் ஒரு இரவிலே சுடப்பட்டார் என்று ஆரம்பிக்கும் அந்த கவிதை இறுதியில் புத்தரின் சிவில் உடையாளர்கள் பிணத்தை உள்ளே இழுத்துச் சென்றனர். 90 ஆயிரம் புத்தகத்தினால் புத்தரின் மேனியை மூடி மறைத்தனர். சிகாலேகவாத சூத்திரத்தை கொழுத்தி எரித்தனர். புத்தரின் சடலம் அஸ்தியானது. தம்ம பதமும் சாம்பலானது என்று முடிகின்றது அந்த கவிதை. நூலக எரிப்பின் குறியீடாக இந்த கவிதை அமைகின்றது.

இவ்வாறான சம்பவங்கள் இலங்கையில் மட்டும் முதல் தடவையாக நடக்கவில்லை. 1930 ஆம் ஆண்டு ஜெர்மனி பேளின் வீதியில் நூற்றுக்கனக்கான புத்தகங்கள் எரிக்கப்பட்டு வீதிகளில் எல்லாம் சாம்பல் பரவியதாக சொல்லுவார்கள்.

நாசிகளின் இனப்படுகொலைக்கு அவ்வழிப்பு பெரும் எடுத்துக்காட்டு. யாழ் நூலக எரிப்பும் தமிழ் இனப்படுகொலை என்றே கருத வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரலாற்றில் இருந்து நாங்கள் பாடம் படிக்க தவறுகின்ற போது மீண்டும் மீண்டும் அந்த தவறான வரலாறு மீட்டப்படும் என்பதற்கு இந்த தேசத்தின் வரலாறு சான்றாக இருக்கின்றது.

இந்த நூலக எரிப்பு மூலம் தென்னாசியாவில் இருந்து தேடி வைத்த பொக்கிஷங்கள் குறிப்பாக ஓலைச் சுவடிகள் 1800 ஆம் ஆண்டுக்கான பத்திரிகை பதிவுகள் அனைத்தும் இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளன. இவற்றை அழித்துவிட்டு வெறுமனே கட்டடத்திற்கு வெள்ளை பூசுவதால் அழிந்தவற்றை மீள பெற்றுக்கொள்ள முடியாது.

யாழ் நூலக எரிப்பு நாளை நினைவுகூர்வது என்பது மனித நாகரிகத்திலேயே மோசமான அரசியல் செயற்பாட்டில் இருந்து விடுபடும் புதிய பண்பாட்டினை இந்த தேசத்தின் அரசியலும் மக்களும் விழிப்புக் கொள்ளும் நாளாக கொண்டாட வேண்டும் என்பதுதான் எனது விருப்பம் என்றார்.

***யாழ் நூலகம் திறக்கப்பட்டது எப்போது?***

யாழ் பொது நூலக எரிப்பு தொடர்பில் பிபிசி தமிழுக்கு, யாழ் பொது நூலக பிரதான நூலகர் சுகந்தி சதாசிவமூர்த்தி தெரிவித்த கருத்துக்கள் இவை.

யாழ் பொது நூலகத்தில் 31 வருடங்கள் நூலகராகவும், பிரதான நூலகராக கடந்த 4 வருடங்களும் கடமையாற்றுகின்றேன்.

யாழ் பொது நூலகம் 1933ஆம் ஆண்டு முதன் முதலில் மு.செல்லப்பா என்ற தனி நபரால் ஆஸ்பத்திரி வீதியில் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் படிப்படியாக வளர்ச்சி அடைந்து தற்போது உள்ள கட்டடத்தில் 1959ஆம் ஆண்டு அப்போதைய யாழ் மாநகர முதல்வர் அல்பிரட் துரையாப்பாவினால் திறந்துவைக்கப்பட்டது.

1981 ஆம் ஆண்டு நூலகம் எரிக்கப்பட்ட போது 97 ஆயிரம் புத்தகங்களும், பழமைவாய்ந்த ஓலைச்சுவடிகளும், தனிநபர்களின் சேமிப்பு புத்தகங்களும் முற்று முழுதாக அழிவடைந்தன.

பின்னர் 2004 ஆம் ஆண்டு மீண்டும் புனரமைக்கப்பட்டு நூலகம் திறந்துவைக்கப்பட்டது. தற்போது ஒரு இலட்சத்தி 8 ஆயிரம் புத்தகங்களும், தனிநபர்களால் அன்பளிப்புச் செய்யப்பட்ட ஓலைச்சுவடிகளும் உள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா அரசாங்கத்தினால் கடந்த வருடம் 16 ஆயிரம் புத்தகங்கள் அன்பளிப்பு செய்யப்பட்டுள்ளன.

நாளாந்தம் பெருமளவான வாசகர்கள் இந்த நூலகத்தினை பயன்படுத்துகின்றார்கள்.

நூலக எரிப்பின் நேரடி சாட்சியாளரான யாழ் மாநகர சபையின் முன்னாள் ஆணையாளரும், வடமாகாண சபையின் அவைத் தலைவர் சி.வி.கே. சிவஞானம் யாழ் பொது நூலக எரிப்பு தொடர்பில் பிபிசி தமிழுக்கு தெரிவித்த கருத்துக்கள்.

யாழ்ப்பாண பொது நூலகம் யாழ் மாநகர சபையின் நிர்வாகத்தின் கீழ் 1941 ஆம் ஆண்டில் இருந்து வருகின்றது.

அந் நூலகம் 1981 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 1 ஆம் திகதி மாவட்ட சபை தேர்தல் கால வன்முறையின் போது எரிக்கப்பட்டது. இலங்கை அரசின் காவல் துறையினரும், அவர்களுடன் இணைந்த கட்டாக்காலிகளும் இணைந்து தமிழ் தேசியத்தின் பொக்கிஷமான நூலகத்தை எரித்தார்கள். இச்சம்பவம் நடைபெற்று 37 வருடங்கள் கடந்துவிட்டன.

அப்போது நடைபெற்ற அராஜகங்களை நேரடியாக நான் பார்த்தவன். அந்த வகையில் நூலக எரிப்பின் நேரடி சாட்சியாக நான் உள்ளேன்.

மாவட்ட சபை தேர்தலுக்காக அன்று யாழில் கூடியிருந்த அமைச்சர்கள் இங்கு ஐக்கிய தேசிய கட்சியின் ஆட்சியை கொண்டுவர வேண்டும் என்ற எண்ணத்தில் இருந்தனர். அந்த தேர்தல் முடிவுகளை மாற்றி அமைக்க வேண்டும் என்ற அவர்களின் செயற்பாட்டை துணிந்து எதிர்த்து நின்ற அரச அதிபர் யோகேந்திரா துரைசுவாமியினால் அவர்களின் சதி முயற்சி முறியடிக்கப்பட்டது.

இதனால் அன்று துரையப்பா விளையாட்டரங்கில் நிலை கொண்டிருந்த காவல்துறையினரும், அவர்களுடன் இணைந்து சிலரும் நூலகத்தை தீக்கிரையாக்கினர்.

நூலகம் எரிக்கப்படும் போது எனக்கு முதலில் திருமதி யோகேந்திரா துரைசுவாமி தகவல் தந்திருந்தார். தகவல் கிடைத்ததும் என்னுடைய வாகனத்தை செலுத்திக் கொண்டு புறப்பட்டேன். வேம்படி சந்தியை அண்மித்த போது பொலிஸார் தடுத்து நிறுத்தினார்கள். மேற்கொண்டு செல்ல வேண்டாம் என்று அச்சுறுத்தினார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காவல்துறையின் தடையினை மீறி சப்பல் வீதியை அடைந்தபோது அங்கு நின்ற காவல்துறையினர் என்னையும், வாகனத்தையும் சுற்றி நின்று முன்னோக்கிச் செல்லவிடாது தடுத்து நிறுத்தினார்கள். இதனையும் மீறி சென்றால் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று அச்சுறுத்தி, துப்பாக்கியின் பிடியால் வாகனத்தின் மீது குத்தி என்னை மேலும் அச்சுறுத்தினார்கள்.

தடுத்து நிறுத்தப்பட்ட நிலையில் சப்பல் வீதியில் நின்று நேசித்து வளர்த்த தமிழ் மக்களின் கலாசார சின்னமாக இருந்த நூலகம் எரிவதை நேரடியாக பார்த்தேன். இந்த வன்முறையை அரசாங்கம்தான் செய்தது என்பதை தெளிவாக தெரிந்து கொண்டேன்.

அன்று 1981 ஜூன் முதலாம் தேதி காலை 5 மணியளவில் எரிந்த நூலகத்திற்கு சென்ற போது அமிர்தலிங்கம் உள்ளிட்டவர்கள் அங்கு நின்றார்கள்.

அங்கு சென்று பார்த்த போது நூலகத்தில் இருந்து 97 ஆயிரம் புத்தகங்கள் எரிந்து சாம்பலாகி கிடந்தது. ஆனந்த குமாரசாமியின் பழமைவாய்ந்த ஏட்டுச் சுவடிகளும் எரிந்து சாம்பலாகிக் கிடந்தது.

நூலக எரிப்பு என்பது கலாசார, கல்வி படுகொலையாகும். இது தமிழ் இனத்தை அச்சுறுத்துகின்ற படுகொலை நிகழ்வாகவே பார்க்கின்றேன்.

மீண்டும் அந்த நூலகத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்று முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. இதற்காக பல இடங்களில் நிதி சேகரிக்கப்பட்டன.

எரிக்கப்பட்ட நூலகத்தின் முன்பகுதியை நினைவுச் சின்னமாக பேணிக் கொண்டு நூலகத்தின் மேற்குப் பகுதியை புதிதாக நிர்மாணித்து 1984 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 4 ஆம் தேதி பல்வேறு அச்சுறுத்தலுக்கு மத்தியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்ட நூலக பகுதியை அமரர் அமிர்தலிங்கம் ஊடாக நான் திறந்து வைத்திருந்தேன்.

இதன் பின்னர் யுத்தம் காரணமாகவும் நூலகம் மீண்டும் சிதைக்கப்பட்டது. சிதைக்கப்பட்ட நூலகத்தினை புனரமைப்புச் செய்வதற்கு அதன் பின் வந்த அரசாங்கங்கள் முனைப்புக் காட்டியிருந்தன. இதனால் நூலக எரிப்பினை நினைவு கூறும் வகையில் எங்களால் பாதுகாத்து வைக்கப்பட்டிருந்த நூலகத்தின் முன் பகுதி முழுமையாக புனரமைக்கப்பட்டு, நூலக எரிப்பின் சான்றும் அரசாங்கத்தால் திட்டமிட்டு இல்லாமல் செய்யப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுப்பிக்கப்பட்ட பின்னர் நவீனத்துவத்துடன் தற்போது இயங்கி வருகின்றது. குறிப்பாக கணினி உட்பட பல்வேறு வசதி வாய்ப்புக்கள் அங்கு உள்ளது. இருந்த போதும் நாங்கள் இழந்த தமிழ் மக்களின் ஓலைச் சுவடிகள் உட்பட பல பொக்கிஷங்களை மீண்டும் பெற்றுக் கொள்ள முடியாத நிலையிலேதான் இருக்கின்றோம்.

ஒரு காலத்தினுடைய கலாசார படுகொலையின் சுவடாகவே யாழ் பொது நூலக எரிப்பினை பார்க்கின்றேன் என்றார்.

யாழ் பொது நூலக எரிப்பு தொடர்பில் பதிப்பாளரும் சிவசேனை அமைப்பின் இலங்கை தலைவர் மறவன்புலவு க.சச்சிதானந்தம் பிபிசி தமிழுக்கு தெரிவித்த கருத்துக்கள்:

யாழ்ப்பாண நூலகத்தை 1981 மே 31 அல்லது ஜூன் முதலாம் தேதி அழிக்க நினைத்தவர்கள் தமிழர்களை வேரோடும் மண்ணின் மரபோடும் அழிக்க நினைத்தவர்கள்.

அவர்களுடைய எண்ணம் நிறைவேறாது. தமிழர்கள் பீனிக்ஸ் பறவையை போன்றவர்கள். அழிவடைந்த சாம்பலில் இருந்து தமிழர்கள் மீண்டெழுவார்கள்.

அன்பும் அறனும் அருளும் என்று பாடிய பெருந்தகைகள் வாழ்ந்த இந்த மண்ணிலே இருந்த இந்த நூலகத்தை எரித்து தமிழ் இனத்தை மண்ணோடு மண்ணாக்கலாம் என்ற கனவு கண்டவர்கள் இன்று அதில் தோற்றுப் போய்விட்டார்கள்.

தமிழர்கள் இன்று நிமிர்ந்து நிற்கின்றார்கள். எந்த அழிவுகளையும் எதிர் கொள்ள தயாராக இருக்கின்றோம் என்றார்.

*நன்றி: BBC Tamil 1 ஜூன் 2018*
*(https://www.bbc.com/tamil/sri-lanka-44320521)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீண்டும் ஒரு தடவை கடந்து போயிற்று

*என்.செல்வராஜா*

யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் எரிக்கப்பட்டு, மற்றுமொரு ஆண்டுக்கான நினைவு நாளையும் கடந்துசென்றுவிட்டோம். முப்பத்தெட்டு ஆண்டுகளாக இதை மறக்காமல் நினைவுகூர்வதுடன், எமது சமூக அக்கறையானது மிஞ்சிப் போனால் ஒருசில பத்திரிகைக் கட்டுரைகளுடன் நின்றுவிடுகின்றது. போதாக்குறைக்கு நூலகம் எரிந்தது மே முப்பத்தொன்றிலா ஜுன் ஒன்றிலா என்ற பட்டிமன்றம் வேறு. நிகழ்ந்துவிட்ட இனவாதிகளின் தமிழர் மீதான கலாச்சாரப் படுகொலையை வரிக்கு வரி நினைவில் மீட்டெடுத்துப் பின்னர் எமது அன்றாட 'சோலிகளுக்குள்'' எம்மைத் தொலைத்துவிடப் பழகிக்கொண்டோம். இனி 39ஆம் நினைவுகூடலில் மீண்டும் வழமைபோலவே சந்தித்துக்கொள்வோம்.

இந்தக் கட்டுரையை நான் எழுதுவதன் நோக்கம் எனது பங்குக்கு யாழ்ப்பாண நூலக எரிப்பினை நினைவுகூர்வதல்ல. நாம் ஆண்டுதோறும் நினைவுகூர்வதால் மாத்திரம் எமது சமூகப் பங்களிப்பு முடிந்துவிடுவதில்லை என்ற செய்தியை ஆர்வமுள்ள ஒரு சில மனங்களிலாவது உறையவைப்பதே இக்கட்டுரையின் நோக்கம்.

நூலக அழிப்பையொட்டிப் பிரசுரமாகும் ஒவ்வொரு ஞாபகார்த்தக் கட்டுரையிலும் இடம்பெறும் பிரதானமான சொல்லாடல் 'கலாச்சாரப் படுகொலை'' என்பதாகும். கலாச்சாரப் படுகொலை என்றால் என்ன என்பதற்கு எனது வரைவிலக்கணம் எளிமையானது.

'ஒரு இனத்தின் கலாச்சாரத்தை, இனத்துக்குரிய தனித்துவ அடையாளத்தை, அரசியல் தனித்துவத்தை, இனத்துக்குரிய மத அடையாளத்தை, இனத்தைப் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வின் தூண்டுதலை படிப்படியாக மழுங்கடிக்கச் செய்வதன் மூலம் இன உணர்வற்றதொரு சமூகமாக அதனை காலக்கிரமத்தில் மாற்றிவிடுவது''

இலங்கையில் இதனை ஆரம்பத்தில் 1958 இனக்கலவரங்களின் மூலம் சாதிக்க முயன்றனர். 1974 இல் தமிழாராய்ச்சி மாநாட்டினைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழப்பியதன் மூலம் சாதித்தனர். இவை தந்த நம்பிக்கையை, 1981இல் யாழ் நூலக எரிப்பின் மூலமும், தமிழரின் உணர்வைத் தூண்டும் கோயில் தேர் எரிப்பு, புத்தகக் கடைகள் எரிப்பு, பத்திரிகைக் காரியாலய எரிப்பு என்று பலமுனைத் தாக்குதல்களின் மூலம் பின்னாளில் வளர்த்துக் கொண்டனர்.

இன்று என்னவென்றால், தமிழர்களின் கலாச்சாரச் சீரழிவைத் தமிழர்களின் மூலமே அரங்கேற்றிவருகின்றார்கள். வாள்வெட்டுக் கலாச்சாரம், சாதிய மீள்கட்டுமானம், ஹிந்துத்துவ / தமிழ் பௌத்த சிந்தனை, பாலியல் சீர்கேடுகள், தமிழக 'ஹீரோ வழிபாடு'' என்பன அதன் எச்சங்களே. எம்மவர்கள் அதனை உணர்ந்தும் எதுவும் செய்ய முன்வராத கையறுநிலையிலேயே அவர்களை வைத்திருக்கும் வகையில், அவர்களுக்கு அன்றாடம் புதுப்புதுப் பிரச்சினைகளை தோற்றுவித்தும், அதன்மூலம் சலிப்பை ஏற்படுத்தி, அவர்களது நேரான சிந்தனையை வெற்றிகரமாகத் திசைதிருப்பியும் வருகின்றனர்.

ஒரு குற்றத்தை நேரடியாக ஆதரிப்பதும், அக்குற்றம் நடப்பதை அறிந்தும் அறியாததுபோல இருந்து போலிமௌனம் காத்து அதனை மறைமுகமாக ஆதரிப்பதும், அக்குற்றமே நடக்கவில்லை என்று கண்களையும் காதுகளையும் மூடிக்கொண்டிருப்பதும் ஒரு வகையில் சமூகக் குற்றமாகும்.

யாழ்ப்பாண நூலகத்தை எரித்துக் கலாச்சாரப் படுகொலை நிகழ்த்தியதாக 38 ஆண்டுகளாக நினைந்தழுதுவரும் நாம், கடந்த 38 ஆண்டுகாலமாக எமது நூல்களையும் ஆவணங்களையும் பாதுகாக்க, குறிப்பாக எமது மக்களின், எமது மண்ணின் படைப்பாக்கங்களை அழிவிலிருந்து பாதுகாக்க என்ன செய்திருக்கிறோம் என்பதைச் சற்றே எண்ணிப்பார்க்கவேண்டும். குறைந்தபட்சம் நாம் எழுதும் படைப் பாக்கங்களையாவது பாதுகாத்துவைத்து அடுத்த தலைமுறைக்குக் காவிச்செல்ல ஏதேனும் ஏற்பாட்டைச் செய்திருக்கிறோமா?

எம் முன்னவர்கள் படைத்தளித்த நூல்கள் எமது இனத்தின் பண்பாட்டை, கலாச்சார விழுமியங்களை, அறிவியல் தேடலை அளவிட உதவும் சாதனங்களாகும். அத்தகைய அறிவேடுகளின் பாதுகாப்பு என்பது, எமது வளத்தை, அறிவின் தேட்டத்தை எமது தலைமுறைக்கும், அடுத்து வரும் தலைமுறைகளுக்கும் எடுத்துச் சொல்லும் வல்லமை படைத்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அத்தகைய ஒரு வரலாற்றுப் பதிவை, ஈழத்தமிழ்த் தேசியத்தின் அறிவுத்தேட்டத்தின் கனதியை, எமக்கு எம் மூதாதையர் ஏடுகளாகவும், கையெழுத்துப் பிரதிகளாகவும், பெட்டகங்களில் பாதுகாத்து வைத்துக் கையளித்தனர். நவீன தொழில்நுட்பம் வழக்கில் இல்லாதிருந்த அக்காலகட்டத்திலும் பூச்சிகளிலிருந்தும் இயற்கை அழிவுகளிலிருந்தும் பாதுகாத்து எமக்கு வழங்கப்பட்ட முதுசொத்தை அடுத்த தலைமுறைக்கு பாதுகாத்து வழங்கவேண்டிய பொறுப்பு எமக்குள்ளது. அந்த எதிர்பார்ப்புடனேயே முன்னோர்கள் எம்மிடம் அவற்றைக் கடத்தினார்கள். இன்று நாம் அதனை அடுத்த தலைமுறையினருக்குக் கடத்தலாம் என்று பொது நூலகங்களுக்கும் பல்கலைக்கழக நூலகங்களுக்கும் வழங்கிவிட்டு நிம்மதிப் பெருமூச்சு விடுகின்றோம். சுவடிச்சாலையொன்று செய்ய வேண்டிய ஒரு பெரும்பணியை வரையறைகள், கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதொரு பொது நூலகத்தில் எதிர்பார்க்கின்றோம்.

யாழ்ப்பாண நூலகம் எரிந்த மூன்றாண்டுகளில் 1984இல் பருத்தித்துறை ஹார்ட்லி கல்லூரி நுலகமும் அழிக்கப்பட்டது. இன்றும் அது முழுமையான வளர்ச்சியைக் காண முடியாதுள்ளது.

1987-மார்ச் மாதத்திலிருந்து 1990 வரை எமது மண்ணில் நிலைகொண்டிருந்த இந்திய இராணுவத்தின் (IPKF) கட்டுப்பாட்டுக்குள் வடக்கு-கிழக்கு திணறிக்கொண்டிருந்த ஒரு கால கட்டத்தில் ஏற்படுத்திய பாரிய நூலக/ஆவண அழிப்புகளை இலங்கைத் தேசிய நூலகமோ வேறெந்த அதிகார மையங்களோ கணக்கிட்டுப் பொது அறிக்கையாகப் பகிரங்கப்படுத்தவும் இன்றுவரை எவரும் அழுத்தம் கொடுக்கவில்லை.

மட்டக்களப்புப் பொது நூலகத்தின் வசமிருந்த 64000 நூல்கள் இந்திய இராணுவக் காலத்தில் 24000 நூல்களாகக் குறைந்துவிட்டதற்கு அந் நிறுவனத்தில் அக்கால கட்டத்தில் பணியாற்றிய நூலகரின் மீது பழியைச் சுமத்தியதுடன் சரி. இன்றளவில் அன்பளிப்பாகத் தமிழகத்திலிருந்தோ பிற ஆசிய நாடுகளிடமிருந்தோ நூல்களைப் பெற்றுக்கொள்ள முயற்சி எடுக்க உதவிடும் அளவுக்கு அங்குள்ள புத்திஜீவிகளுக்கும் நேரமில்லை. அங்குள்ள நூல்களின் பராமரிப்பு நிலைமை மிகவும் வேதனைக்குரியதாக உள்ளது. (அங்கிருந்த நூலகரும் தற்போது இடமாற்றத்துக்குள்ளாகி விட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. வெற்றிடமாக உள்ள நூலகரின் இடம் நிரப்பப்பட்டுவிட்டதாகத் தகவல் இல்லை).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணத்தில் திருநெல்வேலியில் இந்திய இராணுவ காலத்தில்தான் Dr. கிருஷ்ணானந்த சிவம் தன் உயிரும் உடலுமாகப் பேணிவளர்த்திருந்த ஊற்று நிறுவனம் அதன் பெறுமதிமிக்க ஆய்வறிக்கைகள், நூல்களுடன் தரைமட்டமாக்கப்பட்டது. அந்நிறுவனத்தின் வெளியீடாக பேராதனையிலும் பின்னர் யாழ்ப்பாணத்திலும் இருந்து வெளிவந்த 'ஊற்று'' சஞ்சிகை பாடசாலை உயர்வகுப்பு மாணவரிடையே எவ்வளவு செல்வாக்கைப் பெற்றிருந்தது என்பதை பலரும் அறிவார்கள். இந்திய இராணுவத்தின் இந்த தமிழர் அறிவியல் நிறுவன அழிப்பை வருடாந்தம் நினைவுகூர்வார் எவருமில்லை.

தமிழகத்தில் இயங்கிய தமிழர் தகவல் நிறுவனத்தினரிடம் ஏராளமான இலங்கைத் தமிழரின் அரசியல் போராட்டம் பற்றிய ஆரம்பகால ஆவணங்கள் பேணப்பட்டிருந்தன. இந்திய இராணுவம் 1987இல் தமிழர் பிரதேசத்தில் காலூன்றியதும், 'தமிழர் வாழ்வு சிறக்க வழி கண்டாயிற்று'' என்ற நம்பிக்கையை வளர்த்து அவர்களது ஆவணக்காப்பகத்தை இலங்கைக்குக் கொண்டுவருவதற்கு மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் போது, தமிழகத்தின் துறைமுகமொன்றில் வைத்தே அவர்களது மொத்த சேகரிப்புகளையும் இந்திய புலனாய்வுத்துறை பறிமுதல் செய்துவிட்டது. அவை இன்று எங்கே உள்ளதென்றே தெரியாத நிலையில் தமிழர் தகவல் நடுவம் (TIC) தப்பிப் பிழைத்த சில ஆவணங்களுடன் லண்டனில் குடியேறி இன்றும் இயங்கி வருகின்றது. மூல ஆவணங்கள் மீளக்கிடைக்க வேயில்லை. எடுத்தவர்கள் திருப்பித் தரும் நோக்கிலா பறித்திருப்பார்கள்?

1995 ஒக்டோபரில் எமது தாயக மண்ணில் நிகழ்ந்த வலிகாமம் இடப்பெயர்வு பல நூலகங்களை கைவிட்டுச் செல்லும் நிலைமையை மக்களிடையே ஏற்படுத்தியிருந்தது. பொது நுலகங்கள் மாத்திரமன்றி, குடும்ப நூலகங்கள் இருந்த வீடுகளும்தான் அவ்வேளையில் கைவிடப்பட்டன. 1996இல் படிப்படியாக மக்கள் வீடு திரும்பியபொழுது பெரும்பாலான நூல்கள் சூறையாடப்பட்டிருந்தன. யார் சூறையாடினார்கள்? ஏன் பிற சொத்துக்களை விட தமிழர்களின் புத்தகங்களை கையகப் படுத்துவதில் அக்கறை கொண்டார்கள் என்ற கேள்வி எங்கள் மனதில் இன்றளவில் உறைக்கவில்லை. அத்தகைய இழப்புகளின் கணக்கீடும் பெயரளவில்கூட எவரும் இன்றுவரை நடத்தியிருக்கவில்லை. யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் சுண்டிக்குளி-மூர்வீதி நுலகங்களில் மாத்திரம் 29000 நூல்கள் இழக்கப்பட்டிருப்பதாக திருமதி ரூபா நடராஜா தனது நூலில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(பக்கம் 118) குறிப்பிட்டுள்ளார். மற்றைய கிளைகள், மற்றும் பிரதான நூலகத்தில் இழப்புக்கள் பற்றிய ஏதும் புள்ளிவிபரங்கள் மேற்கொள்ளப்பட்டனவா என்று தெரியவில்லை.

தமிழ் மண்ணில் இவ்வாறாக நூலக சேகரிப்புகள், தனியார் சேகரிப்புகள் இயற்கை அழிவுகளாலும், பராமரிப்புக் குறைபாடுகளினாலும், போர் தந்த இடப்பெயர்வுகளாலும், குண்டுவீச்சுக்களாலும் தொடர்ச்சியாக அழிந்து செல்கின்றன. அவரவர் தமது அனுபவங்களை கட்டுரைகளிலும் நூல்களிலும் எழுதும்போது தான் எமக்குச் சற்றே உறைக்கின்றது. எந்த எழுத்தாளரைக் கேட்டாலும் தான் இழந்த நூல்களையிட்டு கவலைப் படாதவர்களே இல்லை. இழந்தவை அனைத்தும் எதிர்காலத்தின் தேசியச் சொத்துக்களல்லவா?

2004இல் இலங்கைக் கரையோரங்களைத் தாக்கிய சுனாமியும்கூடத் தன் பங்குக்கு பலரது நூலகங்களைக் காவுகொண்டுவிட்டது. எனது இலங்கைப் பயணத்தின்போது லண்டனில் ஒருவர் குறிப்பிட்டதற்கிணங்க ஏழாலை மேற்கிலுள்ள சித்தி விநாயகர் நூல் நிலையத்திற்குச் சென்றிருந்தேன். இந்தப் போர்ச் சூழலிலும் எறிகணைகளிலிருந்தும், பாரிய இடப்பெயர்வுகளில் இருந்தும் அந்த நூல்கள் தப்பிப் பிழைத்திருந்தன. அங்கு கணேசராஜா என்ற இளைப்பாறிய பாடசாலை அதிபரொருவர் தன் முதுமைக்காலத்திலும் அந்நூலகத்தை எவ்வித நிதி உதவிகளுமின்றிப் பாதுகாத்து வருகின்றார். இத்தகைய சிறு நூலகங்களில் எமது தேசியச் சொத்துக்கள், உதவும் கரங்களை எதிர்பார்த்து முடங்கிக் கிடக்கின்றன.

2015இல் கொழும்பு பொது நூலகத்திற்குச் சென்றிருந்தேன். 2 வருடங்களுக்கு மேலாக எந்தவொரு வாசகசகராலும் தீண்டப்படாதிருந்த பல நூறு தமிழ் நூல்களை நூலகர் சிகப்பு நாடாவால் தனியாகக் கட்டி ஒதுக்குப்புறமாக வைத்து அவற்றை அப்புறப்படுத்த ஆயத்தங்கள் செய்துவைத்திருந்தார். கொழும்புத் தமிழ்ச் சங்க நூலக ஆட்சிக் குழுவினருக்கு இதனை உடனடியாகத் தெரிவித்து அவர்களின் துரித முயற்சியினால் சில நூறு நூல்களை காப்பாற்றித் தமிழ்ச்சங்க நூலகத்திற்கு எடுக்க முடிந்தது. பொது நூலகங்களில் பாவனையில் இல்லாத நூல்களை அப்புறப்படுத்தி ஏலத்தில் விற்றுவிடுவதொன்றும் புதிய செய்தியல்ல. பராமரிப்புச் சிக்கல்கள், இடப் பற்றாக்குறை என்பவற்றால் இந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறை கனடா மற்றும் ஐரோப்பாவிலும்கூட வழக்கில் உள்ளது தான். நீங்கள் ஐந்தாண்டுகளுக்கு முன்னர் ஒரு நூலகத்திற்கு உங்கள் சேகரிப்பை வழங்கியிருந்தீர்களானால், இன்று அந்த நூலகத்திற்குச் சென்று உங்கள் நூல்களில் ஒன்றைத் தேடிப்பார்த்தால் இதனை நீங்கள் அனுபவமூலமாகக் கண்டுகொள்ள முடியும்.

பொது நூலகங்களில் மாத்திரமல்லாமல் பல்கலைக்கழக நூலகங்களிலும் கூட இந்த நடைமுறை நேரடியாகவோ மறைமுகமாகவோ அமுலாக்கப் படுகின்றது. போர்க்காலப் பிரசுரங்களை பாதுகாப்புக் காரணங்களுக்காக அப்பறப்படுத்தி சுயதணிக்கையை மேற்கொண்டுவரும் தமிழ்ப் பிரதேச நூலகங்கள் பலவுண்டு. பல அரிய நூல்களை பிரதேச சபை நூலகங்களில் இரவல் வழங்கும் பிரிவில் கண்டெடுத்து நூலகர்களிடமே அவற்றின் முக்கியத்துவத்தைத் தெரியப்படுத்தி அவற்றை உசாத்துணைப்பிரிவுக்கு மாற்ற ஆலோசனை கூறிய அனுபவங்களும் எனக்குண்டு. அவற்றின் ஆயுளை மேலும் சிறிதுகாலம் நீடிக்கவைக்கும் நப்பாசையே காரணம்.

1983-2007 காலகட்டத்தில் நூற்றுக்கணக்கான போர்க்கால வெளியீடுகள் கிளிநொச்சி- அறிவு அமுது பதிப்பகம், தமிழ்த் தாய் வெளியீட்டகம், புதுக்குடியிருப்பு- சந்திரன் பதிப்பகம், பரந்தன் சுப்ரம் பதிப்பகம், யாழ்ப்பாணம்-நங்கூரம் வெளியீடு எனப் பல வெளியீட்டக /அச்சகங்களினால் பிரசுரிக்கப்பட்டிருந்தன. இவை அனைத்தும் பிரதேச சபை நூலகங்களில் இன்றும் அவற்றின் வரலாற்று முக்கியத்துவம் தெரியாமல் கவனிப்பாரற்றிருக்கக்கூடும்.

இரவல் பகுதியில் வைக்கப்படும் நூல்கள் சாகாவரம் பெற்றவையல்ல. அவை ஒரு சில ஆண்டுக் காலத்தில் பாவனைக்கு உதவாதவையாகிவிடும். ஆனால் அந்த நூல்களை என்றுமே எதிர்காலத்தில் அடுத்த தலைமுறை யென்ன, இந்தத் தலைமுறையிலேயே மற்றொருமுறை காணமுடியாது போய்விடும் அபாயமும் உள்ளது. இத்தகைய நூல்களை பிரித்தெடுத்து அவற்றை பாதுகாத்து வைக்கவேண்டும் என்ற அறிவுறுத்தல்களை உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக நிர்வாகிகள் அல்லது பிரதேச சபைச் செயலாளர் ஒரு சுற்றறிக்கை மூலமாக வழங்கித் தடுத்து நிறுத்திவிடலாம். அதனால் கணிசமான ஈழத்தவரின் நூல்களை அவற்றின் அழிவிலிருந்தும் பாதுகாக்கலாம். இதனை உயர் நிர்வாகிகள் உணராதவர்களா என்ன?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அண்மையில் வி.பரந்தாமன் என்பவர் எழுதியிருந்த 'கெரில்லாப் போர் விரகுகள்'' (விரகுகள்- தந்திரோபாயம்) என்ற ஒரு சிறு நூலைத்தேடி, யாழ்ப்பாணத்திலுள்ள அந்நூலாசிரியர் லண்டனில் உள்ள எனது இல்லத்துக்குத் தொலைபேசிமூலம் தொடர்புகொண்டிருந்தார். 1970களின் பின்னர் வெளியிடப்பட்ட பல நூல்கள் இன்று பாதுகாக்கப்படாமல் அருகிவிட்டன. அதனைப் படைப்பவர்களும் எங்கோ ஒரு நூலகத்தில் அவை காலாதிகாலமாகப் பேணப்படும் என்ற கனவுடன் தன் வாழ்வை வாழ்ந்து முடித்துவிடுவார். அடுத்துவரும் தலைமுறையினர் அந்நூல்பற்றிய எவ்வித தகவலும் இன்றியே கைக்கெட்டிய நூல்களை வைத்துத் தமது ஆய்வுகளை ஒப்பேற்றிவிடுவார்கள். இந்த நிலைக்கு யார்தான் காரணம்? இனவாத அரசு என்று மாத்திரம் குற்றஞ்சாட்டிவிட்டு நாம் தப்பிவிட முடியாது. எதிர்கால சந்ததியினர் எம்மை மன்னிக்கமாட்டார்கள். எமக்கும் பொறுப்புள்ளது.

இந்த இடத்தில் நூலகங்களுக்கும் ஆவணக் காப்பகங்களுக்கும் (சுவடிச்சாலைகள்) உள்ள பெரிய வித்தியாசத்தை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இந்தப் புரிதலை வளர்த்துக்கொள்ளவேண்டியது ஒவ்வொரு ஈழத் தமிழனதும் கடமையாகும்.

நூலகங்கள் என்றுமே சுவடிக்காப்பகங்களாக இருப்பதில்லை. அவற்றின் நோக்கம் 'வாசிக்க வருபவரின் வருகை ஏற்றும், மரியாதை காட்டி அவர்க்கிருக்கை தந்தும், ஆசித்த நூல்தந்தும் புதிய நூல்கள், அழைத்திருந்தால் அதையுரைத்தும், நாளும் நூலை, நேசித்து வருவோர்கள் பெருகும் வண்ணம், நினைப்பாலும் வாக்காலும் தேகத்தாலும், மாசற் றதொண் டிழைப்பீர் சமுதாயச்சீர், மறுமலர்ச்சி கண்டதென முழக்கஞ் செய்வீர்'' என்று புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் தனது 'நூல்நிலையம்'' என்ற கவிதையில் கூறியிருப்பதுபோலத் தன் பணியை ஆற்றுவதாகும். மாநகர சபை, நகர சபை, பிரதேச சபை நூலகங்கள் அதனையே செய்கின்றன. யாழ்ப்பாண நூல்நிலையம், மட்டக்களப்பு நூல்நிலையம் உள்ளிட்ட இலங்கையின் அனைத்துப் பிரதேச நூலகங்களும் ஒரு கட்டமைப்புக்குள்ளேயே அடங்கிவிடுபவை. அவற்றின் விரிவாக்கம் என்பது ஒரு எல்லை வரையிலுமே.

ஆவணக் காப்பகங்களின் பணிமுற்றிலும் வேறானது. அதன் பிரதான பணி காப்பகங்களாகச் செயற்படுவது மாத்திரமே. எமது மக்களால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எழுதப்பட்ட, அல்லது, எமது மக்களைப் பற்றி எழுதப்பட்ட நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள், துண்டுப் பிரசுரங்கள், உள்ளிட்ட அனைத்து ஆவணங்களினதும் ஒவ்வொரு பிரதியை நிரந்தரமாகப் பேணிப் பாதுகாத்து வைப்பது. ஆய்வுத்தேவைகளுக்கு மாத்திரம் மிகுந்த கட்டுப்பாடுகளின் ஊடாக ஆய்வாளர்களுக்கு மாத்திரம் பார்வையிட அனுமதிப்பது. உலகில் அதன் பிரதிகள் அழிந்தொழிந்து போன அவசர நிலையில் அதற்கு புத்துயிர்கொடுக்க வேண்டிய நிலை வரும் வேளையில் பதிப்பரிமையாளர் கேட்டுக்கொள்ளுமிடத்து அவ்வாவணத்தை மிகுந்த அவதானிப்புடனும் கட்டுப்பாட்டுடனும் பிரதியெடுத்துக் கொடுத்தல். இவை அனைத்தும் ஒரு ஆவணக் காப்பகத்தை நூலகத்திலிருந்தும் வேறுபடுத்திக் காட்டும். இது ஒரு சுதந்திரமான, தனித்தியங்கும் நிறுவனமாகவே உலக நாடுகளில் செயற்படுகின்றன. இவை பொதுவாக, தேசிய நூலகமொன்றின் அருகாமையில் ஆனால் எந்தவொரு நிறுவனத்தின் கட்டுப்பாடுகளும் இன்றி ஆவணக்காப்பகங்கள் சுதந்திரமாக இயங்குகின்றன. ஒரு ஆவணக்காப்பகப் பணியாளரின் பணி உலகின் எந்தவொரு நாட்டிலும் தமது தேசிய இனங்கள் தொடர்பான ஆவணங்கள் வெளியிடப்பட்டிருந்தால் அதனைக் கண்டறிந்து, அதன் ஒரு பிரதியைப் பெற்றுப் பாதுகாப்பதுடன், உள்நாட்டில் வெளியிடப்படும் அனைத்து பிரசுரங்களிலும் ஒவ்வொரு பிரதியினை அச்சக, பதிப்பக வெளியீட்டுச் சட்டத்தின் கீழ் சட்டபூர்வமாகப் பெற்றுப் பாதுகாத்து வைத்தலாகும்.

மறைக்கப்பட்டுவரும் எமது வரலாற்றைப் பேணவும், அழிக்கப்பட்டுவரும் பண்பாட்டு விழுமியங்களைப் பேணவும், 'படுகொலை செய்யப்பட்டுவரும் எமது காலாச்சாரத்தை' பேணவும் எமக்குத் தேவைப்படுவது ஈழத்தமிழருக்கான சுதந்திரமானதொரு ஆவணக் காப்பகமே.

எமது அறிவுஜீவிகள் இதுபற்றிச் சிந்திக்கிறார்களோ இல்லையோ எமது அரசாங்கம் கட்சி வேறுபாடின்றி, மிகத் தீர்க்கதரிசனத்துடன் அதனையிட்டுச் சிந்தித்துவந்துள்ளது.

எவ்வகையிலும் ஈழத்தமிழர்களின் ஆவணங்கள் பேணப் படுவதையிட்டு அலட்டிக்கொள்ளாதவாறு இயங்கும் கொழும்பிலுள்ள சுவடிச்சாலையில் தமிழர் எவரும் ஊழியர்களாக இருப்பதை திட்டமிட்டுத் தவிர்த்தும் வருகின்றது. காலாதிகாலமாக, தேசிய நூலகத்திலோ, தேசிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவடிகள் காப்பகத்திலோ குறைந்தபட்சம் உதவி இயக்குநர் பதவிகளிலாவது ஒரு தமிழரை தீர்மானங்களை எடுக்கும் அதிகாரமுள்ளவராக நியமிக்காதிருப்பதன் பின்னாலுள்ள அரசியலை நாம் கவனமாகப் புரிந்துகொள்ளவேண்டும்.

சட்டபூர்வமாக இலங்கையின் ஒவ்வொரு பதிப்பகமும், அச்சகமும், தனிப்பட்ட ஆசிரிய வெளியீட்டாளரும் தத்தமது நூல்களில் ஐந்து பிரதிகளை சுவடிகள் காப்பகத்திற்கு வழங்கியாகவேண்டும். இல்லாவிட்டால் சட்டநடவடிக்கை எடுக்கப்பட நேரிடும். சுதந்திரத்துக்குப் பின்னர் எந்தவொரு தமிழராவது பதிப்புரிமைச் சட்டத்தின்கீழ் சட்டத்தின் முன் சுவடிகள் காப்பகத்தினால் நிறுத்தப்பட்டிருக்கிறார்களா?

மிக அண்மைக்காலத்தில்கூட மாகாண அரசின் அதிகாரப் பகிர்வுகளின் போது, கல்வி, கலாச்சார, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை, மற்றும் இளைஞர் விவகார அமைச்சு வடமாகாணத்துக்கு வழங்கப்பட்டது. அதில் நூலகங்களை அமைப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டிருந்த போதிலும், ஆவணக் காப்பகங்கள்-சுவடிச் சாலைகள் அமைப்பது சட்டத்தின்மூலம் தடுக்கப்பட்டுள்ளது. அது மத்திய அரசின் அதிகாரத்திற்குள் எடுக்கப்பட்டுள்ளது. அது ஏன் என்பதில் உள்ள அரசியலையும் நாம் புரிந்துகொள்ளவேண்டும்.

இந்நிலையில் ஒரு தேசிய இனமாக சுதந்திரமான இயங்குநிலைக்குள் வைக்கப்பட்டிராத ஈழத்தமிழர்களின் ஆக்கபூர்வமான அனைத்து ஆவணங்களையும் இன்றைய காலகட்டத்தில் பாதுகாப்பதற்கு என்ன தான் வழி?

ஈழத்தமிழர்களின் ஆவணங்களை இலங்கையில் தமிழ்ப் பிரதேசங்களில் சட்டபூர்வமாகப் பாதுகாக்க முடியாது. அதனை தேசிய சுவடிச் சாலைக்கு வழங்குவதன் மூலம் மாத்திரமே அது சாத்தியமாகும். இது திருடனின் கைகளிலேயே பணப்பெட்டிச் சாவியை பாதுகாக்கக் கொடுத்தவனின் கதைபோலாகி விடும். மேலும், போர்க்கால இலக்கியங்களையும் ஈழத்தமிழரின் வரலாற்றில் முக்கிய இடம் பெற்றதுமான போராட்ட ஆவணங்களையும் பேணி அடுத்த தலைமுறையினருக்கு வழங்கும் பணியை தற்காலச் சூழலில் இலங்கை மண்ணில் நடைமுறைப் படுத்துவதென்பது சாத்தியமற்றதொன்றாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இலங்கைக்கு வெளியே ஓரிடப்படுத்தி வைப்பதிலும் நடைமுறைச் சிக்கல்கள் நிறையவே உண்டு. புகலிடத் தமிழர் தமது வசதிக்காக தத்தம் நாடுகளில் ஆவணக் காப்பகங்களை நிறுவவே விரும்புவர். ஏற்கெனவே லண்டன் (முல்லை அமுதன் சேகரிப்புகள், ஐரோப்பிய தமிழ் ஆவணக்காப்பகமும் ஆய்வகமும்), ஜேர்மனி, கனடா (வல்வை ஆவணக்காப்பகம்), அவுஸ்திரேலியா/இலங்கை (நூலகம் நிறுவனம்), ஆகிய இடங்களில் சேகரிப்புகள் தனித்தனியாகப் பேணப்பட்டு வருகின்றன. இவை பின்னாளில் பொது நூலகங்களாக பரிணாம வளர்ச்சி பெறாமல், சுவடிகள் காப்பகங்களாக ஒழுங்கமைக்கப்பட்டால் பயனுள்ளதாகும். எமது ஆவணங்களை உலகில் ஓரிடப்படுத்திப் பாதுகாத்து வைப்பதைத் தவிர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே முக்கியமானதாகும்.

தற்போது நூலகம் நிறுவனம் மின்வருடல் முறையில் ஈழத்தவரின் ஆவணங்களை மின்வருடல் செய்து வழங்கி மின்நூலகமாகச் செயற்பட்டு வருகின்றது. இதற்கும் பதிப்புரிமைச் சட்டத்தின்கீழ் பல கட்டுப்பாடுகள், இயலாமைகள் இருப்பினும், ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியுடன் அவரது நூல்களை மின்வருடல் செய்து பாதுகாக்கின்றது. பல நூல்கள் கைவசம் மின்வருடலுக்காகக் காத்திருக்கும் நிலையில் நிதிப் பற்றாக்குறை, ஆளணிப் பற்றாக்குறை, கணனி வசதி என்பவற்றின் காரணமாக மின்வருடல் தரவேற்றம் என்பவை மந்தகெதியிலேயே இடம்பெற்றுவருகின்றன. ஈழத் தமிழரின் தேசிய ஆவணக் காப்பகத்தின் ஓரங்கம் என்ற உணர்வுடன் போதிய நிதிவசதியை வழங்கி நூலகம் நிறுவனத்தின் பணியை துரிதப்படுத்துவதன் மூலமாக மின்நூல் ஆவணக்காப்பகத்தைக் கட்டி எழுப்பலாம்.

லண்டனில் (லூட்டன்) இயங்கும் ஐரோப்பிய தமிழர் ஆவணக்காப்பகமும் ஆய்வகமும் என்ற நிறுவனம் தனது சேகரிப்பில் 7000 ஆவணங்களைக் காத்து வருகின்றது. பெரும்பாலானவை ஈழத்தமிழர்களினதும், அவர்கள் சார்ந்த பன்னாட்டு படைப்பாளிகளினதும் ஆக்கங்களாகும். பிரித்தானிய அறக்கட்டளையாகப் பதிவுசெய்யப்பட்டுள்ள போதிலும், நிரந்தர கட்டிட வசதியின்றி இயங்கும் இந்நிறுவனத்திற்குப் பொருத்தமான கட்டிட வசதி கிட்டியதும், ஈழத்துத் தமிழ்த் தேசிய ஆவணக்காப்பகத்தின் ஓரங்கமாக அச்சிட்ட ஆவணங்களைப் பாதுகாத்துவரும் அங்கமாக இயங்கத் தலைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறே, யாழ்ப்பாணப் பொது நூலகம், கொழும்புத் தமிழ்ச் சங்கம் போன்ற அமைப்புகளும் தத்தம் பங்களிப்பாக தமது நிறுவனத்துக்குள்ளேயே ஒரு சுவடிகள் காப்பகப் பிரிவினை உருவாக்கி, தமது உசாத்துணைப் பிரிவிலிருந்து அரிய நூல்களை பிரித்தெடுத்து, அவற்றை சுவடிகள் பிரிவில் பாதுகாத்து, ஈழத்தமிழரின் ஆவணக் காப்பகத்தின் ஓரங்கமாகத் தம்மை இணைத்துக்கொள்ளலாம்.

இவ்வாறு தனித்தனியாக கட்டமைக்கப்பட்டு இயங்கும் ஆவணக் காப்பகங்கள் தமது ஆவணச் சேர்க்கைகளை ஒரு மத்தியமயப் படுத்தப்பட்ட, கணனிமயப்படுத்தப்பட்டு ஒருங்கிணைக்கப் பட்ட பட்டியலாக்கத்தின் மூலம் (Automated Union Catalogue) தம்மை ஈழத்துத் தமிழ்த் தேசிய சுவடிக்காப்பகமாக இணைத்துக் கொள்ளலாம். இதற்கான மின் பட்டியலாக்க நெறிமுறையொன்றை வகுத்து அதன் வழியாக உலகெங்கும் உள்ள ஈழத்தமிழரின் ஆவணக் காப்பகங்கள் தம்மை அங்கத்துவ நிறுவனங்களாகப் பதிவுசெய்துகொள்ளும் வழியொன்றை ஏற்படுத்திக்கொள்ளவேண்டும். இதற்கான இணையத் தொழில்நுட்ப அறிவுள்ள புத்திஜீவிகள் கைகொடுக்கவேண்டும்.

இத்தகையதொரு பின்புலத்தில் நின்று சமூக உணர்வுள்ள எமது புத்திஜீவிகள் இணைந்து ஈழத்தமிழர்களுக்கானதொரு ஆவணக்காப் பகத்தினை உருவாக்கி வளர்த்தெடுக்க முன்வர வேண்டும். இதனை அடுத்த கட்டத்திற்கு நகர்த்தும் பணிகளில் ஈடுபட விரும்புவோர் தம்மை எழுந்துநின்று அடையாளம்காட்டி ஒருங்கிணைய எழவேண்டும். எத்தனை நாட்களுக்குத்தான் எமது கலாச்சாரப் படுகொலைகளுக்கு இனவாத அரக்கனையே குற்றஞ்சாட்டிக்கொண்டிருப்பது. நாம் கடந்துபோகும் ஒவ்வொரு நாளும், இலங்கையில் எங்கோ ஒரு மூலையில் ஆவணச் சொத்தொன்று அழிந்துபோகின்றது. அதற்கு எமது அக்கறையின்மையே காரணமாகின்றது.

*(நன்றி: ஞானம் கலை இலக்கியச்*
*சஞ்சிகை ஜூலை 2019 )*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரலாற்றை மறைக்கும் மறுக்கும் அரசியலை நிறுத்துங்கள்

*தம்பிராஜா ஜெயபாலன்*

யாழ் நூலகம் மே 31, 1981இல் தீயிடப்பட்டதை கண்களால் கண்ட சாட்சியம், யாழ்ப்பாணப் பொது நூலகம் எரியூட்டப்பட்ட திகதி, மற்றும் நேரத்திற்காக ஏன் இவ்வளவு பிரச்சினைப் படுகிறீர்கள் என்று பலர் கேட்டுள்ளனர். சில நிகழ்வுகளுக்கும் சம்பவங்களுக்கும் மிகப்பெரும் வரலாற்று முக்கியத்துவம் உண்டு. குறிப்பிட்ட நிகழ்வை/சம்பவத்தை விளங்கிக் கொள்ள, அதன் பின்னணியை புரிந்துகொள்ள இந்த காலக்குறிப்பு மிக மிக முக்கியமானது. வரலாற்றினை ஆய்வு செய்யும் போது அதனடிப்படையிலேயே வரலாற்று நிகழ்வுகள் மீளாய்வுக்கு உட்படுத்தப்படும். குறித்த காலத்தில் வெளிவராத பல உண்மைகள் அந்நிகழ்வுகளுக்கான காரணங்கள் வரலாற்றுக்கு பிந்தைய காலத்தில் வெளிக்கொணரப்படுவதற்கு இது மிகவும் முக்கியமானது. யாழ்ப்பாண பொது நூலக எரிப்பும் அவ்வாறானதே.

தங்க முகுந்தன் ஒரு மாநகர சபை உறுப்பினராக இருந்தவர். மாநகர சபையின், யாழ்ப்பாண பொலிஸ் நிலைய, விசாரணைக்குழு ஆவணங்களை பார்வயிடும் வாய்ப்பும் அவருக்கு உள்ளது. அத்தோடு அவருடைய தமிழர் விடுதலைக் கூட்டணி கட்சிக்கும் இந்த ஆவணங்களைப் பெறுவதற்கான வாய்ப்பு இருந்தது. தங்க முகுந்தனின் தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு ஐக்கிய தேசியக் கட்சியே அப்போதும் எப்போதும் கூட்டாளி. அதனால் நூலக எரிப்பின் அடிமுடியைத் தேட வேண்டிய அவசியம் அவருக்கு இல்லை.

சோபா சக்தி தற்போது தமிழ் தேசிய கூட்டமைப்பினுள் காலடி எடுத்து வைத்துள்ளார். ஒரு சமூகப் போராளியாக தன்னை அடையாளப்படுத்தி வந்த சோபா சக்தி, ஒரு பிரபல்யமாக மாறிவருவதன் ஒரு பாய்ச்சல் தான் ரிஎன்ஏ நோக்கிய நகர்வு. அடுத்த கட்டமாக ஐக்கிய தேசியக் கட்சியுடனான இணக்கம் சாகித்திய மண்டல விருது என்று ஒரு பிரபலத்தின் இயல்புகளை சோபா சக்தி வெளிப்படுத்தி வருகின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால் யாழ்ப்பாண நூலக எரிப்பினை மறுவாசிப்பு செய்ய அவர் தயாரில்லை.

தனது கற்கைநெறிக்குத் தேவையானபோது, யாழ்ப்பாண நூலகம் பற்றிய ஆவணத்தைத் தயாரித்த சோமிதரன் கூட சுயாதீனமான தேடலைச் செய்யாமல் யாழ் நூலகம் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டவர்களை, அதுபற்றி வெளிவந்த ஆவணங்களை பார்வையிடாமல் நூலகம் பற்றி கதை சொல்பவர்களின் கதையை மட்டுமே வைத்துக்கொண்டு ஆவணத்தை தயாரித்துள்ளார். அதனால் அவரால் நூலகம் எரிக்கப்பட்ட திகதியை கூட முற்றுமுழுதாக தவறவிட்டு மேலும் புனைவுகள் உருவாகி வரலாற்றை திரிப்பதற்கு வழியமைத்துள்ளார்.

நட்சத்திரன் செவ்விந்தியன் கிந்து சிட்டி மயானத்தில் இருந்து யாழ் நூலகம் வரை அடிப்படையான ஆதாரங்களை நிராகரித்து, தனது ஊகங்களுக்கு ஏற்ற கதைசொல்லிகளை வைத்து, ஊகங்களை நியாயப்படுத்தும் ஒருவராகவே உள்ளார். இவர்கள் தான் நூலகம் எரிக்கப்பட்ட காலத்தை திரிக்க முயல்கின்றனர்.

'மே 31, 1981இல் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டைத் தொடர்ந்த கலகத்தையடுத்து யாழ் நகரம் எரிக்கப்பட்டது. யாழ்ப்பாணப் பொது நூலகமும் திட்டமிடப்பட்டு அல்ல தற்செயலாக எரிக்கப்பட்டது'' என இனவாத ஐக்கிய தேசியக் கட்சி அரசு தெரிவித்து வந்தது. இந்தப் புனைவை நியாயப்படுத்தவே தங்க முகுந்தன், சோமி தரன், நட்சத்திரன் செவ்விந்தியன், சோபாசக்தி ஆகியோரின் வரலாற்று காலத்தை மறுக்கின்ற இந்த முயற்சி உதவும்.

1981 மே 31 இரவு நடைபெற்ற சம்பவங்கள் எதுவுமே எழுந்தமானதாக நிகழ்ந்தவை அல்ல. மிகத்திட்டமிடப்பட்டு நடத்தப்பட்டவை. மே 31 கூட்டத்தில் துப்பாக்கிச்சூடு நடந்திருந்தாலும் நடந்திருக்காவிட்டாலும் யாழ் நூலகம் எரிக்கபட்டு இருக்கும், யாழ் நகரம் எரிக்கப்பட்டு இருக்கும் என்பதே உண்மை. ஏனெனில் அதற்கான ஆயத்தங்களோடு தான் ஐக்கிய தேசியக் கட்சி காடையர்கள், அக்கட்சியின் அமைச்சர்களினால் களம் இறக்கபட்டு இருந்தனர். அவர்கள் தங்க வைக்கப்பட்ட துரையப்பா ஸ்ரேடியத்திற்கு நேரெதிரே இருந்தது தான் பொது நூலகம். அதற்கு அருகில்தான் யாழ். திறந்தவெளி அரங்கு. அங்குதான் 1.6.1981 அன்று திங்கட்கிழமை மாலை தமிழர் விடுதலைக் கூட்டணியினரின் இறுதிப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரச்சாரக் கூட்டம் யாழ். மாநகர முதல்வர் இராசா விஸ்வநாதன் தலைமையில் மாலை 5.30க்கு ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது. மேலும் அது பெரும்பாலான வேளைகளில் மக்கள் நடமாட்டம் இல்லாத பகுதியாகவும் இருந்தது. இதன் காரணமாக காடையர்களின் முதல் இலக்குகளில் ஒன்றாக நூலகம் மே 31 1981இன் பின்னிரவு வேளையில் எரியூட்டப்பட்டது.

பின்னர் புளொட் தளபதியாக பல படுகொலைகளை வன்னியில் மேற்கொண்ட மாணிக்கதாசனே அன்று இரவு நாச்சிமார் கோவிலடியில் துப்பாக்கிச் சுடு நடத்தி இருந்தார். அப்போது ‘மாணிக்கதாசன் ஆரம்பித்துவிட்டான், இனி நாங்களும் தொடங்குவோம்'' என்று வே பிரபாகரன் குறிப்பிட்டதாக மே 31 1981இல் துப்பாக்கிச் சூட்டுச்சம்பவம் நடந்த போது நாச்சிமார் கோவில் சந்திக்கு அருகில் நின்றிருந்த மு. திருநாவுக்கரசு தெரிவித்து இருக்கின்றார். இவர் பின்னாளில் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆலோசகராக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாராயணன் சுவாமி தனது நூலில் வே.பிரபாகரன் நூலகம் எரிக்கப்படுவதை நேரில் பார்த்ததாக பதிவு செய்திருக்கின்றார். ஆனால் யாழ் நூலகம் மே 31 1981 இரவு எரிக்கப்பட்டதை உறுதிப்படுத்தும் மு.திருநாவுககரசு காடையர்கள் யாழ் பல்கலைக்கழக நூலகத்தையும் எரிப்பார்கள் என்று எண்ணியதால் அதனை பாதுகாக்கும் கடமையில் பிரபாகரன் உட்பட தாங்கள் ஈடுபட்டதாக தெரிவித்தார்.

நூலகம் எரிக்கப்பட்ட திகதியை மறுதலிக்க முற்படுபவர்கள் மிக மோசமான வரலாற்று மோசடியை செய்ய முற்படுகின்றனர். நாச்சிமார் கோவிலடியில் நடந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தினால் தான் யாழ்ப்பாணத்தில் கலகம் ஏற்பட்டது என்ற இனவாத ஐக்கிய தேசியக் கட்சி அரசின் புனைவுகளுக்கு இந்த ஆய்வுச் சோம்பேறிகள் துணைபோகின்றனர்.

நூலக எரிப்பை யாழ்ப்பாண பொலிஸ் நிலைய அதிகாரி கே.கிருஸ்ணதாசன் தனது கண்களால் கண்ட சாட்சியமாகப் பதிவு செய்துள்ளார். அவருடைய சாட்சியம் கீழே பதிவு செய்யப்பட்டு உள்ளது. அதில் யாழப்பாணப் பொதுநூலகம் மே 31 இரவு 7:00 மணிக்கும் 7:30 மணிக்கும் இடையே எரியூட்டத் தொடங்கப்பட்டது என்று குறிப்பிட்டு உள்ளதுடன் பொலிஸ் நிலைய பதிவேடுகளிலும் அதனைப் பதிவு செய்துள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே சமயம் மே 31இல் துப்பாக்கிச் சூடு இடம்பெற்ற நாச்சிமார் கோயிலடி சம்பவம் பற்றிக் குறிப்பிட்ட யாழ்ப்பாண மேயர் இராசா விசுவநாதன் துப்பாக்கிச்சூடு இரவு 8:15 மணிக்கே நிகழ்ந்ததாகக் குறிப்பிடுகின்றார். ஆதலால் நாச்சிமார் கோவிலடியில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் நிகழும் முன்னரேயே யாழ்ப்பாண நூலகம் எரியூட்ட ஆரம்பிக்கப்பட்டு இருந்தமை நடந்த சம்பவங்கள் அனைத்தும் மிகத் திட்டமிட்ட அடிப்படையில் நிறைவேற்றப்பட்டது என்பதற்கு மிக முக்கியமான சாட்சி.

யாழ்ப்பாண பொலிஸ் நிலைய அதிகாரி கே.கிருஸ்ணதாஸனின் சாட்சியத்தை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் ஒரு இராணுவ அதிகாரியின் வாக்குமூலமும் வெளிவந்தது. குறிப்பிட்ட அதிகாரி புற்றுநோய் காரணமாக இறக்கும் தருவாயில் தனது மனப்பாரத்தை இறக்கி வைத்துள்ளார். அதில் 1981 மே 31 இரவு மது அருந்தி இரவுணவு சாப்பிட்டுவிட்டு தாங்கள் மதுபோதையில் நூலகத்தை எரியூட்டிய பாதகச் செயலைச் செய்ததாகவும் தான் மரணத்திற்கு முன் அதற்கு மன்னிப்புக் கோருவதாகவும் ஒரு செய்தி சில ஆண்டுகளுக்கு முன் வெளிவந்திருந்து. அதன் பிரதியை நான் பத்திரப்படுத்தத் தவறிவிட்டேன்.

ஒரு ஊடகவியலாளன் என்பவன் வரலாற்றைப் பதிவு செய்கின்ற முதலாவது வரலாற்று ஆசிரியன். அதனால் தகவலை வெளியிடுகின்ற போது அதன் அடிப்படையைச் சரிபார்த்து வெளியிடுவது மிக முக்கியம். ஒரு தகவலின் அடிப்படைகளை அறிந்து கொள்ள ஒவ்வொரு ஊடகவியலாளனும் 5 கேள்விகளை கேட்கவேண்டும். அவையாவன:

யாருக்கு யாரால் நடந்தது?

என்ன நடந்தது?

எப்போது நடந்தது?

எங்கு நடந்தது?

ஏன் நடந்தது? என்ற இந்த 5 கேள்விகளும் ஊடகவியலின் அடிப்படைகள். இந்த அரிவரி ஊடகவியல் தெரியாமல் வரலாற்றை எழுத முயல்வது வரலாற்றை இருட்டடிப்புச் செய்வதாகும்.

யாழ் நூலகம் எரிக்கப்பட்ட நிகழ்வை சம்பவத்தை எவ்வாறு உறுதிப்படுத்த முடியும்? மேலுள்ள 5 கேள்விக்குமான பதில்களை கீழுள்ள தகவல் மூலங்களில் இருந்து பெறுவதன் மூலம் பெற்றுக்கொள்ள முடியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. சம்பவத்தோடு நேரடித் தொடர்புடைவர்களின் வாக்கு மூலங்களைப் பெறுவது
2. சம்பவத்தை பதிவு செய்த அரச ஆவணங்களை பார்வையிடுவது.
3. அக்காலத்தில் வழங்கப்பட்ட இருபக்க சாட்சியங்களைத் தேடுவது
4. யாழ் நூலகத்தின் உத்தியோகபூர்வமான பதிவுகளைத் தேடுவது
5. அந்நூலகம் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டவர்களை அணுகுவது

மேலுள்ள அடிப்படையில் அணுகி இருந்தால் எரிக்கப்பட்ட நேரம் காலம் தொடர்பான பிரச்சினையே எழுந்திருக்காது.

சோமிதரனின் ஆவணத்தை வைத்து இலங்கை முன்னாள் பொலிஸ் அதிகாரி 'Memorable Tidbits Including The Jaffna Library Fire' என்ற நூலை எழுதி உள்ளார் (http://www.dailymirror.lk/.../Who-Burnt-One-of.../172-179611). அதிலேயே சாதிய முரண்பாடு காரணமாக தமிழீழ விடுதலைப் புலிகள் யாழ்பாணப் பொது நூலகத்தை எரித்ததாகக் குறிப்பிட்டு உள்ளார். அந்த நூலில் சோமிதரனின் பெயர் பத்துக்கும் மேற்பட்ட இடங்களில் குறிப்பிடப்பட்டு உள்ளது.

அந்த நூல் சொல்லவரும் செய்தி இதுதான்: புலிகள் சாதிய முரண்பாட்டினால் தான் நூலகத்தை எரித்ததாக சொல்லப்படுகிறது. சோமிதரனின் ஆவணத்தை புனையும் அந்நூலின் ஆசிரியர் 1981 யூனில் நூலகம் எரிக்கப்பட்ட பின் தான் அமைச்சர்கள் விசாரணைக்காக யாழ்ப்பாணம் வந்ததாகக் குறிப்பிடுகின்றார். சோமிதரனின் ஆவணத்தில் உள்ள காட்சிகளையும் தகவல்களையும் வைத்துக்கொண்டு நூலாசிரியர் முற்றிலும் மாறுபட்ட வரலாற்றுத் தவறு ஒன்றைச் செய்கின்றார். இந்த தவறைச் சுட்டிக்காட்டியே கண்களால் கண்ட தனது சாட்சியத்தை யாழ்ப்பாணப் பொலிஸ் அதிகாரி கே. கிருஸ்ணதாசன் பதிவு செய்திருந்தார்.

இத்திகதிக் குழப்பம் யாழ் நூலகம் எரிக்கப்பட்ட முதலாவது ஆண்டிலேயே ஏற்பட்டு 1981 இல் மே 31 இரவு தீயிடப்பட்ட நூலகம் மறுநாளும் எரிந்துகொண்டிருந்தது. மறுநாள் யூன் 2 காலையிலேயே இது பரவலாக மற்றையவர்களுக்கு நிலைமையை நேரில் காணும் வாய்ப்பினை வழங்கியிருந்தது. இந்தப் பின்னணியினால் தான் எரிக்கப்பட்ட நாளில் குழப்பம் ஏற்பட்டது. நூலக எரிப்பின் முதலாம் ஆண்டு நிறைவையொட்டிய நினைவுகூரல் தொடர்பான கூட்டம் ஒன்றிலேயே அதனைத் தீர்த்து வைக்க அப்போது மேயராக இருந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசா விசுவநாதன் தலைமையில் முயற்சி எடுக்கப்பட்டது. அக்கூட்டத்தில் மே 31 இரவில் யாழ் நூலகம் எரிக்கப்பட்டாலும் அது மறுநாளும் எரிந்துகொண்டிருந்தபடியால் யூன் 01 திகதியே எதிர்காலத்தில் யாழ் நூலக எரிப்பு நினைவுநாளாக அறிவிப்பது என்று முடிவெடுக்கப்பட்டது. இதனையே, தற்போதைய தலைமுறை மீண்டும் யூன் 01 இரவு நூலகம் எரிக்கப்பட்டது என்று கதையாடுகின்றது.

கண்ணால் கண்ட பொலிஸ் அதிகாரி கே.கிருஸ்ணதாசனின் வாக்குமூலம் பின்வருமாறு ஆவணப்படுத்தப்பட்டுள்ளது:

'என்னுடைய பெயர் கே.கிருஸ்ணதாசன். நான் சிறி லங்காவின் பொலிஸ் சேவையில் யூன் 1967 முதல் டிசம்பர் 1986 வரை (Officer in Charge of the Divisional Crimes Detective Bureau (DCDB), directly under the supervision of SP Jaffna Division and ASP Crimes Jaffna) இருந்தேன். பின் அவுஸ்திரேலியாவிற்கு குடிபெயர்ந்து குடும்பத்துடன் சிட்னியில் சந்தோசமாக வாழ்கின்றேன். நான் யாழ்ப்பாணத்தில் இருந்த இரண்டாவது சிரேஸ்ட இன்ஸ்பெக்ரர். அப்போது HQI ஆக இருந்தவர் திரு லலித் குணசேகரா.

மே 31 1981 ஏறத்தாள இரவு 7 மணிக்கும் 7:30 மணிக்கும் இடையில் நான் யாழ் பொலிஸ் நிலையத்தின் முற்பகுதியில் டிஐஜி மகேந்திரனுடன் கூட இருந்தேன். பொலிஸ் நிலையத்தில் இருந்து பார்க்கும் போது யாழ்பாணப் பொது நூலகத்தில் இருந்து புகைவருவதை பொலிஸ் நிலையத்தில் இருந்து பார்த்தோம். அப்போது எங்களுக்குத் தெரியும் யாழ்ப்பாண பொது நூலகம் தீயிடப்பட்டு இருக்கின்றது என்று. டிஐஜி மகேந்திரன் என்னை பொலிஸாரை அழைத்துக்கொண்டு நூலகக் கட்டிடத்துக்கு உடனடியாகச் செல்லுமாறு கூறினார். நான் உடனடியாக இரண்டு சப் இன்ஸ்பெக்டர்களையும் 10 கான்ஸ்டபிள்களையும் அழைத்துக்கொண்டு நடந்து நூலகக் கட்டிடத்தை நோக்கிச் சென்றோம். நூலகக் கட்டிடம் பொலிஸ் நிலையத்தில் இருந்து 250 யார் தூரத்திலேயே இருந்தது.

நூலகக் கட்டிடத்தை நெருங்கி சில யார்கள் தூரத்தில் சீருடையில் இருபது இராணுவத்தினர் வரை நிற்பதை அவதானித்தேன். அவர்கள் நூலக அலுமாரிகளில் இருந்த புத்தகங்களை எடுத்து தீக்கு எண்ணையூற்றுவது போல் தீக்குள் வீசிக்கொண்டிருந்தனர். நாங்கள் பொலிஸார் வருவதைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டதும் ஒரு அதிகாரி வெளியே வர சில இராணுவத்தினரும் அவரைத் தொடர்ந்து ஏகே 47 துப்பாக்கிகளை நீட்டியவாறு எம்மை நோக்கி உரத்த குரலில் சிங்களத்தில் 'பொலிஸ் நிலையத்துக்கு திரும்பிப் போங்கள்'' என்று கத்தியவாறு வந்தனர். நான் உடனடியாக டிஐஜி யை தொடர்புகொண்டு நிலைமையை விளக்கினேன். டிஐஜி எங்களை உடனடியாக பொலிஸ் நிலையத்திற்கு திரும்புமாறு ஆலோசனை வழங்கினார்.

பொலிஸ் நிலையம் திரும்பி கொஞ்சநேரத்தில் முழுக்கட்டிடமும் கொழுந்துவிட்டு எரிவதை நாங்கள் பார்த்தோம். டிஐஜி யாழ் இராணுவ உயரதிகாரிகளைத் தொடர்பு கொள்ள எவ்வளவோ முயற்சித்தும் முடியவில்லை. அந்த சூழ்நிலையில் பொலிஸார் இராணுவத்திற்கு எதிராக நடவடிக்கை எடுப்பது என்பது உசிதமான செயல் அல்ல. எனக்கு இதுவொரு மிக மோசமான அனுபவம். அதற்கு நான் வேதனையோடு சாட்சியாக இருக்கிறேன். அந்த நாளில் நான் கண்ட காட்சியும் அதற்கு நான் சாட்சியம் ஆனதும் என் வாழ்நாளில் இலகுவாக மறக்க முடியாதது. நான் வாழும்வரை அது என் நினைவுகளில் இருக்கும். நான் பொலிஸ் நிலையத்திற்கு திரும்பிய பின்னர் நான் என்னத்தைப் பாரத்தேனோ அவற்றைப் பதிவேட்டில் பதிவு செய்தேன். டிஐஜி உம் தன்னுடைய பதிவை மேற்கொண்டார்.

துரதிஸ்ட வசமாக திரு மகேந்திரன் இன்று எம்மோடு இல்லை. அவர் இருந்திருந்தால் அவரும் என்னுடைய சாட்சியத்தை ஆதரித்து இருப்பார். உறுதிப்படுத்தி இருப்பார். ஆனாலும் திருமதி மகேந்திரன் இன்னும் அவுஸ்திரேலியாவில் சிட்னியில் வாழ்கின்றார். நீங்கள் அவரைத் தொடர்பு கொண்டு திரு மகேந்திரன் அந்த வேதனையான சம்பவம் பற்றி குவாட்டர்ஸிற்கு வந்து என்ன சொன்னார் என்பதை கேட்டுத் தெரிந்துகொள்ளலாம்.''

இன்னும் சில ஆதாரங்கள்:

1. வண்ணை ஆனந்தனின் மகன்: (https://thediplomat.com/.../the-burning-of-jaffna-public.../)

   Dr. Thamil Venthan Ananthavinayagan is a Lecturer in International Law at Griffith College. He received his LL.M. from Maastricht University and his Ph.D. from ÷UI Galway:

   An organized Sinhala mob carried out an arson attack on the prestigious Jaffna Public Library, at its time one of the largest and best equipped

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ones in South Asia. This mob, however, was not an ignorant, anonymous group of frustrated vigilantes. They were a larger group of a hundred officers of the Sri Lankan police force, who were taken to Jaffna by two senior Sri Lankan cabinet ministers, namely Cyril Mathew and Gamini Dissanayake, to observe and disrupt a rally organized by the Tamil United Liberation Front (TULF).

In the aftermath, the Jaffna Public Library was set ablaze and the burning continued unchecked for two nights. But it didn't halt there: fire and violence spread to many homes and shops across Jaffna, including the TULF headquarters and the office of the Ealanadu newspaper. Tamil cultural and religious figures were defaced and destroyed.

Meanwhile, Matthews and Dissanayake watched the Jaffna Public Library burn from the Veranda of the nearby Jaffna Rest House. Later on they claimed that the library burning was an "an unfortunate event, where [a] few policemen got drunk and went on a looting spree all on their own." This narrative of lone looters and rioters became a constant justification in post-colonial Sri Lanka, echoed by Sinhala leaders and Sinhala media. Such language provided the ground for impunity.

2. Tamil Guardian:

(https://www.tamilguardian.com/.../38-years-remembering...)

On midnight 31st May 1981, the Jaffna Public Library, famous for being the crucible of Tamil literature and heritage, was set ablaze by Sri Lankan security forces and state-sponsored mobs.The burning continued unchecked for two nights.

÷ancy Murray, a western author, wrote at the time "uniformed security men and plainclothes thugs carried out some well organised acts of destruction".

"They burned to the ground certain chosen targets - including the Jaffna Public Library, with its 95,000 volumes and priceless manuscripts… no mention of this appeared in the national newspapers, not even the burning of the library, the symbol of Tamils' cultural identity. The government delayed bringing in emergency rule until 2 June, by which time the key targets had been destroyed."

3. Power and Energy minister Patali Champika Ranawake said at a function in the library auditorium in Jaffna on 23rd of June 2010:

(https://zeenews.india.com/.../sri-lankan-minister...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


"Thirty years back this library was set on fire by the goondas (goons) and caused indescribable loss not only to Jaffna but to the whole country. I have come to apologise for that dastardly act and beg the pardon of the Tamil community.

Jaffna Mayor Y Patkunarajah presided over the function. The burning of the Jaffna library is considered an important event in the Sri Lankan civil war. An organised mob went on a rampage on the nights of May 31 to June 02> 1981> burning the library.

4. Historypo: https://www.youtube.com/watch?v=1UjbHe1qBKQ
5. BBC Witness History: Burning of The Jaffna Public Library

   https://www.bbc.co.uk/programmes/p02s5g33

*(நன்றி: தேசம் 13.06.2020)*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாண நூலகத்துக்குத் தீ வைத்தவர் ஒருவரின் வாக்குமூலம்

*ருவண் எம்.ஜயதுங்க*

எழுத்தாளர் பற்றிய குறிப்பு: வைத்தியர் ருவண் எம்.ஜயதுங்க

தமிழில்: எம்.ரிஷான் ஷெரீப்

கவிதை, சிறுகதை, கட்டுரைகள் ஆகிய துறைகளில் சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் தனது பங்களிப்பை ஆற்றி வரும் திரு. ருவண் எம் ஜயதுங்க, இலங்கை இராணுவத்தின் மன நலப் பிரிவில் மருத்துவராக கடமையாற்றியவர். அத்தோடு இலங்கை சுகாதார அமைச்சின் புத்தளம் மாவட்டத்துக்கான மன நல உத்தியோகத்தராகவும் கடமையாற்றியவர். ஜோன் எப். கென்னடி, வேலுப்பிள்ளை பிரபாகரன் போன்ற தலைவர்கள் குறித்தும், மன நல மருத்துவம், சிறுகதைத் தொகுப்புகள் என சிங்களம் மற்றும் ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நாற்பதுக்கும் மேற்பட்ட நூல்களை எழுதியுள்ள இவர் தற்போது கனடாவில் வசித்து வருகிறார்.

யாழ்ப்பாண நூலகத்துக்குத் தீ வைத்த நபரொருவர் எனக்களித்த வாக்குமூலத்தை பல வருடங்களுக்குப் பிறகு நான் எழுதுகிறேன். இந்த நிகழ்வு குறித்து நான் தனிப்பட்ட பதிவேதும் எழுதவில்லை. எனினும் 2002ஆம் ஆண்டு என்னால் எழுதப்பட்ட எனது 'பிரபாகரன் நிருபணம் குறித்த மனோவியல் ஆய்வு' எனும் தொகுப்பில் நான் குறிப்பிட்டிருக்கிறேன். இந்த நபரை, 1994ஆம் ஆண்டு நான் மாத்தளை வைத்தியசாலையில் கடமையாற்றிய காலத்தில் சந்தித்தேன். அவர் எனது பகுதி நேர நோயாளியாகவிருந்தார். பகுதி நேர நோயாளி என நான் குறிப்பிடுவது ஏனெனில், அவருக்கு ஆரம்பத்திலிருந்து சிகிச்சையளித்த வைத்தியர் நானல்ல. எனினும் அவரது உடல் ரீதியான வியாதிகள் சிலவற்றுக்கு நான் சில வைத்திய அறிவுரைகளைக் கூறியிருந்ததாலும், அவருக்கு சில மருந்துகளை இலவசமாகக் கொடுத்ததாலும் அவர் எனக்கு சினேகமாகியிருந்தார். நான் இங்கு குறிப்பிடப் போவது அந்த நபர் என்னிடம் கூறியதைத்தான். இந்தத் தகவல்கள் உண்மையானவை,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்யானவை போன்ற விடயங்களை வாசகர்களின் தீர்மானத்துக்கு விட்டு விடுகிறேன். (ஓய்வுபெற்ற சிரேஷ்ட போலிஸ் பிரதி காவலதிகாரி எட்வட் குணதிலகவால் (Gunawardena) முன்வைக்கப்பட்ட 'ஆய்வறிக்கை'யின் பிரகாரம், யாழ்ப்பாண நூலகத்தை எரித்தது விடுதலைப்புலிகள் இயக்கத்தினரது செயல்பாடாகும். அதற்கு சிங்களவர் கள்தான் காரணம் எனக் காட்டி சர்வதேச மக்களின் அனுதாபத்தை வென்றெடுப்பதே அவர்களது நோக்கமாகும்.)

இந்த வாக்குமூலத்தை அளித்த நபரது உத்தியோகம் என்னவாக விருந்தது என்பதை நான் கூற மாட்டேன். காரணம் அது சர்ச்சைக் குரியதாகவும், ஈழ ஆதரவாளர்களால் இந்த விடயமும் கூட அவர்களது பிரசார தந்திரமாகப் பாவிக்கப்படக் கூடும் என்பதனாலுமாகும். எவ்வாறாயினும், இந்தச் சம்பவம் நடைபெற்ற போது அவர் வடக்கில்தான் இருந்திருக்கிறார்.

ஒரு இலட்சத்துக்கும் அதிகமான புத்தகங்களோடு, ஆசியாவிலிருந்த விசாலமான நூலகங்களிலொன்றான யாழ்ப்பாண நூலகத்துக்கு 1981 ஆம் ஆண்டு, மே மாதம் 31 ஆம் திகதி தீ வைக்கப்பட்டது. அந்தக் கால கட்டத்தில் யாழ்ப்பாண அபிவிருத்திக் குழுத் தேர்தல் நடைபெற்றுக் கொண்டிருந்ததோடு, கொழும்பிலிருந்து சென்றிருந்த காடையர்கள் யாழ்ப்பாணத்தில் கலவரத்தை ஏற்படுத்தியவாறு இருந்தனர். இந்த நிகழ்வானது இனவாதக் கலவரங்களின் திருப்புமுனையாக அமைந்தது.

யாழ்ப்பாணத் தமிழர்களின் பெருமைக்குக் கொடுத்த அடியாகத்தான் யாழ்ப்பாண நூலகம் கொளுத்தப்பட்டதென அந்த நபர் கூறுகிறார். இதற்கு சில அரசியல்வாதிகளும் கூட அனுமதியளித்திருக்கின்றனர். அதை நியாயப்படுத்தும் விதமாக, விடுதலைப் புலி இயக்கத் தீவிரவாதிகள் இந் நூலகத்தில் வைத்துத்தான் ஒருவரையொருவர் சந்தித்து தாக்குதல் திட்டங்களைத் தீட்டுவதாகவும், அதனால் அவர்கள் சந்தித்துக் கொள்ளும் இடங்களை அழித்தொழித்து விட வேண்டுமெனவும் உத்தரவிடப் பட்டிருக்கிறது. அத்தோடு தமிழ் ஐக்கிய விடுதலை முன்னணியினரின் இறுதி பிரச்சாரக் கூட்டம் இடம்பெற்ற இடத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த போலிஸார் இருவரை தீவிரவாதிகள் கொலை செய்திருந்ததால் இந்தக் குழுவினர் அமைதியற்று இருந்திருக்கின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்த நபர் கூறும் விதத்தில், அவரும், அவருடனிருந்த குழுவினரும் முதலில் சாராய போத்தலொன்றில் பெற்றோலும், மணலும் நிரப்பி, புடைவைத் துண்டால் மூடி அதனைக் கொளுத்தி விட்டு நூலகத்தை நோக்கி எறிந்திருக்கின்றனர். அந்த போத்தலுக்குள் சதுர வடிவில் வெட்டப்பட்ட இறப்பர் செருப்பின் துண்டொன்றும் இருந்ததனால் பலமாகத் தீ பற்றிக் கொண்டிருக்கிறது. இதற்கிடையே குழுவிலிருந்த ஒருவர் 'நெருப்பு நெருப்பு' எனக் கத்தியிருக்கிறார். அத்தோடு முன்பே திட்டமிட்டிருந்தவாறு ஒரு குழுவினர் தீயை அணைக்க தண்ணீரை எரிவதைப் போல பெற்றோலையும், மண்ணெண்ணையையும் கொண்டிருந்த வாளிகளை தீயின் மீது எறிந்திருக்கின்றனர். அதனால் தீயானது கொழுந்து விட்டெரியத் தொடங்கியிருக்கிறது. நூலகத்திலிருந்த புத்தகங்களிலும் தீப்பிடித்துக் கொண்ட காரணத்தால் சொற்ப நேரத்துக்குள் யாழ்ப்பாண நூலகம் சாம்பலாகி விட்டிருக்கிறது. இருண்ட வானம் சிவந்து போயிருந்தது.


தீ, அதிக வெப்பத்தையும் கக்கிக் கொண்டிருந்ததனால், தீ வைத்தவர்கள் சற்றுத் தூரமாகச் சென்று இக் காட்சியைக் கண்டு களித்தவாறு மகிழ்ச்சி ஆரவாரம் செய்து கொண்டிருந்திருக்கின்றனர். இதற்கிடையே யாழ்ப்பாணத் தமிழ் மக்கள், நூலகத்துக்கு அருகில் ஓடி வந்து தமது அக ஆன்மா எரிந்து கொண்டிருப்பதையும், அதற்குக் காரணமானவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் எழுப்புவதையும் கண்டிருக்கிறார்கள். இந்த வாக்குமூலத்தைக் கொடுத்தவர் கூறுவதற்கேற்ப தீ வைப்பதில் பங்கு கொண்ட சிலர் சாராய போத்தல்களைக் கையில் வைத்துக் கொண்டு, அவற்றைப் பருகியவாறு இன ரீதியான கோஷங்களை எழுப்பியிருக் கிறார்கள். மது போதையில் விடுதலைப் புலிகள் இயக்கத்தினருக்கு சவால் விடுத்திருக்கின்றனர். பின்னர் போலிஸார் வந்து மிகவும் மென்மையாக அக் காடையர்களை அங்கிருந்து நீங்கிச் செல்லப் பணித்திருக்கின்றனர்.

மிகவும் அரிய கைப்பிரதிகளைக் கூடக் கொண்டிருந்த யாழ்ப்பாண நூலகம் அழிக்கப்பட்டதைக் குறித்து 'Cultural Genocide' அதாவது 'கலாசார இனப்படுகொலை' என பேராசிரியர் தயா சோமசுந்தரம் தெரிவித்திருக்கிறார். யாழ்ப்பாண நூலகத்தை எரிக்க இராணுவ அதிகாரிகளின் ஒத்துழைப்பு இருந்ததாக நான் நினைக்கவில்லை. காரணம் இராணுவ அதிகாரிகளான ஜெனரல் வஜிர விஜேரத்ன, கர்னல் வைத்தியர் ரஞ்சன செனவிரத்ன போன்ற இராணுவ அதிகாரிகள் கூட யாழ்ப்பாண நூலகத்தின்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறுப்பினர்களாக இருந்ததோடு, அவர்கள் கூட இச் சம்பவத்தை வன்மையாகக் கண்டித்திருக்கிறார்கள். இந்தக் குற்றச் செயலைச் செய்ய காடையர்களைத் தூண்டி விட்ட அரசியல்வாதிகள்தான் இதற்குப் பொறுப்புக் கூற வேண்டும்.

எவ்வாறாயினும், யாழ்ப்பாண நூலகத்தை எரித்த காடையர் குழுவிலிருந்த இந்த நபர் பின்னர் அதைக் குறித்து வருந்தத் தொடங்கியிருக்கிறார். அவரது ஒரே பிள்ளையும் கூட பதினாறு வயதாகும் முன்பு இறந்து விட்டிருந்தது. அதனால் வாழ்க்கை குறித்து வெறுப் படைந்திருந்த அவர் மதுபானத்திற்கு அடிமையாகியிருந்தார். அவரை நான் இறுதியாக 1995 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் சந்தித்தேன். இப்போது அவர் உயிரோடு இருக்கிறாரா, இல்லையா என்பதை நான் அறியேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ் நூலகம்: பிரபாகரனின் ஆணையில் புலிகளால் எரிக்கப்பட்டதா?

*என்.சரவணன்*

ஒரு இனத்தை அழிக்குமுன் அதன் சுவடுகளை அழி, அடையாளத்தை அழி என்பார்கள். வடக்கில் குறிப்பாக யாழ்ப்பானத்தில் தமிழ் மக்களின் புலமைச் சொத்தாக கருதப்பட்டு வந்த யாழ் நூலகம் எரித்துச் சாமபலாக்கப்பட்ட சம்பவம் வரலாற்றில் என்றுமே துடைக்க முடியாத கறையாக ஆகி விட்டிருக்கிறது.

தமது தமிழ் மரபையும், வரலாற்றையும் ஆவணப்படுத்தி வைத்திருக்கும் ஒரு தொல்பொருள் வைப்பகமாகவும் தான் பேணப்பட்டு வந்தது. மீளப் பெற முடியாத அரிய நூல்களையும், பல நூற்றாண்டுகளுக்கு முன்னரான ஏடுகளும் கூட அங்கு பாதுகாக்கப்பட்டு வந்தன. அந்த நூலகம் அரசு கொடுத்ததல்ல. அன்றைய தமிழ் புலமையாளர்கள் சேர்ந்து உருவாக்கியது. பின்னர் தான் அதனை மாநகர சபை கையேற்று நடத்தியது.

70களின் இறுதியில் வடக்கு கிழக்கெங்கும் தொல்பொருள் ஆய்வுகள் என்கிற பேரில் கண்டு பிடிக்கப்பட்டவற்றைக் கொண்டு வடக்குகிழக்கு முழுவதும் சிங்களவர்களின் பிரதேசங்கள் என்று நிறுவும் வேலைத்திட்டம் தொடங்கப்பட்டிருந்தது. தமிழர்களின் தாயகக் கோட்பாட்டை மறுத்தொதுக்குவதற்கான இந்த வேலைத்திட்டத்தில் அரசின் உதவியுடன் பல்வேறு இனவாத அமைப்புகள் பல முனைகளில் திட்டமிட்டு மேற்கொண்டிருந்தன. 77 இனக் கலவரத்தை விசாரணை செய்யும் ஆணைக்குழுவிடம் கூட சாட்சியமளித்த பல இனவாத சக்திகள் கலவரத்தைப் பற்றி பேசுவதைவிட இந்த தொல்பொருள் ஆதாரங்களைப் பற்றியே அதிகம் பேசின என்பது அந்த சாட்சியங்களில் இருந்து காண முடியும். மடிகே பஞ்ஞாசீல தேரர், ஹரிச்சந்திர விஜேதுங்க,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எச்.எம்.சிறிசோம போன்றோர் அங்கு பெரிய அறிக்கைகளையே சமர்ப்பித்தனர். அவை சிறு கை நூல்களாவும் கூட சிங்களத்தில் வெளியிடப்பட்டன.

***யார் இந்த சிறில் மெத்தியு***

அந்த பாதையில் வளர்த்தெடுக்கப்பட்டவர் தான் சிறில் மெத்தியு. இலங்கையின் வரலாற்றில் பல இனவாதிகளை உருவாக்கிய முக்கிய கோட்டையாக அன்றிலிருந்து இன்றுவரை திகழ்வது களனி பிரதேசம். அந்தத் தொகுதியின் ஐ.தே.க. அமைப்பாளர் சிறில் மெத்தியு. 1977 தேர்தலில் களனி தொகுதி மக்களால் வெற்றியடையச் செய்யப்பட்டவர் சிறில் மெத்தியு. அதே தொகுதியைச் சேர்ந்தவர் ஜனாதிபதி ஜே.ஆர். ஜே.ஆர் சிறில் மெத்தியுவை தொழில் மற்றும் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சராக நியமித்தார். 1980ஆம் ஆண்டு சிறில் மெத்தியு தனது அதிகார பலத்துடன் வடக்கில் அகழ்வாராய்ச்சிகளை விஸ்தரிப்பதற்காக அதிகாரிகளை அனுப்பி தனது வழிகாட்டலின் பேரில் மேற்கொண்டார்.

இந்தப் பணிகளை மேற்கொள்வதற்காக ''அரச தொழிற்துறை பௌத்த சங்கம்'' என்று ஒன்றை ஆரம்பித்து திருமலையில் புல்மூடை - குச்ச வெளி பிரதேசத்தில் ''அரிசிமலை ஆரண்ய சேனாசனய'' என்கிற ஒரு பௌத்த தளத்தை ஆரம்பித்தார். சிறில் மெத்தியு தயாரித்த அறிக்கையை அதிகாரபூர்வமாகவே இலங்கையின் கலாசார உரிமைகள் பற்றி யுனெஸ்கோ நிறுவனத்திடம் கையளித்து அந்த பிரதேசங்களை பாதுகாத்து தருமாறும் முறைப்பாடொன்றை செய்தார். அந்த அறிக்கை இன்றுவரை சிங்கள தேசியவாதிகளால் போற்றப்பட்டுவருகிறது. வடக்கு கிழக்கு சிங்கள வர்களின் பூர்வீக உடமை என்கிற வகையில் அந்த அறிக்கை தயாரிக்கப்பட்டிருந்தது.

வடக்கு கிழக்கு பகுதிகளில் பௌத்தமதமும், அதன் செல்வாக்கும் இருந்திருக்கிறது என்பது மறுப்பதற்கில்லை. ஆனால் அந்த வரலாற்றை சிங்களத்துடன் இணைத்து சிங்கள பௌத்த வரலாறாக புனையும் சிங்கள பேரினவாதம் அதை காலாகாலமாக செய்து வருகிறது. தமிழ் பௌத்தம் என்கிற ஒன்று இருந்தது என்பதையும், அதன் செல்வாக்குக்குள் தமிழர்கள் வாழ்ந்திருக்கிறார்கள் என்கிற உண்மையை ஏற்றுக்கொண்டு, அதை உறுதி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்வதன் மூலமே சிங்கள பௌத்த புனைவுகளுக்கு பதிலடி கொடுக்க முடியும் ஆனால் யாழ் - சைவ - தமிழ் மையவாத மரபு அதற்கு இடங்கொடுப்பதில்லை. தமிழ் பௌத்தத்தை கொண்டாட அந்த மரபு இடங்கொடுப்பதில்லை. வெகு சில ஆய்வுகளையே அப்படி காண முடிகிறது.

தமிழர்களுக்கு உரிமை கோருவதற்கு அங்கு ஒன்றும் இல்லை. அது பயங்கரவாதக் கோரிக்கைகளே என்று நிறுவும் வகையில் அவர் நூல்களை எழுதி பிரசுரித்தார். ''கவுத கொட்டியா?'' (புலிகள் யார்? - 1980),'' சிஹளுனி! புதுசசுன பேராகனிவ்'' (சிங்களவர்களே பௌத்தத்தைக் காத்திடுங்கள்!) என்கிற நூல்கள் மிகவும் மோசமான இனவாத நூல்கள். தன்னை தீவிர சிங்கள பௌத்தனாக ஆக்கிக்கொண்ட சிறில் மெத்தியு தமிழ் விரோத போக்கையும், வெறுப்புணர்ச்சியையும் வளர்த்துக் கொண்டிருந்தவர்.

யாழ் நூலக எரிப்புக்கு சிறில் மெத்தியு மட்டும் பொறுப்பில்லை. அதற்கு ஏதுவான இனவாத அலை ஏற்கெனவே வளர்தெடுக்கப்பட்டு, நிருவனமயப்படுத்தப்பட்டுத் தான் இருந்தது. ஆனால் சிறில் மெத்தியு அந்த உடனடி நிலைமைகளுக்கு தலைமை கொடுத்தார் என்பது வெளிப்படை. இந்த காலத்தில் சிறில் மெத்தியு பாராளுமன்றத்தில் ஆற்றிய உரைகளில் இனவாத விசர்நாயொன்றின் கர்ஜனைகளைக் காண முடியும். சிறில் மெத்தியுவின் இந்தப் போக்கை ஐ.தே.க அரசாங்கமும் ஜே.ஆரும் கண்டுகொள்ளவில்லை. தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக நுழைவை சிறில் மெத்தியுவால் சகிக்கக் கூட முடியவில்லை. எம். சிவ சிதம்பரத்துக்கும் சிறில் மெத்தியுவுக்கும் இடையில் பாராளுமன்றத்தில் கடுமையான வாதம் நிகழ்ந்தது. தமிழ் மாணவர்களை குறுக்குவழியில் பல்கலைக்கழகத்துக்கு அனுப்புவதற்காக வினாத்தாள் திருத்துனர்கள் மோசடி செய்து அதிக புள்ளிகளை வழங்கினார்கள் என்று பகிரங்கமாக குற்றம் சாட்டினார். அந்த விவாதத்தில் அவரை ஆதாரத்தை முன்வைக்கக் கோரியபோதும் கையில் ஒரு கடுதாசியை வைத்துக் கொண்டு கடைசி வரை சமர்ப்பிக்கவில்லை. ஆனால் இன்று வரை சிங்கள நூல்களில் சிறில் மெத்தியு கூறியது உண்மை என்றே பதிவு செய்யப்பட்டுள்ளதையும் காண முடிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''நாம் எதனையும் ஏற்றுக்கொள்வோம் ஆனால், நேர்மையற்றவர்கள் என்ற குற்றச்சாட்டை ஏற்றுக்கொள்ள முடியாது... கஷ்டப்பட்டு படித்துப் புள்ளிகள் பெறும் மாணவர்களை நோகடிக்கின்ற, இழிவுசெய்கின்ற கருத்துக்கள் இவை'' என மு.சிவசிதம்பரம் ஆத்திரத்துடன் உரையாற்றினார்.

வடக்கில் எழுச்சியுற்ற தமிழர் உரிமை இயக்கங்களை எதிர்கொள்ள இப்படியான சக்திகள் சிங்களத் தரப்புக்கு தேவைப்பட்டுக்கொண்டிருந்தது. குறிப்பாக அரசாங்கத்துக்குள்.

***ஐ.தே.வின் மானப் பிரச்சினைக்கு விலை***

70 களில் இருந்து வடக்கில் தமிழ் இளைஞர்களின் எழுச்சி அரசாங்கத்துக்கு ஒரு பெரும் சவாலாகவே இருந்தது. 77 கலவரம் நிகழ்ந்து அதன் மீதான விசாரணைகளின் முடிவுகள் கூட அந்தத் தணலை தணிய வைக்கவில்லை. மாவட்ட சபைகள் தேர்தலில் கூட்டணியுடன் போட்டியிட்டு எப்பெரும் விலையைக் கொடுத்தாவது பல ஆசனங்களைக் கைப்பற்ற வேண்டும் என்று களம் இறங்கியது ஐ.தே.க. அருவருக்கத்தக்க தேர்தல் மோசடிகளில் இறங்கியது பற்றி பல சர்வதேச அறிக்கைகள் கூட சுட்டிக் காட்டியுள்ளன. வாக்குப் பேட்டிகள் சூறையாடப்பட்டன. பொலிசாரின் கெடுபிடிகள் சாமான்ய மக்களுக்கு அதிரித்திருந்தன.

இந்த நிலையில் ஐ.தே.க நியமித்திருந்த பிரதான வேட்பாளரான தியாகராஜா தமிழ் இயக்கங்களால் குறி வைக்கப்பட்டிருந்தார். 1984 மே 24 அன்று அவர் கொல்லப்பட்டார். ஐ.தே.கவுக்கு இது பேரிடியாக இருந்தது. வெற்றி வாய்ப்புகள் கைநழுவிப் போவதை உணர்ந்த அவர்கள் இதனை தமக்கெதிரான சவாலாகவே பார்த்தனர்.

தேர்தல் பணிகளை நேரில் நின்று கவனிப்பதற்காக ஜே.ஆர், அமைச்சர் சிறில் மெத்தியுவையும், மெத்தியுவுக்கு நெருக்கமான அமைச்சர் காமினி திசாநாயக்கவையும் அவர்கள் தலைமையில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பாதுகாப்பு அமைச்சின் மேலதிக செயலாளர், அமைச் சரவையின் செயலாளர் ஆகியோரைக் கொண்ட ஒரு சிறப்புக் குழுவை மே 30 ஞாயிறு அன்று யாழ்ப்பாணத்துக்கு அனுப்பினார். அதைவிட ஏற்கெனவே அதிகளவில் பொலிசார் குவிக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணத்துக்கு மேலதிகமாக வெளி மாவட்டங்களிலிருந்து 500 பொலிசாரைக் கொண்ட ஒரு பெரும்படையும் அனுப்பப்பட்டது. ஒரு பெரும் அசம்பாவிதத்துக்கான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்தீபுகள் மேற்கொள்ளப்படுவதை யாழ்ப்பாண மக்கள் அறிந்திருக்கவில்லை.

தேர்தலுக்கு இன்னும் 4 நாட்களே இருந்த நிலையில் தேர்தல் பிரச்சாரங்கள் பரபரப்புமிக்கதாக இருந்தது. மே.31ஆம் திகதி தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தேர்தல் பிரசாரக் கூட்டம் யாழ்ப்பாணம் நாச்சிமார் அம்மன் கோவிலடியில். இந்தக் கூட்டத்தில் பாதுகாப்புக் கடமையில் இருந்த மூன்று பொலிஸார் இளைஞர் சிலரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்கள். இரண்டு பொலிஸார் ஸ்தலத்திலேயே உயிரிழந்தார்கள்.

***அரச பயங்கரவாதம்***

சொற்ப நேரத்தில் அங்கு விரைந்த ஆயுதமேந்திய பொலிஸ் படையொன்று தமது வெறியாட்டத்தைத் தொடங்கியது. வீதியில் கண்டவர்களையெல்லாம் அடித்து துன்புறுத்தினர். வீதி வெறிச்சோடியது. ஆத்திரத்தில் அருகில் இருந்த அனைத்தையும் சின்னாபின்னப்படுத்தினர். 150க்கும் மேற்பட்ட கடைகள் கொள்ளையிடப்பட்டும் தீயிடப்பட்டும் நாசம் செய்யப்பட்டன. அருகிலிருந்த கோவிலுக்கு தீவைத்த அவர்கள், தொடர்ந்து அருகிலிருந்த வீடுகளையும் வீதியிலிருந்த வாகனங்களையும் தீக்கிரையாக்கத் தொடங்கினர். பாராளுமன்ற உறுப்பினர் யோகேஸ்வரனின் வீடு சாம்பலாக்கப்பட்டு தரைமட்டமாக்கப்பட்டது. யோகேஸ்வரனும் அவரது மனைவியும் மயிரிழையில் உயிர் தப்பியோடினர். ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம் தீ வைத்து கொளுத்தப்பட்டது. அதன் ஆசிரியர் கோபாலரத்தினம் கொடூரமாக தாக்கப்பட்டார். தமிழர் ஐக்கிய விடுதலைக் கூட்டணியின் தலைமைக் காரியாலயமும் தீ வைத்து நாசமாக்கப்பட்டது. நான்கு தமிழர்கள் வீதிக்கு இழுத்து வரப்பட்டு சித்திரவதை செய்யப்பட்டு கொல்லப்பட்டார்கள். யாழ்ப்பாணப் பெரிய கடையில் கட்டியெழுப்பப்பட்ட திருவள்ளுவர் சிலை, ஔவையார் சிலை, சோமசுந்தரப் புலவர் ஆகியோரின் சிலைகளும் உடைத்து துவம்சம் செய்யப்பட்டன.

இந்த அராஜகத்தை யாழ்ப்பாண விருந்தினர் விடுதியில் இருந்தபடி இயக்கிக் கொண்டிருந்தது சிறில் மெத்தியு, காமினி திசாநாயக்க தலைமையிலான குழு. ஏற்கெனவே இறக்கப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான காடையர்களும் தம் பங்குக்கு கொள்ளைகளிலும், நாசம் செய்வதிலும் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்கள். இத்தனைக்கும் அவசரகால சட்டம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுலில் தான் இருந்தது. சகலதும் முடிந்த பின்னர் தான் காலம் கடந்து ஜூன் 2 அன்று ஊரடங்கு சட்டத்தைப் பிறப்பித்தது அரசாங்கம். அந்த சட்ட நடவடிக்கைகள் காடையர்களுக்கு பாதுகாப்பையும், பாமரர்களுக்கு இழப்பையும் தான் தந்தது. மொத்தத்தில் சொல்லப்போனால் அரச பயங்கரவாதம் இந்த சட்டங்களின் மூலம் மேலதிக அதிகாரங்களுடனும், வசதிகளுடனும் மக்களை கட்டிப்போட்டு சூறையாடியது. அவர்களின் சொத்துக்களை அழித்து சின்னாபின்னமாக்கியது.

இரவிரவாக நடந்த இந்தக் கொடுமைகளுக்கு இடைவேளை கொடுக்கவில்லை. அவர்களின் நாசகர தாகமும் அடங்கவில்லை. மறுநாளும் தொடர்ந்தது. ஜூன் 1 அவர்கள் யாழ்ப்பாணப் பொது நூலகத்துக்குள் நுழைந்தார்கள். அங்கிருந்த 97,000க்கும் மேற்பட்ட நூல்களையும், காலங்காலமாக பாதுக்காக்கப்பட்டு வந்த ஓலைச்சு வடிகளையும், பல கையெழுத்து மூலப் பிதிகளையும் சேர்த்து கொளுத்தினார்கள். வரலாற்று முக்கியத்துவம் பெற்ற ''யாழ்ப்பாண வைபவ மாலை''யின் ஒரேயொரு மூலப் பிரதியும் அழிக்கப்பட்டவற்றுக்கு உதாரணம்.

இரவிரவாக தீயில் பொசுங்கிக்கொண்டிருந்த அந்த புலமைச் சொத்துக்களுடன், பல்லாயிரக்கணக்கானோரை உருவாக்கிய அந்த நூலகம் எரிந்துகொண்டிருந்தது. யாழ். புனித பத்திரிசியார் கல்லூரியின் மேல்மாடிக் கட்டடத்தில் வாழ்ந்து வந்த 74 வயதுடைய தாவீது அடிகள் இதனைக் கண்ணுற்ற அதிர்ச்சியில் மாரடைப்பில் உயிர்துறந்தார்.

''தமது புலமைச் சொத்தின் ஒட்டுமொத்த அழிப்பின் அடையாளமாகவே பார்த்தார்கள். பொது நூலக எரிப்பானது, ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தையும் அடக்குமுறைமிக்க அரசுக்கு எதிராகத் திருப்பியது' என்று குறிப்பிடுவார் பேராசிரியர் சிவத்தம்பி.

மா.க. ஈழவேந்தன் தமிழினத்தின் மீதான பண்பாட்டுப் படுகொலை என்றார்.

பேராசிரியர் சுனில் ஆரியரத்ன தமிழ் மொழி, கலை, பண்பாடு என்பவற்றை சிங்கள சமூகத்தினரிடம் கொண்டு போய் சேர்க்கும் முக்கிய சிங்கள புலமையாளர். யாழ் பல்கலைக்கழகத்திலும் கற்றவர். அவர் இப்படி குறிப்பிடுகிறார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஆயிரக்கணக்கான வரலாற்று இதிகாசங்களைக் கொண்டவர்கள் தமிழ் மக்கள். மிகவும் கிடைத்தற்கரிய நூல்களையும் கொண்டிருந்தது யாழ் நூலகம். நாங்கள் எங்களுக்குத் தேவையான நூல்களை பல்கலைக் கழக நூலகத்திலிருந்து பெற்றுக்கொண்ட போதும் அதை விட மேலதிகமான தேவைகளுக்கு யாழ் பொது நூலகத்தையே நாடினோம். உலகில் எங்கும் கிடைத்திராத நூல்களும், இந்தியாவில் கூட கிடைத்திராத பல நூல்கள் ஆவணங்களும் பாதுகாப்பாக அங்கு இருந்தன. இனி அந்த நூல்கள் எந்த விலை கொடுத்தாலும் நமக்கு கிடைக்கப்போவதில்லை. புராண வரலாற்று தொல்லியல் சான்றுகளை எரித்து அழித்ததற்கு நிகர் இது.''

யாழ் பல்கலைக்கழக விரிவுரையாளர் சுவாமிநாதன் விமல் இப்படி கூறுகிறார்.

''காலனித்துவகாலத்து நூல்களும், யாழ்ப்பாணத்தின் கல்வி மறுமலர்ச்சி சம்பந்தப்பட்ட மூல ஆவணங்களும், ஈழத்து தமிழ் இலக்கியத்தை வெளிப்படுத்தும் எங்கும் கிடைத்திராத நூல்களும் கூட இங்கு சேகரிக்கப்பட்டிருந்தன.''

அங்கே அழிந்தவற்றில் இவையும் அடங்கும்

1) கலாநிதி ஆனந்த குமாரசுவாமியின் கையெழுத்துப் பிரதிகள்
2) திரு.சி.வன்னியசிங்கம் நூற்தொகுதி (சுமார் 100 நூல்கள்)
3) திரு ஐசாக் தம்பையா நூற்தொகுதி (சமயம், தத்துவம் பற்றிய நூல்கள் சுமார் 850)
4) திரு.கதிரவேற்பிள்ளை நூற்தொகுதி (சுமார் 600 நூல்கள்)
5) ஏட்டுச் சுவடித் தொகுதி
6) அமெரிக்க நூலகத்திலிருந்து அன்பளிப்பு செய்யப்பட்ட உசாத்துணை நூற் தொகுதி

இலங்கையின் அரச பயங்கரவாதம் காலத்துக்கு காலம் கலவரங்களுக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் தலைமை கொடுத்து வந்திருக்கிறது தான். இதற்கு முந்திய 1939, 1956, 1958, 1977 முக்கிய கலவரங்களின் போதும் அழிவுகளை ஒவ்வொரு கோணத்தில் கண்ணுற்றிருக்கிறோம் ஆனால் 1981 இல் அழித்தவற்றில் தலையாய இழப்பாக, மறக்கவும், மன்னிக்கவும் முடியாத இழப்பாக பதிவானது யாழ் நூலக அழிப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***கணேசலிங்கத்தின் வாக்குமூலம்***

தென்னாசியாவின் சிறந்த நூலகமாகவும், இலங்கையின் இரண்டாவது பெரிய நூலகமாகவும் அறியப்பட்டது யாழ்ப்பாணப் பொது நூலகம்.

யாழ் நூலக எரிப்புக்கு காரணமான எவரும் இறுதிவரை உத்தியோக பூர்வமாக தண்டிக்கப்படவில்லை. அவர்கள் எவரும் சட்ட ரீதியாக குற்றம் சுமத்தப்படவுமில்லை. ஆனால் 1993 மார்ச் மாதம் அப்போது வெளிவந்த சரிநிகர் பத்திரிகைக்கு ராவய பத்திரிகையின் ஆசிரியர் விக்டர் ஐவன் இனப்பிரச்சினை குறித்த ஒரு பேட்டியை வழங்கியிருந்தார். அதில் அவர் அன்றைய கொழும்பு மேயரும், ஐ.தே.க.வின் பொருளாளருமாக இருந்த கே.கணேசலிங்கத்துடன் ஒரு உயர்ஸ்தானிகரின் வீட்டு விருந்தொன்றில் பரிமாறிக்கொண்ட கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

''அங்கு மது பரிமாறப்பட்டிருந்தது ''க'' போதை நிலையில் இருந்தார். 1981 யாழ் நூலக தீவைப்புக்கு நீங்களும் மெத்தியு போன்றோருக்கு உடந்தையாக இருந்திருக்கிறீர்களே'' என்று கேட்ட கேள்விக்கு.

கணேசலிங்கம்: ''அந்த நேரம் கள்ள வாக்குகளைப் போடுவதற்காகத் தான் நாங்கள் போயிருந்தோம் என்பது உண்மை.... நானோ, சிறில் மெத்தியுவோ, காமினியோ பெஸ்டஸ் பெரேராவோ காரணமல்ல. அதைச் செய்தது பொலிஸ் அதிகாரி ஹெக்டர் குணவர்த்தன தான். நாங்கள் அதைத் தடுக்கவில்லை.''

ஐவன் : 83 கலவரத்தில் சிறில் மெத்தியுவுக்கு நேரடிப் பங்கு இருந்ததை ஏற்றுக் கொள்கிறீர்களா?

கணேசலிங்கம் : ''1983 கலவரத்திற்கு நானும் பங்களிப்பு செய்திருக்கிறேன். நானும் சிறில் மெத்தியுவும் மட்டுமல்லஅரசோடு இருந்த எல்லா சிரேஷ்ட அரசியல் வாதிகளும் அக்கலவரத்தைப் பாவித்தார்கள். தமக்கு தேவையானதை செய்து கொண்டார்கள். காமினி, லலித், மெத்தியு, பிரேமதாச அனைவரும் பாவித்தார்கள். நாங்கள் எவரும் யோசிக்க வில்லை அது அவ்வளவு சிக்கலைக் கொண்டு வரும் என்று. சாதாரணக் கலவரத்தைப் போல எழும்பி அடங்கி விடுமென்றே கருதியிருந்தோம்''

ஐவன் : ''இப்படி ஒரு கேவலமான செயலைச் செய்ய தமிழனான நீங்கள் எப்படி உடந்தையாக இருந்தீர்கள்.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரேமதாச அரசாங்கத்தின் போது காமினி திசாநாயக்க, லலித் அத்துலத்முதலி பிரேமதாசவுக்கு எதிரான நம்பிக்கையில்லா பிரேரணையைக் கொண்டு வருவதற்கான ஆயத்தங்களை செய்து கொண்டிருந்த போது பிரேமதாச இந்த உண்மைகளை உடைத்தார். காமினி திசாநாயக்க நூலக எரிப்பில் ஆற்றிய பாத்திரத்தைப் பற்றிய உண்மைகளை அன்றைய ஜனாதிபதி பிரேமதாச மறைமுகமாக வெளிப்படுத்தினார்.

புத்தளம் முஸ்லிம் கல்லூரியில் பிரேமதாச ஆற்றிய உரையின் போது; ''1981இல் மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தல் நடைபெற்ற வேளையில் கட்சிக்காரர்கள் நாட்டின் பிறபகுதிகளிலிருந்து பலபேரைச் சேர்த்துக் கொண்டு வடக்கு நோக்கிச் சென்றார்கள். வடக்கில் நடைபெற்ற தேர்தலை நடக்க விடாமல் குழப்பியதோடு குழப்பமும் செய்தார்கள். யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்தில் விலைமதிப்பற்ற புத்தகங்களைக் கொளுத்தியவர்கள் யாரென்று அறிய விரும்பினால் எம்மை எதிர்ப்பவர்களின் முகத்தைப் பார்த்தால் தெரியும்'' என்றார்.

அன்று அவரை எதிர்த்து நின்றவர்கள் வேறு யாருமில்லை காமினி திசாநாயக்க தலைமையிலான குழுவே.

இந்தக் குற்றச்சாட்டுக்கு காமினி பூசி மெழுகி எழுதியிருந்த கடிதத்துக்கு ஜனாதிபதி பிரேமதாச மீண்டும் பதிலளித்தார். அது பற்றிய செய்தி 1991 ஒக்டோபர் 26 ஆண்டு வெளியான ஈழநாடு பத்திரிகையில் வெளியானது, அதில்,

''வடக்கு கிழக்கில் தற்போதைய நிலைமையை எழுப்பியவர்கள் யார். இதற்கு பிரதானமான காரணம் திரு.காமினியே பத்து வருடங்களுக்கு முன் 1981ல் நடந்த சம்பவங்கள் இந்நாட்டின் சமுதாயங்களுக்கு இடையிலான உறவுகளில் இது ஒரு கறை படிந்த துயரமான சம்பவமாகும். மாவட்ட அபிவிருத்தி சபை முறையை பாராளுமன்றத்தில் காமினிதிசா நாயக்கவே எதிர்த்தார். தேர்தலுக்கு முதல் காமினி நிறைய ஆட்களை கூட்டிக்கொண்டு யாழ்ப்பாணம் சென்றார்...

மாவட்ட அபிவிருத்திச் சபை தேர்தல்களில் சதிநாசவேலைகள் இடம்பெற்றபின்னர் ஒரு சர்வதேச நூல்நிலையமான யாழ்ப்பாணப் பொது நூலகம் எரியூட்டப்பட்டது. வாக்குச் சீட்டுக்களால் நீதியை பெறுவதற்கே எமது தலைவர்களால் முடியாவிடில் நாங்கள் நீதியை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குண்டுகள் மூலம் பெறுவோம் என இளம் தமிழ் தீவிரவாதிகள் நினைத்தனர். இப்படித்தான் அவர்கள் தீவிரவாத செயலில் இறங்கினார்கள்..''

***அழிப்பின் சிகரம்***

கடந்த 2016 டிசம்பர் மாதம் 06 ஆம் திகதி யாழ் நூலக எரிப்புக்கு முதற்தடவையாக பகிரங்கமாக மன்னிப்பு கேட்டார் பிரதமர் ரணில்.[1] ஆனால் அவரது உரையில் இரட்டை அர்த்தம் தரத்தக்க விளக்கங்கள் இருந்ததையும் கவனிக்கலாம்.

'யாழ்ப்பாண நூலகத்தை எரித்தது ஒரு கொடூரகரமான குற்றம் என்பது இரகசியமல்ல. ஒரு சிலரின் கொடூரமான செயல்களால் தேசமே அவமானப்படுத்தப்பட்டது. யாழ் நூலக எரிப்பானது தமிழ் மக்களின் இதயத்துக்கு அடிக்கப்பட்ட கடும் தாக்குதல். ஆனால் தற்போது அந்த காயம் ஆற்றப்பட்டிருக்கிறது. இந்த சம்பவத்தினால் மூட்டப்பட்ட யுத்த நெருப்புக்கு சிங்கள மக்கள் எந்தளவு அனுபவிக்க வேண்டியேற்பட்டது... அதன் பின்னர் பல்லாயிரக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டார்கள். இவ்வாறு கொல்லப்பட்டவர்களுக்காக மன்னிப்பு கேட்கப் போபவர்கள் யார்? இந்த எரிப்பைப் பற்றி அன்றைய பொலிஸ் மா அதிபர் எட்வர்ட் குணவர்த்தன தயாரித்த இரகசிய அறிக்கையின்படி இந்த தீமூட்டலை செய்தவர்கள் விடுதலைப் புலிகள். அது பிரபாகரனின் ஆணை. யாழ்ப்பாண தமிழ் மக்களுக்கு சர்வதேச அனுதாபத்தை பெறுவதற்காக செய்த காரியம் என்று அந்த அறிக்கையில் இருந்தது...''

எனவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மன்னிப்பை கேட்டுவிட்டு மீண்டும் அதனை திரும்பப் பெறும் பாணியிலான கதை என்பதை விளங்கிக்கொள்ளலாம். யாழ் நூலகம் எரிக்கப்பட்டபோது ரணில் அதே அரசாங்கத்தின் அமைச்சர் என்பதை நாம் மறந்துவிட்டோமா என்ன?

அவர் ஆதாரம் காட்டுகின்ற அதே பொலிஸ் மா அதிபர் எட்வர்ட் குணவர்தனவின் கதையை இன்று சிங்கள ஊடகங்கள் அனைத்தும் பரப்பி வருகின்றன. யாழ் நூலகத்தை கொளுத்தியது சிங்களத் தரப்பே என்று இதுவரை நம்பியிருந்த இனவாத சாக்திகள் கூட; எட்வர்ட் குணவர்தனவை ஆதாரம் காட்டியபடி தமது கரங்கள் தூய்மையானவை, இரத்தக் கறையற்றவை என்று சாதித்து வருவதை பார்க்க முடிகிறது. யார் இந்த

---

1 திவயின 08.12.2016

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எட்வர்ட் குணவர்தன அவர் எதை எங்கு இப்படி சொல்லியிருக்கிறார் என்பதைப் பார்ப்போம்.

முன்னாள் பொலிஸ் மா அதிபர் எட்வர்ட் குணவர்தன 2013 இல் 390 பக்கங்களுடன் படங்களுடன் கூடிய ஒரு நூலை வெளியிட்டார். நூலின் பெயர் ''யாழ்ப்பாண நூலக எரிப்பு உட்பட மறக்கமுடியாத குறிப்புகள்'' (Memorable Tidbits Including the Jaffna Library Fire) இந்த நூலின் வெளியீட்டு நிகழ்வு 19.01.2013 அன்று கொழும்பு மகாவலி கேந்திர நிலையத்தில் நிகழ்ந்தது. பல முக்கியஸ்தர்கள் கலந்துகொண்ட கூட்டம் அது. அந்த கூட்டத்தில் சிறப்பு பேச்சாளராக அழைக்கப்பட்டிருந்தவர் நாடறிந்த பிரபல பேராசிரியர் கார்லோ பொன்சேகா. அவர் லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர்களில் ஒருவர் என்பதையும் கவனிக்க வேண்டும். நீண்ட காலம் தமிழ் மக்களின் நீதியான அரசியல் கோரிக்கைகளை ஆதரித்து வந்தவராக அறியப்பட்டவரும் கூட.

அங்கு அவர் ஆற்றிய உரை முக்கியமானது.

''எட்வர்ட் குணவர்த்தன குற்றவியல் நீதியியல் பற்றிய கற்கையில் உயர் பட்டம் பெற்றவர். அவர் தான் பெற்ற ஆதாரங்களை வைத்து இந்த யாழ் நூலகத்தை எரித்த சூத்திரதாரிகள் புலிகளே என்கிறார். சிங்களவர்கள் காட்டுமிராண்டிகள் என்று உலகத்துக்கு புனைவதற்காக செய்யப்பட்டது. முழு உலகமும் புலிகளின் பிரச்சாரத்தை நம்பியது. நானும் அந்த காலப்பகுதியில் கடும் அரசாங்க எதிர்ப்பாளனாக இருந்தேன். யாழ் நூலக எரிப்பின் பின்னால் இருந்த அந்த வில்லன் காமினி திசாநாயக்க என்றே நானும் உறுதியாக நம்பியிருந்தேன். 1994ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் பிரச்சாரங்களில் காமினி திசாநாயக்கவை பகிரங்கமாக தாக்கிப் பேசினேன். எட்வர்ட் குணவர்த்தனவின் இந்த நூலை வாசித்தறியும் வரை யாழ் நூலகத்தை எரித்தது காமினி திசாநாயக்க என்றே நம்பிவந்தேன்.

1993ஆம் ஆண்டு யாழ் நூலகத்தைப் பற்றிய ''Murder'' என்கிற கவிதையை வாசித்தேன். அது... Ceylon Medical Journal இல் வெளியாகியிருந்தது. அது பேராதனை பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர் எம்.ஏ.நுஹ்மான் எழுதிய கவிதையின் ஆங்கில மொழிபெயர்ப்பு. அந்த கவிதை என்னை மிகவும் பாதித்தது. (என்று கூறிவிட்டு அதன் ஆங்கில வடிவத்தை வாசிக்கிறார்.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அக்கவிதையை நான் என் தாய் மொழியான சிங்கள மொழிக்கு மொழிபெயர்த்தேன். 1994ஆம் ஆண்டு தேர்தலில் பிரதான போட்டியாளர்களான சந்திரிகாவுக்கும் காமினி திசாநாயக்கவுக்கும் இடையிலான போட்டியில் நான் சந்திரிகாவை ஆதரித்து பிரச்சாரம் செய்தேன். ஏறத்தாள 30 க்கும் மேற்பட்ட கூட்டங்களில் எனது உரையின் இறுதியில் இந்தக் கவிதையை சிங்களத்தில் வாசித்து முடித்தேன். (சிங்களத்தில் அதே கவிதையை வாசிக்கிறார்). இந்த அட்டூழியங்களுக்கு பொறுப்பான காமினி திசாநாயக்க நாட்டின் ஜனாதிபதியாக ஆகக்கூடாது என்றபோது கூட்டத்தில் இருந்து ''ஜயவேவா... ஜயவேவா...'' கோஷம் எழும்பின.

23.10.1994 அன்று பேருவளையில் இருந்து எங்கள் பிரச்சாரங்கள் ஆரம்பமாகி பயாகல, வாதுவை, பாணந்துறை, மொரட்டுவை, கிருலபனை என தொடர்ந்தது. அங்கெல்லாம் அந்தக் கவிதையை வாசித்தேன். அன்று உறங்கிக்கொண்டிருந்த போது என்னை எழுப்பி காமினி திசாநாயக்க பேலியகொட குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டுவிட்டதாக கூறினார்கள். நான் உண்மையில் மிகவும் நொந்துபோனேன். காமினி திசாநாயக்கவை நான் தனிப்பட அறிவேன். அவர் ஒரு கனவான். என்னை எதிர்த்து ஒரு வார்த்தையும் அவர் கூறியதில்லை. நாங்கள் அரசியல் ரீதியாக வேறுபடுகின்ற போதிலும் அவர் எப்போதும் என்னிடம் மிகவும் மரியாதையாக இருந்தார்.

எட்வர்ட் குணவர்த்தனவின் நூலை வாசித்ததன் பின்னர் எப்பேர்ப்பட்ட குற்றத்தை நான் விளைவித்திருக்கிறேன் என்று உணர்ந்துகொண்டேன். இப்போது நான் அதற்கு பிராயச்சித்தமாக திருமதி ஸ்ரீமா திசாநாயக்க, நவீன் திசாநாயக்க, லங்கா திசாநாயக்க ஆகியோரிடம் நான் செய்த தவறுக்காக மன்னிப்பைக் கேட்டுக் கொள்கிறேன்.

திரு. நவின் திசாநாயக்க, சிலுவையில் அறையப்பட்டவர்களுக்கு இயேசு கிறிஸ்து காட்டிய கருணையை எனக்கு காட்ட முடியும். 'பிதாவே, அவர் அறியாமல் செய்த பாவத்தை மன்னித்தருளும்'. இப்படி ஒரு நிபந்தனையற்ற மன்னிப்பை கோருவதற்கு எனக்கு சந்தர்ப்பத்தை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்படுத்தித் தந்த எட்வர்ட் குணவர்த்தனவுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்...''

கார்லோ பொன்சேகா 2019 இல் மறைந்தார். ஆனால் அவர் போன்ற ஒரு முக்கியமான பிரமுகர் ஏற்படுத்திவிட்டுப் போன இத்தகைய செயலால் சிங்கள மக்கள் மத்தியில் மேலும் இந்தக் கருத்துக்கு வலுவூட்டப்பட்டது. ஒன்று குற்றவாளிகளை தப்பவைத்தது. இரண்டாவது இதை விடுதலைப் புலிகளின் மீது (தமிழர் தரப்பிடம்) பழியைப் போட்டுவிட்டது. கார்லோ பொன்சேகா இதைப் பேசிய கால கட்டத்தில் அவர் ஒரு ராஜபக்சவாதியாக ஆகியிருந்தார்.

அவரின் இந்த உரையை பல சிங்கள ஆங்கில பத்திரிகைகளும் அடுத்த நாளே முக்கியத்துவம் கொடுத்து பதிவு செய்தன. ராஜபக்ச வாதிகளால் நடத்தப்பட்ட ''நேஷன்'' பத்திரிகையில் ''மனசாட்சியுள்ள மனிதன்'' என்று ஆசிரியர் தலையங்கத்தில் எழுதியது. ஆனால் அதேவேளை ''யாழ் நூலக எரிப்பில் தொடர்புள்ளதாக குற்றஞ்சாட்டப் பட்டிருந்த பொலிஸ் அதிகாரியொருவரே அந்த சம்பவம் பற்றி அறிக்கை எழுதுவதை எப்படி ஏற்றுக்கொள்ள முடிகிறது'' என்று சண்டே டைம்ஸ் பத்திரிகைக்கு எழுதியவர் தமிழர் அல்ல. மனசாட்சியுள்ள இன்னொரு ஓய்வு பெற்ற பொலிஸ் அதிகாரியான டாஸ்ஸி செனவிரத்ன.[2]

டாஸ்ஸி செனவிரத்னவின் கட்டுரையைத் தொடர்ந்து இந்த சம்பவத்தை நேரில் கண்ட முக்கிய சாட்சியான அன்றைய பொலிஸ் அதிகாரி கே.கிருஷ்ணதாசன் இப்போது அவுஸ்திரேலியாவில் இருக்கிறார். அவர் சமீபத்தில் எட்வர்ட் குணவர்த்தனவுக்கு எழுதிய பகிரங்க கடிதம் ஊடகங்களில் பிரசுரமாகியிருந்தது. யாழ் நூலக எரிப்பு சம்பந்தமாக அதுவொரு முக்கியமான கடிதம்.

***ஓய்வுபெற்ற பிரதிப் பொலிஸ் மா அதிபர் எட்வர்ட் குணவர்த்தன!***

பதில் : யாழ் நூலக எரிப்பு!

என் பெயர் கே.கிருஷ்ணதாசன். நான் ஜூன் 1967 முதல் டிசம்பர் 1986 வரை இலங்கை போலீஸ் சேவையில் பணியாற்றினேன், நான் ஆஸ்திரேலியாவுக்கு குடிபெயர்ந்து, சிட்னியில் எனது குடும்பத்தினருடன்

2 Tassie Seneviratne, Burning of the Jaffna Public Library: Whodunit? 01.06.2014

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மகிழ்ச்சியுடன் வாழ்ந்துவருகிறேன். எனது தொழில் வாழ்க்கையில் உங்களுக்கு கீழ் பணியாற்ற எனக்கு வாய்ப்பு கிடைத்ததில்லை. எச்செலான் எசெலோன் சதுக்க பொலிஸ் பயிற்சிப் பள்ளியில் நான் பயிற்சிபெற்ற ஜூன் 1967க்கும் டிசம்பர் 1967க்கும் இடைப்பட்ட காலத்தில் எங்கள் ADT யாக நீங்கள் பணியாற்றியிருந்தீர்கள். அதன் பின்னர் மாத்தறையில் பணியைத் தொடங்கினேன். இறுதியாக அக்டோபர் 1983 முதல் மார்ச் 1986 வரை இறுதியாக நான் மட்டக்களப்பில் பணியாற்றினேன். அதன்பிறகு நான் அவுஸ்திரேலியாவுக்கு குடிபெயர்வதற்கு முன்னர் நீங்கள் பொலிஸ் தலைமையகத்தில் பிரதிப் பொலிஸ் மா அதிபராக நிர்வாகப் பிரிவில் பணியாற்றிய வேளை நானும் அங்கு பணியாற்றியிருந்தேன். நான் உங்களைப் போன்ற ஒரு பழைய ஜோசபியன். (ஜோசப் கல்லூரியைச் சேர்ந்தவன்)

சமீபத்தில் இலங்கை செய்தித்தாள்களில் வெளிவந்த RTD எஸ்.எஸ்.பி திரு.டாஸ்ஸி செனவிரத்னா எழுதிய கட்டுரையோடு தொடர்புடைய ஒரு விடயத்துக்கு கருத்தளிப்பதற்காக இதை எழுதுகிறேன். திரு. டாஸ்ஸி செனவிரத்ன என்னுடைய ஒரு நல்ல நண்பர், அவர் தற்போது சிட்னியில் விடுமுறையைக் கழித்து வருகிறார். யாழ்ப்பாண பொது நூலகம் எரிக்கப்பட்டவேளை நானும் கண்ணால் கண்ட ஒரு சாட்சியாக இருந்ததால், அதைப் பற்றிய உங்கள் நூல் அறிமுகநிகழ்வின் போது வெளியிடப்பட்ட கருத்துக்களுக்கு பதிலளிக்குமாறு அவர் என்னிடம் கேட்டுக்கொண்டார். நூலகத்தை எரிப்பதைக் கண்ணால் கண்ட நேரடி சாட்சியாக இருந்த காரணங்களால் உங்களுடன் தொடர்புபடுத்த விரும்புகிறேன்.

ஜனவரி 1980 முதல் டிசம்பர் 1982 வரை யாழ்ப்பாண குற்றப்பிரிவுக்கு பொறுப்பான பொறுப்பதிகாரியாக நான் பணியாற்றியதுடன் யாழ்ப்பாணப் பிரிவு கண்காணிப்பு சுப்பிரிண்டன்ட்டுக்கு கீழ் நான் நேரடியாக பணியாற்றினேன். அப்போது யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் நான் இரண்டாவது சிரேஷ்ட அதிகாரியாகவும் பணியாற்றினேன். அப்போது எனது மேலதிகாரியாக லலித் குணசேகர கடமையாற்றினார்.

31 மே 1981 இரவு 7.00க்கும் 7.30க்கும் இடையில் யாழ்ப்பாண பொலிஸ் வளாகத்தில் பிரதிப் பொலிஸ் மா அதிபர் மகேந்திரனுடன் இருந்தேன். அப்போது யாழ் நூலகப் பகுதியிலிருந்து பெரிய புகை எங்களால் காண முடிந்தது. நூலகம் தான் எரிகிறது என்பதை நாங்கள் உணர்ந்துகொண்டோம். உடனடியாக போலிசாரையும் அழைத்துக்கொண்டு அந்த இடத்துக்கு போகுமாறு பொலிஸ் மா அதிபரால் பணிக்கப்பட்டேன்.

பொலிசில் இருந்து 250 யார் தூரம் மட்டுமே இருந்த யாழ் நூலகத்துக்கு இரு சப் இன்ஸ்பெக்டர்களுடனும், பத்து கான்ஸ்டபில்களுடனும் விரைவாக சென்றடைந்தோம். அங்கே சுமார் 20 சீருடை அணிந்த

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவத்தினர் உள்ளே இருந்ததைக் கண்டோம். அவர்கள் அங்கே மேலும் எண்ணெய் ஊற்றி தீயை மூட்டிக்கொண்டிருந்தார்கள். புத்தக ராக்கைகளிலிருந்த நூல்களை அள்ளி அந்தத் தீயில் போட்டு கொளுத்திக் கொண்டிருந்தார்கள்.எங்களைக் கண்ட அந்த இராணுவத்தினர் சில இராணுவத்தினருடன் எங்களருகில் வந்து AK47 துப்பாக்கிகளைக் காட்டி மிரட்டியபடி எங்களை பொலிஸ் நிலையத்துக்கு திரும்பிவிடுமாறு சிங்களத்தில் கத்தினர். நான் உடனடியாக பொலிஸ் அதிபருடன் தொடர்புகொண்டு நிலைமையை விளக்கினேன். அவரும் எங்களை திரும்பிவருமாறு பணித்தார். நாங்கள் பொலிஸ் நிலையம் திரும்பியவேளை முழு நூலகக் கட்டிடமும் தீப்பிழம்பாக பரவியிருந்ததைக் கண்டோம்.

பொலிஸ் மா அதிபர் யாழ்ப்பாணத்திலுள்ள இராணுவ உயர் அதிகாரிகளை தொடர்புகொண்டார். அதில் எந்தப் பலனும் இருக்கவில்லை. அங்கிருந்த நிலைமைகளால் அந்த இராணுவத்தினருக்கு எதிராக எதையும் செய்ய இயலாதவர்களாக நாங்கள் இருந்தோம். சகலவற்றையும் கண்டும் கூட கையறு நிலையில் நான் இருந்தேன். நான் கண்ட அந்த காட்சிகளை என்றும் என்னால் மறக்க இயலாது. என் வாழ்நாள் காலம் முழுதும் என்னோடு கூட இருக்கும் நினைவுகள் அவை. பொலிஸ் நிலையத்துக்கு வந்ததும் நான் ஒரு அறிக்கையை எழுதினேன். பொலிஸ் மா அதிபரும் அந்தக் கோரச் சம்பவம் பற்றி ஒரு அறிக்கையை எழுதினார்.

துரதிர்ஷ்டவசமாக இன்று அந்த மகேந்திரன் உயிருடன் இல்லை. இருந்திருந்தால் இன்று என் கருத்துக்கு துணையாக அவர் இருந்திருப்பார். ஆனால் திருமதி மகேந்திரன் இன்றும் சிட்னியில் வாழ்கிறார். அவசியப்பட்டால் அவரிடம் நீங்கள் மகேந்திரன் இதைப் பற்றி பகிர்ந்தவற்றைப் பற்றி வினவலாம்.

தயவு செய்து டாஸ்ஸி செனவிரத்ன பத்திரிகைக்கு எழுதிய கட்டுரையை வாசியுங்கள். யாழ் நூலகத்துக்கு எப்படி தீயிடப்பட்டது என்பது பற்றிய விபரங்களை அவரோடு முன்னாள் ஓய்வுபெற்ற பொலிஸ் மா அதிபர் சீ.எல்.ரத்னாயக்கவின் (என்னோடு கற்றவர்) விபரங்களையும் அறியலாம்.

நான் எதைப் பார்த்தனோ, யாரைப் பார்த்தனோ அவற்றை நான் அறிக்கையாக எழுதியிருக்கிறேன். தீ பரவிக்கொண்டிருந்தபோது தான் நான் அங்கு சென்று அவற்றைப் பார்த்தேன்.

சமீபத்தில் உங்கள் புத்தகமான 'யாழ்ப்பாண நூலக எரிப்பு உட்பட மறக்கமுடியாத குறிப்புகள்' என்கிற நூலைப் படிக்க எனக்கு வாய்ப்பு கிடைத்தது. தமிழர்களிடையே நிலவும் சாதி மோதலும், யாழ்ப்பாணப் பொது நூலகத்தை புலிகள் எரித்ததற்கு காரணம் என்று நீங்கள் அதில் கூறியுள்ளீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசாங்கத்தையும் படையினரையும் இதில் தொடர்புபடுத்துவதற்காக விடுதலைப் புலிகள் நூலகக் கட்டிடத்திற்கு தீ வைத்திருக்க வாய்ப்பில்லை. மேலும் யாழ் நூலகமானது தமிழருக்கு மாத்திரமல்ல நாட்டின் சகலருக்குமானதாக இருந்தது. யாழ் நூலக எரிப்பு இன்று வரலாறாகிவிட்டது. அதுபோல அதை யார் செய்தார்கள் என்பதை அறிவார்ந்த மக்கள் அறிவார்கள்.

ஒரு உயர்மட்ட நீதிக் குழுவை நியமிப்பதன் மூலம், யாழ்ப்பாண பொது நூலகத்தின் எரிப்பு பற்றிய உண்மையை ஆராய அரசாங்கம் ஒரு ஆணைக்குழுவை நியமிக்க வேண்டிய முக்கியமான நேரம் இது.

சுதந்திரமாக ஆராயாதவரை உண்மையைக் கண்டறிய முடியாது. சம்பந்தப்பட்ட அனைவரின் பதிவுகளையும் கருத்திற் கொண்டு, அந்த உண்மைகளை சுயாதீனமாகவும் புறநிலையாகவும் மீண்டும் மறுஆய்வுக்கு உட்படுத்தவும் உண்மைகளை நிறுவவும் காலம் கடந்துபோய்விடவில்லை.

உங்கள் கருத்துக்கள் பகிரங்க வெளிக்கு வந்துவிட்டதால் பின்வரும் விபரங்களை நான் பணிவுடன் உங்களிடமிருந்து பெற விரும்புகிறேன்.

1. பொலிஸ் கடமைகளுக்கா அல்லது அரசாங்க தேர்தல் பணிகளுக்கா நீங்கள் ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் விசேட பணிக்காக அனுப்பப் பட்டிருந்தீர்கள்?
2. நீங்கள் பொலிஸ் கடமைகள் தொடர்பாகத் தான் அங்கு வந்திருந்தீர்களென்றால் முக்கிய பணி தொடர்பில் ஏன் நீங்கள் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்துக்கு வந்து பிரதிப் பொலிஸ் மா அதிபரையோ மற்றும் அதிகாரிகளையோ சந்திக்கவில்லை? அணுக வில்லை? விளக்கம் கொடுக்கவில்லை? அல்லது உங்களுக்கு அளிக்கப்பட்டிருந்த பணி இரகசிய பணியா? (under-cover) அங்கு மற்றவர்கள் கண்ட எதுவும் உங்கள் பார்வைக்கு எட்டாதது எப்படி? சம்பவ தினத்தன்று நான் உங்களை யாழ்ப்பாண பொலிஸ் வளாகத்தில் பார்த்ததில்லை என்பதை நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.
3. நீங்கள் கூறும் இன்ஸ்பெக்டர் சத்தியனைத் தவிர வேறு எவராவது உங்களோடு அப்போது பணியில் ஈடுபட்டிருந்தார்களா? அப்படி பணியாற்றியிருந்தால் அவர்கள் யார்?
4. யாழ்ப்பாண நூலகம் எரிப்பு தொடர்பாக விசாரணை மேற்கொள்ள யாழ்ப்பாணத்திற்கு வந்திருந்த குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகளை சந்தித்து உங்களுக்குத் தெரிந்தவற்றை அவர்களுக்கு வெளிப்படுத்துவதற்கு உங்களுக்கு எது தடையாக இருந்தது. ஏனெனில் அந்தக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினரும் ஜனாதிபதியின் உத்தரவின் பேரில் அல்லவா அனுப்பட்டிருந்தார்கள்?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. நீங்கள் IGP யிடம்/ஜனாதிபதியிடம் சமர்ப்பித்ததாகக் கூறும் அறிக்கையில் உங்கள் யாழ்ப்பாண விசேடபணி தொடர்பான விடயங்களும் உள்ளனவா?

நான் ஏன் இத்தனை காலமாக காத்திருந்தேன் என்பதையும் இந்த இடத்தில் கூறியாகவேண்டும்.

DIG/NR அறிக்கையில் நான் கண்டவற்றை ஏன் இவ்வளவுகாலம் பகிரங்கமாக வெளிப்படுத்தவில்லை என்பதை இங்கே கூறியாகவேண்டும்.

இராணுவ ஆதிக்கம் நிறைந்த நாட்டில் இராணுவத்தை சிக்கவைக்கின்ற விபரங்களை வெளியிடுவது தற்கொலை முயற்சிக்குச் சமம். மேலும் நான் அவுஸ்திரேலியாவுக்கு புலம்பெயர்ந்தாலும் இலங்கைக்கு அடிக்கடி பயணம் செய்திருக்கிறேன். இறுதியாக பொலிஸ் 67 பேட்ச் ஒன்றுகூடலில் கலந்து கொள்வதற்காக 2014ஆம் ஆண்டு இலங்கைக்கு பயணித்தேன்.

எவ்வாறிருப்பினும் இந்த சம்பவத்தை அறிய விரும்பும் எவருக்கும் நான் கண்டதை தனிப்பட்ட முறையில் வெளிப்படுத்தியுள்ளேன்.

கடந்த ஜனாதிபதித் தேர்தலுக்குப் பின்னர் நிலைமை இப்போது மாறியிருக்கிறது, எனவே நான் இப்போது உங்களுக்கு எழுதுகிறேன், ஏனென்றால் இப்போது நான் நடந்ததை பகிரங்கமாக சொல்ல முடியும்.

நான் மிகுந்த மரியாதையுடன் எதிர்பார்க்கும் தகவலைத் தெளிவுபடுத்த நீங்கள் உதவ முடிந்தால் உங்களுக்கு நான் மிகவும் நன்றியுள்ளவனாக இருப்பேன்.

*உங்கள் உண்மையுள்ள*
*க்றிஸ் கிருஷ்ணதாசன்*

பகிரங்க சவாலாக கேட்டிருந்த இந்தக் கேள்விகள் முழுமையாக டி.பீ.எஸ். ஜெயராஜ் அவர்களின் இணையத்தளத்தில் வெளியாகியிருந்தது. இதை அவர் எங்கிருந்து பெற்றார். அவருக்கு அனுப்பப்பட்டதா? அல்லது வேறெங்கேயும் பதிவான ஒன்றைத் தான் பதிவிட்டாரா என்கிற விபரங்கள் அதில் இருக்கவில்லை. ஆனால் அந்த இணையத்தளம் இலங்கைப் பற்றிய முக்கியமான ஒரு ஆங்கில இணையத் தளம் என்பதால் பரவலாக இது சென்றடைந்திருக்கவேண்டும். அது வெளியான திகதி 23.02.2015. ஆனால் இப்போது இத்தனை ஆண்டுகள் கழிந்தும் க்றிஸ் கிருஷ்ணதாசன் எழுப்பிய எந்தக் கேள்விக்கும் எட்வர்ட் குணவர்த்தன தரப்பில் இருந்து எந்த பதிலும் வெளிவந்ததில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாண நூலக எரிப்பு பற்றி தமிழில் மாத்திரம் ஐந்துக்கும் மேற்பட்ட நூல்கள் வெளிவந்துள்ளன. அதுபோல சிங்களத்திலும் வெளிவந்த இரண்டு நூல்களை காண முடிகிறது. அதில் ஒன்று எட்வர்ட் குனவர்தனவினுடையது. இன்னொன்று சந்தரேசி சுதுசிங்க எழுதிய ''எரிந்த இறக்கைகள்'' (ගිනි වැදුණු පියාපත්) என்கிற நூல். இந்த நூலில் குற்றவாளிகளாக அரசாங்கத்தையும் அரசியல்வாதிகளையும் சாடுகிறது.

ஆனால் பேரினவாதம் வெகுஜனமயப்பட்ட சிங்கள சமூகத்தில் எட்வர்ட் குணவர்த்தனவின் நூல் இப்போது பெரும் செல்வாக்கு பெற்று வருகிறது. அதில் கூறியபடி இதை யாழ் நூலகம் பிரபாகரனின் ஆணையின் பேரில் விடுதலைப் புலிகளே எரித்திருக்கிறார்கள் என்கிற கருத்தும் வெகுஜன மயப்படுத்தப்பட்டு வருவதைக் காணமுடிகிறது.

யாழ் நூலக எரிப்பு நாள் ஆண்டுதோறும் நினைவு கூரப்படும் போதெல்லாம் சமூக வலைத்தளங்களில் சிங்களத்தில் நடக்கின்ற பெருமளவு விவாதங்கள் அந்த இரத்தக் கறையை குறுக்குவழியில் கழுவ முயற்சித்துக்கொண்டிருப்பதைக் காணமுடிகிறது.

***அடையாள அழிப்பின் சிகரம்***

இந்த எரிப்பில் சம்பந்தப்பட்ட சிறில் மெத்தியு ஒரு வீரனாகவே இனவாதிகள் மத்தியில் இன்னும் திகழ்கிறார். காமினி திசநாயக்கவையும் காப்பாற்ற பெரும் எத்தனிப்பு எடுக்கப்படுகிறது. 1981சம்பவத்தில் சிறில் மெத்தியுவை கண்டும் காணாது இருந்ததன் விளைவு தான் 1983 கலவரத்திலும் மெத்தியு அதனை தனக்கு கிடைத்த லைசன்சாக கருதி ஆடிய ஆட்டம். பிரேமதாசா போன்றோரின் எதிர்ப்பைத் தொடர்ந்து பின்னர் அவர் விலத்தப்பட்ட நாடகம் வேறொரு உபகதை. உண்மையில் சிறில் மெத்தியுவை எவரும் விலத்தத் துணியவில்லை. அவர் தானாக விலகினார் என்பது தான் உண்மை.

சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பு நிறுவனத்தின் தலைவர் Orville H. Schell, தலைமையில் உண்மையறியும் குழுவொன்று இதனை விசாரிப்பதற்காக 1982இல் சென்றது. Orville H. Schell சர்வதேச மன்னிப்புச் சபையின் தலைவராகவும் விளங்கியவர். ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கம் பக்கசார்பில்லாத புலனாய்வுப் பிரிவை நிறுவவில்லை என்றும்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுயாதீனமான விசாரணையொன்றை மேற்கொள்ளவுமில்லை என்று அவர் குற்றம் சாட்டினார். 1981 மே, யூனில் ஏற்பட்ட அழிவிற்கு யார் பொறுப்பாளி என்பதைக் கூறுவதற்கு அரசாங்கம் தயாராக இருக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

யாழ் நூலகத்தை பின்னர் புனரமைத்து தமிழர்களுக்கு தந்ததாக சிங்கள அரசு கைகழுவிக் கொண்டது. ஆனால் கைநழுவிப் போன தமிழர் நம்பிக்கையை அவர்களால் திருப்பிப் பெற முடியவில்லை. அது அடுத்து வரும் பெரிய இழப்புகளுக்கு முத்தாய்ப்பாக ஆனது. ஒரு போராட்டத்தின் விதையாக ஆனது. தமக்கான தலைவிதியை தீர்மானிக்கும் வித்தானது.

***யாழ் நூலக எரிப்பு அடையாள அழிப்பின் சிகரம்***

இந்த அரச பயங்கரவாதச் செயலுக்கு ஒருவகையில் காரணமாக இருந்த ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன றோட்டரிக் கழக வைபவத்தில் ஆற்றிய உரையில் இப்படி குறிப்பிடுகிறார்.

யாழ் பொது நூலகமே எனது அரசியல் வாழ்வுக்கு அத்திவாரமிட்டது. (11.06.1982 வீரகேசரி செய்தி)

**Time line**

| | |
|---|---|
| 1933 இல் | யாழ்ப்பாணத்தில் ஒரு இலவச தமிழ் நூலகத்தை திறக்க வேண்டும் என்கிற சிந்தனையில் அன்றைய நீதிமன்ற காரியதரிசியாக பணிபுரிந்த க.மு.செல்லப்பா இளைஞர் முன்னேற்ற சங்கத்திடம் தெரிவித்தார். இளைஞர்களுடன் சேர்ந்து வீடு வீடாக சென்று நூல்கள் சேகரிக்கப்பட்டன. |
| 11.12.1933 | செல்லப்பா நூலகத்தின் அவசியத்தைப் பற்றி "A central Free Tamil Library in Jaffna" என்கிற தலைப்பில் ஒரு அறிக்கை விட்டார். |
| 04.06.1934 | யாழ் மத்திய கல்லூரியில் நீதிபதி சீ.குமாரசுவாமி தலைமையில் கூடிய புலமையாளர்கள் மற்றும் அரச உயர் உத்தியோகத்தர்கள் அனைவரும் கூடி இதற்கான ஒரு குழுவை நியமித்தார்கள். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01.08.1934 ஆஸ்பத்திரி வீதியில் மின்சார நிலையத்துக்கு எதிர்ப்பக்கமாக வுள்ள கடைகளில் ஒன்றை வாடகைக்கு எடுத்து ஆரம்பித்தார்கள். பலரும் நின்றுகொண்டு குவிந்திருந்து படிக்கத் தொடங்கினார்கள். இடப்பற்றாக் குறையினால் பக்கீஸ் பெட்டிகளின் மீதிருந்து படித்தார்கள்.

01.01.1935 நூலகம் உத்தியோகபூர்வமாக கோலாகலமாக யாழ்ப்பாண நகர சபையிடம் கையளிக்கப்பட்டது. 844 தரமான நூல்களுடன் (இவற்றில் 694 நூல்கள் பொதுமக்களால் அன்பளிப்பு செய்யப்பட்டவை) மாநகராட்சி மன்றத்தின் மராமத்துப் பகுதி அமைந்துள்ள பகுதியில் அது இயங்கியது.

1936 மழவராயர் கட்டடத்துக்கு மாறியது.

16.05.1952 ''யாழ்ப்பாண மத்திய நூலக சபை'' என ஒரு ஆளுநர் சபை உருவாக்கப்பட்டது.

23-03-1954 இல் கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டப்பட்டது

29.05.1954 நகரபிதா வணக்கத்துக்குரிய லோங்பிதா, பிரித்தானிய உயர்ஸ்தானிகர் செசில் செயேஸ், அமெரிக்க தூதுவர் பிலிப் குறோல், இந்திய உயர்ஸ்தானிகராலயத்தில் முதல் காரியதரிசி சித்தாந்தசாரி ஆகிய ஐவரும் சேர்ந்து கோட்டை முனியப்பர் கோயில் முன்னுள்ள முற்ற வெளியில் அடிக்கல் நாட்டினார்கள். ஆசிய அபிவிருத்தி நிதியம் இந்திய உயர்ஸ்தானிகராலயம் உள்ளிட்ட மேலும் பலர் நிதியுத விகளை வழங்கினர். சிறிது சிறிதாக பலரது உதவிகளும் நூலகத்துக்காக திரட்டப்பட்டன. நிதி சேகரிப்புக்காக களியாட்ட விழாக்களும் நடத்தப்பட்டன.

17-10-1958 இல் மழவராயர் கட்டிடத்தில் இயங்கிய நூலகம் பொது நூலகம் எனப் பெயர் மாற்றம் செய்யப் பட்டது.

11.10.1959 நூலகத்தின் இட நெருக்கடி தொடர்ந்தும் இருந்த நிலையில் மேல் மாடி கட்டி முடிக்குமுன்பே கீழ் மண்டபத்தை நகர பிதா அல்பிரட் துரையப்பா சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைத்தார். பழம்பெரும் நூல்களின் தொகுதிகள் கோப்பாய் வன்னியசிங்கம் மற்றும் பண்டிதர் இராசையனார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நினைவாகக் கிடைத்தன. முதலியார் குல சபா நாதனிடமிருந்து பல அரிய நூல்கள் விலைக்கு கிடைத்தன. இப்படி பல அரிய ஆவணங்களும், ஓலைச்சுவடிகளும், கையெழுத்து மூலப் பிரதிகளும் சேகரிக்கப்பட்டன.

03.11.1967 மேல் தளம் பூர்த்தியாக்கப்பட்டு பின்னர் சிறுவர், பகுதி, அடுக்கு அறை என்பனவும் திறக்கப்பட்டன.

01.06.1981 யாழ் நூலகத்தை சிங்களக் காடையர்கள் எரித்து சாம்ப லாக்கினர். 97000க்கும் மேற்பட்ட நூல்கள், அரிய ஓலைச் சுவடிகள் அனைத்தும் எரித்துப் பொசுக்கப்பட்டன. பின்னணியில் அரசாங்க அமைச்சர்கள் காமினி திசாநாயக்க, சிறில் மெத்தியு. இந்த சம்பவத்தைக் கண்ட வணக்கத்துக்குரிய சிங்கராயர் தாவீது அடிகளார் திகைத்து மாரடைப்பில் மரணமானார்.

07.02.1982 புதிதாக திருத்தபோவதாக அடிக்கல் நாட்டல்

10.12.1982 இடைக்கால ஒழுங்காக ஒரு பகுதி திருத்தியமைக்கப்பட்டு வாசிகசாலையின் சிறுவர் பகுதி, உடனுதவும் பகுதியும் இயங்கத் தொடங்கியது.

14.07.1983 இரவல் கொடுக்கும் பகுதி மீள இயங்கத் தொடங்கியது.

10.01.1984 மாநகர எல்லைக்குட்பட்டவர்களுக்கு மட்டமே மட்டுப் படுத்தப்பட்டிருந்த நூலக உறுப்புரிமை யாழ் மாவட்டத்தினர் அனைவருக்குமாக விஸ்தரிக்கப்பட்டது.


05.06.1984 மீண்டும் திறக்கப்பட்டது.

***உசாத்துணை***


- பொன்விழாப் பொலிவு காணும் பொதுசன நூலகம்- க.சி.குலரத்தினம் (மீள்விக்கப்பெற்ற யாழ் மாநகர நூலகம் திறப்பு விழா மலர் - 1984.
- யாழ்ப்பாண பொதுசன நூலகம் (எரிக்கப்பட்டு 34 ஆண்டுகள்) 01.06.2015 - தங்க முகுந்தன்.
- மீண்டும் யாழ்ப்பாணம் எரிகிறது - 1981.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- யாழ்ப்பாணப் பொது நூலகம்: ஒரு வரலாற்றுத் தொகுப்பு - என்.செல்வராஜா.
- யாழ்ப்பாணப் பொது நூலகம் அதன் சாம்பலிலிருந்து எழுகின்றது - வி.எஸ்.துரைராஜா.
- Thurairajah, V.S., *The Jaffna Public Library Rises from Its Ashes,* 2007, p. 28.
- Selvarajah, N. (comp). *Rising from the Ashes: The Tragic Episode of the Jaffna Library,* 2003.
- http://www.vikalpa.org/?p=6895.
- Report of Amnesty International Mission to Sri Lanka 1982.
- Orville H.Schell, Chairman of the Americas Watch Committee and Head of the Amnesty International 1982, Fact Finding Mission to Sri Lanka.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தரின் படுகொலை

-எம்.ஏ.நுஃமான்-

நேற்று என் கனவில்
புத்தர் பெருமான் சுடப்பட்டிறந்தார்.
சிவில் உடை அணிந்த
அரச காவலர் அவரைக் கொன்றனர்.
யாழ் நூலகத்தின் படிக்கட்டருகே
அவரது சடலம் குருதியில் கிடந்தது.

இரவின் இருளில்
அமைச்சர்கள் வந்தனர்.
'எங்கள் பட்டியலில் இவர் பெயர்
இல்லை
பின் ஏன் கொன்றீர்?''
எனச் சினந்தனர்.

'இல்லை ஐயா,
தவறுகள் எதுவும் நிகழவே இல்லை
இவரைச் சுடாமல்
ஒரு ஈயினைக்கூடச்
சுட முடியாது போயிற்று எம்மால்
ஆகையினால் தான்..''
என்றனர் அவர்கள்.

'சரி சரி
உடனே மறையுங்கள் பிணத்தை''
என்று கூறி அமைச்சர்கள் மறைந்தனர்.


சிவில் உடையாளர்
பிணத்தை உள்ளே இழுத்துச்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றனர்.
தொண்ணூறாயிரம் புத்தகங்களினால்
புத்தரின் மேனியை மூடி மறைத்தனர்.
சிகாலோகவாத சூத்திரத்தினைக்
கொழுத்தி எரித்தனர்.
புத்தரின் சடலம் அஸ்தியானது
தம்ம பதமும் தான் சாம்பரானது.

(சிகாலோகவாத சூத்திரம், தம்மபதம் ஆகியன பௌத்த மத அறநூல்கள்)

(அலை 18, 1981)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நம்பிக்கையென்ன நமக்கு?

***Chris Newby*** *[ஆங்கில மூலம்],*
**சோ.பத்மநாதன்** *[தமிழாக்கம்]*

1981ஆம் ஆண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணம் வந்த ஓர் அமெரிக்கர் எரியுண்ட நூலகத்தைப் பார்த்தபின் ஒரு கவிதை எழுதினார். கையெழுத்துப்பிரதி பேராசிரியர் கைலாசபதியிடம் போனது. 1982 ஆவணியில் அதை என்னிடம் தந்து 'தமிழில் மெழிபெயர்க்கக் கூடிய ஒருவரிடம் கொடுக்கலாம் என்று வைத்திருந்தேன்'' என்றார் கைலாஸ். அவர் மறையும்வரை இதை உறங்குநிலையில் வைத்திருந்த குற்றம் என்னுடையது. இம்மொழிபெயர்ப்பே கைலாசபதிக்கு நான் செய்யும் அஞ்சலியுமாகின்றது. - சோ.பத்மநாதன்

கற்குவியல் மீது கால் சறுக்கும் ஓசையன்றி
இப்பொழுது காதில் ஏதும் விழவில்லை
சந்தையிரைச்சல், கோடி வாகனங்கள், சந்தடிகள்
வந்து முட்டி, மோதி, கலந்து தேய்ந்து, ஓய்கின்ற
பகுதியிது; பாழாய், சுடுகாடாய், அமைதியொன்றே
மிகுதியெனச் சுமந்து வீணே கிடக்கிறது!

புத்தகத்தின் பக்கங்களைப் புரட்டுகின்ற ஓசையொன்றே
நித்தியமாய் இருந்த இடம் நீறாய்க் கிடக்கிறது!
நூற்றாண்டுக்கால முயற்சி நொடிப் பொழுதில்
காற்றோடு போன காரணந்தான் யாரறிவார்?

ஆளும் பொறுப்பில் இருப்போர், அடிபணிந்து
வாழமறுப்போரை வாட்டி யெடுக்கின்ற
கதை தான் உலகெங்கும் !
கலாசாரம் காலின்கீழ்
மிதிபடுதல்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகார மேலாண்மை,
விடுதலையைப் பறித்தல்,
-இவையெல்லாம் பலன்தருமா?
மேன்மேலும்,
எதிர்ப்பு வெடிக்க ஏதுக்கள் ஆகாவா?

எந்தப் பண்பாடும் எந்த மனிதர்களும்
இந்தவிதமாய் நசுங்கி அழிந்த வரலாறிலையே!
நம்பிக்கை யென்ன நமக்கு?

வெவ்வேறு நாடுகளில் விளங்கும் பண்பாடுகள்தாம்
இவ்வாறு பின்னோக்கித் தள்ளப்படுகையில், அம்
மானிடர்கள் முன்னோக்கிச் செல்வர் புதியவழி
தானுதிக்கும் ! அவர்கள் நடந்த தடங்களிலே
இக்கொடுமை போலெதுவும் இனி மனித இதயங்கள்
உட்புகவே ஒட்டோம் !
தோல்விகளின் ஊடு,
எமது
வெற்றிப் பொழுது விடிக!

*[கிருதயுகம் [யாழ்ப்பாணம்] 01.06.1983]*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் ஆரம்பகால நூலகங்கள்

*கலாநிதி விவியன் சத்தியசீலன்,*
சிரேஷ்ட விரிவுரையாளார்,
சித்த வைத்தியத்துறை

### வரலாற்றுத் தேடல்

நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்டு ஒரு தீவாக உள்ள இலங்கை நாட்டின் வரலாற்றுக் காலத்திலிருந்தே சிங்களவர் தமிழர் என்கின்ற இரண்டு இனங்கள் வாழ்ந்து வருகின்றன. இவ்விரண்டு இனங்களும் மதம், மொழி, பண்பாடு அரசியல் பொருளாதாரம் முதலான பல்வேறு விடயங்களிலும் அடிப்படையில் வேறுபட்டு நிற்கின்றன. இவ்விரண்டு இனங்களில் இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்குப் பகுதியில் தமிழரும் தெற்கு மற்றும் மேற்குப் பகுதியில் சிங்களவர்களும் அதிகளவில் செறிந்து வாழ்கின்றனர்.

இத்தகைய தன்மையைக் கொண்டுள்ள இலங்கை நாட்டினுடைய நூலக வளர்ச்சி பற்றிய வரலாற்றினைப் பின்வருமாறு பிரித்து நோக்குவது இலகுவானது.

i. ஆரம்பகால நூலகங்கள்

ii. மத்தியகால நூலகங்கள்

iii. சுதந்திரத்திற்குப் பிற்பட்ட கால நூலகங்கள்

எனினும் இக்கட்டுரை ஆரம்பகால நிலமைகள் பற்றியே விரிவாகக் குறிப்பிட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

***நோக்கம்***

இந்த ஆய்வு பின்வரும் நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டுள்ளது.

i. ஆரம்ப கால நூலக நிலைமைகளைக் கூறுதல்.

ii. தெளிவான வரலாறு இன்மையைச் சுட்டிக் காட்டுதலும் அதற்கான காரணங்களைக் கூறுதலும்.

iii. இப்பிரதேசத்தின் நூலக வரலாறு தொடர்பாக ஆய்வுகள் மேற்கொள்ள வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தல்.

***ஆரம்பகால நூலகங்கள்***

இலங்கைச் சிங்கள மக்களுடைய புராதன வரலாற்றைத் தொடர்ச்சியாகக் கூறும் நூல்களாகத் தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம் ஆகியவை உள்ளன. இந்த நூல்களில் கி.மு ஆறாம் நூற்றாண்டு தொடக்கம் கி.பி 1815 வரையாக ஏறத்தாழ இருபத்தைந்து நூற்றாண்டு கால வரலாறு இடையறா வண்ணம் பதியப்பட்டுள்ளது.[1]

இலங்கையில் புத்தமதம் பிரதான மதமாகக் கொள்ளப்படுகின்றது. இங்கு எழுத்துக்கலை மிகப் பழைய காலம் முதலே அறியப் பட்டிருந்ததாயினும் புத்தரின் போதனைகள் வாய்மொழி மூலமே போதிக்கப்பட்டுள்ளன. ஏடுகளை எழுதுவதில் சிரமம் எதிர்நோக்கப் பட்டமையாலும், ஏடுகள் அளவிலே பெரியனவாகவும் அவற்றைப் பாதுகாத்துக் கொள்வதில் பல்வேறு பிரச்சினைகள் எதிர்கொள்ளப்பட்டமை காரணமாகவும் சுவடிகளில் தங்கியிருப்பதிலும் பார்க்க வாய்மொழியான மதப் போதனையில் ஈடுபடுவதிலேயே பௌத்த துறவியர் நாட்டம் கொண்டிருந்தனர்.[2]

பௌத்த சமயம் தொடர்பில் வாய்மொழியாக நிலவி வந்த கருத்துக்கள் கி.மு முதலாம் நூற்றாண்டில் பாளி மொழியில் எழுத்துருவம் பெறத் தொடங்கியது. பௌத்த மதச் சிந்தனைகள் எழுதப்பட்ட ஓலைச் சுவடிகள் பௌத்தத் துறவியர் தங்கி வாழும் இடங்களான விகாரைகளில் பாதுகாப்பாக வைக்கப்பட்டன.[3]

---

1 'இலங்கையில் கல்வி: நூற்றாண்டு விழா மலர்'' பாகம்1. 1969. பக்: xxxvi

2 மேலது xxxix

3 ஆர். எஸ். தம்பையா, 'இலங்கையில் நூலகங்கள்'' நூலகவியல் காலாண்டுச் சஞ்சிகை. மலர் 1 இதழ் 2, டிசம்பர் 1987. பக்.10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விகாரைகள் பலவும் சுவடிகளைச் சேகரித்துப் பாதுகாக்கும் சுவடி நூலகங்களாகச் செயற்பட்டன. இலங்கையில் முதலில் தோன்றிய நூலகமாக மாத்தளையில் அமைந்துள்ள ''அலுவிகாரை'' (Aluvihare) நூலகம் குறிப்பிடப்படுகின்றது.

கி.மு முதலாம் நூற்றாண்டில் அனுராதபுரத்தை ஆட்சி செய்த வட்டகாமினி அபயன் (Vattagamini Abahya – 1st Century .B.C) என்ற சிங்கள அரசன் புத்த சமய நூலாகிய திரிபீடகத்தை (Tripitaka) இந்த அலுவிகாரை நூலகத்தில் எழுதி வைத்துப் பாதுகாத்ததாக அறிய முடிகின்றது.[4]

இவ்வாறு இலங்கையின் பல்வேறு இடங்களிலும் அமைக்கப்பட்ட பௌத்த விகாரைகளில் சுவடி நூலகங்கள் பல காணப்பட்டதற்கான ஆதாரங்களைப் பழைய வரலாற்றுத் தொகுப்புகளிலிருந்து அறிய முடிகின்றது.

ஆரம்ப கால நூலகங்கள் பலவும் இன்றைய பல்கலைக்கழக நூலகங்களைப் போன்று நூற் களஞ்சியங்களைக் கொண்டிருந்தன. பண்டைய பிரதான மடாலயங்கள் பெரும்பாலானவற்றில் ஓலைச் சுவடிகளைக் கொண்ட நூல் நிலையங்கள் இருந்தன. பௌத்த சமய நூல்கள் இங்கு கவனமாகப் பாதுகாக்கப்பட்டன.[5]

புராதன பௌத்த மன்னரின் வரலாற்றைக் குறிப்பிடும் தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம் என்பவற்றைப் போல தமிழ் மன்னர்களின் புராதன வரலாற்றைக் கூறும் நூல்களாகக் கைலாயமாலை (கி.பி 16), யாழ்ப்பாண வைபவமாலை (கி.பி 18), யாழ்ப்பாண வைபவ கௌமுதி (1918) முதலான நூல்களைக் கருதுவர். இலக்கியங்களான இந்த நூல்கள் தரும் குறிப்புக்கள் மூலம் அக்கால இலக்கிய வளர்ச்சி நிலைமைகளை அறிய முடிகின்றது.

### *சரஸ்வதி மகாலயம்*

பதின்மூன்றாம் நூற்றாண்டளவில் சரஸ்வதி மகாலயம் என்ற பெயரிலமைந்த நூலகம் யாழ்ப்பாணத்தில் நல்ல நிலையில் செயற்பட்டது. இந்த நூலகத்தில்

---

4 Lankage Jeyasiri "Library Movement in SriLanka" I÷: Roads to wisdom. (Ishvari Corea - ed), 1980. P.33

5 ஈஸ்வரி. கொறயா, ''நூல் நிலைய சேவை'', இலங்கையில் கல்வி: நூற்றாண்டு விழா மலர். பாகம் 3. 1969. பக் 1375.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியாவிலிருந்து கொண்டுவரப்பட்ட பழைய நூல்கள் காணப்பட்டன. தற்போது நாயன்மார்கட்டு என அழைக்கப்படும் இடமே முன்னர் சரஸ்வதி மகாலயம் இருந்த இடமென அறியப்படுகின்றது.[6]

இந்நூலகம் தொடர்பாகப் பின்வருவன போன்ற தகவல்களைப் பெற முடிகிறது.

கி.பி பதின்மூன்றாம் நூற்றாண்டில் முத்துக் கவிராயர் எழுதிய 'கைலாயமாலை'' என்னும் நூலில் (வரி 209, 210) இந்நூலகம் பற்றிய செய்தி பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

''யாழ்ப்பாணத்து அரசன் வரோதய செகராசசேகரன் காலத்தில் வைத்தியம், சோதிடம் என்பன தொடர்பான நூல்கள் எழுதப்பட்டன. இவை இந் நூலகத்தில் வைத்துப் பாதுகாக்கப்பட்டன.''

கைலாயமாலையின் வழி நூலாகக் கருதப்படுகின்ற 'யாழ்ப்பாண வைபவமாலை'' நூலில் கி.பி 1215 முதல் 1441 வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் சுதந்திரமான தமிழ் இராச்சியம் நடைபெற்றிருக்கின்றது. இக்காலப் பகுதியில் ஆட்சி செய்த விஜயகாலிங்க ஆரியச் சக்கரவர்த்தி என்னும் மன்னன் காலத்தில் யாழ்ப்பாணத்தில் கல்வி வளர்ச்சி வசதிகளை உருவாக்கும் நோக்கில் இம் மன்னனால் சரஸ்வதி மகாலயம் நூலகம் உருவாக்கப்பட்டது.

***சரஸ்வதி மகாலயம் அழிப்பு***

இந்நூலகம் பின்னாளில் அழிவடைந்ததாக அறிய முடிகின்றது.[7]

''சோழ ராஜனால் அனுப்பப்பட்ட அவனது புதல்வனான ஒருவன் சிங்கை ஆரியச் சக்கரவர்த்தி என்னும் பெயரோடு முடிசூடப்பெற்று அரசாண்டான். அவன் தனது இராசதானியாகிய நல்லூருக்குத் தன் நாட்டிலிருந்தும் பிற இடங்களில் இருந்தும் பண்டிதர்களை அனுப்பி வைத்து ஒரு கிராமத்து வயல் நிலங்களையும் விடுவித்தான். இக்கிராமம் இப்போதும் சங்குவேலி என்னும் பெயரோடு விளங்குகின்றது. இப்பண்டிதர்கள் ஆக்கிய நூல்கள் யாவும் சரஸ்வதி மகாலயம் என்னும் நூலகத்தில் வைக்கப்பட்டன. அது சிங்கள அரசன் ஒருவனால்

6 க.சி குலரத்தினம் 'பொன்விழா பொலிவு காணும் பொதுசன நூலகம்'' யாழ்ப்பாணப் பொதுசன நூலகத் திறப்பு விழா மலர், பக்.57

7 சி.கணேசையர், 'ஈழநாட்டுத் தமிழ்ப் புலவர் சரித்திரம்'', யாழ்ப்பாணம் 1939. பக்.6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீ வைக்கப்பட்டது என்று சரித நூல் கூறுகின்றது. அதனால் போலும் அவர்கள் செய்த நூல்களாயினும் செய்யுள்களாயினும் எமக்குக் கிடைத்தில." என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

செகராசசேகர மன்னனின் தம்பியாகிய பரராசசேகரன் என்னும் மன்னன் யாழ்ப்பாணத்தை ஆட்சிசெய்த காலத்தில் அழிந்து போன நூலகம் புனரமைப்புச் செய்யப்பட்டது என்னும் தகவலை சி.கணேசையர்[8] மற்றும் செ.இராசநாயகம்[9] போன்றவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இவ்வாறான கருத்துகளின்படி நோக்கும்போது யாழ்ப்பாணத்திலே பதின்மூன்றாம் நூற்றாண்டு மற்றும் அதனையடுத்த காலப் பகுதிகளில் நூலகங்கள் கல்வி வளர்ச்சிக்கு ஏற்ப நல்ல நிலையில் அமைக்கப்பட்டன என அறிய முடிகின்றது.

***சுவடி நூலகங்கள்***

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலின் ஆதீனத்தில் சிறந்த சுவடி நூலகம் ஒன்று செயற்பட்டது என்ற தகவலைப் பெற முடிகின்றது. இவ்வாலயம் ஏழு அல்லது எட்டாம் நூற்றாண்டிற்குரியதாகக் கருதப்படுகின்றது.[10] ஆலயத் தோற்றம் பற்றிய கதை யாழ்ப்பாண வைபவ மாலையிலும் காணப்படுகின்றது.

இவ்வாலயத்தின் சுவடி நூலகத்தில் கிரந்தம் மற்றும் தமிழ் மொழிகளில் எழுதப்பட்ட ஓலைச் சுவடிகள் சேகரித்து வைக்கப்பட்டிருந்தன. தமிழ் இலக்கணம், இலக்கியம், சமயம், தத்துவம் மற்றும் இவ்வாலய பரிபாலனம் போன்ற விடயங்களைக் கொண்டனவாக இச் சுவடிகள் காணப்பட்டன.[11]

பழுதடைந்த ஓலைச் சுவடிகளை மீண்டும் எழுதுவதற்காகப் படியெழுதுவோர் நியமிக்கப் பட்டிருந்தனர். இக்கோவிலின் அருகாமையில் அமைந்து காணப்பட்ட ஆலயங்களின் தேவைகளுக்கு இச் சுவடிகள் கொடுத்து உதவப்பட்டன.

ஆரம்ப காலங்களில் சுவடிச் சாலைகளில் காணப்படுவதை விட ஏராளமான சுவடிகள் தனிநபர்களிடம் காணப்பட்டிருந்தன. ஓலைச்

---

8 மேலது பக் 9 10.

9 செ.இராசநாயகம். யாழ்ப்பாணச் சரித்திரம் யாழ்ப்பாணம், 1933. பக்.17

10 சு.து.க.ஷண்முகநாதக் குருக்கள் (கோயில் பிரதம குரு) நேர்காணல் 28.12.2011

11 மேலது நாள் 28.12.2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுவடிகளின் பதிப்பு முயற்சியில் ஈடுபட்டிருந்தவர்களான ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர், சி.வை.தாமோதரம் பிள்ளை முதலானோரின் இத்துறை அனுபவங்கள் இதற்கு ஆதாரமாக உள்ளன.

பௌத்த மரபின் வரலாற்றினை நோக்கும் போது கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலப்பகுதியிலிருந்து ஏடுகளும் நூல்களும் பௌத்த சமயப் பின்னணியில் காலங்காலமாகப் பேணப்பட்டமை போன்ற ஒரு வரன்முறையான சுவடிகள் பாதுகாப்பு முறை தமிழ் மரபில் அல்லது யாழ்ப்பாணப் பகுதியில் காணப்பட்டதா இல்லையா என்பதனை அறிவதற்கான புராதன சான்றுகள் இதுவரை இல்லை. ஏட்டுச் சுவடிகள் சுவடிக் கூடங்களில் அல்லது வழிபாட்டு இடங்களில் பாதுகாக்கப்படாத காரணத்தினால் பெரும்பாலும் தனியார் வீடுகளில் ஆங்காங்கு காணப்பட்டிருக்கின்றன எனக் கருத இடமுண்டு.

காலங்காலமாகக் கல்வி கேள்விகளில் சிறந்து விளங்கியதாகக் கூறப்படும் தமிழ் மரபில் நூலகங்கள் அமைக்கப்படாமல் இருப்பதற்கான வாய்ப்புக்கள் குறைவே. எனினும் அவை பற்றிய தகவல்களை அறிய முடியாத நிலை காணப்படுகின்றது.

***நூலக வரலாற்று வெறுமையும் காரணங்களும்.***

பதின்மூன்றாம் நூற்றாண்டு வரை தமிழர் பிரதேசங்களில் நூலக வரலாற்றை குறிப்பிடக்கூடிய ஆதாரங்கள் இதுவரை கிடைக்கவில்லை. ஆனால் பௌத்தமதம் இலங்கைக்கு வந்த காலப்பகுதியிலிருந்து வரலாற்றுப் பதிவுகளை பேணும் பெரும்பணியை பௌத்த விகாரைகளும் வழிபாட்டுத் தலங்களும் தொடர்ந்து செய்து வந்துள்ளன. தீபவம்சம், மகாவம்சம் போன்ற நூல்கள் இப்பணியை செவ்வனே நிறைவேற்றியுள்ளன. ஆனால் கைலாயமாலை எழுதப்பட்ட காலம் வரை தமிழ்ப் பிரதேசம் சார்ந்த வரலாற்றைக் கூறும் ஆதாரங்கள் இதுவரை கிடைக்கவில்லை.

இந்நாட்டின் தென்பகுதி மற்றும் மேற்குப் பகுதி மக்களின் வரலாறு தெளிவாகக் கூறக்கூடியளவு இருப்பதற்கு தீபவம்சம், மகாவம்சம், சூளவம்சம் முதலான இலக்கியச் சான்றுகள் உள்ளமை மட்டும் காரணமல்ல, பின்வருவன போன்ற வேறு சில காரணங்களும் உள்ளன.

1. புராதன காலத்துச் சிங்கள இராச்சியப் பிரதேசங்களில் வலிமையானதும் நீடித்து நிற்கக் கூடியதுமான கருங்கற்கள் போதியளவு இருந்தன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருங்கற்களைக் கொண்டே அரசர்கள் தமது மாளிகைகளையும் பௌத்தத் துறவியர்கள் தமது விகாரைகள் முதலான கட்டிடங்களையும் அமைத்தனர். இக்கற்களிலேயே அரச சபையின் சாசனங்கள் முதலானவற்றையும் செதுக்கினர். ஏறத்தாழ ஆயிரம் வருடங்கள் கழிந்த பின்னரும் கூடப் பாறைகளிலும் கற்றூண்களிலும் எழுதப்பட்ட வரலாற்று ஆதாரங்கள் யாவும் சிங்கள பௌத்த மரபின் உண்மைகளைத் தொகுப்பதற்குரிய சான்றினைத் தருவனவாக அமையலாயின.

இலங்கையின் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பௌதீக நிலவுருவ அமைப்புப்படி இத்தகைய கருங்கற்கள் பெரும்பாலான இடங்களில் இல்லை. சுண்ணாம்புக் கற்களே அதிகம் காணப்படுகின்றன. இவற்றைப் பயன்படுத்தியே இப் பகுதியில் புராதன கட்டிடங்களும் அமைக்கப் பட்டிருக்கும். சிங்கள மக்கள் புராதன காலத்தில் எழுதவும், கட்டிடங்கள் அமைக்கவும் பயன்படுத்திய கற்கள் போன்று வலிமை பொருந்தியனவாக சுண்ணாம்புக் கற்கள் இருப்பதற்கு வாய்ப்பு இல்லை.[12]

புராதன இலங்கையில் அரசியல் வரலாற்றை நோக்கும் போது அங்கு அடிக்கடி போர்கள் நடைபெற்றிருக்கின்றன. அதிகளவு அழிவுகள் ஏற்பட்டிருக்கின்றன. நல்லாட்சிகள் பல அடியோடு அழிக்கப்பட்டிருகின்றன. இச்சந்தர்ப்பத்தில் அதிகளவு பொருட்கள் நிலத்தின் கீழ் புதையுண்டு போவதற்கு வாய்ப்புக்கள் உண்டு. எனினும் கட்டிட இடிபாடுகள், கல்வெட்டுகள், பழைய நாணயங்கள் முதலான புராதன காலத்து நூலக வரலாற்றை கூறக்கூடிய தொல்பொருட் சின்னங்களோ அல்லது கல்வெட்டு முதலான தொல்லியல் ஆதாரங்களோ இதுவரை கிடைக்கவில்லை. அத்தகைய நோக்கில் அமைந்த ஆய்வுகளும் இடம் பெறவில்லை.

தொல்லியல் சான்றாதாரங்கள் இல்லாமைக்கான பிரதான காரணம் பொதுவாகவே புராதன காலத்து அரசர்கள் வாழ்ந்த தமிழ்ப் பிரதேசங் களில் அகழ்வாராய்ச்சிகள் விரிவான அளவில் இதுவரை மேற்கொள்ளப் படவில்லை. அரசர்கள் பலரும் இப்பிரதேசத்தை சிறப்பாக ஆண்டதாக கூறப்படுகின்றது. இவர்கள் தமது ஆட்சியின் நடவடிக்கைகளைக் கல்வெட்டுகள் முதலானவற்றில் பொறித்திருப்பார்கள். ஆனால் கடந்த காலத்தை அடிப்படையாகக் கொண்ட வரன்முறையான ஆய்வுகள் இதுவரை மேற்கொள்ளப்படாமையால் இத்தகைய வரலாற்று ஆதாரங்கள்

12 ஆ.சிவநேசச் செல்வன் 'மாவிட்டபுரம் ஆதீன சுவடிச்சாலையும் ஏட்டுப் பிரதிகளும்'' பூர்வகலா மலர், (1973) பக் 42 44

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிடைக்கவில்லை. இதுபோன்ற பல்வேறு காரணங்களால் பண்டைய காலத்து நூலக நிலைமைகளைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடியவில்லை.

இப்பிரதேசங்களில் விரிவான புதைபொருள் ஆய்வு மேற்கொள்ளப்பட வேண்டுமென்பது வரலாற்றுத் துறைசார்ந்த ஆய்வறிஞர்களின் ஒருமித்த கருத்தாக உள்ளபோதிலும் ஏறத்தாழ 1950களின் பின்னர் இலங்கையில் மிக மோசமான நிலையில் தீவிரமடைந்துவிட்ட சிங்களவர் தமிழர் என்ற இன முரண்பாட்டுச் சூழ்நிலை இத்தகைய ஆய்வுகளில் ஆய்வாளர்கள் ஈடுபடாமைக்கும் அல்லது ஆர்வங்காட்டாமைக்கும் பிரதான காரணங்களாக உள்ளன. தற்போதைய சூழலில் வடக்குக் கிழக்குப் பகுதிகளில் வரலாறு சார்ந்து ஆய்வு மேற்கொள்வது சிக்கலான விடயமாகும். இதனால் ஆராய்ச்சியாளர்கள் தயங்கினர் அல்லது தவிர்த்தனர். இவ்வாறான காரணத்தாலும் புராதன வரலாறு பற்றிய ஆய்வுகள் துலக்கம் பெறாமல் உள்ளன.

காலங்காலமாக வரலாற்றுச் சம்பவங்கள் பதிவு செய்யப்படாமை, பௌதீகச் சூழலில் நலிவான தன்மைகள், புதைபொருள் ஆய்வுக்கான சூழல் இன்மை, ஒல்லாந்தர், போர்த்துக்கேயர் முதலான அந்நியர் ஆட்சியின் அழிவுகள் என்பவற்றால் இலங்கையின் வடக்குக் கிழக்குப் பிரதேசத்தின் வரலாற்று மூலாதாரங்கள் இல்லாது ஒழிக்கப்பட்டன. எனினும் இவ்வாறான இடர்களின் மத்தியில் 18ஆம் நூற்றாண்டிலிருந்து பேணிப் பாதுகாக்கப்பட்ட பெறுமதி வாய்ந்த ஆவணங்களைக் கொண்ட யாழ்ப்பாணப் பொதுநூலகம் 1981இல் எரிந்து போனதனால் அண்மைக்கால வரலாற்று ஆதாரங்களைக் கூட பெற்றுக் கொள்ள முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது.

இவ்வாறான தன்மைகளால் பௌத்த மதத்தின் சமய விடயங்கள் காலங்காலமாக அடுத்த தலைமுறையினருக்கு கையளிக்கப்பட்ட முறைகளையே இலங்கை முழுமைக்குமான நூலக வரலாறாக கூறும் மரபு தொடர்ந்து காணப்பட்டு வருகின்றது.

நூலகவியல் மற்றும் நூலகத்துறை சார்ந்த அறிவின்மை, ஆர்வமின்மை இத்துறையில் விரிவான ஆய்வுகள் முன்னெடுக்கப்படாமை, நூலகவியல் ஆய்வுகளை ஊக்குவிக்கக் கூடிய சூழ்நிலை இன்மை, ஆய்வு நெறியாளர்கள், துறைசார்ந்த வல்லுனர்களின் பற்றாக்குறை போன்ற

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலைமைகளும் முழுமையான நூலக வரலாறு பற்றிய சிந்தனையை வளர்த்தெடுக்க முடியாதுபோனமைக்குரிய காரணங்களாகும். இன்றைய காலம் வரைக்கும் இலங்கையின் நூலக வரலாறு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளும், மிகக் குறைவாகவே கிடைக்கின்ற இத்துறை சார் ஆக்கங்களும் மேலே குறிப்பிட்ட கருத்துக்களை நிரூபிப்பனவாக உள்ளன.

இந்நாட்டினுடைய புராதன நூலகங்கள் பற்றிய நீண்ட வரலாற்றிலே ஆரம்பத்திலிருந்து 13ஆம் நூற்றாண்டு வரையான காலப்பகுதியில் வடக்குக் கிழக்கு பிரதேசத்தின் நூலகங்கள் பற்றிய குறிப்புகள் இடம்பெறவில்லை என்பதனால், இப்பிரதேசங்களில் நூலகங்கள் இருக்கவில்லை எனக் கருதுவது பொருத்தமற்றது.

நூலகங்கள் பற்றிய வரலாறு மட்டுமல்ல இக்காலகட்டத்தில் இப்பிரதே சங்களின் அரசியல் மற்றும் சமூக பொருளாதார வாழ்வியற் செய்திகளும் கூட கிடைக்கவில்லை. எனவே தற்போது குறிப்பிடப்படுகின்ற இலங்கையின் புராதன நூலக வரலாற்றையே இந்நாட்டின் முழுமையான நூலக வரலாறாக கருதும் போக்கும் உள்ளது. இது மறு பரிசீலனை செய்யப்பட வேண்டிய கருத்தாகும்.

முன்னர் போரினால் அழிவுகள் ஏற்பட்டுள்ளன. தொல்லியல் சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை. அகழ்வாராய்ச்சிகள் செய்யக்கூடிய அரசியல் சூழ்நிலையும் நீண்ட காலமாக இல்லை. மேல்நாட்டவரது ஆட்சிக்காலத்திலும் பல்வேறு மாறுதல்களும் அழிவுகளும் ஏற்பட்டுள்ளன.

ஆரம்ப மற்றும் மத்தியகால நூலக நிலமைகளை அறிந்து கொள்ள முடியாமைக்கு இத்தகைய பல காரணங்கள் தடையாக உள்ள நிலையில் மாற்று வழிமுறைகளைப் பற்றிச் சிந்திக்க வேண்டியது துறைசார் அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளது.

***(நன்றி: யாழ் பார்வை இணையம், 24.10.2013)***

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணப் பொது நூலகம்: ஒரு வரலாற்றுத் தொகுப்பு

என். செல்வராஜா

யாழ்ப்பாணப் பொது நூலகத்தின் அழிப்பினை, அதன் வழியாக நிகழ்த்தப்பெற்ற ஒரு கலாச்சாரப் படுகொலையின் அரசியலை, அந்தச் சூழல் பற்றிய விழிப்புணர்வினை, எமது மக்களிடம் நீங்காத நினைவுகளாக வருடாந்த நினைவுகூரல்களின் வழியாக எடுத்துச்செல்வதில் நாமனைவரும் ஒன்றுபட்டு வருகின்றோம். இந்த ஆறாவடு நீண்டகாலம் எமது மனங்களில் நிலைகொண்டிருக்கும். இத்தகைய ஆவணத் தொகுப்புகளின் மூலமும் இச்செய்தி அடுத்த சந்ததியினருக்கும் கடத்திச் செல்லப்படும். அவ்வகையில் நூலக எரிப்பின் 20 வருடப் பூர்த்தியையிட்டு தமிழ், ஆங்கிலக் கட்டுரைகளுடன் இந்நூல் 2001இல் முதலில் வெளியிடப்பட்டது. இன்று நாற்பத்தி இரண்டு ஆண்டுகள் கடந்த நிலையில் நூலக எரிப்பு சார்ந்து மேலும் புதுப்புது வரலாற்றுத் தகவல்கள் புதைமணலிலிருந்து வெளிக்கிளம்பி வருகின்றன. இப்பொழுது அதனை எரித்தவர்களின் வாய்மொழிகளாக அவை அதிகம் வெளிவந்தவண்ணமுள்ளன. நூலகத்தை எரித்தவர்கள் தமிழர்களே என்ற வரலாற்றுத் திரிபும் வெற்றிகரமாக அவர்களால் மேடையேற்றப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் 2001இல் வெளியிடப்பட்ட இந்நூல் மீளவும் இற்றைப்படுத்தப்படவேண்டிய தேவை எழுந்துள்ளது. இப்புதிய நூல் முன்னைய நூலில் காணப்பட்ட தமிழ் ஆவணங்களையும், மேலதிகமாகச் சேகரிக்கப்பட்ட புதிய ஆவணங்களையும் உள்ளடக்கியதாக வெளிவந்துள்ளது.



என்.செல்வராஜா: இவர், ஈழத்தின் நூலகவியல்துறையிலும் வெளியீட்டுத் துறையிலும் நன்கறியப்பெற்ற நூலியலாளராவார். 'நூலகவியல்', 'நூல்தேட்டம்' ஆகியவற்றின் ஆசிரியராகவும், 'எங்கட புத்தகங்கள்', 'அச்சாண்டி' உள்ளிட்ட பல ஈழத்துச் சஞ்சிகைகளின் ஆலோசகராகவும் இயங்கிவருகிறார். நூல்களை வாசகனுக்கு வழங்குகின்ற அடிப்படைச் செயற்பாட்டுடன் இயங்கும் இவர், சர்வதேச அளவில் பிரித்தானிய Books Abroad நிறுவனத்தின் ஆசிய பிராந்தியத்திற்குப் பொறுப்பாகவிருந்து ஆயிரக்கணக்கில் சிறுவர்/இளையோருக்கான ஆங்கில நூல்களைத் தருவித்து இலங்கை முழுவதிலுமுள்ள பாடசாலை, பொது, சனசமூக நிலைய நூலகங்கள் மற்றும் கிராமிய நூலகங்களுக்கும் 2006 முதல் வழங்கிவருகிறார். நூலக நடவடிக்கைகளுக்கு அப்பால் ஒரு எழுத்தாளராக, எழுத வைப்பவராக, ஒரு வெளியீட்டாளராக, ஒரு விநியோகஸ்தராக, ஊடகங்களில் நூல்களை அறிமுகப்படுத்துபவராக, ஆவணக் காப்பாளராக, வாசகராக, விமர்சகராக ஒரு நூல் உருவாக்கப்பட்டு வாசகனிடம் சேர்க்கப்படும் வரையான அனைத்து செயற்பாட்டிலும் இவர் ஆற்றும் பணி அளப்பரியது. இது என்.செல்வராஜாவின் 67ஆவது நூலாகும்.

குமரன் புத்தக இல்லம்
ISBN 978-624-6164-49-2
#1013
Rs.1750
விடயம்: நூலகவியல் வரலாறு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org